திருக்குறள் மூலமும் பரிப்பெருமாள் உரையும்

வித்துவான். கா. ம. வேங்கடராமையா

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருக்குறள் மூலமும்
பரிப்பெருமாள் உரையும்

பதிப்பாசிரியர்

வித்துவான். கா. ம. வேங்கடராமையா எம். ஏ.,

WITH BEST COMPLIMENTS
FROM
ANNAMALAI UNIVERSITY

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1988

பதிப்பு: 1988

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

விலை: உள்ளூர் Rs.

வெளிநாடு US. $

விபரங்களுக்கு:
சிறப்பு அதிகாரி, வெளியீட்டுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.
தமிழ்நாடு.

பொருளடக்கம்

		பக்கம்
உள்ளுறை		
முன்னுரை		
திருக்குறள் மூலமும் பரிப்பெருமாள் உரையும்		

அறத்துப்பால்

பாயிரவியல்

1	அறன் வலியுறுத்தல்	11
2	கடவுள் வாழ்த்து	1
3	நீத்தார் பெருமை	7
4	வான் சிறப்பு	5

இல்லறவியல்

5	அடக்கமுடைமை	41
6	அழுக்காறாமை	52
7	அன்புடைமை	24
8	இல்வாழ்க்கை	14
9	இனியவை கூறல்	31
10	ஈகை	69
11	ஒப்புரவறிதல்	66
12	ஒழுக்கமுடைமை	44
13	செய்நன்றி யறிதல்	34
14	தீவினையச்சம்	63
15	நடுவுநிலைமை	37
16	பயனில சொல்லாமை	61
17	பிறனில் விழையாமை	47
18	புகழ்	72
19	புதல்வரைப் பெறுதல்	21
20	புறங்கூறாமை	58
21	பொறையுடைமை	50
22	வாழ்க்கைத் துணைநலம்	18
23	விருந்தோம்பல்	28
24	வெஃகாமை	55

பக்கம்

துறவறவியல்

25 அருளுடைமை 76
26 அவாவறுத்தல் 111
27 இன்னா செய்யாமை 96
28 கள்ளாமை 88
29 கூடாவொழுக்கம் 84
30 கொல்லாமை 99
31 தவம் 82
32 துறவு 105
33 நிலையாமை 102
34 புலான்மறுத்தல் 79
35 மெய்யுணர்தல் 107
36 வாய்மை 90
37 வெகுளாமை 93

ஊழ்

38 ஊழ் 114

பொருட்பால்

அரசியல்

39 அறிவுடைமை 130
40 ஆள்வினையுடைமை 186
41 இடனறிதல் 150
42 இடுக்கணழியாமை 189
43 இறைமாட்சி 118
44 ஊக்கமுடைமை 180
45 ஒற்றாடல் 177
46 கண்ணோட்டம் 174
47 கல்லாமை 124
48 கல்வி 122
49 கேள்வி 127
50 காலமறிதல் 147
51 குற்றங்கடிதல் 132
52 கொடுங்கோன்மை 168
53 சிற்றினஞ் சேராமை 189

பக்கம்

54	சுற்றந்தழால்	159
55	செங்கோன்மை	165
56	தெரிந்து செயல்வகை	141
57	தெரிந்து தெளிதல்	152
58	தெரிந்து வினையாடல்	156
59	பெரியாரைத் துணைக்கோடல்	136
60	பொச்சாவாமை	162
61	மடியின்மை	183
62	வலியறிதல்	144
63	வெருவந்த செய்யாமை	170

அமைச்சியல்

64	அமைச்சு	192
65	அவையஞ்சாமை	220
66	அவையறிதல்	217
67	குறிப்பறிதல்	214
68	சொல்வன்மை	195
69	தூது	207
70	மன்னரைச் சேர்ந்தொழுதல்	211
71	வினை செயல்வகை	204
72	வினைத் திட்பம்	200
73	வினைத் தூய்மை	198

பொருளியல்

74	அரண்	226
75	நாடு	223
76	படைச்செருக்கு	236
77	படைமாட்சி	233
78	பொருள் செயல் வகை	230

நட்பியல்

79	கூடா நட்பு	251
80	தீ நட்பு	248
81	நட்பாராய்தல்	242
82	நட்பு	239
83	பழைமை	245

துன்பவியல்		பக்கம்
84	இகல்	260
85	உட்பகை	269
86	கள்ளுண்ணாமை	281
87	சூது	284
88	பகைத்திறந் தெரிதல்	266
89	பகைமாட்சி	262
90	புல்லறிவாண்மை	257
91	பெண்வழிச் சேறல்	275
92	பெரியாரை பிழையாமை	272
93	பேதைமை	254
94	மருந்து	287
95	வரைவின் மகளிர்	278

குடியியல்

96	இரவச்சம்	323
97	இரவு	320
98	உழவு	314
99	கயமை	326
100	குடிசெயல் வகை	311
101	குடிமை	290
102	சான்றாண்மை	299
103	நல்குரவு	317
104	நன்றியில் செல்வம்	305
105	நாணுடைமை	308
106	பண்புடைமை	302
107	பெருமை	296
108	மானம்	293

காமத்துப்பால்

களவியல்

109	அலரறிவுறுத்தல்	352
110	காதற் சிறப்புரைத்தல்	346
111	குறிப்பறிதல்	334
112	தகையணங்குறுத்தல்	331
113	நலம்புனைந்துரைத்தல்	342

		பக்கம்
114	நாணுத் துறவுரைத்தல்	349
115	புணர்ச்சி மகிழ்தல்	338
கற்பியல்		
116	அவர்வயின் விதும்பல்	392
127	உறுப்பு நலனழிதல்	383
118	ஊடலுவகை	413
119	கண் விதுப்பழிதல்	263
120	கனவு நிலையுரைத்தல்	376
121	குறிப்பறி வுறுத்தல்	396
122	தனிப்படர் மிகுதி	369
123	நினைந்தவர் புலம்பல்	372
124	நெஞ்சொடு கினத்தல்	386
125	நெஞ்சொடு புலத்தல்	403
126	நிறையழிதல்	389
127	பசப்புறு பருவரல்	366
128	படர்மெலிந்திரங்கல்	359
129	புணர்ச்சி விதும்பல்	400
130	பிரிவாற்றாமை	356
131	புலவி	406
132	புலவி நுணுக்கம்	409
133	பொழுது கண்டிரங்கல்	379

கலைமாமணி, தமிழாகரர் பேராசிரியர்
டாக்டர். ஆறு. அழகப்பன்,
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
இந்திய மொழிப்புல முதன்மையர்.

அண்ணாமலை நகர்
9—3—88

முன்னுரை

"முப்பாலுக்கு அப்பால் ஒரு நூல் இல்லை" என்று கூறும் அளவிற்கு அனைத்துப் பொருட்களையும் எஞ்சாது உரைத்த பெருமைக்குரியது திருக்குறள். அறம், பொருள், இன்பம் என இந் நூல் பகுத்துரைக்கும் பொருட்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மொழிபேசும் மக்களும் படித்துப் பயன்பெறத்தக்கவை யாதலால் தேசிய இலக்கியமாகக் கருதத்தகும் சிறப்புடையது.

இந்நூல் பயிற்சிமிக்க ஒருநூலாக விளங்குகிறது. இந் நூலுக்கு எழுந்த பழைய உரைகள் பத்தும் இக்கருத்தினை அரண் செய்யும். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் என்ற பதின்மரைத் திருக்குறளின் உரையாசிரியர்களாக ஒரு வெண்பா கூறுகின்றது. இவர்களேயன்றி வேறுசில உரையாசிரியர்களும் இருந்துள்ளனர். இக்காலத்தும் பலர் உரை எழுதி வருகின்றனர். குறட்பாவினை அப்படியே எடுத்தமைத்து வேறு இரண்டு அடிகளை விளக்கமாக அமைத்துச் செய்யப்பெற்ற நூல்களும் உண்டு. இவ் வகையில் எழுந்தனவாகப் பதினான்கு நூல்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் மக்களுக்குத் திருக்குறளின்பாலுள்ள ஈடு பாட்டினைப் புலப்படுத்துகின்றன.

திருக்குறள் உரையாசிரியர்களுள் பரிமேலழகர் காலத்தால் பிற்பட்டவரெனினும் அவர் உரையினையே பெரும்பான்மையினர் படித்து இன்புறுகின்றனர். அனைத்து உரைகளையும் ஒருசேர ஒப்பிட்டுப்பார்க்கும் நிலையில் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் உரைவளப் பதிப்பினைக் கொண்டு வந்துள்ளார். கள். உரைவளத்தை அடியொற்றி "உரைக்கொத்து" என்னும் பெயரில் திருப்பனந்தாள் ஆதீனம் ஒருபதிப்பைக் கொண்டு

வந்துள்ளது. பேராசிரியர் சாரங்கபாணி அவர்கள் "திருக்குறள் உரை வேற்றுமை" என்ற பெயரில் ஓர் ஒப்பாய்வுப் பதிப்பினை வெளியிட்டுள்ளார்கள். இப்பதிப்புக்களால் பரிமேலழகர் உரையை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பினைத் தமிழ்மக்கள் பெற்றனர். பரிமேலழகர் உரையேயன்றி மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள், பருதியார் ஆகியோர் உரைகளும் தனித்தனியே வெளிவந்துள்ளன.

காளிங்கர் பரிப்பெருமாள் ஆகிய இருவர் தம் உரைகளையும் ஒருசேரக்கொண்டு வரும் நோக்கில் வித்துவான் திரு. டி, வி. பழநியப்பபிள்ளை 1948 ஆம் ஆண்டில் ஒரு பதிப்பினை முதலில் வெளியிட்டுள்ளார்கள். இப்பதிப்பில் அறத்துப்பால், பொருட்பால் என்ற இரண்டு அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளன. பொருட்பால் முழுமைக்கும் காளிங்கர், பரிப்பெருமாள் இருவர் உரையும் உள்ளன. அறத்துப்பாலில் முப்பத்தொன்றாவது அதிகாரமாகிய வெகுளாமையில் ஆறாவது குறட்பா தொடங்கி முப்பத்தெட்டாவது அதிகாரமாகிய ஊழ் முடிய காளிங்கர் உரை மட்டுமே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதனைப் பதிப்பித்த பழநியப்ப பிள்ளை அவர்கள் "அறத்துப்பால் முழுதுக்கும் உள்ள பரிப்பெருமாள் உரை தனியே வெளிவருதல் முறையாதலின் பின்னர் பதிப்பெய்தும்" என்று கூறியுள்ளார். எனவே பரிப்பெருமாள் உரையை இவர் அறத்துப்பாலில் இணைத்து வெளியிடவில்லை என்பது தெளிவு.

உரைவளப் பதிப்பு பரிப்பெருமாள் உரையைச் சிற்சில இடங்களில் காட்டிச்சென்றுள்ளது. பரிப்பெருமாள் உரைக்கும் காளிங்கர் உரைக்கும் பெரிய வேறுபாடு இல்லையென்று கருதுவோரும் உளர். பரிப்பெருமாள் உரையைத் தனித்த நிலையில் பதிப்பித்து ஆராயக் கருதுபவர்களும் உளர்.

இன்றுவரை இவர் தம் வரலாறு தெளிவாகக் கிடைக்கவில்லை. எனினும் இவருடைய உரையின் முடிவில் காணப்பெறும் ஒரு வெண்பாவால், தென் செழுவை என்பது இவர் ஊர் என்பதும், தெய்வப் பரிபெருமாள்" என்பதால் இவர் பெரிதும் போற்றப் பெற்றுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. இவர் திருக்குறளுக்கு உரையெழுதியுள்ளதுடன் இலக்கண நூல் ஒன்றும், புகழ்மிக்க காமநூல் ஒன்றும் செய்துள்ளார் என்றும் அறிகின்றோம்.

"குற்றம் கடிதல்" என்னும் அதிகாரத்தில் வெகுளியாற் கெட்டவன் சௌமேதயன், நுகற்சியாற்கெட்டவன் சச்சந்தன், மானத்தால் கெட்டவன் துரியோதனன் என்று விரிவாகக் குறிப்பிட்டுச்

செல்கின்றார். இதனால் இவர்தம் பரந்து பட்ட இலக்கியப் புலமையும், பாத்திரங்களின் இயல்புகளைத் திறனாய்வு செய்யும் தெளிவும் தெரிய வருகின்றன.

''தெரிந்து தெளிதல்'' என்னும் அதிகாரத்தில் வியாசர் மதம், மகேச்சுரர் மதம், நாரதர் மதம், என்பனபோன்று பல்வேறு கோட்பாடுகளைச் சுட்டிச் செல்கின்றார். இதனால் இவர்தம் வடமொழி அறிவு நன்கு புலப்படும். மேலும் திருக்குறளுக்குப் பல்வேறு இடங்களில் நயவுரை எழுதிச் செல்கின்றார்.

இந்நிலையில் திருக்குறள் அறக்கட்டளையின் கீழ் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பரிப்பெருமாள் உரையைப் பதிப்பிக்கக் கருதி இப்பொழுது இப்பதிப்பினைக் கொண்டு வருகின்றது. பரிப்பெருமாள் உரை அச்சில் வெளியானவற்றையும், ஏட்டில் உள்ளவற்றையும் ஒப்பிட்டு விடுபட்டவைகள் இணைக்கப்பெற்றுள்ளன. தவறாக உள்ளவை திருத்தப்பெற்றுள்ளன. முறைமாறிக் கிடந்தவை ஒழுங்கு படுத்தப் பெற்றுள்ளன.

இப்பதிப்புப் பணியினை ஏற்றுப் பணியாற்றியவர் திரு.கா.ம. வேங்கடராமையா எம். ஏ., அவர்கள் ஆவர். இவர்கள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் பல்லாண்டுகள் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றியவர்கள். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திருக்குறள் இருக்கையில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய காலை இப்பதிப்புப்பணியினை மேற்கொண்டனர். அப்பணி இப்பொழுது அச்சுவடிவம் பெற்று அழகிய நூலாக வெளிவருவது தமிழ்மக்களால் வரவேற்கப்பெறும் என்று நம்புகிறேன். முயற்சியும் உழைப்புமிக்க நூலாசிரியரின் பணி பாராட்டத்தக்கது. பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தமது அறுபதாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் இவ்வாண்டில் இந்நூல் வெளிவருவது சாலச் சிறந்தது.

தமிழ் வளர்ச்சி கருதி இப்பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த பெருங்கொடை வள்ளல் அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், அவர்தம் அருமை மைந்தர் அமரர் முத்தையவேள் அவர்களும் நமது வணக்கத்திற்குரியவர்கள். நம் மதிப்பிற்குரிய இணை வேந்தர் டாக்டர். எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் தமிழுக்கும் தமிழிசைக்கும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள்.

அவர்களை நாம் நன்றியுடன் நினைவோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக நம் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்திய திருக்குறள் இருக்கையே இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்தது என்பதனை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் உறுதுணையாகயிருந்த நமது மேன்மைமிகு துணைவேந்தர் பேராசிரியர் இராம. சேது நாராயணன் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக. இந்நூல் செம்மையுற பதிப்புப்பெற பல்லாற்றானும் துணைநின்ற தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் டாக்டர். சு. சாமிஐயா அவர்களும், நூல் விரைந்து அச்சாக துணைநின்ற பல்கலைக் கழக, வெளியீட்டுத்துறை பொறுப்பாளர் வெ. லெட்சுமணன் அவர்களும் தமிழ்த்துறை நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர் டாக்டர். வெ. பழனியப்பன் அவர்களும் நன்றியுடன் போற்றத்தக்கவர்கள் ஆவார்கள்.

திருவள்ளுவர்
பரிப்பெருமாளுரை.

சிறப்புப்பாயிரம்

தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழிய
வொள்ளிய காமநூ லோர்ந்துரைத்து-வள்ளுவனார்
பொய்யற்ற முப்பால் பொருளுரைத்தான் தென் செழுவைத்
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து.

உரைப்பாயிரம்

மாயிரு ஞாலத்து மன்பெரு நாள் விளக்கு
மாயிரம் கதிரும் ஆழ்கடல் மறைந்தபின்
விரிகதிர் மதியும் விளங்காக் காலத்து
பரிதலைக் கொளீஇய சிறுதிரி விளக்கின்
அரியவும் பெரியவும் அறிந்தோர் போல
வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை
இசைபட நுவல்வோர் இறந்த பின்னர்
நுண்மதி யுடையோர் நாடார் ஆய்தலின்
என்மதி யளவின் யானறிந் துரைத்த
மழலைக் கிளவியை மதியோர் ஆராய்ந்து
இகழ்த லன்றியே யாவையு மியைத்துத்
திருத்தி யுரைத்தல் வேண்டும்
அருத்தம் பயில்வோர் அருங்கடன் எனவே.

புதியது தீது பழையது நன்றென்றல் பூமியுள்ளோர்
விதியது வேபொரு ளென்னன்மின் நல்லோர் விழுப்பமுண்டே
புதியது நன்று பழையது தன்னினும் பூமடந்தை
பதியதின் மேவில் பருமுத்தொ டாடையைப் பார்மின்களே.

கண்ணும் முகமும் கருங்குழலும் செவ்வாயும்
வண்ண முலையும் வனப்புடைத் தென்-றெண்ணிக்
கருத்தறியார் சாரலுறுங் காளையர்நேர் முப்பால்
கருத்தறியா துட்குறள்காண் பார்.

நல்வினை செய்வார் நாடோறும் வந்திக்க நான்முகனுர்
தொல்லுரை யைத்தென் தமிழா லறியத் துககடபுசீர்
இல்லற முந்துற வும்பொருட் பக்கமும் இன்பமு மாம்
பல்வகை யாவரு ளுந்திரு வள்ளுவன் பாதங்களே.

—:—

உலகத்து மக்கட்கு உறுதிபயத்தல் காரணமாகப் பல்வகைப் பட்ட சமைய நூல்கள் எல்லாவற்றுள்ளும் துணிந்துரை அறம், பொருள், இன்பம், வீடு எனப்பட்ட பொருள் நான்கினும் சுருங்கின முகத்துணர்த்துவான் எடுத்துக்கொண்டார் அவற்றுள் வீடாவது அறஞ் செய்தாரது பயன் ஆதலின் அவ்வீடுபேற்றை அறத் தினுளடக்கி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்' என்று மூன்று பகுதியாகக் கூறினர் என்று கொள்ளப்படும். அவற்றுள் அறமானது அறம் முதலான பொருள் நான்கினையும் பயத்தலின் முற்படக் கூறினர். பொருளானது வீடொழிந்த பொருள் மூன்றினையும் பயத்தலின் அதன்பின் கூறினர். இன்பமாவது பெரும்பான்மையும் இன்பம் ஒன்றினையும் பயத்தலின் அதன்பின் கூறினர் என்று கொள்ளப்படும்.

இனி அறமாவது தானம், தவம், விரதம், பூசை யென நால் வகைப்படும். தானமும் பூசையும் இல்வாழ்வாரறஞ் செய்யப்படு தலானும், தவமும் விரதமும் துறந்தாரறஞ் செய்யப்படுதலானும், அவை இல்லறம் துறவறம் என இரண்டு பகுதியாக்கி அறத்துப் பால் கூறப்பட்டது. அதனுட் கடவுள் வாழ்த்தும் வான் சிறப்பும்

நீத்தார் பெருமையும் அறன் வலியுறுத்தலும் ஓரோரதிகாரமாகவும், இல்வாழ்க்கை முதலாகப் புகழ் ஈருக இல்லறம் இருபததிகாரமும், அருளுடைமை முதலாக அவாவறுத்தலீருகத் துறவறம் பதின் மூன்றதிகாரமும், ஊழ் ஓரதிகாரமும் ஆக முற்பட முப்பத்தெட்டதிகாரங்கள் கூறப்பட்டன.

புருஷார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுள் முதன் மூன்றனையும் வழுவாதொழுகவே மோக்கமெய்துதலான் அதற்கு வேறு வகுத்துக்கூற வேண்டுவதின்மையின் அஃது ஒழித்து ஒழிந்த தர்மார்த்த காமப் பகுதிகளை அறத்துப்பால் பொருட்பால் காமத்துப் பால் என்றும் பேர் கூறுவார் மங்கல வகையான் எப்பொருட்கு முதலாகிய கடவுள் வாழ்த்தும் அக்கடவுளினது செய்கைத்தாகி இவ்வுலகின்றியமையாதாகிய வான்சிறப்பும், பிறப்பினிற் சிறப் பெய்துதற்குரியராகிய முனிவரது பெருமையும் அவரால் கொண்டுய்க்கப்படுகிற அறத்தினது வலியும் நான்கதிகாரத்தாற் பாரித்தும் பிரமசரியம் காருகத்தம் வானப் பிரத்தம் சந்நியாசம் என்னும் நால் வகைப் பட்ட அறத்தினும் பிரமசரியன் சீடராய் நின்றுருதுவதன்றிச் செய்வது பிறிதின்மையின் அதனைப் புதல் வரைப்பெறுதலென்புழியடக்கிக் காருகத்தம் இருபததிகாரத்தானும் வானப்பிரத்தம் பத்ததிகாரத் தானும் சந்நியாசம் மூன்றதிகாரத் தானும், எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓரதிகாரத்தானுமாக முப்பத்து நான்கதிகாரத்தின் அறத்துப்பால் கூறிப் பொருட்பால் அரசன் முதலாக நாட்டி அவற்றுக்குப் புறத்துறுப்பான படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் என ஆறுகப் பகுத்து அரசற்குரிய திறம் இருபத்தைந்ததிகாரத்தானும், அமைச்சரதியல்பு பத்ததிகாரத் தானும், நாடும் அரணும் பொருளும் ஓரோரதிகாரத்தானும், படையிரண்டதிகாரத்தானும் நட்பு ஐந்ததிகாரத்தானும், பகை ஆறதி காரத்தானும், அரசர்க் கங்கமான பெரியாரைப் பிழையாமை முதல் மருந்தீருக ஆறும் ஆறதிகாரத்தானும் அதற்குறுப்பாகிய குடிமை முதல் நாணுடைமை எனப்படுவன வேழும் ஏழதிகாரத் தானும் அரசர்க்கும் ஏனை வருணங்கட்கும் ஒப்ப உரித்தாகிய குடி செயல் வகையும், அவருட் பார்ப்பாரொழித்துப் பெரும்பான்மை வேளாளர்க் குரித்தாகி ஏனையோர்க்குச் சிறுபான்மை யுரித்தாகிய உழவும் ஓரோரதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்யாத வழி உளதாகு நல்குரவும் அது பற்றித் தோன்றும் இரவும் இரவின்கணுளதாகிய அச்சமும் இரப்பார்க்கீயாதாருள்ளிட்ட கயவரதொழுக்கமும்

ஆகிய இந்நான்கும் ஒரோ ரதிகாரத்தானுமாக எழுபததிகாரத்தாற் கூறிக், காமத்துப்பால் கூறுவார், குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என்னும் ஐந்திணையும் முதல் கருவுரிப்பொருள் என்ற மூன்றனுட் பெரும்பான்மையும் உரிப்பொருள் பற்றிப் புணர்தலும் புணர்தனிமித்தமும் குறிஞ்சியெனவும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலையெனவும், இருத்தலும் இருந்தனிமித்தமும் முல்லையெனவும், இரங்கலும் இரங்கனிமித்தமும் நெய்தலெனவும், ஊடலும் ஊடனிமித்தமும் மருதமெனவும், ஒரோவொரு நிலம் ஐந்ததிகாரமாக இருபத்தைந்ததிகாரத்தாற்கூறி ஆக நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரமாக்கி ஒரோவதிகாரம் பத்துக் குறள் வெண்பாட்டாகக்கொண்டு இங்ஙனம் ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டால் வடநூலும் தமிழ் நூலும் கூறும் பொருளெல்லாம் தொகுத்துக் கூறினர் என உணர்க.

(—இவ்வாறு இராமநாதபுரத்தைச் சார்ந்த துன்பட்க்கி கோட்டை முத்துவயிரவநாதப் புலவர் திருக்குறட் பரிமேலழகருரையேட்டினும் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை திருப்பாற் கடனாத கவிராயரவர்கள்.... குத் திருக்குறட் பரிமேலழகருரை யேட்டினும் வேறாக எழுதப் பட்டிருந்தது.)

1. அறத்துப்பால் (38)

1. பாயிரம் (1)

1. கடவுள் வாழ்த்து

அவற்றுள் கடவுள் வாழ்த்தாவது தெய்வ வணக்கம் கூறுதல். வழிபடு தெய்வ வணக்கம் செய்ய வெடுத்துக் கொண்ட தினிது முடியும் என்பதனானும் கடவுள் வழிபாடு நால்வகைப்பட்ட வறத்தினும் பூசையாதலானும் இவரை வழிபடாதார் செய்வதோர் அறமில்லை யென்பதனானும் இவ்வதிகாரம் முற்படக் கூறப்பட்டது. இதனுள்,

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இதன் பொருள்) என்பது. எழுத்துக்க ளெல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடைய அவ்வண்ணமே உலகமும் ஆதிபகவனைத் தனக்கு முதலாக உடைத்து என்றவாறு.

என்பது என் சொன்ன வாறேவெனின், சொல்லும் பொருளும் என்னுமிரண்டி னுள்ளும் சொல்லிற்குக் காரணமாகிய எழுத்தும் சொல்லும் பொருளும் அகரத்தைத் தமக்கு முதலாக உடையவாறு போலத் தோன்றுகின்ற எல்லாப் பொருட்கும் காரணமாகிய உலகமும் நீர் தீ வளி ஆகாயமுமாகி ஒன்றோடொன் றொவ்வாத பெற்றியதாயிருப்பினும் ஆதி பரமேசுவரனைத் தமக்கு முதலாக உடையதாதலால் அவனை வழிபட வேண்டும் என்றவாறாயிற்று. அன்றியும் உலகம் என்பதனை உயர்ந்தோராக்கி எல்லாப் பொருளினும் உயர்வுடைத்தாகிய உயிர்கள் ஆதிபரமேஸ்வரனைத் தமக்கு முதலாக

உடைய என்றுமாம். அஃதேல் அவன் முதலாயினவாறு யாங்ஙனங் கூறினர் எனின் பிறிதொன்று தோற்றுதற்கு அடியாய் நிற்பதூஉம் பகுவயிற்றினும் சிறப்புடைத்தாய் முன்னேன் எண்ணப் படுவதூஉம் முதல் ஆண்டு உவமையாகக் கூறிய அகரம் இருபகுதியும் உடைத்தாயினும் ஏனை எழுத்துக்களுக்கு அடியாய் நிற்றல் எல்லாராலும் அறியப்பட்டமையின் தலைமை பற்றிக் கூறினரென்று கொள்ளப் படும். (என்ற வாறு) 1

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்.

(இ-ள்) மேற்கூறிய வெழுத்தினை ஞகிய சொற்களெல்லாங் கற்றதனுலாகிய பயன் வேறியாது? விளங்கிய வறிவனது திருவடியைத் தொழாராயின், (எ-று).

சொல்லினுனே பொருளறியப்படுதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடுபெறலாம்; மீண்டும் வணக்கம் கூறியது எற்றுக்கென்றுற் கற்றதனுலாய பயனிது வென்பதூஉம், வேறு கூறிற்று. ''கற்பக் கழிமட மஃகும்'' * என்றுரு முளர். 2

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(இ-ள்) மலரின்மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திருவடியைச் சேர்ந்தவரன்றே நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார். (எ-று).

'நிலம்' என்று பொதுப்படக் கூறியவதனுன் இவ்வுலகின் கண்ணும் மேலுலகின்கண்ணு மென்று கொள்ளப்படும். தொழுதாற் பயனென்னையென்றூர்க்குப், போகநுகர்தலும் வீடுபெறலு மென்று கூறுவார் முற்படப் போகநுகர்வாரென்று கூறினர். 3

4. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(இ-ள்) தனக்கு நிகரில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க் கல்லது மனத்துண்டாங் கவலையை மாற்றுத லரிது, (எ-று).

---

* நான் மணிக்கடிகை—28.

1. ''சேர்ந்தார்க்'' என்பது மணக்குடவர் பாடம்.

வீடு பெறலாவது, 'அவலக் கவலைக் கையாற்றி'* னீங்கிப் புண்ணிய பாவமென்னு மிரண்டினையுஞ் சாராமற் சாதலும் பிறத்தலுமில்லாததொரு தன்மையை யெய்துதல். அது பெறுமென்பார் முற்படக் கவலை கெடுமென்றார்; அதனால், எல்லாத் துன்பமும் வருமாதலின்.

5. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க்[1] கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(இ-ள்) அறமாகிய கடலையுடைய அந்தணனது திருவடியைச் சேர்ந்தவற்கல்லது ஒழிந்த பொருளும் காமமு மாகிய கடலை நீந்தி யேறுதலரிது, (எ-று)

அறத்தைச் சொல்லிப் பிறவெனவே அற முதலான மூன்றினும் ஒழிந்த இரண்டினும் என்பது பெறுதும்.

இது, காமமும் பொருளும் பற்றிவரும் அவலங் கெடுமென்றது 5

6. வேண்டுதல் வேண்டாமை யிலாஅன்[2] னடிசேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(இ-ள்) 'காமமும் வெகுளியு மில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர் எவ்விடத்து மிடும்பை யிலராவர், (எ-று).

இதுகையாறு கெடுமென்றது. அறம் வேண்டும் என்றற்கு 'அறவாழியந்தணன்' என்று பெயரிட்டார்.

பொருளுங் காமமு மாகாவென்றற்கு 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' என்று பெயரிட்டார். 6

7. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

---

* மணிமேகலை, 4-119.

2. 'யிலா' என்பது மணக்குடவர் பாடம்.

பாயிரம்—1, கடவுள் வாழ்த்து.

(இ-ள்) மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினையென்னு மிரண்டு வினையுஞ் சேரா, தலைவனது ஆகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு. (எ-று) 7

தலைவனதாகிய மந்திரங்கள் என்னும் அமையும். பொருந்துதல்-இடைவிடா மலோதுதல். இது வினைகெடும் என்றது.

8\. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ-ள்) மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு சுவை யொளி நாற்ற மோசையென்னு மைந்தின்கண்ணுஞ் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினனது பொய்யற்ற வொழுக்கநெறியிலே நின்றாரன்றே நெடிது வாழ்வார், (எ-று).

இது, சாதலில்லை யென்றது. 8

9\. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்[1].

(இ-ள்) பிறவியாகிய பெரிய கடலை நீந்திக்கரையேறுவர், இறைவனடியைச் சேர்ந்தவர்; சேராதவ ரதனு ளழுந்துவர், (எ-று)

இது பிறவியில்லை என்றது. 9

10\. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

(இ-ள்) அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள்போல ஒரு குணமுமுடைய வல்ல, எட்டுக்குணத்தினை யுமுடையவனது திருவடியினை வணங்காத தலையினையுடைய உடம்புகள், (எ-று).

உயிருண்டாகில் வணங்குமென் றிழித்து உடம்புகளென்றார். குணமில்லையென்றது பயனில்லை யென்றவாறு. இதுவணங்காதார்க் குளதாங்குற்றம் கூறிற்று. இவையெல்லாம் தலைமை பற்றிக் கூறியவாறு கண்டுகொள்க. 10

—:—

1\. 'தவர்' என்பது மணக் குடவர் பாடம்.

2. வான்சிறப்பு

வான் சிறப்பாவது மழையினது தலைமை கூறுதல்.

இது கடவுட் செய்கைத்தாதலான் அதன்பிற் கூறப்பட்டது. இஃதீண்டுக் கூறியதென்னையெனின், பின்னுரைக்கப் படுகின்ற இல்லறமுந் துறவறமு மினிது நடப்பது மழையுண்டாயி னென்றற்குப் போலும்; அன்றியும், மங்கலத்தின் பொருட்டுக் கூறினா ரெனினும் அமையும்.

11. **சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(இ-ள்) தேவர்களுக்கு இவ்விடத்துச் செய்யப்படுகிற விழவும் பூசனையும் நடவாது வானம் புலருமாயின், (எ-று)

உம்மையால் முனிவர்க்குமென்று கொள்ளப்படும். மழை பெய்யாக்கால் வருங் குற்றங் கூறுவார் முற்பட நால் வகைப்பட்ட அறத்தினும் பூசை கெடுமென்றார். 1

12. **தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்**
வானம் வழங்கா தெனின்.

(இ-ள்) தானமுந் தவமுமாகிய விரண்டறமு முளவாகா; அகன்ற வுலகத்துக்கண் மழை பெய்யாதாயின், (எ-று).

இது, தானமுந் தவமுங் கெடுமென்றது. 2

13. **நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
வானின் றமையா தொழுக்கு.

(இ-ள்) நீரையின்றி யுலகம் அமையாதாயின், யாவர்க்கும் மழையை யின்றி ஒழுக்கம் உண்டாகாது, (எ-று)

ஒழுக்கம்-விரதம், இஃது, ஆசாரங்கெடுமென்றது. இவை மூன்றினானும் நால்வகையறமுங் கெடுமென்று கூறினார். 3

14. **விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
துண்ணின் றுடற்றும் பசி.

(இ-ள்) வானமானது நிலைநிற்கப் பொய்க்குமாயின், விரிந்த நீரினையுடைய அகன்ற வுலகத்திடத்தே நின்று பசியானது வருத்தா நிற்கும்; எல்லாவுயிரையும், (எ-று).

பொய்த்தல் - தன்றொழில் மறுத்தல். இது, 'பசி' என்று பொதுப்படக் கூறியவதனான் மக்களும் விலங்கும், பொருளுங் காமமுந் துய்க்கலாற்றாது துன்பமுறுமென்று கூறிற்று. 4

15. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(இ-ள்) வானினின்றுந் துளிவீழினல்லது அவ் விடத்துப் பசுத்த புல்லினது தோற்றமுங் காண்டல் அரிது, (எ-று).

ஆங்கென்பதனை அசையாக்கினு மமையும், இஃது, ஓரறிவுயிருங் கெடுமென்றது. 5

16. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(இ-ள்) ஏரினுழுதலைத் தவிர்வருழவர், புயலாகிய வாரியி னுடைய வளங்குறைந்த காலத்து, (எ-று)

இஃது, உழுவாரில்லை யென்றது. 6

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(இ-ள்) நிலமேயன்றி நெடியகடலும் தனது தன்மை குறையும், மின்னி மழையானது பெய்யாவிடின், (எ-று).

தடிந்தென்பதற்குக், கூறுபடுத்து என்று பொருளுரைப்பாருமுளர். இது, நீருள் வாழ்வனவும் படுவனவுங் கெடுமென்றது. இவை நான்கினானும் பொருட்கேடு கூறினார்; பொருள்கெட இன்பங்கெடு மென்பதனால் இன்பக்கேடு கூறிற்றிலர். 7

18. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

(இ-ள்) பெய்யாதே நின்று எல்லாப்பொருளையுங் கெடுப்

பதுவும், அவைகெடப் பட்டார்க்குத் துணையாய்த் தான் பெய்து பொருள்களெல்லாவற்றையும் அவ் விடத்தே யுண்டாக்குவதும் மழையே (எ-று).

இஃது, இரண்டினையுஞ் செய்யவற் றென்றவாறு. 8

19. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(இ-ள்) பிறிதொன்றுண்பார்க்கு அவருண்டற்கான வுணவுகளையு முண்டாக்கித், தன்னை யுண்பார்க்குத் தானே உணவாவதும் மழை, (எ-று).

உணவாக்கி என்னுது உணவசய உணவாக்கி என்றது உயிர்ப் பன்மையை நோக்கி அவரவர் உண்ணத்தகுவன (எ-று).

இது, பசியைக் கெடுக்கு மென்றது. 9

20. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

(இ-ள்) மழைவளம் நிலை நிற்க உலகநடை தப்பாது வருதலான், அம் மழைதான் உலகத்தார் அமிர்தமென்று உணரும் பகுதியது, (எ-று).

இஃது, அறம் பொரு ளின்பங்களை யுண்டாக்குதலானும், பலவகைப்பட்ட வுணவுகளை நிலை நிறுத்துதலானும், இம் மழையினை மற்றுள்ள பூத மாத்திரமாக நினைக்கப் படாதென்று இதன் தலைமை கூறிற்று.

—:—

3. நீத்தார் பெருமை

நீத்தார் பெருமையாவது துறந்த முனிவரது பெருமையைக் கூறல்.

இது கடவுளரை வணங்கினாற்போல் முனிவரையும் வணங்க வேண்டுமென்பதனானும் அவையடக்கக் கருத்தினானும் அவையிற்றின்பிற் கூறப்பட்டது.

பாயிரம்—3, நீத்தார் பெருமை

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(இ-ள்) ஒழுக்கத்தின் பொருட்டு எல்லாப் பொருளையுந் துறந்தாரது பெருமையை நூல்களின் துணிவு விழுப்பத்தின் பொருட்டு வேண்டும், (எ-று).

யாதானுமொரு பொருளைச் சொல்லும் நூலும் தன்னையெல்லாருங் கொண்டாடுதற்காகத் துறந்தார் பெருமையை நன்கு மதித்துக் கூறும்; அதனானேயானுஞ் சொல்லுகின்றேனென்பது கருத்து. அன்றியும் ஒழுக்கத்தின் கண்ணே நின்று எல்லாப் பொருளையுந் துறந்தாரது பெருமையாவது உயர்ச்சியிலே விரும்பி நடக்கின்ற நூல்களிற்றுணிந்த பொருளென்றுமாம். என்றது எல்லாந் துறந்தார்க்குப் பெருமையாவது அவரது தன்மை அதனைத் தத்துவ வாராய்ச்சியால் நூல்களிற்றுணிந்த பொருளெனினல்லது வேறொன்றோடுவமிக்கப்படா தென்றவாறு.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(இ-ள்) காமமுதலாயின துறந்தாரது பெருமைக்கு அளவு கூறின், உலகத்துப் பிறந்திறந்தாரை இத்துணையரென்று எண்ணியறியலுற்றாற் போலும், (எ-று).

பெருமைக்கெல்லை கூறுதலரிதாயினுஞ் சில சொல்லப் புகாநின்றேனென்பது கருதிக் கூறிற்று.

23. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர்[1] வித்து.

(இ-ள்) அறிவாகிய தோட்டியாலே பொறியாகிய யானையைந்தையும் புலன்களிற் செல்லாமல் மீட்பவன் மேலாகியவிடத்தே யாதற்கு இவ்விடத்தே யிருப்பதொரு வித்து' (எ-று).

---

1. 'வைப்பிற்கோர்' என்பது மணக்குடவர் பாடம்

பெருமை சொல்லுவார். முற்பட மக்கட் டன்மையுடையான் இவ் வுலகின்கண் வாழ்பவனல்லன், தேவருளொருவனென்று கூறினார்.

24. **சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு.**

(இ-ள்) சுவை முதலாகக் கூறிய வைந்தனது வகையை யாராய்வான் கண்ணதே யுலகம், (எ-று).

எனவே இவையிற்றின் காரியம் வேறேன்றாகத் தோன்றுமன்றே; அதனை அவ்வாறு காணாது கூறுபடுத்துக் காணக்காரணந் தோற்றுமாதலால், காரியமான வுலகம் அறிவான் கண்ணதாமென்றவாறாயிற்று. இஃது உலகினும் பெரியனென்றது. 4

25. **ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா னிந்திரனே சாலுங் கரி.**

(இ-ள்) நுகர்ச்சியாகிய வைந்தினையுந் துறந்தானது வலிக்கு அகன்ற விசும்பின்கணுள்ளார்க்கு நாயகனாகிய இந்திரனே யமையுஞ் சான்று, (எ-று).

இந்திரன் சான்றென்றது, இவ்வுலகின்கண் மிக்க தவஞ் செய்தவருளராயின், அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான். இது தேவரினும் வலியனென்றது. 5

26. **இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற் றுலகு.**

(இ-ள்) பிறப்பும் வீடுமென்னு மிரண்டினது கூறுபாட்டை யாராய்ந்து இவ்விடத்தே துறவறத்தை மேற்கொண்டாரது பெருமையே உலகத்தில் மிக்கது, (எ-று)

இஃது, எல்லாராலும் போற்றப்படுமென்றது. 6.

27. **நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்.**

பாயிரம்—3, நீத்தார் பெருமை.

(இ-ள்). நிரம்பிய கல்வியையுடைய மாந்தரது பெருமையை அவராற் சொல்லப்பட்டு நிலத்தின்கண் வழங்காநின்ற மந்திரங்கள் காட்டும், (எ-று).

இஃது. அவராணை நடக்குமென்று கூறிற்று. 7

28. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(இ-ள்) குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார்மாட்டு உளதாகிய வெகுளியால் வருந்தீமையைச் சிறிது பொழுதாயினும் வாராமற் காத்தலரிது.

நகுஷன் பெரும்பாம்பாயினான். இது, வெகுளி பொறுத்த லரிதென்றது. 8

29. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(இ-ள்) செயற்கு அரியன செய்வாரைப் பெரியரென்று கொள்ளப்படும்; அதனைச் செய்ய மாட்டாதாரைத் துறந்தார் ஆயினுஞ் சிறியரென்று கொள்ளப்படும், (எ-று).

செயற்கரியன-இயம நியம முதலாயின. இவ்வதிகாரம் துறந்தார் பெருமையென்று கூறப்பட்டதாயினும், துறவு மாத்திரத்தானே பெரியரென்று கொள்ளப்படாது; செயற்கரியன செய்வாரையே பெரியரென்று கொள்ளப்படுவதென்று கூறப்பட்டது.

30. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(இ-ள்) எல்லாவுயிர்க்குஞ் செவ்விய தட்பஞ்செய்தலை மேற்கொண்டொழுகலான், அந்தணரென்போரையுந் துறந்தாராகக் கொள்ளப்படும், (எ-று).

மேல் துறந்தவர்களினுஞ் சிறியாருளரென்று கூறினார்; இது

பாயிரம்—3, நீத்தார் பெருமை

துறவாதாரினும் பெரியாருளரென்று கூறப்பட்டது. இவையிற் றிறனெல்லாம் துறவறத்தின் பெருமை கூறுதலான் ஈண்டுக் கூறப்பட்டன. 10

—:—

4. அறன்வலியுறுத்தல்

அறன்வலியுறுத்தலாவது, அறம் பொருள் இன்பமென்னும் மூன்றனுள்ளும் அறன் வலிமையுடைத் தென்பதனை யறிவித்தல். இஃது அறத்துப்பால் மேற்கூறிய முனிவராற் கொண்டுய்க்கப் படுவன அதன் பிற்கூறப்பட்டது.

31 சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(இ-ள்) முத்தியையுந்தரும் செல்வத்தையும் தரும் ஆதலால், அறத்தின்மேல் உயிர்கட்கு ஆக்கமாவது பிறிதில்லை, (எ-று).

பொருளானே ஆக்கமுண்டென்பாரை மறுத்து, அறன் வலியுடைத்தென்று கூறிற்று. 1

32 ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லுமவா யெல்லாஞ் செயல்.

(இ-ள்) தமக்கியலுந் திறத்தானே அறவினையை ஒழியாதே செல்லுமிடமெல்லாஞ் செய்க, (எ-று).

இயலுந்திறமென்றது மனமொழிமெய்களானும் பொருளானும் செல்லும்வாய் என்பது அறஞ்செய்தற் கிடமாகிய பல விடங்களும் ஒழியாதென்றது நாடோறு மென்றது. இஃது, அறம் வலியுடைத்தென் றறிந்தவர்கள் இவ்வாறு செய்க வென்றது. 2

33 அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

பாயிரம்—4, அறன்வலியுறுத்தல்.

(இ-ள்) பின்பே அறிந்துகொள்கின்றே மென்னாது முன்பே அறத்தைச் செய்க; அது சாங்காலத்துஞ் சாவாதே நின்று பிறக்கு மிடத்துத் துணையாம்.

இஃது, அறஞ்செய்யுங்கால் விரைந்து செய்யவேண்டுமென் பதும், அது மறுமைக்குத் துணையாமென்பதும் கூறிற்று. 3

34. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

(இ-ள்) அறநெறி யித்தன்மைத்தென்றியாம் காட்ட வேண்டா, சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காணலாம். (எ-று).

இது, பொன்றுங்கால் துணையாமோ என்றையுற்றார்க்குத் துணையாயினவாறு காட்டிற்று.

35. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ-ள்) அறத்தால் வருவது யாதொன்று, அதுவே இன்ப முறும் புகழுமாவது அஃதன்றி வருவனவெல்லாந் துன்பமாம்; புகழு மிலவாம், (எ-று).

இஃது, எல்லாப் போக நுகர்ச்சியும் இதனானே வரு மென்றது.

36. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்

(இ-ள்) ஒருநாளு மிடைவிடாமல் நன்மையைச் செய்வா னாயின், அச்செயல் பிறப்பும் இறப்புமாகிய நாள் வருகின்ற வழியை யடைப்பதொரு கல்லாம், (எ-று).

இது, வீடு தருமென்றது.

1. பாயிரம்—4, அறன்வலியுறுத்தல்

37. **செயற்பால தோரு மறனே யொருவற்**
குயற்பால தோரும் பழி.

(இ-ள்) ஒருவனுக்குச் செய்யும் பகுதியது அறமே; தப்பும் பகுதியது பழியே, (எ-று).

மேல் அறஞ் செய்யப் பிறப்பறு மென்றார்; அதனோடு பாவமுஞ் செய்யின் அருதென்றற்கு இது கூறப்பட்டது. 7

38. **அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை**
மறத்தலி னூங்கில்லை[1] கேடு.

(இ-ள்) ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை; அதனைச் செய்யாமையின் மேற்பட்ட கேடு மில்லை; (எ-று).

இஃது, அறஞ்செய்யாக்கால் கேடுவருமென்று கூறிற்று. 8

39. **அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு**
மிழுக்கா வியன்ற தறம்.

(இ-ள்) மனக்கோட்டமும், ஆசையும் வெகுளியும் கடுஞ் சொல்லும் எனும் நான்கினையும் ஒழித்து நடக்குமது யாதொன்று, அஃது அறமென்று சொல்லப்படும், (எ-று).

பின்னர்ச் செய்யலாகாதென்று கூறுவனவெல்லாம் இந்நான்கினுள் அடங்கும். / மேற்கூறிய அறம் எத்தன்மைத்தென்றார்க்கு இது கூறப்பட்டது.

40. **மனத்துக்கண் மாசில னாத லனைத்தற**
னாகுல நீர பிற.

(இ-ள்) ஒருவன் தன் மனத்தின்கண் ஓரழுக்கு மிலனாவதே எல்லாவறமுமாவது; அதனின் அழுக்குண்டாயிருக்கச் செய்வன வெல்லாம் ஆரவார நீர்மையன (எ-று).

பிறரறியவேண்டிச் செய்தானு மென்றவாறாயிற்று. மேல் நான்கு பொருளைக் கடிய வேண்டுமென்றார்; அவை நான்கும் மன மொன்றுந் தூயதாகப் போமென்று அதன் பிற் கூறப்பட்டது. 10

பாயிரம் முடிந்தது.

—:—

1. 'னூங்கில்லையாம்' என்பது மனக்குடவர் பாடம்

2. இல்லறவியல் (20)

இனி, இல்லறமாவது இல்லின்கணிருந்து தான முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரமிருபதினும் இல்வாழ்வான் வாழுந் திற மோரதிகாரத்தானும் அதற்குத் துணையான மனைவி யிலக்கணம் ஓரதிகாரத்தானும் கூறி, அதன்பின் இல்லறப் பகுதியான பிரமசரியங் காருகத்தியமென்னு மிரண்டினுள்ளும் பிரமசரியமாகிய புதல்வரைப் பெறுதல் ஓரதிகாரத்தானுங் கூறிக் காருகத்திய விலக்கணங் கூறுவார் நல்கூர்ந்தார், நல்குரவினீங்கினர், செல்வர் வள்ளியோ ரென்னும் நால்வரினும் அன்புடைமை முதலாக ஒழுக்கமுடைமை யீருக நல்கூர்ந்தாராற் செய்யப்படுவன வேழும், பிறனில் விழையாமை முதலாகத் தீவினையச்ச மீருக இவராற் றவிரப்படுவன வேழும் ஆகப் பதினாலதிகாரத்தாற் கூறி. இவற்றோடுங்கூட ஒப்புர வறிவதல் நல்குரவினீங்கினராற் செய்யப்படுமென்று கூறி, இவற்றோடுங்கூட ஈதல் செல்வராற் செய்யப்படுமாறு கூறி, இவற்றோடுங் கூடப் புகழ் வள்ளியோராற் செய்யப்படுமென்று கூறினராகக் கொள்ளப்படும் என்றவாறு. இவ்வறம் முற்படக் கூறியது, துறவறத்தினின் றூரையும் ஒம்புதல் இல்வாழ்வான் கண்ணதாதலான் அவற்றுள்.

1. இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையாவது இல்லின்கண் இருந்து வாழ்வார் வாழுந்திறன் கூறுதல். மேல் அறஞ்செய்யவேண்டுமென்றார், இது முதலாக அறஞ்செய்யுமாறு கூறுகின்றாராதலின். அதன் பிற் கூறப்பட்டது.

2. இல்லறவியல்—1. இல்வாழ்க்கை.

41. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(இ-ள்) இல்வாழ்வானென்று சொல்லப்படுபவன் இயல்புடைய மூவர்க்கும் நல்லவழியின்கண்ணே நின்றதொருதுணை, (எ-று).

என்றது, தானமாகிய வில்லறஞ் செய்யுமவன் தவத்தின் பாற்பட்ட விரதங்கொண் டொழுகாநின்ற பிரமச்சாரிக்கும் தவமேற் கொண் டொழுகாநின்ற வானப்பிரஸ்தர் ஸந்நியாசிகளுக்கும், தத்தம் நிலைகுலையாம லுணவு முதலாயின கொடுத்துப் பாதுகாத்தலின், அவர்க்கு நல்லுலகின்கண் செல்லும் நெறியிலே நின்ற தொரு துணையென்று கூறியவாருயிற்று. துணையென்றது இடையூறு வாராமலுய்த்து விடுவாரை. 1

2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(இ-ள்) வருணத்தினையும் ஆச்சிரமத்தினையுந் துறந்தார்க்கும், துறவாது நல்குரவாளரா யுண்ணப் பெருதார்க்கும், பிறராய் வந்து செத்தார்க்கும் இல்வாழ்வானென்று சொல்லப்படுமவன் துணையாவான், (எ-று).

மேற்கூறிய மூவரும் வருணாச்சிரமங்களைத் துறவாமையா னீண்டுத் துறந்தாரென்று கூறப்பட்டது. செத்தார்க்கிவன் செய்ய வேண்டுவது புறங்காட்டுய்த்தல் முதலாயின செய்ய வேண்டுதலின், இது, மேற்கூறியவரே யன்றி இவர்க்கும் துணையென்று கூறிற்று. 2

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

(இ-ள்) பிதுரர், தேவர், புதியராய் வந்தார், சுற்றத்தார், தானென்னு மைந்திடமாகிய நெறியைக் கெடாம லோம்புதல் தலையான வில்வாழ்க்கை, (எ-று).

2. இல்லறவியல்—இல்வாழ்க்கை

என்றது தனக்குண்டான பொருளை ஆறு கூறாக்கி ஒருகூறு அரசற்குக் கொடுத்து ஒழிந்தவைந்து கூறினுந் தான் கொள்வது ஒரு கூறென்றற்குத் தன்னையு மெண்ணப்பட்டது. இது தலையான இல்வாழ்க்கை வாழும் திறம் கூறிற்று; என்னை? இவையெல்லா மொருங்கு செய்யப்படுதலின். மேற்கூறிய அறுவரும் விருந்தினது வகையினரென்று கொள்ளப்படும். 3

44. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(இ-ள்) இல்வாழ்க்கையாகிய நிலை பழியையுமஞ்சிப் பகுத்துண்டலையுமுடைத்தாயின், தனதொழுங்கு இடையறுதல் எக்காலத்தினுமில்லை, (எ-று).

மேற் பகுக்குமாறு கூறினார், பகுக்குங்காற் பழியொடுவாராத பொருளைப் பகுக்கவேண்டுமென்று கூறினார். 4

45. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(இ-ள்) இல்வாழ்க்கையாகிய நிலை யாவர்மாட்டும் அன்பு செய்தலையும் அறஞ்செய்தலையும் உடைத்தாயின், அதற்குக் குணமாவதும் பயனாவதும் அவ்விரண்டினையுமுடைமை (எ-று).

பயன் வேறு வேண்டா; தனக்கும் பிறர்க்கும் உண்டான முக மலர்ச்சி தானே யமையுமென்பதூஉம் பழியொடு வாராவுணவைப் பகுக்குங்கால் ஏற்பார் மாட்டு அன்புசெய்யவேண்டுமென்பதூஉம் சீலவானுக் கொடுக்கவேண்டுமென்பதூஉம் கூறிற்று. 5

46. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(இ-ள்) இல்வாழ்க்கையாகிய நிலையை அறநெறியிலே செலுத்தவல்லனாயின், புறநெறியாகிய தவத்திற் போய்ப்பெறுவது யாதோ? (எ-று).

3. இல்லறவியல்-இல்வழ்க்கை

மேல் சிலவாறுய்க் கொடுக்கவேண்டுமென்ருர்., அவ்வாறு செய்யின் தவப்பயனும் இது தானே தருமென்றவாறு 6

47\. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

(இ-ள்) பிறரையும் நன்னெறியிலே ஒழுகப்பண்ணித்தானும் அறத்திற்றன் பாலொழுகும் இல்வாழ்க்கை தவஞ்செய்வாரினும் வலியுடைத்து. (எ-று).

பிறரை ஒழுகப் பண்ணுதலாவது அவர்க்கு வேண்டுவன அமைத்தல். இது, தவத்தினும் வலியுடைத்தென்றது.

48\. இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(இ-ள்) நெறியினனே யில்வாழ்க்கையை வாழ்பவ னென்பான், முயல்வாரெல்லாரினுந் தலையாவன், (எ-று).

முயறல்-பொருட்கு முயறல்; என்னே? 'வீத்து மிடவேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சின்மிசைவான் புலம் என்ருராகலின் இதனனே பொருளும் உண்டாமென்று கூறினர். 8

49\. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்து ளைவக்கப் படும்.

(இ-ள்) இல்வாழ்க்கை வாழும்படியிலே வாழுமவன், உலகத்திலே தேவருள் ஒருவனுக மதிக்கப்படுபவன், (எ-று).

இது, இவன் எல்லாராலும் மதிக்கப்படுவ னென்றது 9

50\. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(இ-ள்) அறனென்று, சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே, அத்தன்மைத்தாகிய அதுவும் நன்ருவது பிறனொருவனற் பழிக்கப்படுவதொன்றை யுடைத்தல்லவாயின், (எ-று).

பழிக்கப்படுவதென்றது இழிகுலத்தாளாகிய மனையாளை, இனி வாழ்க்கைத் துணைநலங் கூறுகின்றாராகலின், இது பிற்கூறப் பட்டது. 10

2. வாழ்க்கைத் துணை நலம்

வாழ்க்கைத் துணைநலமாவது இல்வாழ்க்கைத் துணையாகிய மனையாளது பெண்மை யிலக்கணங் கூறுதல். இஃது ஈண்டுக் கூறிய தென்னை? மனையாளிலக்கணமாயிற் காமத்துப் பாலுட் கூறற் பாற்றெனின் இது மனையாளாற் செய்யப்படும் தருமமாதலான் ஈண்டுக் கூறப்பட்ட தென்க. இல்வாழ்வார்க்கு மாட்சிமைப் பட்ட மனையாளோடும் வாழ வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

51. **மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(இ-ள்) தான் பிறந்த குடிக்குத்தக்க வொழுக்கத்தையுமுடைய ளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினையு முடையவள் இல்வாழ்க்கைத் துணையாவள், (எ-று).

இது ஒழுக்கமும் புகுதிக்குத்தக்க செலவுமுடையளாக வேண்டும் என்றது. 1

52. **மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை**
யெனைமாட்சித் தாயினு மில்.

(இ-ள்) குடிக்குத்தக்க வொழுக்கம் மனையாள்மாட்டு இல்லை யாயின், அவ் வில்வாழ்க்கை எல்லா நன்மைகளை யுமுடைத்தாயினும் ஒரு நன்மையும் இன்றாம், (எ-று).

வருவாய்க்குத் தக்க செலவினளாகவே இல்வாழ்க்கை இனிது நடக்கும். ஒழுக்கக் குறைபாடுண்டானால் வரும் குற்றமென்னை என்றார்க்கு இது கூறப்பட்டது. 2

2. வாழ்க்கைத் துணை நலம்.

53. **சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.**

(இ-ள்) மகளிரைச் சிறைசெய்து காக்குங்காவல்யாதனைச் செய்யும்? அவரது கற்புக் காக்குங் காவலே தலையான காவல், (எ-று) 3

'மேற்கூறிய ஒழுக்கம் சிறை செய்து காக்க உண்டாகாதோ' என்றார்க்கு, 'அது செய்தாலும் நிறையிலராகில் அழியும், இரண்டும் வேண்டும் என்பதூஉங் கூறிற்று.

54. **பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.**

(இ-ள்) பெண் பிறப்புப்போல மேம்பட்டன யாவையுள? கற்பாகிய திண்மை யுண்டாகப் பெறின், (எ-று).

'மேல் வேண்டும் என்ற நிறையுடைமை குல மகளிர்க்கு இயல்பன்றோ' என்றார்க்கு, அஃது எல்லார்மாட்டும் உளதாகா தென்று கூறப்பட்டது. 4

55. **புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.**

(இ-ள்) புகழ்பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு இல்லையாம், தம்மை யிகழ்ந்துரைப்பார்முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை, (எ-று).

ஏற்றுநடை-அசைவும் தலையெடுப்பும் (பொருந்திய நடை.)

'மனையாளொழுக்கக் குறைபாட்டால் அறத்திற்கு வரும் குற்றமென்னை' யென்றார்க்கு, 'அதனானே தலையிறக்கம் வரும்; வந்தால் பின் இல்வாழ்க்கைத் தருமம் செல்லாது' என்பது கூறுகின்றாராதலின் பிற் கூறப்பட்டது. 5

56. **இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.**

2. வாழ்க்கைத் துணை நலம்.

(இ-ள்) ஒருவனுக்கு மனையாள் மாட்சிமையுடையளானால், எல்லாமிலனேயாயினும் இல்லாததியாது? மனையாள் மாட்சிமை இலளானால், எல்லா முடையானாயினும் உண்டானதி யாது? (எ-று).

இஃது ஒன்றும் நன்றாக மற்றுள்ள இன்மை தோன்றாது. அது போல இஃதொன்றும் தீ தாக மற்றுள்ள உடைமையும் தோன்றா தென்றது. இத்துணையும் மனையாளொழுக்கமுடையளாக வேண்டு மென்றவாறாயிற்று. 6

57. **தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

(இ-ள்) தன்னையுங் காத்துத், தன்னைக்கொண்டவனையும் பேணி, நன்மையமைந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மை யுடையவளைப் பெண்ணென்று சொல்லப்படும் (எ-று)

புகழ் படைத்தலாவது, அறம் பொருள் இன்பங்களைப்பற்றி யுலகத்தார் பழியாமல் ஒழுகினால் அவரால் நன்மை சொல்லப் பெறுதல். சோர்வின்மையாவது, அப்பொருளைக் கடைப்பிடித்தல் இஃதொழுகுந்திறன் கூறிற்று. இதனானே பெண்மையிலக்கணம் எல்லாம் கூறப்பட்டது. 7

58. **தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை.**

(இ-ள்) தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய், எல்லாத் தெய்வமுந் தன் கணவனென்றே கருதி, அவனை நாடொறுந் தொழுதெழுமவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும், (எ-று).

எழுதல்-உறங்கி எழுதல், தெய்வமும் ஏவல் செய்யுமென்று மேற்கூறிய ஒழுக்கத்தான் இம்மைப்பயன் கூறிற்று 8

59. **பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழு முலகு.**

(இ-ள்) பெண்டிரானவர் தம்மை மனைவியாகப் பெற்ற வரையே தமக்குத் தலைவராகப் பெறின், தேவரால் வாழப்பட்ட பெரிய சிறப்பினையுடைய உலகத்தைப் பெறுவர், (எ-று)

இதனானே அதனின் மாறுபட ஒழுகினார் நரகம் புகுவர் என்றவாறாயிற்று. இது மறுமைப் பயன் கூறிற்று. இவை மூன்றினானும் பெண்டிரிலக்கணமும் அவர் பெறும் பயனும் கூறப்பட்டது.

60. **மங்கல மென்ப மனைமாட்சி மற்றத**
னன்கல நன்மக்கட் பேறு.

(இ-ள்) ஒருவனுக்கு அழகென்று சொல்லுப, மனையாள் ஒழுக்கமுடையளாதலை; அவ் வழகின்மேலே நல்ல அணிகலனென்று சொல்லுப, நல்ல புதல்வரைப் பெறுதலை, (எ-று)

பின்பு புதல்வரைப் பெறுதல் கூறுகின்றாராதலின் இதுபிற் கூறப்பட்டது. 10

3. புதல்வரைப் பெறுதல்

புதல்வரைப் பெறுதலாவது புதல்வரைப் பெற்றதனாலாய பயன்கூறுதல் இஃதீண்டுக் கூறிய தென்னை, பெறுபேறாதலின் பொருட்பாலிற் கூறற்பாற்று எனின்? இவனடத்துகின்ற இல்வாழ்க்கைக்கு மனைவியர் துணையாயினாற் போலப் புதல்வரும் துணையாவா ரென்றற்கும், இல்வாழ்க்கை இடையறாமற் சேறற்காகவும், அவரைப் பெற்றால் வளர்க்கும் திறன் கூறுதல் நால்வகைப்பட்ட ஆச்சிரமத்தினும் பிரம்சரியம் கூறுதலாமாதலானும் அவரானே நல்வினைப்பயன் பெறமாதலானும் ஈண்டுக் கொள்ளப் பட்டதென்று கொள்ளப்படும். மேலதனோடியைபுமிது.

3. புதல்வரைப் பெறுதல்

**61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.**

(இ-ள்) ஒருவன் பெறும் பொருள்களுள் அறிவுடைய மக்களைப் பெறுதல் போலப் பயன்படுவது ஒழிந்த பொருள்களெல்லாவற்றினும் யாம் கண்டறிவதில்லை, (எ-று).

பிறபொருளாயின் ஒருபிறப்பளவு முடியநில்லாது. இது இருமைக்கும் துணையாதலால் புதல்வரைப் பெறவேண்டும் என்றது. 1

**62. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.**

(இ-ள்) எழுபிறப்பினுந் துன்பங்கள் சாரா; ஒரு பிறப்பிற் பழியின்கண் மிகாத குணத்தினையுடைய புதல்வரைப் பெறுவராயின், (எ-று).

அறம்பொருள் இன்பம் என்னும் மூன்றும் பயக்கும் என்பார் முற்பட அறப்பயன் எய்தும் என்று கூறினர். அன்றியும் தன்னளவும் பிறந்த முன்புள்ள எழுவர்க்கும் எனினும் அமையும். 2

**63. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.**

(இ-ள்) தம்முடைய பொருளென்று சொல்லுவர் உலகத்தார் தம்மக்களை; அம் மக்களுடைய பொருள்கள் தந்தாமுடைய வினையோடே கூடவருமாதலான், (எ-று).

மக்களுக்குண்டான பொருளும் தமக்குண்டான பொருளோடொக்க இயல்பிற்றாய் இம்மை மறுமைக்கண் இன்பம் பயத்தலிற் பொருளாகுவாரும் மக்கள் என்று கூறிற்று. 3

**64. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.**

(இ-ள் இனிமையுடைத்தாகிய அமிழ்தத்தினும் மிகவினது, தம்முடைய மக்களது சிறியகைகளால் அளையப்பட்டகூழ், (எ-று)

3. புதல்வரைப் பெறுதல்

இன்பம் தருமென்றார் முற்படச் சுவைக்கினிதென்று கூறினார். 4

65. **மக்கள்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்**
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(இ-ள்) தம்மக்களது உடம்பினைச் சார்தல் தம்முடம்பிற் கின்பமாம்; அவரது சொற்களைக் கேட்டல் செவிக் கின்பமாம், (எ-று)

இது ஊறும் ஓசையும் இனிதாமென்றது. ஒளியும் நாற்றமும் சொல்லாராயினார், அது செயற்கையானும் வருமாதலான். 5

66. **குழலினி தியாழினி தென்பதம் மக்கண்**
மழலைச்சொற் கேளா தவர்.

(இ-ள்) குழலோசை யினிது, யாழோசை யினிதென்று சொல்லுவர் தம் மக்களது மழலைச் சொற்களைக் கேளாதவர். கேட்டவர் சொல்லார், (எ-று).

பிறவாற்றானும் தருமின்பமும் இதனோடொவ்வாதென்றது இதனானே மற்றுள்ள பொறிகளான் வருமின்பமும் சொன்னாராகக் கொள்ளப்படும், ஒன்றென முடித்தலென்பதனான். 6

67. **தந்தை மகற்காற்று நன்றி யவையத்**
முந்தி யிருப்பச் செயல்.

(இ-ள்) தந்தை மகனுக்குச் செய்யும் உபகாரம், அவைக் களத்தின்கண்ணே முந்துற்றிருக்குமாறு கல்வியுண்டாக்குதல், (எ-று)

இது புதல்வரைக் கல்வியுண்டாக்குக என்றது. 7

68. **தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து**
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(இ-ள்) தம்மக்க ளறிவுடையாரானால் அது தம்மினும் உலகத்துமன்னுயிர்கட்கெல்லாம் இனிதாம், (எ-று).

3. புதல்வரைப் பெறுதல்

மேல் புதல்வரைக் கற்பிக்க வேண்டுமென்ருர், அதனற் பயனென்னையென்ருர்க்கு, அவர் நன்னெறியினொழுகுதலானே தமக்கும் பிறர்க்கும் இனிமையுண்டாமென்று கூறப்பட்டது. 8

69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்ருே னெனக்கேட்ட தாய்.

(இ-ள்) தான்பெற்ற காலத்தினும் மிக மகிழும், தன் மகனைச் சான்ருேனெனப் பிறர் சொல்லக் கேட்டகாலத்துத்தாய், (எ-று). யாது மறியாத பெண்டிரும் மகிழ்வரென்று கூறிற்று 9

70. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்ருன் கொல்லெனுஞ்[1] சொல்.

(இ-ள்) மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரம், இவன் தந்தை என்னதவஞ்செய்தானென்று உலகத்தார் சொல்லுஞ் சொல்லைப் படைத்தல், (எ-று).

இது, நெறியினொழுகுவாரை உலகத்தார் புகழ்வராதலான், மகனும் ஒழுக்கமுடையனாக வேண்டுமென்றது.

இவ்வதிகாரத்துப் புதல்வரைக் கற்பிக்க வேண்டும் என்றதனுனும் புதல்வன் உலகத்தார் புகழுமாறு ஒழுகவேண்டும் என்றதனுனும் நால் வகைப்பட்ட ஆச்சிரமத்தினும் இல்வாழ்வான் இலக்கணம் அன்புடைமை முதலாகக் கூறுகின்ருராதலானும் முற்படப் பிரமசரிய விலக்கணம் கூறியவாருயிற்று. 10

4. அன்புடைமை

அன்புடைமையாவது தன்னைச் சார்ந்தார் மாட்டுக் காதலுடையவனுதல். எல்லாக் குணங்களிற் சிறந்த தாகலின் முற்படக் கூறினர். அன்பு சிறந்த வாறென்னையெனின்? ஈண்டுக்

---

[1] 'கால்லெனும்' என்பது மணக் பாடம்.

4. அன்புடைமை

கூறுகின்ற அறம் தானமாதலின், அஃதன்பிலார் மாட்டுச் சென்று ஏற்பாரின்றாம் என்பதனால் அன்பு சிறந்ததென்க.

71 என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(இ-ள்) என்பிலாத உயிரினைவெயில் சுடுமாறு போலச்சுடும், அன்பிலாத வுயிரினை அறமும், (எ-று).

என்றது என் சொன்னவாறோ வெனின், என்புள்ளதனுக்கு வெயில்குளிர் தீர்த்தல் முதலான இன்பத்தைப் பயக்கும். அவ்வாறன்றி என்பில்லாததனுக்கு வெயில் இறந்துபாட் டெல்லையான துன்பத்தைப் பயக்குமாதலால் ஒரு தன்மையாக எறித்த வெயில் உடம்பு வேற்றுமையால் இன்பமும் துன்பமும் பயந்தவாறு போல் அறமாகிய கடவுளும் பிறர் மாட்டு அன்பு செய்தார்க்கு இன்பமும் அன்பிலாதார்க்குத் துன்பமும் பயக்கும் என்றவாறாயிற்று. இதனானே அன்பு வேண்டுமென்றாராம். 1

72. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

(இ-ள்) தன்னிடத்து அன்பில்லாத வுயிரினது வாழ்க்கை, வலிய பாரிடத்து உண்டாகிய உலர்ந்த மரம் தளிர்த்தாற்போலும், (எ-று).

தளிர்த்தற்குக் காரணமின்மையால் தளிராதென்றவாறாயிற்று இஃது அன்பிலாதார்க்கு ஆக்கமில்லை என்றது.

73. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பில் லவர்க்கு[1].

(இ-ள்) உடம்பின் அகத்துறுப்பாகிய அன்பிலாதார்க்குப் புறத்துறுப்புக்களெல்லாம் யாதனைச் செய்யும்? (எ-று). 3

---

[1] 'புன்பில்லவர்க்கு' என்பது மணக்குடவர் பாடல்.

4. அன்புடைமை

74. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(இ-ள்) உயிர்க்கு நிலைபேறு அன்பின் வழியதாகிய அறத்தினான் வரும்; ஆதலால், அவ் வன்பிலாதார்க்கு உளதாவது என்பின்மேற் றோலினாற் போர்க்கப்பட்ட வுடம்பு, (எ-று).

இது வீடு பெறாரென்றது; இத்துணையும் அன்பின்மையால் வரும் குற்றம் கூறிற்று.

75. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(இ-ள்) அன்பிலாதார் எல்லாப் பொருளையுந் தமக்கே உரிமையாக வுடையர்; அன்புடையார் பொருளையன்றித் தம்முடம்பிற் கங்கமாகிய வெலும்பினையும் பிறர்க்கு உரிமையாக வுடையர், (எ-று).

அன்புடையார்க்கல்லது அறஞ்செய்த லரிதென்றது. 5

76. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ-ள்) முற்பிறப்பின்கண் அன்போடு பொருந்திச் சென்ற செலவென்று சொல்லுவர்; பெறுதற்கரிய வுயிர்க்கு இப் பிறப்பின்கண் உடம்போடு இடைவிடாத நட்பு, (எ-று)

என்பு-ஆகுபெயர், இது நெடிது வாழ்வாரென்றது. 6

77. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

(இ-ள்) முற்பிறப்பின்கண் பிறர்மேலன்பு வைத்துச் சென்ற செலவென்று சொல்லுவர், இப்பிறப்பின்கண் உலகத்தில் இன்ப முற்றார் அதன் மேலுஞ் சிறப்பெய்துதல், (எ-று).

இது, போகந் துய்ப்பரென்றது. 7

4. அன்புடைமை

78. **அன்பீனு மார்வ முடைமை யதுவீனு**
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(இ-ள்) அன்பு தரும், ஆர்வமுடைமையை; அவ்வார்வ முடைமை தரும், நட்பென்று சொல்லப்பட்ட ஆராய்தலில்லாத சிறப்பினை, (எ-று).

என்றது: அன்பினாலே பத்தியுண்டாம். அதனால் நாயகனோடு வேறுபாடில்லாத முத்தியுண்டாமென்றவாறாயிற்று. நாயகனோடு நட்டலின் நட்பெனப்பட்டது. ஆராயவேண்டாமையின் உலகத்து நட்பல்ல வாயிற்று. இத்துணையும் அன்பினாலுள்ள தாகும் அறப்பயன் கூறப்பட்டது. 8

79. **அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்**
மறத்திற்கு மஃதே துணை.

(இ-ள்) அன்பானது அறஞ்செய்வார்க்கே சார்பாமென்பர் அறியாதார்; அவ்வன்பு மறஞ் செய்வார்க்குந் துணையாம், (எ-று).

மறம் செய்யுங்கால் சுற்றத்தார் மாட்டு அன்புடையார்க்கல்லது பெற்றி கோடலின்றாமாதலான் மறம் செய்வார்க்கும் அன்பு வேண்டுமென்றது, மறஞ்செய்தல் பொருள் காரணமாகலின் பொருட்கும் அன்பு வேண்டும் என்றவாறாயிற்று. என்னை? 'அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான் என்பரியும் ஏதிலான் துப்பு' (867) என்றாராகலின். 9

80. **அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்**
புன்கண்ணீர்[1] பூச றரும். 1

(இ-ள்) அன்பினையும் அடைக்குந்தாழுளதோ? அன்புடையார்மாட்டு உளதாகிய புல்லிய கண்ணின் நீர்தானே ஆரவாரத்தினைத் தரும், (எ-று)

அன்பெனபதியாதென்றார்க்கு அன்புடையார் மாட்டுக் கண்ணீர் தோற்றும், அதனானே அறிந்து கொள்க என்றவாறு. இதனானே இன்பத்துக்கும் அமைந்தவாறு கூறினாரென்று கொள்ளப்படும்.

---

[1] புன் கண்ணீர் என்பது மணக்குடவர் பாடம்.

5. விருந்தோம்பல்

விருந்தோம்பலாவது உண்ணுங் காலத்துப் புதியராய் வந்தார்க்குப் பகுத்துண்ணவேண்டுமென்பது கூறல். மேல் இல்வாழ்வான் பகுக்கவேண்டுவார் எல்லாரையும் கூறுது விருந்து ஒன்றனையும் கூறியது எற்றுக்கெனின், ஆண்டுக் கூறியதெல்லாம் திரப்பிடும்பையாவர்க்குச் செய்தலரிதாயினும் உண்ணுங்காலத்து வந்த விருந்தினர்க்குப் பகுத்துண்டல் அவர்க்கும் வேண்டுதலின் இது சிறப்பு விதியாகக் கூறப்பட்டது. அன்புடையார் மாட்டல்லது விருந்தினர் செல்லாமையின் அதன்பிற் கூறப்பட்டது.

81. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ-ள்) இல்லின்கண் இருந்து பொருளைப் போற்றி வாழும் வாழ்க்கையெல்லாம், வந்த விருத்தினரைப் போற்றி அவர்க்கு உபகரித்ததற்காக, (எ-று).

எல்லாம் என்றது வாழ்க்கைப்பன்மை. இஃது இல்வாழ்க்கையின் பயன் விருந்தோம்பலென்றது. 1

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(இ-ள்) விருந்தினர் இற்புறத்தாராகத் தானே யுண்டல், சாவாமைக்கு உண்ணும் மருந்தாயினும் வேண்டும் பகுதியுடைத்தன்று, (எ-று).

சாவா மருந்தாவது தன்னவிற்குங் குறைந்து இதனானே இவ்வுயிர் கிடக்கும்; இதனிற் குறையிற் சாம் என்னுமளவிற்றுகிய சில்லுணவு. அதனை உலகத்தார் உயிர் போகாக் கஞ்சி என்பர். அமிழ்தம் என்பாருமுளர். இது வாழ்ந்தார்க்கேயன்றி வாழாதார்க்கும் விருந்தோம்ப வேண்டும் என்றது, 2

5. விருந்தோம்பல்

83. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(இ-ள்) நாடோறும் வந்த விருந்தினரைப் போற்றுவானது ஆக்கம், வருத்தமுற்றுக் கேடுபடுவதில்லை, (எ-று)

விருந்தோம்பலினாற் பயன் என்னை என்றார்க்கு அதனுடைய பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடாதென்று கூறினார். 3

84. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்,

(இ-ள்) திருமகள் மனம்பொருந்தி உறையும், நல் விருந்தினரை முகம்பொருந்திப் போற்றுவானது மனையின் கண் (எ-று)

இது, கேடின்மையே யன்றிச் செல்வமுமுண்டா மென்றது. 4

85. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

(இ-ள்) விருந்தினரை ஊட்டி மிக்க வுணவை யுண்ணுமவன் புலத்தின்கண், விளைதற்பொருட்டு விதைக்கவும் வேண்டுமோ? தானே விளையாதோ?

மேற் செல்வமுண்டா மென்றார்; அஃதாமாறென்னை? ஈண்டிய பொருளை வழங்குவாராயின் என்றார்க்குப் பொருள் வருவாயாக இவன் இயற்றுமிடம் நன்றாகப் பயன்படுமென்று கூறப்பட்டது. இவை மூன்றும் இம்மைப்பயன் கூறிற்று. 5

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

(இ-ள்) வந்த விருந்தினரைப் போற்றி வாராத விருந்தினரது வரவு பார்த்திருக்குமவன், வானத்தவர்க்கு நல்விருந்தாவன் (எ-று).

5. விருந்தோம்பல்

வரவு பார்த்தல்-விருந்தின்றி யுண்ணாமை. நல்விருந்து-அவர் மனம் மகிழ்விப்பதோர் விருந்து, அதனையுலகத்தார் நல்விருந் தென்பர். இது சுவர்க்கம் புகுமென்று மறுமைப்பயன் கூறிற்று. 6

87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(இ-ள்) விருந்தினருக்கு அளித்ததனால் வரும் பயன் இன்ன அளவினையுடைத்தென்று சொல்லலாவது ஒன்றில்லை; அவ்விருந்தின ரளவுயாதொரு தன்மைத்து அதனளவிற்றுப் பயனும் (எ-று).

இவ்வளவோ தானத்திற்குப் பயன் என்றார்க்கு அற்றன்று; வந்த விருந்தினர் தன்மைக்கு அளவான பயன் தரும் என்றது. 7

88. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(இ-ள்) விருந்தினரைப் போற்றி யுபசரிக்க மாட்டாதார், வருந்தி யுடம் பொன்றையும் ஓம்பிப் பொருளற்றேமென்றிரப்பர், (எ-று).

இது விருந்தோம்பாதார்க்குக் குற்றமென்னை என்றார்க்குக் கூறப்பட்டது, 8

89. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(இ-ள்) உடைமையின் கண்ணே யில்லாமைபோல, விருந் தினர்க்கு அளித்தலைப் போற்றாத பேதைமை, பேதையார்மாட்டே யுளதாம், (எ-று)

மேற்கூறிய தீமை பயக்குமாதலின் இதனைச் செய்யாதார் அறியாரென்றவாறு. 9

90. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

5. விருந்தோம்பல்

(இ-ள்) எல்லா மலரினும் மெல்லிதாகிய அனிச்சப்பூ மோந்தாலல்லது வாடாது; இவ் விருந்தினர் முகந்திரிந்து நோக்க வாடுவர், (எ-று).

இது, முகநோக்கி யினிமை கூறவேண்டுமென்றது. 10

6. இனியவை கூறல்

இனியவை கூறலாவது கேட்டார்க்கு மனமகிழுஞ் சொற்களைக் கூறுதல். இது புதியராய் வந்தார்க்கு ஒருதலையாக வேண்டுதலின் அதன்பிற் கூறப்பட்டது.

91. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

(இ-ள்) மனம் பொருந்திக் கொடுத்தலினும் நன்று, முகம் பொருந்தி இனிமை சொல்ல வல்லவனாயின், (எ-று).

இது இன்சொற் கூற வேண்டும் என்றது. 1

92. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொலி னஃதே[1] யறம்.

(இ-ள்) கண்ணாலே பொருந்தி இனிதாக நோக்கி மனத்தோடே இனிதாகச் சொல்ல வல்லவனாயின், அது தானே யறமாம், (எ-று).

---

1 'வினதே" என்பது மணக்குடவர் பாடம்

6. இனியவை கூறல்

ஆம் என்பதனை இறுதியிற் கூட்டுக. இதனானே மனத்தொடு கூறாத இன்சொல் அறமாகா தென்றவாறுமாயிற்று. இனிமை சொல்லுங்கால் மனத்தொடு கூறுதலும், நல்லவை ஆராய்ந்து கூறுதலும், தாழ்ந்து கூறுதலும், சிறுமை பயவாதன கூறுதலும், அதனையெல்லார் மாட்டும் கூறுதலும், குணத்தொடு கூறுதலும் வேண்டு மாதலின் இவையெல்லாம் கூறுவார் முற்பட மனத்தொடு கூற வேண்டுமென்பதூஉம், அதுதானே யறமாம் என்பதூஉங் கூறினர். ௨

93. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(இ-ள்) நல்லவான சொற்களை யாராய்ந்து இனியவாகச் சொல்லுவானாயின், அதனானே அறமல்லாதன தேய அறம் வளரும் (எ-று).

இது நல்லவை ஆராய்ந்து கூறவேண்டும் என்பதூஉம் அதனாற் பயனும் கூறிற்று. 3

94. பணிவுடைய னின்சொல்ல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(இ-ள்) ஒருவனுக்கு அழகாவது தாழ்ச்சி யுடையனா யினிய சொற்களைக் கூற வல்லனாதல்: பிறவாகிய அழகெல்லாம் அழகெனப் படா. (எ-று).

இது, தாழ்ந்து கூறவேண்டுமென்பதூஉம் அதனாற் பயனுங் கூறிற்று. 4

95. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(இ-ள்) புன்மையுள் நின்று நீங்கிய இனிய சொற்கள், இம்மையின்கண்ணும் மறுமையின்கண்ணும் இன்பந்தரும், (எ-று).

அஃதாவது மக்களாயும் தேவராயும் நுகரும் இன்பம். இது சிறுமை பயவாதன கூறவேண்டுமென்பதூஉம் அதனாற் பயனும் கூறிற்று. 5

6. இனியவை கூறல்

96\. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொல் லவர்க்கு.

(இ-ள்) துன்பமுறுகின்ற நுகராமையாகிய நல்குரவு இல்லை யாகும்; யாவர்மாட்டுங் கூறு மின்பமுறுகின்ற இனிய சொல்லை யுடையார்க்கு (எ-று).

இஃது எல்லார் மாட்டும் இன்சொற் கூறவேண்டும் என்பதூஉம், இதனானே பொருளுண்டாம் என்பதூஉம் கூறிற்று. 6

97\. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(இ-ள்) பிறரான் விரும்பப்படுதலையும் பயந்து, பொருளையும் பயந்து, அறத்தினையும் பயக்கும்; குணத்தினின்று நீங்காத சொல், எ-று).

நயனீன்று பயனீன்று நன்றிபயக்கும் எனக் கூட்டுக. இது குணத்தொடு கூறல் வேண்டும் என்பதூஉம் அதனானே அறம் பொருள் இன்பம் மூன்றும் எய்தலாம் என்பதூஉங் கூறிற்று. 7

98\. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(இ-ள்) இருவர் மாறுபடச் சொன்ன மாற்றத்தினது உண்மைப் பொருளைக் கண்டார் கூறும் மெய்யாகிய சொற்களும் இன்சொலாதலானே அருளொடு கலந்து குற்றமிலவாம். (எ-று)

எனவே அவ்வாறு கூறுராயிற் குற்றம்போலத் தோற்றும் என்பது கருத்து. என்னை? நடுவு செய்வான் ஒருவன் ஒருவனைத் தோல்வி சொல்லுங்காலத்து இன்சொல்லாலே கூறுனயின் அது குற்றமாய்த் தோற்றுமாதலான். இஃது ஒருவனைக் கடிந்து சொல்ல வேண்டு மிடத்தும் இன் சொலாலே கடிய வேண்டுமென்றது. 8

99\. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

6. இனியவை கூறல்.

(இ-ள்) பிறர்க்கு இனிதாகச் சொல்லுஞ் சொற்கள் இன்பத்தைத் தருதல் கண்டவன் கடிய சொற்களைக் கூறுதல் யாதனைக் கருதியோ (எ-று).

இஃதினிமை கூறாதார்க்கு ஒரு பயனுமில்லை என்றது 9

100. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(இ-ள்) கேட்டார்க்கினியவாஞ் சொற்களைக்கூறலாய் இருக்க இன்னாத சொற்களைக் கூறுதல், பழமுங் காயும் ஓரிடத்தே கண்டவன் பழத்தைக் கொள்ளாது காயைக் கொண்ட தன்மைத்து, எ-று).

இது பிறர்க்கேயன்றித் தனக்கும் நன்றாகாதென்றது. 10

7. செய்ந்நன்றி யறிதல்

செய்ந்நன்றி யறிதலாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இதனானே பிறர் செய்த தீமை மறக்க வேண்டும் என்றவாறு மாயிற்று. மேல் யாதானுமொன்றைச் சொல்லுங்கால் நல்லது சொல்ல வேண்டும் என்றார். இது நல்லது நினைக்க வேண்டும் என்றமையாற் பிற் கூறப்பட்டது,

101. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(இ-ள்) தனக்குத் துன்பம் வந்தகாலத்து வலியாயினாரது நட்பை மறவாதொழிக: குற்றமற்றாரது நட்பைத் துறவா தொழிக, (எ-று)

ஒருவனுக்கு எல்லாப் பொருளையும் மறத்தலும் துய்த்தலும் செய்ய நன்மை பயக்குமாயினும் மாசற்றாரது நட்பைத் துறவாமை யிருமைக்கும் நன்மைபயக்குமாறு போலத் துப்பாயார் நட்பைத்

7. செய்ந்நன்றியறிதல்

துறவறமையும் இருமையின் கண்ணும் இன்பம் பயத்தலின் அதனை மறவாதொழிதல் வேண்டும் என்றது. 1

102. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(இ-ள்) பிறர் செய்த நன்றியை மறப்பது என்றும் நன்றல்ல, பிறர் செய்த தீமையை அன்றே மறப்பதன்றே நன்றும்: (எ-று)

இது தீமை மறக்கவேண்டு மென்று கூறிற்று. 2

103. செய்யாமற்[1] செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(இ-ள்) முன்னொருதவியைச் செய்யாதாருக்கு ஒருவன் செய்த வுதவிக்கு உலகமும் சுவர்க்கமும் நிறையாற்றுத லரிது. (எ-று).

பிறர் செய்த நன்மைகளிற் செய்யாமைச் செய்தலும், பயன் தூக்காது செய்தலும், காலம் தப்பாமற் செய்தலும் வலியுடைத்து. அவற்றுள் செய்யாமைச் செய்த வுதவி நிலத்திடை பெரிதென்றது 3

104. பயன்றூக்கான்[2] செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(இ-ள்) தமக்கொரு பயனை நோக்காதவனுய்ச் செய்த வுபகாரத்தை நயனுடையவன் தூக்குவானாயின் அதனானுண்டான நன்மை கடலினும் பெரிது (எ-று).

நயவன் நயனுயிற்று. இது பயன் தூக்காது செய்த வுதவி கடலினும் பெரிதென்றது. 4

---

1. 'செய்யாதார்' என்பது மணக்குடவர் பாடம்
2. 'பயன்தூக்கார்' என்பது மணக்குடவர் பாடம்

7. செய்ந்நன்றியறிதல்

105. காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(இ-ள்) உதவ வேண்டுங்காலந் தப்பாமற் செய்த வுதவி தான்சிறிதா யிருந்த தாயினும், உலகத்தினு மிகப் பெரிது. (எ-று).

இது, காலந் தப்பாமற் செய்த வுதவி உலகத்தினும் பெரி தென்றது. 5

106. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

(இ-ள்) தினையளவு நன்றி செய்தாராயினும் அதனை யிவ் வளவிற்றென்று நினையாது பனையளவாகக் கொள்ளுவார், அதன் பயன் தெரிவார் (எ-று).

பனையளவு-அதனனுயர்ச்சி;எண்ணெனினு மமையும். இது மேற் கூறிய வாற்றானு மன்றிப் பிறவாற்றானுஞ் செய்ததும் பெரிதென்றது இவை நான்கினும் இதன் பெருமை கூறப்பட்டது. 6

107. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(இ-ள்) தங்கண் உற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை இப் பிறப்பிலே யன்றி எழுமையினுந் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் அன்றே சான்றோர், (எ-று).

இது மாறுதவி செய்யுங்கால் நிலத்தினும் நீரினும் உளவாம் பொருளினாற் செய்யின் அதற்கு நேர் ஒவ்வாதாதலான் அவரை எக்காலத்தினும் ஒழிவின்றி நினைத்தலேயாவதென்று கூறப்பட்டது. 7

108. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(இ-ள்) முன்பு செய்த வுதவியின் அளவன்று பின்பு செய்யும் மாற்றுதவி; முன்புதவி செய்யப்பட்டவன் அமைதி எவ்வளவிற்று அவ்வள விற்று அவன்செய்யும் மாற்றுதவியும் (எ-று).

இது. மாற்றுதவிக்கு அளவில்லை என்றது. 8

109. கொல்றன்ன வின்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

(இ-ள்) தமக்கு முன்பு நன்மை செய்தார் தம்மைக் கொன்றாலொத்த இன்னாமையைப் பின்பு செய்யினும், அவர் முன்பு செய்த நன்றி யொன்றை நினைக்க அத் தீமை யெல்லாங் கெடும், (எ-று).

ஒருகால் நன்மை செய்தார் பலகால் தீமை செய்யின் அதற்குச் செய்யுமா றென்னை என்றார்க்கு இது கூறப்பட்டது. 9

110. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ-ள்) எல்லா நன்மைகளையுஞ் சிதைத்தார்க்கும் பின் பொரு காலத்தே யாயினும் உய்தலுண்டாம்; ஒரு காலமும் உய்த லில்லை ஒருவன் செய்த நன்றியைச் சாவாக்கின மகனுக்கு.

பெண்டிர்க்கும் வேண்டுமாயினும் தலைமைபற்றி மகனென்றார், இது செய்நன்றியறியாதார்க்குளதாம் குற்றம் கூறிற்று. 10

8. நடுவுநிலைமை

நடுவுநிலைமையாவது நட்டார்மாட்டும் பகைவர்மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமை.

மேற்றமக்கு நன்மைசெய்தார்க்குத் தாமும் நன்மை (செய்ய வேண்டுமென்றார்: அவர்க்கு நன்மை பயக்குமாயினும்) நடுவல்ல செய்யலாகாதென்பதனானும், இது மனத்தினானும் மொழியினானும் செய்தலே யன்றி மெய்யொடுங்கூடச் செய்யப் படுதலானும் பிற் கூறப்பட்டது.

111. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

6. நடுவு நிலைமை

(இ-ள்) சமன்வரைப்பண்ணி யிரண்டுதலையுஞ் சீரொத்தற்குத் தூக்கிப் பார்க்கப்படுகின்ற கோலைப்போல; வீக்கத்தூக்க மற்று ஒருவன் பக்கமாக நெஞ்சைக் கோடவிடாமை சான்றோர்க்கு அழகாவது, (எ-று).

இது, நடுவுநிலைமை வேண்டுமென்றது. 1

112. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

(இ-ள்) நடுவுநிலைமையாவது கோடச்சொல்லாமையை யுடையது: கவற்சியால் மனக்கோட்ட மின்மையோடு கூடுமாயின், (எ-று).

இது. நடுவுநிலைமையாவது செவ்வை சொல்லுதலென்பதூஉம் இருபொருட்பொதுமொழி கூறுதல் நடுவுநிலைமையாகாதென்பதூஉம் கூறிற்று. 2

113. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(இ-ள்) நடுவு நிலைமை யென்று சொல்லப்படுகின்ற வொன்று நல்லதே, அவரவர் நிலைமைப்பகுதியோடே அறத்திநின் பாற்பட்டு ஒழுகப் பெறுமாயின், (எ-று).

தக்கவாறு கூறுதலிற்றகுதி யென்றார். இது நன்மை செய்யத் தீமை பயப்பனவு முளவாம். அதுபடாமல் தனக்கும் பிறர்க்கும் நன்மைபயக்குமாறு கூறவேண்டும் என்றது அஃதறியுமாறு தருமசாத்திரத்துள் அறியப்படும். 3

114. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

(இ-ள்) வாணிகஞ் செய்வார்க்கு வாணிகமாவது, பிறர் பொருளையுந் தமது பொருள்போலப் பேணிச் சோர்வுபடாமற் செய்வாராயின், (எ-று). வாணிகம்-இலாபம்.

8. நடுவு நிலைமை

இது வாணிகர் நடுவு செய்யுமாறு கூறிற்று. இவை நான்கிறும் நடுவு செய்யுமாறு கூறப்பட்டது. 4

115. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ-ள்) கேடுவருதலும் ஆக்கம் வருதலும் உலகத்தில்லையல்ல; அவ்விரண்டினுள்ளும் யாதானுமொன்று வந்த காலத்துத் தன்னெஞ்சு கோடாமை யொழுகல் சான்றோர்க்கு அழகாம்.

நடுவு செய்ய ஓரிடத்தே அதுகாரணமாகக் கேடுவரினும் நடுவல்லாதன செய்ய ஓரிடத்தே அதுகாரணமாக ஆக்கம்வரினும் அவற்றை முன்னைவினைப் பயன் என்று கருதி அதற்கு உடம்படாது நடுவு செய்யவேண்டுமென்றது. 5

116. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

(இ-ள்) நன்மையின்கண்ணே நடுவாக நின்றவனுக்கு அதுகாரணமாகப் பொருட்குறைபாடு உண்டாயின், அதனை உலகத்தார் கேடாகச்சொல்லார், ஆக்கத்தோடே யெண்ணுவர் (எ-று).

நடுவெனவே அமையும், நன்றியின்கண் என்றது நடுவு செய்யுங்கால் அறம்பார்த்துச் செய்ய வேண்டும் என்றற்கு. இது கோடானாயினும் இகழப் படா னென்றது. 6

117. நன்றே தரினு நடுவிகந் தாமாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

(இ-ள்) பெருமையே தரினும் நடுவுநிலைமையை நீங்கி வரும் ஆக்கத்தை அவ்வாக்கம் வருதற்குத் தொடக்கமான அன்றே யொழிய விடுக, (எ-று).

இது வாழ்ந்தானாயினும் ஆக்கமாகக் கொள்ளா ரென்றது. 7

118. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

8. நடுவு நிலைமை

(இ-ள்) தனது நெஞ்சு நடுவுநிலைமையை நீங்கி நடுவலல்லாதனவற்றைச் செய்யுமாயின், அக்தேதுவாக எனக்குக் கேடு வருமென்று தானே யறிக, (எ று).

இது நடுவு செய்யாக்கால் கேடுவருமென்றது. 8

119. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(இ-ள்) செவ்வை யுடையார் செவ்வையிலரென்பதனை அவரவர் ஒழிபினானே காணப்படும். (எ-று).

ஒழிபு, மக்கள் முதலான பொருள்கள் கேடு வரும் என்றதென்னை. நடுவு நிலைமையை நீங்கி ஆக்க முற்றாருமுளரால் என்றார்க்கு, அவ்வாக்கம் அவர்தம் அளவிலே நின்று பற்றுவதல்லது மக்கட்குப் பயன்படாதென்று கூறிற்று. 9

120. செப்ப முடையவனுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(இ-ள்) நடுவு நிலைமை யுடையவனது செல்வம் தன்னளவிலுங் கேடின்றியே நின்று, தன் வழியுள்ளார்க்குங் கேடுவாராமற் காவலாதலையுடைத்து, (எ று).

நடுவுநிலைமையுடையார் செல்வம் அழியாதென்றது. 10

9. அடக்கமுடைமை

அடக்கமுடைமையாவது மன மொழி மெய்களால் அடங்கி ஒழுகுதல்.

மேல் மனமொழி மெய்களான் நல்லதுசெய்ய வேண்டும் என்றார். இது அவையிற்றை அடக்கி ஒழுக வேண்டும் என்றதனுல் அதன் பிற் கூறப்பட்டது.

121. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு.

(இ-ள்) ஒருவன் தனக்குப் பொருளாக அடக்கத்தை யுண்டாக்கத் தனதுயிர்க்கு ஆக்கம் அதனின் மேற்பட்டது பிறிதில்லை, (எ-று).

இஃது அடக்கம் வேண்டும் என்றது. 1

122. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(இ-ள்) அறியப்படுவனவும் அறிந்து அடக்கப்படுவனவும் அறிந்து நெறியினானே யடங்கப்பெறின். அவ்வடக்கம் நன்மை பயக்கும் (எ-று).

அறிவறிந்தாற்றினடங்கப் பெறின் செறிவறிந்தெனக்கூட்டுக. அறியப்படுவன-சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்: அடக்கப்படுவன மெய் வாய் கண் மூக்குச் செவி. ஆற்றினடங்குதலாவது தத்தம் நிலைமைக்கும் இல்லறத்திற்கும் சொல்லுகின்ற நெறியினானே சுவை முதலான வைந்தன் கண்ணும் மெய் முதலாயின பொறிகள் வழியாகச் செல்லும் காதலையடக்குதலும் அக்காதல் காரணமாகச் செல்லும் வெகுளியை யடக்குதலும் முதலாயின. நன்மைபயக்கு மென்று பொதுப்படக்கூறினார், எல்லா நன்மையும் பயக்கும் என்றற்கு. மேல் அடக்கம் வேண்டும் என்றார், இஃது அடக்குந் திறன் கூறிற்று. 2

9. அடக்கமுடைமை

123. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(இ-ள்) ஒருபிறப்பிலே பொறிகளைந்தினையும் யாமைபோல அடக்க வல்லவனாயின், அவனுக்கு அதுதானே ஏழுபிறப்பினுங் காவலாதலை யுடைத்து, (எ-று).

அன்றாயின் வாதனை தொடரும் (எ-று). யாமை போல என்றது தனக்குள்ளவுறுப்பைப் பிறர்க்குப் புலனாகாமல் அடக்குமது போல் பொறிகள் நுகர வற்றாயிருக்க நுகராமலடக்க வேண்டும் மென்ற வாறு. பொறிகளைந்தனையும் அடக்கவல்லார்க்கு ஏழு பிறப்பும் நன்மையுண்டாம் என்றது. 3

124. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

(இ-ள்) தனது நிலையிற் கெடாதேயடங்கினவனது உயர்ச்சி மலையினும் மிகப் பெரிது, (எ-று).

நிலை-வருணாச்சிரம தருமம். மேற் பொறிகளை யடக்க வண்டும் என்றாராயினும் தத்தம் நிலைமைக்குத்தக விடவேண்டு வன விட்டு அடக்கவேண்டுவன அடக்கினாலும் மிகுதியுடைத்து என்றது. 4

125. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ-ள்) எல்லாவற்றையும் அடக்கிற்றிலராயினும் நாவொன் றையும் அடக்குக, அதனை அடக்காக்காற் சொற்சோர்வு பட்டுத் தாமே சோகிப்ப ராதலான், (எ-று).

மேல் நிலையிற்றிரியாமல் அடங்கவேண்டும் என்றார். அவ்வாறு செய்வதரிதாயின் நாவொன்றனையும் அடக்கவேண்டும். அது பிறபயன் தருவதேயன்றி இக்காலத்தே சோகத்தைத் தவிரும் ஆதலான் என்றது, 5

9. அடக்கமுடைமை

126. தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

(இ-ள்) தீயினாற் சுட்டபுண் உள்ளாறித் தீரும் நாவினாற் சுட்ட புண் ஒரு காலமும் தீராது (எ-று).

சொற்சோர்வினாலே வரும் குற்ற மென்னை யென்றார்க்கு, அது கேட்டார்க்குச் சுடும். அதனாலே தனக்குக் குற்றம் வரும் என்றது. 6

127. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

(இ-ள்) ஒரு சொல்லேயாயினும் கேட்டார்க்கு இனிதாயிருந்து தீயசொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மை யாகாதாயே விடும். (எ-று).

இது சாலமொழி கூறினாலுந் தீதாமென்றது. 7

128. எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(இ-ள்) அடங்கியொழுகுதல் எல்லார்க்கும் நன்மையாம்; அவரெல்லாரினுஞ் செல்வமுடையார்க்கே நன்மை யுடைத்தாயது, (எ-று).

செல்வம்-மிகுதி. இது பெருமித வடக்கம் வேண்டும் என்றது. 8

129. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(இ-ள்) வெகுளியும் அடக்கிக் கல்வியுமுடையனாய் அதனால் வரும் பெருமிதமும் அடக்கவல்லவன்மாட்டு, அறமானது தானே வருதற்குக் காலம் பார்க்கும் நெறியானே வருந்தி (எ-று.

இது அடக்கமுடையார்க்கு அறமுண்டாமென்றது. 9

9. அடக்க முடைமை

130. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(இ-ள்) மனமொழி மெய்களை யடக்கியொழுக அவ்வடக்கம் தேவரிடத்தே கொண்டு செல்லும்; அவற்றை யடக்கா தொழிய அவ்வடங்காமை தானே நரகத்திடைக் கொண்டு சென்று விடும், (எ-று).

மேல் பலவாகப் பயன் கூறினாராயினும், அடக்கத்திற்கும் அடங்காமைக்கு மிதுவே பயனென்று தொகுத்துக் கூறிற்று. 10

10. ஒழுக்கமுடைமை

ழுக்கமுடைமையாவது தத்தங்குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஏற்ற ஒழுக்கமுடையாராதல். இது வேண்டியவாறொழுகாது உலகத்தொடு பொருந்தி யொழுக வேண்டும் என்றார். அவ்வாறொழுகுங் கால் அதுவுமே அடக்கமேயாகலான் அதன்பிற் கூறப்பட்டது.

131. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(இ-ள்) வருந்திப் போற்றி யொழுக்கத்தினைக் காக்க; எல்லா வறங்களினும் நல்லதனைத் தெரிந்து அதனையுந் தப்பாமலாராய்ந்து பார்ப்பினும் தமக்கு அவ்வொழுக்கமே துணையாமாதலால் (எ-று).

இஃது. ஒழுக்கங் காக்கவேண்டுமென்றது. 1

132. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(இ-ள்) அறிவிலாதார் பல நூல்களைக் கற்றாலும், உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதலை அறியார். (எ-று).

10. ஒழுக்கமுடமை

இஃது ஒழுக்கமாவது உயர்ந்தோ ரொழுகு நெறி ஒழுகுதலென்பதூஉம் அவ்வொழுக்கம கல்வியினும் வலியுடைத்தென்பதூஉம் கூறிற்று.

133. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

(இள்) பார்ப்பான் வேதத்தினை ஓதிமறந்தானாயினும் பின்பும் ஓதிக்கொளலாகும்., ஒழுக்கங் குறையுமாயின் குலம் கெடும் (எ-று)

இது ஒழுக்கம் கல்வியினும் வலிதாயினவாறு கூறிற்று 3

134. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து

(இ-ள்) ஒழுகத்தினை நீங்கார் அறிவுடையார்; அதனைத் தப்பினாற் குற்றம் வருமாறறிந்து, (எ-று)

இதனை அறிவுடையார் தவிராரென்றது. குற்றம் வருமாறு பின்பே காணப்படும். 4

135. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(இ-ள்) ஒருவன் இழி குலத்தானாயினும் ஒழுக்க முடையவனாக உயர்குலத்தனாம்; அதனைத் தப்பி ஒழுகுவனாயின்' உயர் குலத்தனாயினும் இழிகுலத்தனாயே விடும். (எ-று).

இது குலங்கெடுமென்றது. 5

136. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு

(இ-ள்) மனக்கோட்ட முடையான்மாட்டு ஆக்கம் இல்லையானாற்போல ஒழுக்கமில்லாதான்மாட்டு மிகுதியில்லையாம் (எ-று)

இது உயர்ச்சியில்லையா மென்றது. 6

137. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

10. ஒழுக்கமுடைமை

(இ-ள்) ஒழுக்கத்தினனே தமக்கு எய்தாத மேம்பாட்டை எய்துவர்; அஃதின்மையானே தமக்கு அடாதபழியை எய்துவர், (எ-று).

இஃது அடாப் பழியுண்டா மென்றது. 7

138. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(இ-ள்) முத்திக்கு விதையாகும் நல்லொழுக்கம்; தீய வொழுக்கம் நாடோறுந் துன்பத்தையே தரும். (எ-று),

என்றதனனே இருமையின் கண்ணுமென்று கொள்ளப் படும். இது துன்பம் தரும் என்றது. 8

139. ஒழுக்கமுடையவர்க் கொல்லாதே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(இள்) தீமைபயக்குஞ் சொற்களை மறந்தும் வாயாற் சொல்லுதல், ஒழுக்க முடையார்க்கு இயலாவாம், (எ-று).

மேலையதிகாரத்து அரிதாக அடக்க வேண்டும் என்ற நாவடக்கமும் இதனனேயுண்டா மென்றது, 9

140. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(இ-ள்) ஒழுக்கம் சீர்மையைத் தருதலானே, அதனைத் தன் உயிரைக்காப்பதினும் மிகக் காக்க, (எ-று).

மேற்கூறிய நன்மையெல்லாந் தருதலான், இதனைத் தப்பாமற் செய்யவேண்டுமென்று வலியுறுத்திற்று. 10

11. பிறனில் விழையாமை

பிறனில் விழையாமையாவது பிறனுடைய மனையாளது தோள்நலம் விரும்பாமை. அன்புடைமைமுதலாக ஒழுக்கமுடைமை யீறுகச் செய்ய வேண்டுவன சொல்லி, இனித் தவிரவேண்டுவன கூறுகின்றாராதலின், அவற்றுள் காம நெறி படர்தல் எல்லாக் குற்றத்தினும் மிகுந்ததாதலின் இது முற் கூறப்பட்டது.

141. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

(இ-ள்) அறநெறியானே யில்வாழ்வானென்று சொல்லப் படுவான், பிறன்வழியளானவளது பெண்மையை விரும்பாதவன், (எ-று).

இது, பிறனில் விழையாமை வேண்டும் என்றது. 1

142. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

(இ-ள்) பிறனுடைய பொருளா யிருந்தவளை விரும்பி யொழுகுகின்ற அறியாமை, உலகத்து அறமும் பொருளும் அறிந்தார் மாட்டு இல்லையாம், (எ-று).

இஃது அறனுமன்று, பொருளுமன்றென்றது. 2

143. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(இ-ள்) காமத்தின்கண்ணே விரும்பி நின்றார் எல்லாருள்ளும், பிறனொருவன் கடைத்தலை பற்றி நின்றவர்களைப்போல் அறியா தாரில்லை, (எ-று).

அறனும் பொருளுமறியா தின்பமே கருதிப்பெண் வழிச்சென்ற கணிகையரோடு கலந்தும் இழிகுலத்தாரோடு கூடியும் ஒழுகும் எல்லாரினும் இவரைப் போல அறியாதாரில்லை. அவர்கள் இன் பந்தன்னைப் பெறுவர், இவர்கள் அது தானும் பெறாராதலின் என்ற

11. பிறனில் விழையாமை

வாருயிற்று. என்னை பெருமை யெனின் அச்ச முடையார்க்கு இன்ப மின்ரும். ''புக்கவிடத்தச்சம் போதரும் போதச்சம், துய்க்கு மிடத் தச்சந் தோன்ருமற் காப்பச்சம், எக்காலு மச்சந் தருமா லெவன் கொலோ உகான் பிறனில் புகல்'' என வச்சமாதலான். அறன் கடை யென்றதற்குப் பொருள் காமம் ஆயினவாறென்னையெனின் அறனிறுதி யென்பதாற்பெறுதும். இஃது இன்பமும் அன்றென்றது 3

144, எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

(இ-ள்) எல்லா வமைதியினையும் உடையராயினும், தினை யளவுந் தேராது பிறனுடைய இல்லிலே புகுதல் யாதினைப் பயக்கு மோ? (எ-று).

பிறனில் விழைவால் வருங் குற்றங் கூறுவார், மூற்பட வெல்லாக் குணமுமழியுமென்று கூறினர். 4

145. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

(இ-ள்) தம்மைத் தெளிந்தா ரில்லின்கண்ணே தீமையைப் பொருந்தி ஒழுகுவார் மெய்யாகச் செத்தாரின் வேறல்லர் (எ-று)

இஃது அறம் பொருளின்பம் எய்தாமையின், பிணத்தோ டொப்பரென்றது. 5

146. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

(இ-ள்) தனக்கு எளிதென்று நினைத்துப் பிறனுடைய இல்லின் கண்ணே மிகுமவன், எல்லா நாளும் அழியாது நிற்கும் பழியைப் பெறுவன்' (எ-று).

இது, பழியுண்டா மென்றது. 6

147. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

11. பிறனில் விழையாமை

(இ-ள்) பகையும் பாவமும் அச்சமும் பழியுமென்னும் நான்கு பொருளும் நீங்காவாம்; பிறரில்லின் கண்ணே மிகுவான் மாட்டு (எ-று)

எளியாரிடத்தன்றி ஒத்தார் மிக்கார் இல்லின் கண்ணே இவை நான்கும் பயக்கும் என்றது. இத்துணையும் இதனால் வரும் குற்றம் கூறிற்று. 7

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

(இ-ள்) பிறரது மனையாளைப் பாராத பெரியவாண்மைத் தன்மை தானே, சான்றோர்க்கு அறனும் அமைந்த வொழுக்கமுமாம், (எ-று).

இஃது, இதனை விரும்பாமைதானே அறனும் ஒழுக்கமுமென்றது. 8

149. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(இ-ள்) நலத்துக்கு உரியார் யாரெனின், அச்சத்தைத் தருகின்ற நீர் சூழ்ந்த வுலகத்தில் பிறனுக்கு உரியவளது தோளைத் தீண்டாதார், (எ-று).

நலக்குரியார் என்றது பிறரால் விரும்புதற்குரியார் என்றவாறு.

இஃது எல்லாராலும் விரும்பப் படுவரென்றது. 9

150. அறன்வரைய னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(இ-ள்) அறத்தை வரையாதே அறனல்லாதன செய்யினும், பிறனிடத்தானவளது பெண்மையை விரும்பாமை நன்று (எ-று).

இஃது ஓரறமுஞ் செய்திலனாயினும் நன்மை பயக்குமென்றது. 10

12. பொறையுடைமை

பொறையுடைமையாவது தமக்குத் துன்பஞ் செய்தாரைத் தாமுந் துன்பஞ் செய்யாது அவர்மாட்டுச் சென்ற வெகுளியைமீட்டல்.

மேல் காமத்தால் வரும் குற்றங் கூறினர், இது வெகுளியால் வரும் குற்றம் கூறுகின்றதாகலின் அதன்பிற் கூறப்பட்டது.

151. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(இ-ள்) பிறர் செய்த மிகையினை யென்றும் பொறுத்தல் நன்று; அதனை மறத்தல் பொறையினும் நன்று, (எ-று).

மறத்தல்- வெகுளாமை; அதுமிகுதியுடைத் தாதலாற் றுற வறத்திற் கூறினர். இது பொறையுடைமை வேண்டும் என்றது, 1

152. திறனல்ல தற்பிறர் செய்யினு நோய்நொந்[1]
தறனல்ல செய்யாமை நன்று.

(இ-ள்) தகுதி யல்லாதனவற்றைத் தனக்குப் பிறர் செய்தார் களாயினும், அவற்றைத் தானுஞ் செய்தால் அவர்க்கு உளதாம் நோவுக்கு நொந்து அறனல்லாதவற்றைச் செய்யாமை நன்று. (எ-று).

இஃது அறத்தைநோக்கிப் பொறுக்க வேண்டுமென்றது. 2.

153. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(இ-ள்) தனக்கு நிறையுடைமை நீங்காதொழிய வேண்டு வனாயின், பொறையுடைமைப் பாதுகாத்தொழுகவேண்டும்; (எ-று).

நிறையென்பது காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம், இது நிறைவேண்டுவார் பொறுக்கவேண்டுமென்றது. 3.

---

1. ''நோய்நொந்'' என்பது மனக்குடவர் பாடம்

12. பொறையுடைமை

154. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

(இ-ள்) தன்னை யகழுமவர்களை தரிக்கின்ற நிலம்போலத் தம்மை யிகழுமவர்களைப் பொறுத்தல் தலையாம், (எ-று).

இது, பொறுந்தானென் றிகழ்வாரில்லை; அதனைத் தலைமை யாகக் கொள்வர் உலகத்தாரென்றது. 4.

155. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

(இ-ள்) தனது செல்வ மிகுதியாலே மிகையானவற்றைச் செய்தவர்களைத்தாங்கள் தமது பொறையினாலே வென்று விடுக, (எ-று),

இது, பொறுத்தானென்பது தோல்வியாகாது; அதுதானே வெற்றியாமென்றது. 5.

156, இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(இ-ள்) வலியின்மையுள் வைத்து வலியின்மையாவது புதுமையை நீக்காமை; வலியுடைமையுள் வைத்து வலியுடைமையாவது அறியாதாரைப் பொறுத்தல், (எ-று).

புதுமையென்றது தான் கேட்டறியாதது. நீக்காமையாவது பொருமை. பொறுத்தானென்று எளியனுகான் அதுதானே வலியா மென்றது. 6.

157. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(இ-ள்) தமக்குத் துன்பஞ் செய்தாரை மாருக ஒறுத்தாரை யொருபொருளாக மதித்து வையார்; பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்தாற்போலப் போற்றிவைப்பார் உலகத்தார் (எ-று)

ஒறுப்பதனினும் பொறுப் பதனையுலகத்தார் நன்கு மதிப்ப ரென்றது. 7.

12. பொறையுடைமை

158. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும்[1] புகழ்.

(இ-ள்) ஒறுத்தவர்க்கு அற்றைநாளை யின்பமே உள்ளது; பொறுத்தவர்க்குத் தாம் சாமளவும் புகழுண்டாம், (எ-று).

இது, புகழுண்டாமென்றது. 8.

159. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

(இ-ள்) உண்ணாது பொறுப்பார் எல்லாரினும் பெரியர்; அவர் பெரியராவது பிறர் சொல்லுங் கடுஞ்சொல்லைப் பொறுப்பாரின் பின், (எ-று).

இது, தவம் பண்ணுவாரினும் பெரியரென்றது. 9

160. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

(இ-ள்) மிகையாகச் சொல்லும் தீச்சொல்லைப் பொறுக்குமவர், துறந்தவர்களைப் போலத் தூய்மை யுடையர், (எ-று).

இது. பற்றறத் துறந்தாரோ டொப்பரென்றது. 10

i3. அழுக்காறாமை

அழுக்காறாமையாவது பிறராக்க முதலாயின கண்டு பொறாமையினால் வருகின்ற மனக்கோட்டத்தைச் செய்யாமை. இதுவும் பொறாமையான் வருவதொன்றாதலின் பிற் கூறப்பட்டது. அன்றியும் கடிய வேண்டுவன சொல்லுகின்றாராதலின் அதன் பிற் கூறப் பட்டதெனினுமமையும். இவ்வுரை இனிவருவன வற்றிற்கு மொக்கும்.

---

1. "துணையும்" என்பது மனக்குடவர் பாடம்.

13. அழுக்காறுமை

161. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(இ-ள்) ஒருவன் தன்னெஞ்சத்து அழுக்காறு இல்லாதவியல்பைத், தனக்கு ஒழுக்க நெறியாகக் கொள்க, (எ-று).

இஃது, அழுக்காறு தவிரவேண்டுமென்றது. 1

162. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

(இ-ள்) விழுமிய பேறுகளுள், யாவர்மாட்டும் அழுக்காறு செய்யாமையைப் பெறுவனாயின், அப்பெற்றியினை யொப்பது பிறிதில்லை, (எ-று)

இஃது. அழுக்காறு செய்யாமை யெல்லா நன்மையினும் மிக்க தென்றது. 2

163. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ-ள்) அழுக்காற்றினானே அறமல்லாதவற்றைச் செய்யார் நல்லோர் அவ்வறத்தைத் தப்பின நெறியினாற் குற்றம் வருவதை யறிந்து, (எ-று).

மேலழுக்காறு செய்யாமை விழுமியபொருள் என்றார்; அஃது ஆயினவாறென்னை என்றார்க்கு, அஃதில்லாதார் அறமல்லாதன செய்யாராதலான் விழுமிய பொருளாமென்று கூறப்பட்டது. பாவம் வாரா தென்னுமாம். 3

164. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(இ-ள்) அழுக்காற்று நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்விய நெஞ்சத்தானுக்குக் கேடும் விசாரிக்கப்படும், (எ-று).

இவையிரண்டுமில்லை என்றவாறாயிற்று. காரணம் வேறே யுண்டென்று ஆராயப்படும் என்பாருமுளர். இவ்வதிகாரத்தன்றியும்,

13. அழுக்காலாமை

''அழுக்காறுடையான் கண் ஆக்கம் போன்றில்லை, ஒழுக்க மிலான் கணுயர்வு'' என்றாராகலின் மேலையதே பொருள். இது பொருட்கே டுண்டாகா தென்றது. 4

165. அழுக்கற் றகன்றரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(இ-ள்) அழுக்காறு செய்து பெரியராயினருமில்லை, அதுசெய் யாதார் பெருக்கத்தினின்று நீங்கிச்சிறிய ராயினருமில்லை, (எ-று).

மேற்செவ்வியார்க்குக் கேடில்லை என்றார்; அஃது யாண்டுக் காணலாமென்றார்க்கு இவ்வுலகின்காணலா மென்று கூறிற்று. 5

166. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

(இ-ள்) தனக்கு அறனாகிய வாழ்வு வேண்டாதானென்று சொல்லப்படுவான், பிறனுடைய ஆக்கத்தை விரும்பி அழுக்காறு செய்வான், (எ-று).

இஃது, அழுக்காறுடையார்க்குப் புண்ணிய மில்லையென்று கூறிற்று. 6.

167. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(இ-ள்) பிறனொருவன் மற்றொருவனுக்குக் கொடுப்பதனை அழுக்காற்றினாலே விலக்குமவனது சுற்றம், உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிக்கெடும், (எ-று).

சுற்ற மென்றது சுற்றத் தொடுங்கூடவென்றற்கு. அழுக்காறு டையானும் சுற்றமுமெனினு மமையும். இது நல்குரவு தரு மென்றது. 7.

168. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

13. அழுக்காறுமை

(இ-ள்) அழுக்காறுடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து, தன தவ்வையாகிய மூதேவியைக் காட்டி, இவன் பாற்செல்லென்று விட்டுப்போம், (எ-று).

அவ்வித்து என்பதனைச் செய்யவளோடுங் கூட்டுக. இது, நல்குரவிற்குக் காரணங் கூறிற்று. 8.

169. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(இ-ள்) அழுக்காறென்று சொல்லப்படுகின்ற வொருபாவி செல்வத்தையுங் கெடுத்துத் தீக்கதி யுள்ளுங் கொண்டு செல்லும், (எ-று).

ஒரு பாவி-நிகரில்லாத பாவி. இது, செல்வங் கெடுத்தலே யன்றி நரகமும் புகுவிக்குமென்றது. 9.

170. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(இ-ள்) அழுக்காறுடையார்க்கு அவ்வழுக்காறு தானே அமையும்; பகைவர் கேடுபயத்தல் தப்பியும் வரும், (எ-று).

இஃது, உயிர்க்குக் கேடுவருமென்று கூறிற்று 10.

14. வெஃகாமை.

வெஃகாமையாவது பிறர் பொருளை விரும்பாமை. மேல் பிறராக்கத்தைப் பொறாமையாகாதென்றார். இஃது அதனைவவ்வ நினைத்தலகாமையான் அதன்பின் கூறப்பட்டது.

171. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

14 வெஃகாமை

(இ-ள்) பிறர்பொருளை விரும்பியாகின்ற ஆக்கத்தை வேண்டாதொழிக; அது பயன்படுங் காலத்தினுன் ஆகும் பயன் நன்ருத லில்லையாதலான், (எ-று).

இஃது வெஃகாமை வேண்டுமென்றது. 1.

172. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(இ-ள்) நுண்ணிதாய்ப் பரந்த அறிவுடைய ரையினும் அதனுற் பயன் யாதாம்? பொருளை விரும்பி எல்லார்மாட்டும் ஈரமில்லாதன செய்வரையின், (எ-று).

இஃது. அறிவுடையார் செய்யாரென்றது. 2.

173. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(இ-ள்) வறியே மென்று பிறர்பொருளை விரும்புதலைச் செய் யார், ஐம்புலனையும் வென்ற புன்மையில்லாத தெளிவுடையார், (எ-று).

இது, தெளிவுடையார் செய்யா ரென்றது. 3.

174. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(இ-ள்) சிற்றின்பமாகிய பொருளை விரும்பி அறனல்லாத வற்றைச் செய்யார்கள், பேரின்பமாகிய வீடுபேற்றின்பத்தைக் காதலிப்பார், (எ-று).

இது, வீடுபெற வேண்டுவார் செய்யாரென்றது. 4.

175. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(இ-ள்) தமக்குப் பயனுண்டாக வேண்டிப் பழியொடு படு வன செய்யார்கள்; நடுவன்மைக்கு நாணுபவர், (எ-று).

இது நடுவுநிலைமை தமக்கு வேண்டுவார், செய்யாரென்றது.

14. வெஃகாமை

176. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

(இ-ள்) அருளை விரும்பி யறநெறியிலே நின்றவனும், பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் சூழக் கெடுவன், (எ-று).

இஃது, அருளுடையனாயினுங் கெடுவனென்றது; 6

177. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ-ள்) நடுவுநிலைமையின்றி மிக்கபொருளை விரும்புவானாயின், அதனானே குலங்கெட்டு அவ்விடத்தே குற்றமு முண்டாம். (எ-று).

இது, சந்தான நாச முண்டாமென்றது. 7

178. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(இ-ள்) விசாரியாதே பிறர் பொருளை விரும்புவனாயின், அது கேட்டைத் தரும்; அதனை வேண்டாமையாகிய பெருமிதம் ஆக்கத்தைத்தரும், (எ-று).

இஃது, உயிர்க்குக் கேடு தருமென்றது. இத்துணையும் இதனான் வரும் குற்றம் கூறப்பட்டது. 8

179. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(இ-ள்)செல்வஞ் சுருங்காமைக்குக் காரணமியாதோ வெனின், பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமை, (எ-று).

இது, செல்வ மழியாதென்றது. 9

180. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

14. வெஃகாமை

(இ-ள்) அறத்தை யறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தானே தகுதியறிந்து அப்போதே சேரும், (எ-று). 10

அறனறிதல்-விரும்பாமை அறமென்றறிதல். இது, செல்வமுண் டாமென்றது.

---

15. புறங்கூறாமை

புறங்கூறாமையாவது யாவரையும் இகழ்ச்சியானவற்றைப் புறத்துரையாமை. மேல் மானத்தினால் தவிர வேண்டுவன சொன்னார்; இனி மொழியினாற் செய்யலாகாதன கூறுகின்றாராகலின்; இது அதன்பின் கூறப்பட்டது.

181. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ-ள்) ஒருவன் கண்ணெதிரே நின்று கண்பார்த்துச் சொல்லினும் அமையும்; பிற்காலத்து அவன் முன்னே நின்று எதிர் முகம் நோக்க வொண்ணாத சொல்லைச் சொல்லா தொழிக, (எ-று)

இது, புறங் கூறுதல் தவிர்க வென்றது; இதனானே கடுஞ் சொற் கூறலும் ஆகாதென்றது. 1

182. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(இ-ள்) காணாவிடத்துப் புறஞ்சொல்லிக் கண்டவிடத்துப் பொய்செய்து உயிரோடு வாழ்தலின், புறங்கூறாதிருந்து நல்குரவினாற் சாதல் அறநூல் சொல்லுகின்ற ஆக்க மெல்லாந்தரும், (எ-று).

15. புறங்கூறாமை

அறங்கூறுகின்ற ஆக்கமாவது போக நுகர்ச்சியும் வீடு பெறுதலும், புறங்கூறுவான் சாவாதொழியப் பாவமும் பகையும் தேடும், சாவ அவையெல்லாமில்லையாம் என்னும் பொருளாம். இது புறங் கூறாதார் நல்லுலகு எய்துவரென்றது 2

183. அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

(இ-ள்) அறத்தை வாயாற் சொல்லுதலுஞ் செய்யானாய்ப் பாவஞ் செய்யினும், பிறரைப் புறஞ் சொல்லானென்று உலகத்தாரால் கூறப்படுதல் நன்றாம், (எ-று).

இது, பாவஞ்செய்யினும் நன்மை பயக்கும் என்றது. 3

184. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(இ-ள்) ஒருவன் அறத்தை நினைக்கின்ற மனமுடையனல்லாமை, அவன் பிறரைப் புறஞ்சொல்லும் புல்லியகுண மேதுவாக அறியப்படும், (எ-று).

இஃது, இதனைச் சொல்லுவார் அறமறியா ரென்றது 4

185. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(இ-ள்) அறத்தை யழித்து அறமல்லாதவற்றைச் செய்வதனினும் தீது- ஒருவனைக் காணாத விடத்து இழித்துரைத்துக் கண்ட விடத்துப் பொய் செய்து நகுதல், (எ-று).

இது, பாவத்தினும் மிகப் பாவமென்றது. 5

186. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்று தவர்.

(இ-ள்) நீங்கும்படி சொல்லித் தமக்குக் கேளிராளுரைப் பிரிப்பர், மகிழச் சொல்லி உறவு பண்ண மாட்டாதார், (எ-று).

இது நட்டாரை யிழப்பர் என்றது. 6

15. புறங் கூறாமை

187\. துன்னியார் குற்றமுந் தூற்று மரபின
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

(இ-ள்) தம்மோடு செறிந்தார் குற்றத்தையும் பிறர்க்கு உரைக்கின்றவர், செறிவில்லார்மாட்டு யாங்ஙனஞ் செய்கின்றாரோ? (எ-று).

இது, யாவரோடும் பற்றிலரென்றது. 7.

188\. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறநோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(இ-ள்) பிறரில்லாதவிடம் பார்த்துப் புன்சொற் கூறுவானை நிலம் பொறுத்தது. பாறை தனக்குத் தானே தருமமாதலானே பொறுத்ததாம் இத்தனையல்லது போம், (எ-று).

இது, இவற்குத் துணையாவாரில்லை யென்றது. 8.

189\. பிறன்பழி கூறுவா றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப்படும்.

(இ-ள்) பிறனுடைய பழியைச் சொல்லுமவன், தனக்குண் டான பழிகளிலுஞ் சிலவற்றை வேறுபடத்தெரிந்து பிறராற் சொல்லப் படுவன், (எ-று).

இது பிறரால் புறம் சொல்லப்படுவனென்றது. 9

190\. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு,

(இ-ள்) அயலார் குற்றம்போலத் தமது குற்றத்தையுங் காண வல்லாராயின், நிலைபெற்ற வுயிர்க்கு வருந்தீமையுண்டோ? (எ-று).

காண்பாராயின், சொல்லாரென்றது; இது புறஞ் சொல்லாமைக்குக் காரணங்கூறிற்று. 10

16. பயனில சொல்லாமை

பயனில சொல்லாமையாவது கேட்டார்க்குந் தனக்கும் நற்பயன் படாத சொற்களைக் கூறாமை அஃதாவது அறம்பொருளின்பங் களைப்பயவாது அவற்றுக்கு மாறாயினவற்றைப்பயக்கும் சொற்கள்.

இதுவும் கடியப்பட்ட சொல்லாதலின் அதன்பிற் கூறப் பட்டது.

191. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(இ-ள்) சொல்லுவனாயின் பயனுடைய சொற்களைச் சொல் லுக; சொற்களிற் பயனிலாத சொற்களைச் சொல்லாதொழிக, (எ-று).

இது, பயனில சொல்லாமை வேண்டுமென்றது. 1

192. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(இ-ள்) பயனில்லாதவற்றைப் பல்லார் முன் கூறுதல், விருப் பமில்லாதனவற்றை நட்டார்மாட்டுச் செய்தலினுந்தீதே (எ-று)

பயனில சொல்லல் இம்மை மறுமை யிரண்டின்கண்ணுந் தீமை பயக்கு மென்றானாயிற்று. மேல் பயனில்லாதன கூறலாகா தென்றார், அதனாற்குற்றமென்னை என்றார்க்குக் கூறப்பட்டது 2

193. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

(இ-ள்) நயனுடைய னல்ல னென்பதனை யறிவிக்கும், பயனில்லாதவற்றைப் பரக்க விட்டுச் சொல்லுஞ் சொற்கள், (எ-று).

மேல் பொதுவாகத் தீமை பயக்கும் என்றார் அவற்றுள் இது இம்மையின்கண் பிறராலியம்பப் படாரென்று கூறப்பட்டது. 3

194. நயன்சாரா நன்மையி னீங்கும் பயன்சாராப்
பண்பிற்சொற் பல்லா ரகத்து,

16. பயனில சொல்லாமை

(இ-ள்) ஒருவன் ஒரு பயனைச் சாராத குணமில்லாத சொல்லைப் பலரிடத்துக் கூறுவனாயின். அது நயத்தொடு சாராது நன்மையினீங்கும், (எ-று).

இது, மேற்கூறிய விரும்பப்படாமையுமன்றி நன்மையும், பயவா தென்றது. 4

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(இ-ள்) பயனில்லாதவற்றை நீர்மையுடையார் கூறுவராயின் அவர்க்குண்டான சீர்மையும் சிறப்பும் போம், (எ-று).

இது, நீர்மையுடையராயினும் எல்லா நன்மையும் போ மென்றது. 5

196. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(இ-ள்) பயனில்லாதவற்றைப் பலர் வெறுக்கச் சொல்லுமவன், எல்லாராலும் இகழப்படுவன், (எ-று).

இது, பிறரா லிகழப் படுமென்றது. 6

197 பயனில பாராட்டு வானை மகனெனன்
மக்கட் பதடி யெனல்.

(இ-ள்) பயனில்லாத சொல்லைக் கொண்டாடுவானை மகனென்னா தொழிக; மக்களில் பதரென்று சொல்லப்படும், (எ-று).

இது, மக்கட் பண்பிலனென்றது. 7

198. அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய மல்லாத சொல்.

(இ-ள்) அரிய பொருளை யாராயும் அறிவினையுடையார் சொல்லார். பெரிய பயனில்லாத சொற்களை, (எ-று).

மேற் கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், இதனை யறிவுடையார் கூறாரென்றது. 8

16. பயனில சொல்லாமை

199. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

(இ-ள்) பொருளில்லாத சொல்லை மறந்துஞ் சொல்லார், மயக்கந் தீர்ந்த குற்றமற்ற தெளிவினை யுடையார், (எ-று).

இது, தெளிவுடையார் கூறாரென்றது. 9

200. நயனில சொல்லினுஞ் செல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(இ-ள்) நயனில்லாதன சொல்லினுஞ் சொல்ல அமையும்; பயனில்லாதவற்றைச் சான்றோர் சொல்லாமை நன்று, (எ-று).

இது, சான்றோர்க்கு ஆகாதென்றது, 10

---

17. தீவினையச்சம்.

தீவினையச்சமாவது தீவினைகளைப் பிறர்க்குச் செய்யாமை. மேல் மனத்தினானும் மொழியினானும் செய்ய லாகாதன சொன்னார். இஃது உறுப்பினாற் செய்யலாகாதாதலின் அவையிற்றின் பிற்கூறப் பட்டது.

201. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(இ-ள்) தன்னைத் தான் காதலிக்க வல்லவனாயின், யாதொன்றாயினும் தீவினைப் பகுதியானவற்றைப் பிறர்க்குச் செய்யாதொழிக, (எ-று).

இது, தீவினைக்கு அஞ்சவேண்டுமென்றது. 1

202. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

17. தீவினையச்சம்

(இ-ள்) எல்லாப்பகையும் உற்றார்க்கும் உய்தியுண்டாம்; தீவினை யாகிய பகை நீங்காதே நின்று புக்குழிப் புகுந்து கொல்லும், (எ-று).

அஃதாமாறு பின்பே கூறப்படும். மேல் தீவினை செய்யற்க என்றார்; அதனால் வரும் குற்றமென்னை யென்றார்க்குக் கூறப் பட்டது. 2

203. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

(இ-ள்) தீயவானவற்றைப் பிறர்க்குச் செய்தார் கெடுதல், நிழல் தன்னை நீங்காதே உள்ளடியின்கீழ் ஒதுங்கினாற் போலும், (எ-று).

இதனைச் செய்தார்க்கு அனானாய பாவம் புண்ணியம் உள்ள ளவும் உச்சிக்காலத்து நிழல் உள்ளடியிலொதுங்கினாற் போலத் தன்னுள்ளே சுரந்துநின்று பின்பு விரியுமாறு போலப்புண்ணிய விறுதி யிலே அக்கேட்டைத் தப்பாமல் தரும் என்றவாறு மேல் வினைப்பகை பின் சென்றடுமென்றார், அஃதடுமாறு காட்டிற்று. 3

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(இ-ள்) பிறர்க்குக் கோட்டை மறந்துஞ் சூழாதொழிக சூழ் வனாயின், அனாவற் சூழப்பட்டவன் தானே மாறாகக் கேடு சூழ் வ ன் முன்னே சூழ்ந்தவனுக்குக் கேட்டைத் தீமை செய்தார்க்குத் தீமை பயத்தலாகிய அறந்தானே சூழும், (எ-று).

இது, தீயவை நினைப்பினுங் கேடு தருமென்றது. 4

205. இலமென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(இ-ள்) நல்கூர்ந்தேமென்று நினைத்துச் செல்வத்தைக்கருதித் தீவினையைச் செய்யாதொழிக, செய்வனாகில் பின்பு நல்குரவே பயக்கும் செல்வம் பயவாது, (எ-று)

17. தீவினையச்சம்

இது, வறுமை தீரத் தீமை செய்யினும் பின்பும் வறியனா மென்றது. 5

206. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

(இ-ள்) தன்னைத் துன்பப்பகுதியாயின நலியாமல் வேண்டுபவன், தீமையாயினவற்றைப் பிறர்க்குச் செய்யா தொழிக, (எ-று).

இது, நோயுண்டாமென்றது. 6

207. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(இ-ள்) தீத்தொழிலானவை தமக்குத் தீமை பயத்தலானே, அத்தொழில் தொடிற் சுடுமென்று தீக்கு அஞ்சுதலினும் நீக்கத்தினும் சுடுதலின் அதனினும் மிக அஞ்சப்படும் (எ-று).

மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின் அதனை மனத்தினாலும் நினைக்கலாகா தென்றது. 7

208. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு

(இ-ள்) என்றுந் தீத்தொழில் செய்வா ரஞ்சார், சீரிய ரஞ்சுவர், தீவினையாகிய களிப்பை, (எ-று).

இஃது, இதற்கு நல்லோ ரஞ்சுவ ரென்றது.

209. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(இ-ள்) ஒருமருங்கு ஓடிப் பிறர்க்குத் தீவினைகளைச் செய்யானாயின் தனக்குக் கேடு வருதலில்லையென்று தானே யறிக (எ-று).

இது, கேடில்லை யென்றது.

17. தீவினையச்சம்

210. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(இ-ள்) எல்லா அறங்களையும் அறியும் அறிவு எல்லாவற்றுள்ளும் தலையான அறிவென்று சொல்லுவர் நல்லோர், தமக்குத் தீமை செய்தார்க்குந் தாம் தீமை செய்யாதொழிதலை (எ-று).

இஃது, எல்லாவற்றினுந் தலைமை யுடைத்தென்றவாறு 10

18. ஒப்புரவறிதல்

ஒப்புரவறிதலாவது இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்குமாற்றல் இலனெனினும் தன்னளவிற்கும் தன வருவாயளவிற்கும் ஏற்கத்தக்கார்க்குத் தக்கனவறிந்து கொடுத்தல். மேல் அன்புடைமை முதலாகத் தீவினையச்சம் ஈறாகக் கூறப்பட்ட அதிகாரங்கள் நல்கூர்ந்தாரால் செய்யப்படும் என்று கூறினார். இது நல்குரவினீங்கிச் செல்வரல்லாதார்க்குச் செய்யப்படுதலின் அவையிற்றின் பின் கூறப்பட்டது. இதுவும் ஈகையன்றே இதனை விருந்தோம்பலோடே சேரக்கூறற் பாற்றெனின் அவ்வாறு வறியார்க்குச் செய்ய வேண்டுமாதலால் ஈண்டுக் கூறினாரென்று கொள்ளப்படும். ஆயின் விருந்தோம்பலையும் ஈண்டுக் கூறற்பாற்றெனின் அவ்வாறு கூறின் அது நல் கூர்ந்தாராற் செய்யப்படாதாமாதலாற் கிடந்தவாறே கொள்ளப்படும்.

211 தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ-ள்) ஒருவன் முயன்று பொருள் ஈட்டியதெல்லாம் தகுதியுடையார்க்கு உபகரித்தற்காக (எ-று).

இது, பொருளுண்டானால் பயன் ஒப்புரவுசெய்த லென்றது 1

18. ஒப்புரவறிதல்

21?. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

(இ-ள்) ஒப்புரவு செய்யுங்காற் கைம்மாறு கருதிச்செய்ய வேண்டா; எல்லார்க்கும் நல்வழி சுரக்கின்ற மாரிக்கு உலகம் கைம்மாறு செய்தலுண்டோ? (எ-று)

கடப்பாடு-ஒப்புரவு. ஒப்புரவாவது கைம்மாறு கருதாத கொடையென்று கூறிற்று. 2

213. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ-ள்) செல்வம் விரிவற்ற காலத்தினும் ஒப்புரவிற்குத் தளரார், ஒப்புரவை யறியும் அறிவுடையோர், (எ-று)

இது, செல்வம் விரிவில்லாத காலத்தினும் செய்யவேண்டு மென்றது. 3

214. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயனீர்மை
செய்யா தமைகலா வாறு.

(இ-ள்) நயனுடையான் நல்கூர்ந்தா னாகின்றது செய்ய வேண்டுவன செய்யாதே யமைய மாட்டாமையாலே (எ-று)

இது, செல்வங் குறைபடினுஞ் செய்வரென்றது. 4

215. ஒப்புரவி னான்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோ டக்க துடைத்து

(இ-ள்) ஒருவன் ஒப்புரவு செய்ததனானே பொருட்கேடு வந்ததென்று சொல்லின், அக்கேட்டைக் கேடாகக் கொள்ளப் படாது; அஃது ஒன்றை விற்று ஒன்றை கொள்கின்றவாணிக மாகக்கொள்ளுந் தகுதியுடைத்து, (எ-று).

18. ஒப்புரவறிதல்

எனின் என்றதனாற்கேடுவாராதென்பதே துணிபு, கெட்டானா யினும் அதனை ஆக்கமாகக் கொள்ளப்படும் (எ-று) பிற்பயப்பது நன்மையாதலான். 5

216. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவா ம்
பேரறி வாளன் றிரு.

(இ-ள்) ஊர் உண்கேணி நீர் நிறையப் புகுந்தா லொக்கும், உலகத்தா ரெல்லாரும் நச்சப்படுகின்ற பெரிய வொப்புரவு அறி-வானது செல்வம், (எ-று),

இஃது, ஒப்புரவறிவார்க்கு உள்ளதாகிய செல்வம் நச்சிச் செ ன்றார்க்கு வேண்டியவாறு முகக்கலாமென்றது. 6

217. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(இ-ள்) பயன்படுமரம் ஊர்க்கு நடுவே பழுத்தாற் போலும்; பிறரால் விரும்பப் படுவான்மாட்டுச் செல்வ முண்டாயின், (எ-று).

மேல், செல்வார்க்கு முகக்கலா மென்றார்; இஃது ஊர் நடுவான மரத்தின் கீழ்ப் பயன் கருதாது தமது இச்சையாலிருந்தார்க்குப் பயன் தானே வந்து அமையுமது போலத் தாமே கொண்டு சென்று கொடுப்பர் என்றற்கு வேறு படுத்து உவமை கூறப்பட்டது.

இது, வேண்டாதார்க்கும் பயன்படு மென்றது. 7

218. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(இ-ள்) பிணிமருந்தாகித் தேடுவார்க்கு மறைதலில்லாத மரத்தை யொக்கும், செல்வமானது பெருந்தகையான் மாட்டு உண்டாயின், (எ-று),

தப்பினார் என்ப ஒளித்தாரை. இவன் தகவானாதலின் செல்வம் உலகத்தார்க்குப் பசிமருந்தாமென்றது. இவற்றுள் ஊருணி நீர் நிறைந்தாற் போலும் என்றும், பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றாம்

18. ஒப்புரவறிதல்

என்றும் மருந்து மரம் போலும் என்றும் கூறினமையின் பெருஞ்-
செல்வமின்மை கண்டு கொள்க. 8

219. புத்தே ளுலகத்து மீண்டும் பெறற்கரிதே
யொப்புரவி னல்ல பிற.

(இ-ள்) ஒப்புரவு செய்தலின் நன்றாயிருப்பது இவ்வுலகத்-
தினும் இல்லை; தேவருலகத்தினுமில்லை (எ-று).

ஈண்டுச் செய்யுமறத்தினும் இதனின் மிக்கதில்லை என்றது
தேவருலகத்தின் பெறும்பயனினும்இதனில் மிக்கதில்லை (எ-று). 9

220. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.

(இ-ள்) ஒப்புரவறிவான் உயிர்வாழ்வானென்று சொல்லப்படும். அஃதறியாதாரைச் செத்தவருள் ஒருவராக எண்ணப்படுபவன் (எ-று).

இஃது, ஒப்புரவறியாதார் பிணத்தோ டொப்ப ரென்றது 10

---

19. ஈகை.

ஈகையாவது இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல். இது செல்வர்க்கே ஆவதொன்றாதலின் அதன்பிற் கூறப்பட்டது.

221. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(இ-ள்) ஒருவன்மாட்டுக் கொள்ள நன்மை பயக்கும் எனினும் கோடல் தீது; ஒருவர்க்குக் கொடுத்தாற் பாவ முண்டெனினும் கொடுத்தல் நன்று (எ-று).

19. ஈகை

இது கொள்வோ ரமைதி யறிந்து கொடுக்கவேண்டுமெனினும் வரையாவீகையாதலால், யாதொருவாற்றானுங் கொடை நன்-றென்பது கூறிற்று. 1

222. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ-ள்) ஈகையாவது இல்லாதார்க்கு யாதானும் ஒன்றைக் கொடுத்தல்; இஃதொழிந்த கொடையெல்லாம் குறியெதிர்ப்பை கொடுத்த நீர்மையாதலையுடைத்து, (எ-று).

இது, கொடுக்குங்கால் இல்லாதார்க்குக் கொடுக்கவேண்டு மென்றது. 2

223. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ-ள்) இரந்துவந்தார்க்கு இல்லை யென்னாநின்ற துன்பத்தைக் கூறாது ஒழிதலும் கொடுத்தலும குடிப்பிறந்தார் மாட்டேயுள-வாம், (எ-று)

இது, கொடுக்குங்கால் மறாது கொடுக்க வேண்டுமென்றது.

இலனென்னும் எவ்வம் உரையாமையீதல் என்றதனை இல்லை யென்று சொல்வதன் முன்னே குறிப்பறிந்து கொடுத்தல் எனினும் அமையும். 3

224. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீதலியையாக் கடை.

(இ-ள்) சாதலின் மிக்க துன்பமில்லை; அதுவும் இனிதாம், இரந்து வந்தார்க்குக் கொடுக்க முடியாதவிடத்து, (எ-று).

இஃது. ஈயாது வாழ்தலிற் சாதல் நன்றென்றது. 5

225. இன்னா திரக்கப் படுத லிரந்தவ
னின்முகங் காணு மளவு

19. ஈகை

(இ-ள்) பிறன் ஒருவனா லிரக்கப்படுதலும் இன்னாது எவ்வளவு பொழுதில், இரந்தவன் தான் வேண்டியது பெற்றதனானே இனிதான முகங் காணுமளவும், (எ-று)

இது, கொடுங்கால் தாழாது கொடுக்கவேண்டுமென்றது.

226. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ-ள்) கொடுத்த கொடையினால் அவர் முகமலர்ச்சி கண்டறியாரோ? தாமுடைய பொருளைக் கொடாதே வைத்துப் பின் பிழக்கின்ற வன்கண்ணர், (எ-று).

இஃது, ஈயாதார் இழப்பரென்றது. 6

227. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(இ-ள்) இரத்தல்போல மெய்யாக இன்னாது; தாம் தேடின வுணவைத் தமியராயிருந் துண்டல், (எ-று).

தமிய ரென்றது ஒருவரையுங் காணாமலென்றது.

இரப்பாரையும் பிற்பிறப்பிலிரவு தொடரும்; ஈயாதாரையும் பிற்பிறப்பிலிரவு தொடரும்; ஆதலால் இருவருக்கும் துன்பமே பயப்பதென்றது. 7

228. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(இ-ள்) பகுத்துண்டலைப் பழகியவனைப் பசியாகிய பொல்லா நோய் தீண்டுதலில்லை, (எ-று).

இஃது. ஒருவன் பிறர்க்கீயா தொழிகின்றதும் ஈந்தாற் பொருள் குறையும், அதனாலே பசியுண்டாம் என் றஞ் சியன்றே? அவ்வாறு நினைத்தல் வேண்டா; பகுத்துண்ணப் பசி வரா தென்று கூறிற்று. 8

229. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

(இ-ள்) பொருளற்றாரது குணங்களையழிக்கும் பசியைப் போக்குக; அது செய்ய ஒருவன் தான் தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றானாம், (எ-று).

இது, பகுத்துண்ணப் பொருளழியாது என்றது

230. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ-ள்) பெரியாரது பெருமையாவது பசியைப் பொறுத்தல்; இதுவும் பெரிதாவது பசியைத் தீர்ப்பாரது பெருமைக்குப் பின்பு, (எ-று).

இது, தவம் பண்ணுவாரினும் தானம் பண்ணுவார் வலி யுடைய ரென்றது. 10

---

20 புகழ்.

புகழாது புகழ்பட வாழ்தல் அஃதாவது யாதொன்றானும் தம் மாட்டு வருவார் வேண்டிவந்தால், அவர் வேண்டி வந்த பொருள், கொடுப்ப தொன்றனாயினும் அதனை மறாது கொடுத்தல், இது ஈதலுள் அடங்காதோ எனின் அது இல்லாதார்க்கு உணவு முதலா யின கொடுத்தல். இது கொடுத்தற்கரியன கொடுத்தல் இது தம் முள் வேற்றுமை, தருமபுத்திரனினும் கண்ணனைப் புகழப்படும் கவச குண்டலங் கொடுத்தலான். ஈதலும் புகழ்தலும் வேறாயதற்குச் செய்யுள்; நல்லவை நாடொறும் எய்தார் அறஞ்செய்யார் இல்லா தார்க் கியாதொன்று மீகலார்-எல்லாம் இனியார்தோள் சேரா ரிசை படவாழார் முனியார் சொல் தாம்வாழு நாள். இது பற்றி யோராற் செய்யப்படுதலானும் இதனின் இல்லறத்திற்மிக்க சிறப்புடைய தின்மையானும் எல்லாவற்றினும் பிற்கூறப்பட்டது.

20. புகழ்

231. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(இ-ள்) பிறக்கிற் புகழுண்டாகப் பிறக்க; அஃதில்லாதார் பிறக்குமதினிற் பிறவாமை நன்று, (எ-று).

பிறக்கிற பழியுண்டாம்; பிறவாதொழிய அஃதில்லையாம் ஆதலான் நன்றென்று கூறினார்.

இது, புகழ்பட வாழவேண்டு மென்றது. 1

232. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(இ-ள்) புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல்; அக்கொடை யானல்லது உயிர்க்கு இலாபம் வேறொன்றில்லை, (எ-று).

இது, புகழுண்டாமாறு கூறிற்று. 2

233. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

(இ-ள்) சொல்லுவார் சொல்லுவனவெல்லாம், இரந்து வந்தார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பார்மேல் நில்லா-நின்ற புகழை, (எ-று).

கொடையினாற் புகழுண்டாமென்றார்; அஃதென்னை? குணத்தினாற் புகழுண்டாகாதோ என்றார்க்கு, உலகத்துப் பாடுவாரும் கொடுத்தான் என்றே பாடுவாரென்றது. 3

234. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

(இ-ள்) உயர்ந்தபுகழல்லது இணையின்றாக உலகத்துக் கெடாது நிற்பது பிறிதில்லை, (எ-று).

இது, புகழ் மற்றுள்ள பொருள்போலன்றி அழியாது நிற்கு மென்றது.

20. புகழ்

235. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

(இ-ள்) ஒருவன் நிலத்தெல்லையின்கண்ணே நெடிய புகழினைச் செய்வனாயின், தேவருலகம் புலவரைப் போற்றாது, இவனைப் போற்றும், (எ-று).

புலவரென்றார் தேவரை; புலவர் புலனுடையராதலால் புகழ் என்றது புகழ்பட வாழ்தலென்று ஒரு தொழிலாயினவாறு கண்டுகொள்க. இது, புகழ் செய்தாரைத் தேவருலகம் போற்றுமென்றது. 5

236. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(இ-ள்) புகழ்பட வாழ மாட்டாதார் தங்களை நோவாது தம்மை யிகழ்வாரை நோகின்றது யாதனுக்கு (எ-று)

இது, புகழ் பட வாழமாட்டாதார் இகழப்படுவரென்றது 6.

237. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்.

(இ-ள்) உலகத்தார்க்கெல்லாம் புகழாகிய ஒழிபு பெறாவிடின் அப்பெறாமைதானே வசையாமென்று சொல்லுவர் (எ-று).

மேல் புகழில்லாதாரை யிகழ்பவென்றார், அவர் குற்றமில் லாராயின் இகழப்படுவரோவென்றார்க்கு, வேறு குற்றம் வேண்டா, புகழின்மைதானே யமையுமென்றது. 7

238. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

(இ-ள்) வசை யொழிய வாழுமவர்களே உயிர் வாழ்ந்தாராவர்; புகழொழிய வாழுமவர்களே உயிர் வாழாதார், (எ-று).

இது, புகழில்லார் பிணத்தோ டொப்ப ரென்றது. 8

239 வசையிலா வண்பயங்குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்

20. புகழ்

(இ-ள்) புகழில்லாத வுடம்பைப் பொறுத்த நிலம் பழியற்ற விளைவு குறையும், (எ-று).

இ-ஆ. புகழில்லாதா னிருந்தவிடம் விளைவு குன்றுமென்றது. 9

240. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தர்க்[1] கல்லா லரிது.

(இ-ள்) ஆக்கம் போலக் கேடும் உளனாதாற்போலச் சாதலும் வல்லவர்க் கல்லது அரிது (எ-று)

இது, புகழ்பட வாழ்தல் பன் மக்களெல்லார்க்கும் அரிதென்றது கொலைகளவு கட்காமம் பொய்யென்றுலகத்தாராற் பழிக்கப்பட்டதனுள்ளும் பரதாரம் விரும்பலாகாதென்று கூறி ஒழிந்த நான்கும் கூறிற்றிலர்; அதனான் இல்வாழ்வார்க் கிவையாமோ வெனின் இவையும் ஒழுக்கத்தாற் கூறினாரென்க என்னை? கொலையாகாதென்பது தீவினையச்சத்துள டக்கிப்பொய்யாகாதென்பது பயனில சொல்லாமையுள் அடக்கிக் கூறலாகாதென்பது பொருட்பாலுட் கூறினாரென்க. ஆயின் இவைதம்மையே சொன்னாலோ வென்னின் இவையெல்லாம் பெரும்பான்யும் துறவறத்தினின்றார்க் கல்லது செய்தலருமையின் ஈண்டுக் கூறிற்றிலர் என்க. கள்ளாகாதென்பது பொருட்பாலுட் கூறியது என்னையெனில் அஃதுண்டல் பொருளல்லவென்றற்குப் போறும். காருகத்தியமாகிய இல்லறம் முடிந்தது.

---

1. 'வித்தகர்' என்பது மணக். பாடம்

3. துறவறவியல் (13)

துறவறமாவது தவமேற்கொண்டொழுகுதல். அதுவானப் பிரத்தம் சந்நியாதம் என இரண்டு வகைப்படும். அது, கூறப்பட்ட அதிகாரம் பதின்மூன்றும் அருளுடைமையும் புலான்மறுத்தலும் தவமும் ஒரோவதிகாரத்தானும், அவற்றின்பின் காமம் வெகுளி மயக்க மென்று மூன்று குற்றத்தினும் காமப் பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத்தானும் வெகுளிப் பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத் தானும். மயக்கந் தவிர்த்தல் ஒரதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் அருளுடைமையும் புலான்மறுத்தலும் இல் வாழ்வார்க் கும் செய்யலாம் ஆதலின் அதன் பின்ன கத்தவத்திற்கு முன்னாகக் கூறப்பட்டன. அவற்றுள்,

1. அருளுடைமை

அருளுடைமையாவது யாதானுமோருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினுல் வருந்துமாறு போல வருந்தும் ஈரமுடைமை. இல்வாழ்வார்க்கு அன்புடைமைசிறந்தாற் போல இஃது இல்லத்திற்கும் சிறந்ததாகலின் இது முற்கூறப் பட்டது. மேற்கூறிய புகழ்பட வாழ்தலின் முதிர்ச்சியாதலின் அதன் பிற்கூறப்பட்ட தெனினுமமையும்.

241. நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
தேரினு மஃதே துணை.

(இ-ள்) நல் வழியாலே நாடி அருளயையுண்டாக்குக; பல வழி யினும் ஓடியாராயினும், தமக்கு அருளே துணையாம், (எ-று).

'நல்வழியான்' என்றது, அருளுண்டாகப் பலவறங்களையுஞ் செய்கவென்றது. நாடி என்றது பலவறத்தையும் ஆராய்ந்து என்ற வாறு பல்லாற்றானென்றது எல்லாச் சமயத்திலும் என்றவாறு.

242. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

1. அருளுடைமை

(இ-ள்) செல்வத்துள் வைத்துச் செல்வமாவது அருளுடைமையாகிய செல்வம்; பொருட்செல்வமாவது கீழாயினார் கண்ணும் உளவாதலான் (எ-று).

இஃது, அருளின் நிலைமை கூறிற்று. 2

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்.

(இ-ள்) அருளைப் பொருந்தின நெஞ்சினையுடையவர்க்கு இருளைப் பொருந்தின நரக லோகம் புகுதலில்லை, (எ-று).

இது, நரகம் புகாரென்றது. 3

244. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ-ள்) நிலைபெற்ற உயிரை ஓம்பி அருளை ஆள்வாற்குத் தன்னுயிரஞ்ச வரும் வினை வருதலில்லையென்று சொல்லுவர், (எ-று). இது, தீமை வாராதென்றது. 4

245. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ-ள்) அருளுடையார்க்கு அல்லலில்லை; அதற்குச் சான்று காற்றியங்கப்பட்ட வளப்பத்தினை யுடைய பெரிய வுலகம், (எ-று).

அருளுடையார்க்கு அல்லலின்மை உலகத்தார் மாட்டே காணப்படுமென்றது. என்னை அல்லல் வருவது சிலராலன்றே; யாவர்மாட்டும் அருள் செய்தலால் யாவரும் அல்லல் செய்வார் இன்றா மாதலான். 5

246. அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு

1. அருளுடைமை

(இ-ள்) அருள் இல்லாதார்க்கு மேலுலகத்து நுகர்ச்சியில்லை; பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகின்கண் நுகர்ச்சி யில்லையானாற் போல, (எ-று).

இஃது அருளில்லாதார் சுவர்க்கம் புகாரென்றது. 6

247. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேறி
னருளாதான் செய்யு மறம்.

(இ-ள்) தெளிவில்லாதான் மெய்ப்பொருளைத் தெளிந்தாற் போலும்; ஆராயின், அருளில்லாதான் செய்யும் அறமும், (எ-று).

இஃது, அறஞ்செய்யவும் மாட்டானென்றது. 7

248. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ-ள்) முற்பிறப்பின்கண் அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்தொழுகினவர் இப்பிறப்பின்கண் பொருளினின்று நீங்கி மறவியு முடையவ ரென்று சொல்லுவர்; (எ-று).

ஈண்டுமறவி-கற்றது மறத்தல். இது, பொருளில்லையாமென்றது. 8

249. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

(இ-ள்) பொருளில்லாதார் ஒருகாலத்தே பொருளுடையராதலும் கூடும்; அருளில்லாதார் கெட்டாரே பின்பு ஆக்கமுமுண்டாகாது, (எ-று).

இது, பொருளின்மையே யன்றி எல்லாக் கேடு முண்டாமென்றது. 9

250. வலியார்முற் றம்மை நினைக்கதாந் தம்மின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ-ள்) தாம் தம்மின் மெலியார்மேலே வெகுண்டெழுமிடத்துத் தம்மின் வலியார்முன் தாம்நிற்கு நிலையை நினைக்க, (எ-று).

இஃதருளுண்டாக்குமாறு கூறிற்று 10

2. புலான் மறுத்தல்

புலான் மறுத்தலாவது புலால் உண்டலைத் தவிர்த்தல்.

இஃதுண்பார்க்கு அருளின்றா மென்பதனால் அதன்பிற் கூறப்பட்டது.

251. உண்ணாமை வேண்டும் புலாஅல்[1] பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

(இ-ள்) புலாலை யுண்ணாமை வேண்டும்; அது பிறிதொன்றன் புண்ணாம் ஆதலான்; அதனை அவ்வாறு காண்பாருண்டாயின், (எ-று).

காணாதார்க்கு அமிழ்தாயே தோற்றும். இது, புலான் மறுத்தல் வேண்டும்மென்பதூஉம், அது தூயதாமென்பதூஉங் கூறிற்று. 1

252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ-ள்) பொருளினை யாளுதல் அதனை நோக்கமாட்டாதார்க்கு இல்லை; அதுபோல, அருளினை யாளுதல் ஊன் தின்பவர்க்கு இல்லை, (எ-று).

'மேல் புலாலுண்டல் தூய்தன்றென்றார்; அதனாற்குற்றமென்னை தின்றார் உடம்புதானும் தூய்தன்றே' என்றார்க்கு, அவ்வாறேயல்ல அருட்கேடும் வருமென்று கூறப்பட்டது. 2

253. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(இ-ள்) தன்னுடம்பை வளர்த்தற்குத் தான் பிறிதொன்றன் உடம்பை உண்ணுமவன், அருளுடையவனாவது மற்றியாதனான் (எ-று).

இஃது, ஊனுண்ண அருட்கேடுவருமோ என்றார்க்குக் கூறப்பட்டது. 3

254. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்றி
னுடல்சுவை யுண்டார் மனம்.

1. "புலாலைப்" என்பது மணக். பாடம்.

(இ-ள்) படை கையிற்கொண்டவர்கள் நெஞ்சுபோல், நன்மையை நினையாது; ஒன்றினுடலைச் சுவைப்படவுண்டார்மனம், (எ-று).

மேல் ஊனுண்பார் அருளாளுதற்கு வேறு நெறியில்லை என்றார்க்கு அஃது உண்டானும் உயிர்க்கு அருள்செய்வனாயின் அருளுண்டாகாதோ என்றார்க்கு கூறப்பட்டது. 4

255. தினற்பொருட்டாற் கொல்லா[1] துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(இ-ள்) தினற்காக உலகத்தார் கொல்லார்களாகில் விலைக்காக ஊன்விற்பாரும் இல்லை, (எ-று).

இது, கொன்று தின்னாது விலைக்குக்கொள்வார்க்குக் குற்றமென்னை யென்றார்க்கு, அதனானுங் கொலைப்பாவம் வருமென்று கூறப்பட்டது. 5

256. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இள்) அருளல்லாதது யாதெனின், கொல்லாமையைச் சிதைத்தல்; பொருளல்லாதது, யாதெனின், அவ்வூனைத் தின்றல் (எறு).

கொல்லாமை கோறலைச் செய்நன்றி கொன்றான் என்றாற்போலக் கொள்க. அன்றியும் அருளும் அருள் அல்லாததும் கொல்லாமையும் கோறலும் என்று பொருள் உரைப்பாருமுளர்.

இஃது அருள் கெடுதலேயன்றி அதனை யுண்டாற் பெறுவதொரு பயனுமில்லை என்றது. உடம்பு வளர்தல் பயனாயின் அதற்குப் பிறிது முணவுண்டாதலான். 6

257. செயரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ-ள்) குற்றத்தினின்று நீங்கின தெளிவுடையார் உண்ணார்; உயிரினின்று நீங்கின உடம்பை, (எ-று).

இது, மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், இதனைத் தெளிவுடையா ருண்ணாரென்றது. 7

---

1. "கொல்லா" மணக் பாடம்.

2. புலான் மறுத்தல்

258. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றி
னுயிர் செகுத் துண்ணாமை நன்று.

(இ-ள்) நெய் முதலான அவியைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒன்றினுயிரை நீக்கி அதனுடம்பையுண்ணாமை நன்று, (எ-று).

மேல் தெளிவுடையாருண்ணார் என்றார். அவருண்ணாதது யாதனைக் கருதியென்றார்க்கு, அது எல்லாப் புண்ணியத்தினும் நன்றென்று கூறப்பட்டது. 8

259. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ-ள்) கொல்லானுமாய்ப் புலாலுண்பதனைத் தவிர்த்தவனைக் கைகுவித்து எல்லாவுயிருந் தொழும், (எ-று).

இது, மேல் எல்லாப்புண்ணியத்திலும் நன்றென்றார்; அது யாதனைத் தருமென்றார்க்கு எல்லாத் தேவர்க்கும் மேலாவனென்று கூறப்பட்டது. 9

260. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு.

(இ-ள்) ஊனையுண்ணாமையால் உயிர் நிலையைப் பெறுதலால் ஊனுண்ண எல்லாவுலகத்தினும் இழிந்த நரகம் விழுங்கிக் கொண்டு அங்காவாது, (எ-று).

அங்காவாமை-புறப்பட விடுதலின்மை. உயிர்நிலை என்றது உயிர்க்கு நிலைபேறாகிய முத்தித்தானம். இஃது உண்பார்க்குளதாகும் குற்றம் கூறிற்று. 10

3. தவம்

தவமாவது ஊணும் உறக்கமுங் குறைத்தலும், வெயிலும் பனியும் தாங்கலும், தேவர்வழிபாடு முதலாயின மேற்கொண்டு முயறலும். இஃது இல்லறத்துக்கு முன்வைக்கற்பாலது அருளுடையார்க்கும் புலாலுண்ணாதார்க்கு மல்லது நடத்துதற்கருமையின் பிற்கூறப் பட்டது.

261. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையிற் பட்டு.

(இ-ள்) தங்கருமஞ் செய்வார் ஆவார் தவஞ் செய்வார்; அஃதல்லாத செய்வாரெல்லாம் ஆசையிலே யகப்பட்டுப் பயனில்லாதன செய்கின்றார், (எ-று).

இது, தவம்பண்ண வேண்டுமென்றது. 1

262. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(இ-ள்) துறந்தார்க்கு உணவு கொடுத்தலை வேண்டிமறந் தாராயினரோ? இல்வாழ்வார் தவஞ் செய்தலை, (எ-று).

இது, தானத்தினும் தவம் மிகுதியுடைத்தென்றது. 2

263. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதில்லார்[1] மேற்கொள்வது.

(இ-ள்) தவஞ்செய்தலும் முன்பு நல்வினை செய்தார்க்கு வரும்; அந் நல்வினையில்லாதார் அத்தவத்தை யேறட்டுக்கொள்வது பயனில்லையாம்.

இது, தீவினையுடையார்க்குத் தவம் வராது; வரினுந் தப்புமென்றது. இத்துணையும் தவத்தின் விழுப்பம் கூறிற்று. 3

264. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

---

1. " யஃதிலார் " என்பது மணக். பாடம்.

3. தவம்

(இ-ள்) தமக்கு உற்றநோயைப் பொறுத்தலும் பிறவுயிர்க்கு நோய்செய் யாமையுமாகிய அத்தன்மையே தவத்திற்குவடிவாவது. (எ-று).

மேற்கூறிய தவம் எத்தன்மைத் தென்றார்க்குக் கூறப்பட்டது. 4

265. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ-ள்) தன்னுயிரானது தானென்று கருதுங் கருத்து அறப் பெற்றவனை, ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்களெல்லாம் தொழும், (எ-று).

தன் என்றது சலிப்பற்ற அறிவு; உயிரென்றது சீவனாகி நிற்கின்ற நிலைமையை; தானறுதலாவது அகங்கார மறுதல். மேற்கூறிய நெறியே யன்றி அகங்காரம் விடல் வேண்டும் என்பதூஉம் அதனாற் பயனும் கூறப்பட்டது. 5

266. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(இ-ள்) நெருப்பின்கண்ணே இட்ட இடத்துத் தன்னோடு கலந்த மாசற்று ஒளிவிடுகின்ற பொன்னைப்போலத், துன்பம் நலியத் தவஞ்செய்வார்க்குத் தம்மொடு மருவின வினை விட்டு ஒளி விடும், (எ-று).

இது, வினைவிட் டொளி யுண்டாம் என்றது. 6

267. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட்ட வர்க்கு.

(இ-ள்) கூற்றத்தைத் தப்புதலுங் கைகூடும்; தவத்தினாகிய வலியைக் கூடினார்க்கு, (எ-று).

உம்மையால் தப்புதலரிதென்பது முன்னேயமைந்து கிடந்த தாயினும் காலத்தேவருகின்ற கூற்றத்தினையும் தப்பலாமென்றது. இது, மார்க்கண்டேயன் தப்பினாற்போல வென்றது. 7

3. தவம்

268. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(இ-ள்) இவ்விடத்துப் பகைவரைத் தெறலும், நட்டாரை யாக்குதலுமாகிய வலி ஆராயின், முன்செய்த தவத்தினானே வரும், (எ-று).

இது, பிறரை யாக்குதலும் கெடுத்தலுந் தவத்தினாலே வருமென்றது. 8

269. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(இ-ள்) பொருளில்லாதார் உலகத்துப் பலராதற்குக் காரணம், தவஞ் செய்வார் சிலர்; அது செய்யாதார் பலர் (எ.று).

இது, பொருளுமிதனானே வருமென்றது. 9

270. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ-ள்) விரும்பினவற்றை விரும்பினபடியே வருதலால், தவஞ் செய்தலை யிவ்விடத்து முயல வேண்டும், (எ-று).

இது போக நுகர்ச்சியும் இதனானே வருமென்றது. 10

---

4. கூடாவொழுக்கம

கூடாவொழுக்கமாவது மேற்கூறிய தவத்திற்குப் பொருந்தாத ஒழுக்கம். அஃதியாதோவெனில் தவத்திற்கின்றியமையாத பிரமசரியங் காக்குங்கால் உடன் பழகிய காமம் நலியுமன்றே அதனைப் பொறுத்தலாற்றாதார் மறைந்தொழுகு மொழுக்கம் என்று கொள்க. இதனாற் கூறியது இல்வாழ்வார்க்குப் பரதாரம்

4. கூடாவொழுக்கம்

விரும்பாமை கூறினார். இவருக்குத் தம்முடையதாரமும் விட வேண்டும் ஆதலின் இதனை விழைச்சி மறுத்தலாயிற்று. இதனை இவ்வாறு கூறாது கூடாவொழுக்கமென்ற தென்னையெனின்...... மெனவே விழைச்சி தவிர்தல் பெறுதும். அதற்காக இதனைத் தப்ப வொழுகலாகா தென்பதனாற் கூடாவொழுக்கம் என்று கூறப்பட்டது.

271. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(இ-ள்) மனத்துக்கண் மாசு உண்டாக வைத்து, மாட்சிமைப் பட்டாரது நீர்மையைப் பூண்டு, பொருந்தாத விடத்திலே மறைந் தொழுகு மாந்தர் பலர், (எ-று).

இது, பலர்க்குக் கூடாவொழுக்க முண்டென்றது. 1

272. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ-ள்) புறம்பு குன்றி நிறம்போன்ற தூய வேடத்தராயிருப் பினும், உள்ளம் குன்றி மூக்குப்போலக் கரியராயிருப்பாரை உடைத்து இவ்வுலகம், (எ-று).

இஃது, அவரை வடிவு கண்டு தேறப்படா தென்றது. 2

273. வலியி லிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(இ-ள்) வலியில்லாத நிலைமையை யுடையவன் வலிதாகிய தவ வுருவங்கோடல், பெற்றமானது பிறர் ஐயப்படாமைக்குப் புலி யினது தோலைப் போர்த்துப் பைங்கூழ் மேய்ந்த தன்மைத்து, (எறு)

மேல் வடிவு கண்டு தவவரென்று கொள்ளப்படாதென்றார்; அவரதனைப் பூண்டு கொள்கின்றது எற்றுக்கென்றார்க்கு, அதுவும் தாம் மறைந்தொழுகுதற்காக. 3

274. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று

4. கூடாவொழுக்கம்

(இ-ள்) தவத்திலே மறைந்து தவமல்லாதவற்றைச் செய்தல், வேட்டுவன் தூற்றிலே மறைந்து புள்ளைப் பிணித்தாற் போலும், (எ-று).

தவவேடம் கொண்டாற்றான் கருதின பொருளெய்துமோ என்றார்க்கு, அவர் ஐயப்படாராதலின் எய்து மென்று அதற்குக் காரணம் காட்டிற்று. அர்ச்சுனன் (தவமறைந்தல்லவை செய்தான்) 4

275. வானுயர் தோற்றமெவன் செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(இ-ள்) வானளவும் உயர்ந்த பெருமையுண்டாயினும், அஃதி யாதனைச் செய்யவற்று? தன்னெஞ் சறியக் குற்ற முண்டாயின், (எறு).

தான்-அசை. இஃது, இக்கூடா ஒழுக்கத்தினைப் பிறரறிந்து இகழப்படானாயினும், அவன் செய்கின்ற தவத்தினாற் பயனுண் டாகாது என்றது. 5

276. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(இ-ள்) கள்ளமனத்தினை யுடையவனது குற்றத்தினை யுடைய ஒழுக்கத்தினைப் பிறரறியாராயினும், தன்னுடம்பி னுண் டான பூதங்களைந்தும் அதனுள்ளே நகாநிற்கும், (எ-று).

பூதமென்றது அவையிற்றின் காரியமான பொறி. பொறிகள றியவே அவற்றின் குறிப்பினானே பிறராலறியப்படும், இது பிற ரறியா தொழியினும் தானேயறிவிக்கு மென்றது. 6

277. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கண்ணா[2] ரில்.

(இ-ள்) நெஞ்சிற் றுறவாராய்த் துறந்தாரைப் போல வஞ்சனை செய்து வாழுமவர்களைப்போலக் கொடியா ரில்லையுலகத்து, (எ-று).

இது, கொடிய ரென்றது. 7

2. 'வன்கண்ணா' என்பது மணக். பாடம்

4. கூடாவொழுக்கம்

278. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
ஏதம் பலவுந் தரும்.

(இ-ள்) பற்றினை யற்றேமென்பாரது குற்றத்தினை யுடைய ஒழுக்கம் எல்லாரானும் எற்றெற்றென்று சொல்லும்படியாகப் பல குற்றமும் உண்டாக்கும், (எ-று).

எற்றென்பது திசைச்சொல்; இன்னாசெய்தலின் மேனின்றது. என்றென்பதனை எனவென்று திரிக்க. இது தீமைபயக்கு மென்றது. 8

279. மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(இ-ள்) தவத்தினர்க்குத் தலையை மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகத்தார் கடிந்தவையிற்றைத் தாமுங்கடிந்து விடுவாராயின், (எ-று).

இது வேடத்தாற் பயனில்லை, நல்லொழுக்கமே வேண்டு மென்றது. 9

280. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(இ-ள்) செவ்விய கணை கொடுமையைச்செய்யும், கோடிய யாழ் செவ்வையைச் செய்யும்; அதுபோல, யாவரையும் வடிவு கண்டறியலாகாது, அவரவர் செய்யும் வினையின் பகுதியாலேயறியப்படும், (எ-று).

இது, தவவரை அறியுமாறென்னை யென்றார்க்குக் கூறப்பட்டது. 10

5. கள்ளாமை

கள்ளாமையாவது யாதொரு பொருளையுங் களவாற்கொள் ளாராதல். மேல் இன்பங்காரணமாக மறைந்தொழுகாமை கூறினார்; இது பொருள் காரணமாக மறைந்தொழுகலாகலின் அதன் பிற் கூறப்பட்டது. இது முதலாகக் கொல்லாமையீறாகக் கூறுகின்ற அறங்களெல்லாம் இல்லறத்திநின்றார்க்கு முரியவாகக் கொள்ளப் படும்.

281. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ-ள்) பிறரா லிகழாமையை வேண்டுமவனிவனென்று சொல்லப்படுமவன், யாதொரு பொருளையுங் களவிற்கொள்ளாமல் தன்னெஞ்சைக் காக்க, (எ-று).

இது, களவு ஆகாதென்றது. 1

282. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(இ-ள்) பிறன் பொருளை நெஞ்சினால் நினைத்தலும் தீதாம்; ஆதலால், அதனை மறைவினாலே கள்வேமென்று முயலாதொழிக, (எ-று)

இது, களவு தீதென்றது. 2

283. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ-ள்) பிறர் பொருளைக் கள்வார்க்கு உயிர்நிலையாகிய வீடு பெறுதல் தப்பும்; கள்ளாதார்க்குத் தேவருலகம் பெறுதல் தப்பாது (எ-று).

தள்ளுமென்றது 'தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'* என்றாற் போல. இது, கள்வார் முத்தி பெறுதலுமிலர்; கள்ளாதார் சுவர்க்கம் பெறாமையுமில ரென்றது. 3

* குறள் 595.

5. கள்ளாமை

284 களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ-ள்) களவின் கண்ணே மிக்க ஆசை, பயன்படுங் காலத்துக் கேடில்லாத நோயைத் தரும். (எ-று).

இது, நரகம் புகுத்தும் என்றது. 4

285. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ-ள்) களவிற் கண்ட பொருளானாகிய ஆக்கம் மேன் மேலும் ஆவது போலக் கெடும், (எ-று).

அளவிறப்பு-மிகுதி. இது, பொருள் நிலையாதென்றது. 5

286. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

(இ-ள்) நேர் அல்லாதன செய்து அவ்விடத்தே கெடுவர், களவல்லாத மற்றைய அறங்களைத் தெளியாதார், (எ-று).

அளவெனினும் நேரெனினும் ஒக்கும்; நாற்சீர் நாலடியை அளவடியென்றும் நேரடியென்றும் வழங்குபவ வாதலின். இது, கள்வரை அரசர் கொல்வரென்றது. 6

287. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(இ-ள்) அருளைக் குறித்து உயிர்கள்மாட்டு அன்புடையரா யொழுகுதல், பொருளைக் குறித்துப் பிறரது மறவியைப் பார்ப்பார் மாட்டு இல்லை, (எ-று).

இஃது, அருளும் அன்பு மில்லையாமென்றது. 7

288. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.

5. கள்ளாமை

(இ-ள்) களவின்கண்ணே மிக்க ஆசையையுடையவர் நெறியின் கணின்று ஒழுகுதலைச் செய்யமாட்டார், (எ-று).

இது, நேர் செய்ய மாட்டாரென்றது. 8

289. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறியார் நெஞ்சிற் கரவு.

(இ-ள்) நேரறிந்தவர் நெஞ்சத்து அறம் நிற்குமாறுபோல நிற்கும்; களவறிந்தவர் நெஞ்சில் வஞ்சமும், (எ-று).

இது களவு காண்பாரைத் தவிர்த்தல் முடியாதென்றது. 9

290. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ-ள்) களவாகிய பொல்லா அறிவுடைமை நேராகிய பெருமையைப் பொருந்தினார் மாட்டு இல்லை, (எ-று).

இது, நேரறிந்தவர் களவு காணாரென்றது. 10

---

6. வாய்மை

வாய்மையாவது பொய் சொல்லாமை. பொய் கூறுதல் காமமும் பொருளும் பற்ற வருதலானும் மறைத்துச் சொல்லுதலானும் அவற்றின் பிற்கூறப்பட்டது.

291. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(இ-ள்) தன்னெஞ்சு அறிந்ததனைப் பொய்யாது சொல்லுக; பொய்ப்பனாயின், தன்னெஞ்சுதானே தன்னை யொறுக்கும், (எறு).

6. வாய்மை

சுடுதலாவது அதனாற் பிறர்க்கு உளதாகுந் தீமையைக் கண்டு யான் செய்தேமாயினேமென்று வருந்துவித்தல். இது பொய்யாமை வேண்டுமென்றது. 1

292. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(இ-ள்) யாம் மெய்யாகக் கண்டவற்றுள் மெய் சொல்லுதல் போல நன்றாயிருப்பன. வேறு யாதொன்றும் இல்லை, (எ-று).

இஃது எல்லா அறமும் இதனோடு ஒவ்வாதென்று இதன் தலைமை கூறிற்று. 2

293. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ-ள்) பொய் சொல்லாமையாவது யாதென்று வினவின், பிறர்க்குத் தீமை பயவாததுயா தொன்றாயினும் சொல்லுதல்.

இது, வாய்மையாவது யாது என்றார்க்குக் கூறப்பட்டது. 3

294. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ-ள்) பொய்யும் மெய்யோ டொக்கும்; குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், (எ-று).

மேற்றன்னெஞ்சறிவது பொய்யற்க வென்றார்; அதனைப் பொய்யாது சொல்லுங்கால் தீமைபயப் பனவுமுள; அதனைப் பட்டாங்குக் கூறாது மறைத்துச் சொல்ல நன்மை பயக்குமாயின் அப் பொய்மெய்யோடொக்கு மென்றது. 4

295. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(இ-ள்) தன்னெஞ்சினாற் பொய்மை நினையாது ஒழுகுவனாயின், உலகத்தார் நெஞ்சினுளெல்லாம் உளனாவன், (எ-று).

இது பொய்யை நினையாரை எல்லாரும் தேறுவரென்றது. 5

6. வாய்மை

296. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ-ள்) மனத்தோடே கூட மெய் சொல்லுவனாயின், தவந் தோடே கூடத் தானஞ் செய்வாரினும் தலையாவான், (எ-று).

இஃது எல்லா நன்மையும் பயக்கு மென்றது. 6

297. பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(இ-ள்) ஒருவனுக்குப் பொய்யாமையை யுடையன் என்பத னோடு ஒத்த புகழ் வேறொன்றில்லை; பொய்யாமையானது அவண றியாமல் தானே எல்லா அறங்களையுங் கொடுக்குமாதலான், (எறு).

மேல்தானத்தினும் தவத்தினும் நன்றென்றார்; அஃதாமா றென்னை யென்றார்க்கு, இஃதொன்றனையுஞ் செய்ய, மேலைய வெல்லாம் முயலாமற்றானேயெய்து மென்று கூறப்பட்டது. 7

298. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ-ள்) பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனாயின், பிற அறங்களைச் செய்தல் நன்றாம்; அல்லது தீதாம், (எ-று).

இது, பொய்பட ஒழுகுவனாயின் தவம் செய்தாலும் பயன் படா தென்றது* 8

299. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ-ள்) புறம்பு தூயதாதல் நீரினாலே யமைந்து விடும்; மனத்தின் தூய்மை மெய்சொல்லுதலினாலே யறியப்படும், (எ-று).

இது, மேற்செய்த தவமும் பயன்படா தென்றார், அதற்குக்

---

* திருக்குறள் உரைவளம் (1957)

காரண மென்னனை யென்றார்க்கு, அவர் மனம் தூயரன்மையானே பயன் படாதென்று கூறிற்று.

300. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ-ள்) சான்றோர்க்கு எல்லா வறத்தின் உண்டான ஒளியும் ஒளியல்ல; பொய்யாமையா னுண்டான ஒளியேஒளி யாவது (எ-று)

இது, (பொய்யாவிளக்குச்) சான்றோர்க்கு இன்றியமையாமை கூறிற்று. 10

---

7. வெகுளாமை

வெகுளாமையாவது வெகுடற்குக் காரணமுள்வழியும் வெகுளாதாதல். மேல் காமப்பகுதி கூறினார்; இது வெகுளிப் பகுதியாதலான் அவற்றின் பிற் கூறப்பட்டது.

301. மறத்தல் வெளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(இ-ள்) வெகுளியை யார்மாட்டுஞ் செய்தலை மறக்க; தீயன பிறத்தல் அவ் வெகுளியானே வருமாதலான், (எ-று).

இது வெகுளாமை வேண்டுமென்றது. 1

302. செல்லிடத்துக் காப்பான் சினங்கப்பா னல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கா லென்.

(இ-ள்) தனக்கு இயலு மிடத்தே வெகுளாதவன் வெகுளானாவான்; இயலாவிடத்துத் தவிர்ந்ததனானும் (பயனில்லை) தவிராததானானும் பயனில்லை (எ-று).

இது, வெகுளாமையாவது வலியவன் வெகுளாமை யென்றது. 2

7. வெகுளாமை

303. இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(இ-ள்) தொடர்வுபட்ட நெருப்பு மேன்மேலும் வந்துற்றாற் பால, ஒருவன் தனக்கு இன்னாதவற்றைப் பலகாற் செய்யினும் கூடுமாயின் வெகுளாதொழிதல் நன்று, (எ-று).

மேல்வலியவன் பொறுக்கவேண்டுமென்றார்; அவன் பொறுக்குங்கால் தீமை செய்யினும் பொறுக்க வேண்டுமென்றது. 3

304. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

(இ-ள்) இயலாவிடத்துச் சினத்தல்தீது; இயலுமிடத்தும் அதனிற்றீதாயிருப்பன பிறவில்லை, (எ-று).

இது இயலாதவிடத்து இம்மையிலே தீதாயினும், இயலுமிடத்து மறுமையிலே தீதாமாதலான் எவ்விடத்தினும் தவிர வேண்டுமென்றது. 4

305. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(இ-ள்) ஒருவன் தன்னைத்தான் காக்கவேண்டுவனாயின், சினந்தோற்றாமற் காக்க; காவானாயின் அச்சினம் தன்னையே கொல்லும், (எ-று)

இஃது உயிர்க்கேடு வருமென்றது.

306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

(இ-ள்) சினமென்று சொல்லப் படுகின்ற நெருப்புத் துன்பக் கடலுளழுந்தாமல் தன்னைக் கரையேற விடுகின்ற நட்டோராகிய புணையைச் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி-நெருப்பு; இது காரணக் குறி. இது (சினம்) தன்னையடுத்தாரைக் கொல்லுமென்றது. 6

7. வெகுளாமை

307. சினத்தை பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தெறிந்தான் கைபிழையா தற்று.

(இ-ள்) சினத்தை பொருளாகக் கொண்டவன் கெடுதல் நிலத்தெறிந்தவன்கை தப்பாமற் பட்டது போலும். (எ-று).

இது பொருட்கேடு வருமென்றது. 7

308. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(இ-ள்) நகுதலையும் மகிழ்தலையுங் கெடுக்கின்ற சினத்தைப் போலப் பகையாயிருப்பன வேறும் சிலவுளவோ? (எ-று)

இஃது இன்பக்கேடு வருமென்றது. இவையைந்தும் வெகுட்சியால் வரும் குற்றம் கூறிற்றின. 8

309. உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(இ-ள்) தன்னெஞ்சினால் வெகுளியை நினையானாயின் தானினைந் தனவெல்லாம் ஒரு காலத்தே கூடப்பெறுவன். (எ-று).

இது, நினைத்தன பெறுமென்றது. 9

310. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(இ-ள்) சினத்தை மிகுத்தார் இறந்தாரோடு ஒப்பர்; அதனை யொழிந்தார் எல்லாப்பொருளையுந் துறந்தாரோடு ஒப்பர், (எ-று).

இது, வெகுளாதார் பெரியரென்றது. 10

8. இன்னா செய்யாமை

இன்னாசெய்யாமையாவது தமக்கு இன்னாதவற்றைப் பிறர்க்குச் செய்யாமை. இது வெகுட்சி பிறந்துழி நிகழ்வதொன்றாகலின் அதன்பிற் கூறப்பட்டது.

311. இன்னா வெனத்தா முணர்ந்தவை[1] துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(இ-ள்) தாம் இன்னாதவென்று அறிந்தவற்றைப் பிறர்க்குச் செய்தலை மேவாமை வேண்டும்.

இஃது, இன்னா செய்யாமை வேண்டுமென்றது. 1

312. கறுத்தின்னா செய்தவற் கண்ணு மறுந்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(இ-ள்) தாஞ்செய்த குற்றத்தினாலே வெகுண்டு, இன்னாதவற்றை தமக்குச் செய்தவன் மாட்டும், தாம் அதற்கு மாறாகப் பின்பு இன்னாதவற்றைச் செய்யாமை குறறமற்றார்கோட்பாடு, (எ-று).

மேற் பொதுவாக இன்னாசெய்யற்க என்றார்; இது காரணமுண்டாக இன்னாசெய்தவற்கு மாறாக இன்னாசெய்தலைத் தவிர வேண்டும் என்றது. 2

313. செய்யாமற் செற்றாற்கு[2] மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

(இ-ள்) தானொரு குற்றஞ் செய்யாதிருக்கத் தனக்கு இன்னாத செய்தவற்கும், இன்னாத செய்யினும் அஃது உய்வில்லாத நோயை தரும், (எ-று).

இது காரணமின்றி இன்னாத செய்தவர்க்கும் இன்னாத செய்தலைத் தவிர வேண்டுமென்றது. 3

---

1. 'னுணர்ந்தவை' என்பது மணக் பாடம்
2. 'செய்யாமை செற்றாற்கு' என்பது மணக் பாடம்

8. இன்னா செய்யாமை

314. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(இ-ள்) மிகுதியைத் தருகின்ற செல்வத்தைப் பெறினும், பிறர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு, (எ-று).

இது பழி வாராத செல்வம் பெறினும் தவிர வேண்டுமென்றது; அஃதாவது தீத்தொழிலார் மாட்டுளதாகிய செல்வம் அவரை நலிந்து கொண்டால் உலகத்தார் பழியாராதலான். 4

315. எனைத்தானும் மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணாசெய் யாமை தலை.

(இ-ள்) யாதொன்றாயினும், எல்லாநாளும் யாவர் மாட்டும் இன்னாதவற்றை மனத்தினாலும் செய்யாமை நன்று, (எ-று)

மேல் வகுத்துக் கூறினார்; இஃது அவ்வாறன்றியாவர் மாட்டுந் தவிர வேண்டும் என்றது. 5

316 அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்[1]
தன்னோய்போற் போற்றாக்கடை.

(இ-ள்) பிறிதோருயிர்க்கு உறும் நோயைத் தனக்கு உறும் நோய் போலக் காவாதவிடத்து, அறிவுடையனாகிய வதனால் ஆகுவதொரு பயன் உண்டாகாது. (எ-று)

இஃது அறிவுடையார் செய்யார் என்றது. 6

317, தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(இ-ள்) தன்னுயிர்க்கு உற்ற இன்னாமை உயிரில்லாப் பொருள்கள் போல அறியாது கிடைத்தலன்றி அறியுமவன், பின்னைப் பிறவுயிர்க்கு இன்னாதவற்றைச் செய்கின்றது யாதனை கருதியோ? (எ-று)

---

1. ''பிறிது நோய்'' என்பது மணக். பாடம்.

8. இன்னா செய்யாமை

மேலறிவுடையார் செய்யாரென்றார்; அதனானே அறிவிலா தார்க்குச் செய்யலாம் போலப்பட்டது நோக்கி உயிருடையார் செய் யார் என்றது. 7

318. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றானே[1] வரும்.

(இ-ள்) பிறர்க்கு இன்னாதவற்றை முற்பொழுது செய்யின் அச்செய்தல் தானே பிற்பொழுது தமக்கு இன்னாதனவாய் வரும்; மற்றொருவன் செய்யாமல், (எ-று).

இன்னாத செய்ததனால் வருங் குற்றமென்னையென் றார்க்கு, இது கூறப்பட்டது.

319. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்[2]
நோயின்மை வேண்டு பவர்.

(இ-ள்) இக்காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற் காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார் மாட்டேயுளவாம்; ஆதலால் இக்காலத்துப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார்கள் வருங்காலத்துத் துன்பம் வாராமையை வேண்டுவார், (எ-று)

மேல் இன்னாத செய்தார்க்கு இன்னாத வருமென்றார்; இது வந்த வாறு காட்டிற்று. 9

320. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ-ள்) இன்னாத செய்தாரை ஒறுக்குமாறு என்னையெனின், அவர் நாணும்படியாக நல்ல நயமுடையவற்றைச் செய்துவிடுதல் (எ-று).

இஃது ஒறுக்கும் நெறி கூறிற்று. 10

---

1. "றாமே" என்பது மணக். பாடம்
2. "செய்யசர்" என்பது மணக். பாடம்

9 கொல்லாமை

கொல்லாமையாவது யாதோருயிரைக் கொல்லாமை. இது வெகுளி முதிர்ந்துழி நிகழ்வதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது. இவை மூன்றதிகாரத்தானும் வெகுளிப்பகுதி கூறிற்றின.

321. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(இ-ள்) தன்னுயிர் நீங்கினும் செய்யாதொழிக; தான் பிறிதொன்றினுடைய இனிய வுயிரை விடுக்குந் தொழிலினை (எ-று).

தன் உயிர் நீப்பினும் என்றது, உயிர்க்குக் கேடுவருங்காலத்து நோய் மருந்தாக்கக் கொல்லுதல் குற்றமன்று என்பாரைப்பற்றி, இது கொல்லாதொழிக என்றது. 1

322. நல்லா றெனப்படுவ தீயாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

(இ-ள்) நல் வழியென்று சொல்லப்படுவது யாதெனின், அது யாதோருயிரையுங் கொல்லாமையைச் சிந்திக்கும் வழி. (எ-று)

இது நன்னெறியாவதும் கொல்லாமை யென்றது. 2

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(இ-ள்) இணையின்றாக நல்லது கொல்லாமை; அதன்பின்பே யணையப் பொய்யாமையும் நன்று எனலாம் (எ-று).

இதனாற் சொல்லியது எல்லா அறத்தினும் பொய்யாமை நன்று; அதினும் நன்று கொல்லாமை யென்றவறாயிற்று. 3

324. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

(இ-ள்) நல்ல வினை யாதெனின், கொல்லா தொழிதல்; கொல்லுதல் எல்லாத் தீவினைப் பயனையுந் தருமாதலான் (எ-று).

9. கொல்லாமை

இஃது அறத்தொழிலாவது கொல்லாமை யென்றது. 4

325. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(இ-ள்) மனைவாழ்க்கையில் நிற்றலஞ்சித் துறந்தவர்களெல்லாரினும், கொலை யஞ்சிக் கொல்லாமையைச் சிந்திப்பான் தலைமை புடையான்; இல்வாழ்க்கையில் நிற்பினும், (எ-று).

இஃது எல்லாத் துறவினும் நன்றென்றது. 5

326. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூலேரர்
தொகுத்தவற்று ளெல்லாந்தலை.

(இ-ள்) பல்லுயிர்களுக்குப் பகுத்துண்டு அவற்றைப் பாதுகாத்தல், நூலுடையார் திரட்டின அறங்களெல்லாவற்றினும் தலையான அறம், (எ-று)

இஃது எல்லாச் சமயத்தார்க்கும் ஒக்க நன்றென்றது. பகுத்துண்டல் கூறிய தென்னை பல்லுயிரோம்புதல் என அமையாதோ? இது கொல்லாமை யாதலால் எனின்? எல்லாச் சமயத்தாருக்கும் ஒக்க நன்றென்றது, இவ்விரண்டறமும் என்றற்காகவும், கொல்லாமையே நன்றென்றார், அதனினும் நன்று அவ்வுயிர்களை யூண் கொடுத்துப் பிறர் நலியாமற் பாது காத்தலென்றற்காகவும் கூறினார் என்று கொள்ளப்படும். 6

327. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

(இ-ள்) கொல்லாமையை விரதமாகக் கொண்டு ஒழுகுமவன் வாழுநாளின் மேல், உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது (எ-று).

பிறவாமை யுண்டாதலால் கூற்றுச்செல்லாது என்றார். இது கொல்லாமையாற் பயன் கூறிற்று. 7

328. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

9. கொல்லாமை

(இ-ள்) முற்பிறப்பின்கண் உயிரை யுடம்பினின்று நீக்கினார் இவரென்றுயர்ந்தோர் கூறுவர்; குற்றமான வுடம்பினையும் உடையாராய் அற்றை ஊணுஞ் செல்லாத தீய மனைவாழ்க்கையினையும் உடையாரை, (எ-று).

இது கொலையினான் வருங் குற்றம் கூறிற்று. 8

329. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

(இ-ள்) கொலைத் தொழிலுடையராகிய மாக்கள் பொல்லாமை யாராய்வாரிடத்துத் தொழிற்புலையராகுவர், (எ-று)

இவரை உலகத்தார் (கொலைப்புலையர்) கன்மசண்டாலரென்று சொல்லுவர் என்றது. 9

330. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

(இ-ள்) நன்மையாகும் ஆக்கம் பெரிதேயாயினும், ஒருயிரைக் கொன்று ஆகின்ற ஆக்கம் உயர்ந்தோர்க்கு ஆகாது, (எ-று)

அஃதியாதெனின் வேள்வியான் வரும் கொலை. அதனை உயர்தோர்க்கு ஆகாதென்றார்; ஏனையோர்க்காமென்றற்கு என்னை அதனாற்பயன் சுவர்க்கமன்றே அச்சுவர்க்கத்தினை விரும்பாது உயர்ந்தோர் வீடுபேற்றினை விரும்புவராதலான். 10

WITH BEST COMPLIMENTS
FROM
ANNAMALAI UNIVERSITY

10. நிலையாமை

நிலையாமையாவது மயக்கத்தினால் தானென்றும் தனதென்று நினைத்திருக்கின்ற யாக்கையும் பொருளும் நிலையாமை கூறுதல். மேல் காமவெகுளி கூறினார், இது மயக்க மின்மையாதலான் அவற்றின் பிற் கூறப்பட்டது.

331. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(இள்) நில்லாத பொருள்களை நிற்கின்றதாக நினைக்கின்ற புல்லறிவுடைமை இழிந்தது, (எ-று).

எனவே, பொருள்களை யுள்ளவாறு காணவொட்டாத மயக்கத்தைக் கடிய வேண்டுமென்றவாறாயிற்று. 1

332. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்.

(இ-ள்) நில்லாத வியல்பினை யுடைத்துச் செல்வம்; அதனைப் பெற்றால், அப்பொழுது நிற்குமதாகிய அறத்தைச் செய்க, நில்லாதன மூவகைப்படும்; செல்வ நிலையாமை. இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என. அவற்றுளிது செல்வ நிலையாதென்பதூஉம் அது பெற்றாலறஞ் செய்ய வேண்டும் என்பதூஉங் கூறிற்று.

333. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(இ-ள்) கூத்தாட்டுக் காண்டற்கு அவை திரண்டா லொக்கும் பெருஞ்செல்வத் திரளுமாறு; அவையெழுந்து போனாற் போலும் அது; போமாறும், (எ-று).

மேற் செல்வ நிலையா தென்றார் அது நிலையாதாயின் அறஞ் செய்யுமாறென்னை யென்றார்க்குக் கூத்தாட்டின்கட் பன் மக்களெல்லாம் தாமே வந்து திரண்டு அது முடிந்தால் தாம் வேண்டிய நெறியேபோவர்; அதுபோலப் புண்ணிய முள்ளளவும் நின்று அஃதற்றாற் போமென்று கூறிற்று. இவையிரண்டும் செல்வ நிலையாமை கூறிற்றின. 3

10. நிலையாமை

334. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(இ-ள்) நாளென இன்பந் தருவ தொன்று போலத் தோற்றி உயிரை யீர்வதொரு வாளாம்; அதனை யறிவாரைப் பெறின், (எ-று).

உயிரீரும் என்றமையான் இளமை நிலையாமை கூறிற்று. 4

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(இ-ள்) நாவழங்காமற் செறுத்து விக்குளானது மீதூர்ந்து வருவதன் முன்னே, நல்வினையை மேல் விழுந்து செய்யவேண்டும், (எ-று).

மேல் இளமை நிலையாதென்றார் இஃது இளமை கழிவதன் முன்னே நல்வினை செய்யவேண்டுமென்றது. இவையிரண்டும் இளமை நிலையாமை கூறிற்றின. 5

336. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(இ-ள்) ஒருவன் நேற்றுளனாயிருந்தான், இன்றில்லையாயினா னென்று சொல்லும் பெருமையை இவ்வுலகம் உடைத்து, (எ-று)

இது யாக்கை நிலையாமை கூறிற்று. 6

337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல

(இ-ள்) ஒரு பொழுதளவும் தம்முயிர் நிலைநிற்கும் என்பதனை யறியார்களாயிருந்தும், தமது வாழ்நாள் கோடியுமல்ல, பல வாக்கிக் கருதுவர் உலகத்தார், (எ-று).

மேல் ஒரு நாளுளனானவன் பிற்றைஞான்று செத்தானென்றார், இஃது ஒரு பொழுதளவும் உயிர் நிலையாகாது என்றார். 7

10. நிலையாமை

338. குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிருடை நட்பு.

(இ-ள்) கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்து போனாற் போலும்; உடம்போடு உயிருக்கு உள்ள நட்பு, (எ-று).

மேல் ஒருபொழுதென்று காலங்கூறினார். இது நினைத்த பொழுது போமென்றது. 8

339. உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(இ-ள்) உறக்கத்தோடு ஒக்கும் சாக்காடு; உறங்கி விழித்த தனோடு ஒக்கும் பிறப்பு, (எ-று).

இது போன உயிர்மீண்டும் பிறக்கு மென்பதூஉம், பிறந்தாலும் உறங்கலும் விழித்தலும் போல மாறி வருமென்பதூஉம் கூறிற்று. 9

340. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

(இ-ள்) தனதல்லாத உடம்பினுள்ளே ஒதுக்கடையாக விருந்த உயிர்க்குப் போயிருத்தற்கிடம் அமைந்ததில்லையோ? அமைந்த தாயின், இதனுள் இராது, (எ-று).

புக்கில் என்பது முத்தித்தானம். இது மேற்கூறியவாற்றான் மாறிப் பிறந்து வரினும் ஓரிடத்தே தவிருமென்பது கூறிற்று,

வானப்பிரத்தமாகிய துறவற முடிந்தது. 10

11. துறவு
(சந்நியாதம்)

துறவாவது ஒருவன் தவம்பண்ணாநின்றகாலத்து யாதானும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும், அதனைப் பற்றறத்துறத்தல். இது மயக்கமற்றார்க்கு வருவதொன்றாதலின், இதன் பிற் கூறப் பட்டது.

341. அடல்வேண்டு மைந்தன்[1] புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(இ-ள்) பிறப்பறுப்பார்க்கு பொறிகளைந்தினுக்கும் நுகர்ச்சியான ஐந்தினையுங் கொல்லுதல் வேண்டும். அதற்காகத்தான் விரும்பின வெல்லாவற்றையும் ஒரு காலத்தே விடுதல் வேண்டும், (எ-று).

இது, தொடர்ப்பாடுளதாயின் நுகர்ச்சியுண்டாம்; அஃதுண் டாக மயக்க முண்டாம்; அதனானே பிறப்புண்டாம்; ஆதலால் துறக்க வேண்டும், என்றது. 1

342. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

(இ-ள்) யாதொரு பொருளையும் இலதாகல் தவத்திற்கியல் பாகும், அப் பொருள்களையுடைமை மீண்டும் பிறத்தற்குக் காரண மான மயக்கத்தைத் தரும், (எ-று).

இது, 'மனத்தினாற் பற்றிலாதார்க்குப் பொருளுடைமையான் வருங்குற்ற மென்னை' யென்றார்க்குக் கூறப்பட்டது. 2

343. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

(இ-ள்) பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகையாயிருக்கும் மற்றுஞ் சில தொடர்ப்பாடுகளை உளதாக்குவது யாதனை கருதியோ? (எ-று).

சிறிதாயினும் தொடர்ப்பாடுளதாயின் அதனைத் துறவென்று கொள்ளப்படாதென்றது; அது நோன்பிற்கியல்பின்மையால். 3

---

1. 'மைந்தின்' என்பது மனக். பாடம்

11. துறவு

344. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றிலனைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

(இ-ள்) பொருளைப்பற்றி விடாதவர்களுக்கு துன்பங்கள் விடாதே பற்றி நிற்கும், (எ-று).

இது பொருளைத் துறவாக்கால் வினைகெடாதென்றது. 4

345. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

(இ-ள்) எவன் யாதொன்றினின்றும் யாதொன்றினின்றும் நீங்கினான் அவன் அதனளவு அதனளவு துன்பமுறுதலிலன், (எ-று)

இது, 'துறந்தார்க்குப் பயன் என்னை' என்றார்க்குப் பற்றி னானிறைந்த துன்பத்திலே ஒரு பற்றைவிட அதனளவு துன்பம் குறைபடும் என்றது. 5

346. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப்படும்.

(இ-ள்) ஒருவன் யாதொரு பொருளோடும் பற்றற்ற பொழுதே அது பிறப்பையறுக்கும்; அதனை விடாதவராற் காணப்படுவது நிலையாமையே (எ-று).

இஃது எல்லாப் பற்றினையும் அறுக்கப் பிறப்பு அறுமென்றது இத்துணையும் துன்பம் கெடும் என்றது. 6

347. வேண்டி னுண்டாகத் துறக்கத் துறந்தபி
னீண்டியற் பால பல.

(இ-ள்) தன்னுயிர்க்கு ஆக்கம் உண்டாக வேண்டின், தன் னுடைமை யெல்லாவற்றையுந் துறக்க; துறந்தபின் இவ்விடத்தே யியலும்பகுதியன பல, (எ-று).

அவை நீத்தார் பெருமையுட் கூறப்பட்டன. இஃது இம்மைப் பயன் கூறிற்று. 7

11. துறவு

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(இ-ள்) பற்றறத் துறந்தார் மூத்தியைத் தலைப்பட்டார்; அல்லாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையிலே யகப்பட்டார், (எ-று)

இது மறுமைப் பயன் கூறிற்று. இவை யிரண்டினானும் புறத்துறவின் பயன் கூறப்பட்டது. 8

349. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(இ-ள்) யானென்றும் எனதென்றும் நினைக்கின்ற மயக்கத்தினை யறுக்குமவன், தேவர்க்கு மேலாகிய உலகின் கண்ணே செல்லும், (எ-று).

இஃது அகத்துறவும் அதனாற் பயனும் கூறிற்று

350. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ-ள்) பற்றறுத்தான் பற்றினவதனைப் பற்றுக; அதனைப் பற்றுங்கால், பயன் கருதிப் பற்றாது பற்று விடுதற்காகப் பற்றுக.

பற்றற்றான் பற்றாவது தியான சமாதி. பின் மெய்யுணர்தல் கூறுதலான், இது பிற்கூறப்பட்டது. 10

---

12. மெய்யுணர்தல்.

மெய்யுணர் தலாவது எக்காலத்தினும் எவ்விடத்தும் அழியாது நிற்கும் பொருள் இதுவென வுணர்தல், இது பற்றறத் துறந்தோரது உள்ள நிகழ்ச்சியாதலான், அதன்பின் கூறப்பட்டது.

12. மெய்யுணர்தல்.

351. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

(இ-ள்) மெய் முதலாகிய பொறிகளைந்தினாலும் அறியப் படுவனவெல்லாம் அறிந்தவிடத்தும், அதனான் ஒரு பயனுண் டாகாது, உண்மையை யறியும் அறிவிலாதார்க்கு, (எ-று).

இது, மெய்யுணர்தல் வேண்டும் என்றது. 1

352. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு.

(இ-ள்) பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினாலே உண்டாம், மாட்சிமையில்லாத பிறப்பு, (எ-று)

இது மெய்யுணருங்கால் மயங்கக் காண்பனாயின், பிறப்புண் டாமென்றது. 2

353. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ-ள்) யாதொரு பொருள் யாதொரு தன்மைத்தாயிருப் பினும், அப்பொருளினுடைய வுண்மைத் தன்மையைக் காண்பது யாதொன்று அஃது அறிவாம், (எ-று).

மெய்யென்பதூஉம் அறிவென்பதூஉம் ஒன்று; என்னை? எக் காலத்தும் ஒரு தன்மையாய் அழிவின்றி நிற்றலின், மெய்யாயிற்று; எல்லாப் பொருளையுங் காண்டலால், அறிவாயிற்று.

இவை மூன்றினானும் உலகத்துத் தோற்றுகின்ற பொருள் களை இந்திரியங்களாற் கண்டு அதன்பின் அப்பொருள்களைக் கண்டவாற்றால் தெளியாது அவையிற்றினது உண்மையைப் போக் கறவாராய்ந்து காண்பது மெய்யென்று கூறப்பட்டது. 3

354. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

12. மெய்யுணர்தல்

(இ-ள்) பிறப்பாகிய அறியாமையினின்று நீங்கிப் பிறவாமையாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாவது. (எ-று)

பிறவாமை சிறந்ததாதலின், சிறப்பு எனப்பட்டது. இதனாற் சொல்லியது தான் பிறந்தானாகவும் செத்தானாகவும் கருதுகின்ற அறியாமையை விட்டுத் தனக்குச் சாவில்லையாயும் பிறப்பில்லையாயும் நிற்கின்ற நிலைமையைக் காணவேண்டுமென்றவாறாயிற்று மேல் மெய்யிலக்கணம் கூறினார், இது உணருமாறு கூறிற்று. 4

355. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ-ள்) உள்ளமானது உள்ளபொருளை யாராய்ந்து ஒருதலையாக வுணருமாயின், பின்னைப் பிறப்புண்டென்று நினையாதொழிக, (எ-று)

மெய்யுணர்ந்தவர்கள் பின்பும் பிறப்புண்டென்று நினைப்பராயின் அஃது ஐயப்படுதல் என்னும் குற்றமாம்; அதனாற் பிறப்பை நினையாதொழிக.

356. ஐயத்தி னீங்கித் துணிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(இ-ள்) மெய்ப்பொருளை ஐயப்படுதலினின்று நீங்கித் துணிந்தவர்களுக்கு, இவ்வுலகத்தினும் மேலுலகம் அணித்தாதலையுடைத்து, (எ-று)

துணிந்த அறிவின்கண்ணது எல்லாவுலகுமாதலின், அவ்வறிவுடையார்க்கு உலகம் ஒருங்குதோற்றுதலின், அணித்தாமென்றார். இஃது எல்லாம் அறியுமென்றது. 6

357. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ-ள்) மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவுடையார்க்கு, அறியாமையாகிய விருள் நீங்க முத்தியாகிய இன்பமுண்டாம், (எ-று)

இது மெய்யுணர்ந்தார்க்கு வினைவிட்டு (முத்தி) யின்ப முண்டாமென்றது. 7

12. மெய்யுணர்தல்

358. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ-ள்) இவ்விடத்தே மெய்ப்பொருளை யறிந்துதெளிந் தாரே அடைவார்; மீண்டு இவ்விடத்து வாராத வழியினை (எ-று) கல்வி-அறிவு; 'கல்லாக்கடுவன்'* என்றாற்போல-காட்சி-தெளிவு; உள்பொருளிதுவெனவுணர்தல் ஞானமாம், தெள்ளிதின் அப் பொருள் தெளிதல் காட்சியாம்† என்று பிறரும் சொன்னாராகலின் இது பிறப்பறு மென்றது. 8

359. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(இ-ள்) தன்னைச் சார்வனவற்றையறிந்து அவை(யிற்றின்) சார்தல்கெட ஒழுகுவனாயின், அவ்வொழுக்கத்தினையழித்துச் சார் தலைச் செய்யா; சாரக்கடவ துன்பங்கள், (எ-று)

சார்பு-வினை; சார்புகெடஒழுகல்-காமம் வெகுளி மயக்கமின்றி மெய்யுணர்ச்சியானொழுகுதல். அழித்துச் சார்தரா சார்தரு நோயென்றது முற்பிறப்புப் பலவாகலின், அதனின் உண்டான வினைப் பயனெல்லாம் ஒருங்கு துய்த்தானல்லன்; ஒரு நல்வினைப் பயத்தினானே அறிவுண்டாய் அதனானே உண்மை கண்டான் அவன் காட்சியைத் தப்பாமல் நிற்பனாயின், சாரக்கடவதாய் நிற்கின்ற வினை சாராதே விட்டுப்போமென்றது. 9

360. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய்.

(இ-ள்) ஆசை வெகுளி மயக்கமென்னும் மூன்றினது நாமம் போக, வினைபோம், (எ-று)

இது சார்புகெட ஒழுகுந்திறன் கூறிற்று. வினை கெடுதற்கு வழி இதுவென்று கூறுதலான், இது மெய்யுணர்தலாயிற்று. 10

---

* கொடிச்சிகாக்கு-நற்றிணை 22

† சிந்தாமணி-முத்தி-2851

13. அவாவறுத்தல்

அவாவறுத்தலாவது பொருள் மேற் செல்லும் ஆசையைத் தவிர்தல், முத்திக்குக்காரணம் மெய்யுணர்தலே யமையுமாயினும், அவாவோடு நிற்றலின் தான் விடப்பட்ட பொருள்கள்மாட்டு ஆசை செல்லின், மீண்டும் பிறப்பிற்குக் காரணமாம்; ஆதலான், இதனைத் தவிரவேண்டுமென்று எல்லாவற்றினும் பின் கூறப்பட்டது.

361. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(இ-ள்) ஒருவனை வஞ்சனை செய்வது ஆசை; ஆதலால், அதனை அஞ்சுவதே அறம் ஆவது, (எ-று)

வஞ்சனை செய்தல்-நன்றி செய்வாரைப் போல முன்னே நின்று, பின்னே தீக்கதியுள் உய்த்தல். இஃது அவாவின்மை வேண்டுமென்றது. 1

362. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

(இ-ள்) ஆசையில்லாதார்க்குத் துன்பம் இல்லையாகும்; அஃது உண்டாயின், துன்பமானது கெடாது மேலேமேலே வரும், (எ-று)

அவாவுண்டானால் வரும்குற்ற மென்னை யென்றார்க்குக் கூறப்பட்டது. 2

363. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(இ-ள்) எல்லாவுயிர்க்கும் எல்லாநாளுங் கேடில்லாத பிறப்பைக் கொடுக்கும் விதையாவது ஆசையென்று சொல்லுவர், (எ-று)

இஃது ஆசை துன்பம் தருதலேயன்றிப் பிறப்பினையும் தருமென்றது. 3

364. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

13. அவாவறுத்தல்

(இ-ள்) பற்றற்றவரென்பார் ஆசையற்றவர்; ஆசையறாதவர் பற்றினையறுத்தாராயினும், ஆசையற்றாரைப் போலப் பற்றறுத்திலர், (எ-று)

தொடர்ப்பாடுகளைந்தார்க்கு, மனத்தினாற் பற்றுண்டானால் வரும் குற்றம் என்னை? அதனாலுறுவதோர் துர்ச்சியின்மையான் என்றார்க்குக் கூறப்பட்டது. 4

365. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(இ-ள்) ஒருவர்க்கு அழுக்கறுத்தலென்பது ஆசையின்மை; அவ்வாசையின்மை மெய் சொல்லுதலை விரும்ப வரும், (எ-று)

இது பொருள்மே லாசையில்லாதார் பொய் கூறாராதலின், மெய் சொல்ல (அவாவின்மை) வரும் என்று அவாவறுத்தற்குக் கருவி கூறிற்று. 5

366. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

(இ-ள்) ஆசையை மிகவும் போக்குவானாயின், கேடில்லாத வினை தான் வேண்டின நெறியாலே வரும், (எ-று,

கேடில்லாத வினையாவது அறத்தொழில்; அவ்வறம் ஆசையில்லாதார்க்கு முயலாம லெய்தும் என்றது. 6

367. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(இ-ள்) அவாவின்மை போல மிக்க செல்வம் இவ்விடத்தில் இல்லை; அவ்விடத்தினும் அதனை யொப்பது பிறிதில்லை, (எ-று)

இஃது இதனின் மிக்கதொரு பொருளுமில்லை யென்றது. 7

368. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

13. அவாவறுத்தல்

(இ-ள்) அவாவாகிய துன்பங்களுள் மிக்க துன்பம் கெடுமாயின், இன்பமானது இடையறாமல் வந்து மிகும், (எ-று)

இஃது இன்பமும் இதனாலே வருமென்றது.

369\. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(இ-ள்) விரும்புங்கால் பிறவாமையை விரும்புதல் வேண்டும்; பிறவாமைதான் பொருள்களை விரும்பாமையை விரும்ப வரும். (எ-று)

இது பிறவாமையும் இதனானே வருமென்றது. 9

370\. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(இ-ள்) நிறையாத இயல்பினையுடைய ஆசையை விடுவனாயின், அது விட்ட அப்பொழுதே அழியாத இயல்பினைத் தரும், (எ-று)

பேரா இயல்பாவது என்றுமொருபடிப்பட்டது. இது தன்னுடைய உருவத்தைப் (பெறுமென்றது). 10

(சந்நியாசமாகிய துறவறவியல் முற்றிற்று)

4 ஊழ்—1. ஊழ்.

ஊழாவது முறை; அஃதாவது முன்பு செய்த வினை பின்பு நிளையும் விளைவு மேற் கூறிய அறப்பகுதியும் இனிக் கூறுகின்ற பொருட் பகுதியும் இன்பப் பகுதியும் முன்செய்த நல்வினையான் வருதலும் இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையான் வருதலும் அறியாதே இதனை உலகத்துப்பன்மக்கள் தமது முயற்சியால் வந்த தென்பரன்றே? அதற்காக இது கூறப் பட்டது. ஒருவன் செய்த வினை வழுவின்றிப் பயத்தல் அறத்தினான் வருமாதலான், அறத்தினிறுதிக்கண் கூறப்பட்டது.

371. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(இ-ள்) ஒருவனுக்கு ஆக்கங் கொடுக்கின்ற ஊழ் தோற்றி னால் முயற்சி தோன்றும்; அழிவு கொடுக்கின்ற ஊழ் தோற்றினால் மடிதோன்றும், (எ-று)

இஃது ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையும் ஊழால் வருமென்றது. 1

372. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை

(இ-ள்) அறியாமையை யுண்டாக்கும்; கெடுக்கும் ஊழ் தோன்றினால்; அறிவை விரிக்கும், ஆக்கும் ஊழ் தோன்றினால், (எ-று)

இஃது அறிவும் அறியாமையும் ஊழால் வருமென்றது 2

373. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த
னுண்மை யறிவே மிகும்.

(இ-ள்) நுண்ணிதாக வாராய்ந்த நூல்கள் பலவற்றையுங் கற்றானாயினும், பின்னையும் தனக்கு இயல்பாகிய அறிவு மிகுத்துத் தோற்றும், (எ-று)

1. ஊழ்

மேல் அறிவிற்குக் காரணம் ஊழ் என்றார் அஃதெற்றுக்கு? கல்வியன்றே காரணமென்றார்க்கு, ஈண்டுக் கல்வியுண்டாயினும் ஊழானாகியவறிவு வலிதென்றது. 3

374. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ-ள்) ஊழினும் மிக்க வலிமையுடையன யாவையுள? பிறிதொன்றை யாராயுங் காலத்துந் தான் முற்பட அவ்வாராய்ச்சிக்கு உடன்பட்டு நிற்கும். (எ-று)

தெரிந்துணர்தல்வல்லாரை ஊழ் என்செய்யும் என்றார்க்கு, அத்தெரிதல் தானாய்நின்று கேடுவரும் வழியைத் தெரியும் என்றது. 4

375. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(இ-ள்) செல்வம் உண்டாக்குதற்கு முன்பு தனக்குத் தீதாயின வெல்லாம் நன்றாம்; செல்வத்தை யில்லை யாக்குதற்கு முன்பு நன்றாயிருந்தன வெல்லாம் தீதாம். (எ-று)

ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் துணையாகுமவை ஊழினானே யாமென்றது. 5

376. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

(இ-ள்) தம்முடைய பகுதியல்லாதனவற்றை வருந்திக் காப்பினும் அவை தமது ஆகா; தம்முடையவாயினவற்றைக் கொண்டு சென்று சொரிந்து விடினும் அவைபோகாவாம், (எ-று)

இது முன்புள்ள செல்வம் காவற்படுதலும் களவுபோதலும் ஊழினாலேயாமென்றது. 6

377. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தாற் குந்[1] துய்த்த லரிது.

---

1. "தொகுத்தாற் குந்" என்பது மணக் பாடம்.

(இ-ள்) தானம் பண்ணினவன் தானம் பண்ணின வகையினா னல்லது, கோடிபொருளை யீட்டினவனுக்கும் அதனாலுள்ள பயன் கோடல் அருமையுடைத்து, (எ-று)

கோடிதொகுத்தானென்றமையால் தானப் பயன் என்பது பெற்றாம் அத்தானத்தைக் கொண்டோர் அமைதியினானல்லது. பொருள் பெற்றாலும் நுகர்தற்கு ஊழ்வேண்டுமென்றது. வகுத்தான் என்பதை யூழ்வினைக்கிழவன் என்பாருமுளர். 7

378. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(இ-ள்) செல்வமுடையாராதலும் தெள்ளியாராதலும் வேறு வேறு ஊழினால் வரும்; ஆதலால், இரண்டு வகையாதல் உலகத்தியல்பு, (எ-று)

ஒன்றுடையார்க்கு ஒன்று இன்னாதற்குக் காரணம் முன்செய்த நல்வினை வேறுபாட்டானே யென்றது. 8

379. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

(இ-ள்) நுகரும்பொருளில்லாதார் துறக்கவமையும்; தமக்கு வந்துறந் துன்பப்பகுதியாயினவை உறாதேபோமாயின், (எ-று)

செல்வ மில்லாதார்க்குத் துறவறஞ்செய்தல் எளிதன்றே. அது செய்ய நினைப்பினும் அவரைத் துன்பமுறுக்கும் ஊழ் அதனைச் செய் யாமல் காக்குமென்ற வாறாயிற்று.

இது துறவு ஊழினானே வருமென்றது. 9

380. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்.

(இ-ள்) நன்மைவருங்காலத்து நன்றாகக் கண்பவர்கள் தீமை வருங்காலத்து அல்லற்படுவது யாதினுக்கு, (எ-று)

1. ஊழ்

நன்மையும் தீமையும் தமதுடன்பாடின்றி வரும். அதனையியல்பென்று கொள்ளாது நன்மையை நன்றெனக் கொண்டிருந்தவர் தீமையைத் தீதென்றிராது அதனைப் போக்குதற்காக அல்லற்பட்டு முயல்வது எற்றுக்கு என்றவாறாயிற்று.

இதனை அறிந்தவர்கள் வருவனவெல்லாம் இயல்பென்று கொள்ளவேண்டுமென்றது. 10

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால் (70)

பொருட்பாலாவது பொருளின் பகுதி என்று கொள்ளப்படும். பொருள் என்றது மக்களை யுடைத்தாகிய நிலம்; பகுதியாவது அந் நிலத்தை ஆளுதற்குரிய அரசனது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமாத்தியர் இலக்கணமும், அவர் செய்யும் திறன்களும், அவ்விருவரானும் உண்டாக்கப்படும் நாடும் அரணும் பொருளும் படையும் ஆகியவற்றினது திறன்களும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் துணையாகிய நட்பினது திறன்களும், அவ்வாறுண்டாகிய பொருட்கும் பொருளுடையார்க்கும் கேடு வரும் திறன்களும், அந்நிலத்து உண்டான மக்களது இயல்பும், அவர் பொருள் செய்யுமாறும் கூறுதல். இவையெல்லாம் அரசியலும் அமைச்சியலும் பொருளியலும் நட்பியலும் துன்பவியலும் குடியியலும் என அடங்கும். துன்பவியல் என்றது எற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினார் உளராலெனின் அவையெல்லாம் நட்கப்படாது என்னும் கருத்தினால் கூறினார்களாயினும், அவற்றிடைக் கிடந்த பேதைமை புல்லறிவாண்மை என்னும் அதிகாரங்கள் நட்கப்படாததும் நட்கப் படுவதுமன்றி ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணமாம் என்று கூறுதலால் துன்பவியல் என வேண்டும் என்க.

இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை ஈறாகக் கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரித்தாதலின் அரசியலென்றும், அமைச்சுமுதலாக அவையஞ்சாமை

பொருட்பால் (70)

யீறாகக்கூறிய அதிகாரங்கள் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரித்தாதலின் அமைச்சியலென்றும், நாடு முதலாகப் படைச்செருக்கீறாகக்கூறிய அதிகாரங்கள் ஐந்தும் பொருளாதலின் பொருளிய லென்றும், நட்பு முதலாகக் கூடாநட்பீறாகக் கூறிய அதிகாரங்கள் ஐந்தும் நட்பின் பகுதியவாதலின் நட்பியலென்றும், பேதைமை முதலாக மருந்தீறாகக் கூறிய அதிகாரங்கள் பன்னிரண்டுங் கேட்டுக்குக் காரணமாதலின் துன்பவியலென்றும், குடி முதலாகக் கயமையீறாகக் கூறிய அதிகாரங்கள் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியலென்றும் ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபதும்ஆறு பகுதியாயிற்று.

I. அரசியல் (25)

அவற்றுள் அரசியலாவது அரசர் செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினார் எனில் அது கூறிய அதிகாரம் இருபத்தைந்தினும் மூற்பட அரசன் உண்டாக்க வேண்டும் பொருளும் அவர்க்கு இன்றியமைய.........

I. இறைமாட்சி

இறைமாட்சியாவது இறைவனது தன்மை கூறுதல். இவ்வதிகாரத்துள் உரைக்கின்ற பொருள் அரசரை நோக்கிற்றாதலானும் அரசன் மக்களிற் சிறந்தானாதலானும் இவ்வதிகாரம் முன் கூறப்பட்டது.

381. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு

(இ-ள்) படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்று சொல்லப்பட்ட ஆறு பொருளினையும் உடையவன் அரசருள் ஏறுபோல்வான், (எ-று)

1. இறைமாட்சி

மண்டுக்குடி என்றது குடியுள்ள நாடு. இஃது அரசனுக்கு உண்டாகவேண்டுவன கூறிற்று. 1

382\. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(இ-ள்) அஞ்சாமையும் ஈகையும் அறிவுடைமையும் ஊக்க முடைமையுமென்னும் இந்நான்கு குணமும் ஒழியாமை வேந்தனுக் கியல்பு, (எ-று)

இவை நான்கும் இயற்கையாக வேண்டுமென்றது. 2

383\. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

(இ-ள்) மடியின்மையும் கல்வியுடைமையும் ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலுடைமையும் என்று சொல்லப்பட்ட இம்மூன்றும் நிலனாள்வார்தமக்கு நீங்காமல் வேண்டும் (எ-று)

இது முதலாகச் செயற்கைக் குணம் கூறுகின்றார். உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக்காணாது உண்மை ஆராய்ந்து துணிதல் ஒருதலையாக நிலனாள்பவர்க்கு வேண்டும் என்பதனாலும், அதுதான் கல்வியானல்லது ஆராய்தல் அரிதாகலானும், அக்கல்வி மடியின்மையானல்லது வாராது ஆதலானும், சிறப்பு நோக்கி முற்பட இம்முறையே கூறினார். 3

384\. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(இ-ள்) அறத்தினான் தப்பாமலொழுகி, அறனல்லாத காம வெகுளிமயக்க மென்னுமிவை கடிந்து, மறத்திற் றப்பாத மானத்தினையுமுடையவன் அரசனாவான். (எ-று)

மானமும் கடிய வேண்டுதலின் மறத்திற்றப்பாத மானம் வேண்டுமென்றார். இஃது ஒழுக்கமும் நிலைமையும் வேண்டு மென்றது. 4

1. இறைமாட்சி

385. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்.

(இ-ள்) காண்கைக்கு எளியனாய்க் கடுஞ்சொற் கூறுதலும் அல்லனாயின், அம்மன்னனை உலகத்தார் உயர்த்துக் கூறுவர், (எ-று)

இதுமன்னன் உலகத்தார்மாட்டு ஒழுகுந்திறன் கூறிற்று 5

386. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(இ-ள்) பொருள் பெறுவழி முயறலும், அதனை அழியாமல் ஈட்டலும், அதனைச் சோர்வுபடாமற் காத்தலும், காத்த அதனை வேண்டுவனவற்றுக்கு வகுத்தலும் வல்லவன் அரசனாவான். (எ-று)

பகுத்தல் ஆவது யானை குதிரை முதலிய படைக்குக் கொடுத்து அவையிற்றை யுண்டாக்குதலும் அரண் செய்யவும் படைக்கலன்கள் பண்ணுதல் முதலாயினவற்றுக்கும் கொடுத்தல். இவையெல்லாம் பண்டாரம் ஆதலின் ஒரு பொருளைப் பலவாக வகுத்தல் என்று இது பண்டாரங் கூட்டுமாறு கூறிற்று. 6

387. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி

(இ-ள்) கொடுத்தலும், தலைய்ளி செய்தலும், செங்கோன் மையும், குடிகளை ஓம்புதலுமென்று சொல்லப்படுகின்ற நான்கினையு முடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம், (எ-று)

கொடுத்தல் ஆவது தளர்ந்த குடிக்கு விதையும் எரு முதலி யனவும் கொடுத்தல்; அளித்தல் ஆவது அவரிடத்துக் கொள்ளுங் கடமையைத் தளர்ச்சி பார்த்து இட்டு வைத்துப்பின்பு முதலுண் டானால் கோடல்; செங்கோன்மை ஆவது கொள்ளும் முறையை ஒழியக் கொள்ளாமை; குடியோம்பல் ஆவது தளர்ந்த குடிக்கு இறை இழிப்பித்தல், இது குடிக்கு அரசன் செய்யுந்திறன் கூறிற்று. 7

1. இறைமாட்சி

388. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண்ட னைத்திவ் வுலகு.

(இ-ள்) இனிய சொல்லோடே கொடுத்துத் தலையளி செய்யவல்ல வனுக்குத் தன்னேவலாலே இவ்வுலகம் தான் கண்டாற் போலத் தன்வசத்தே கிடக்கும், (எ-று)

தலையளியாவது வரிசை கொடுத்தல். அவ்வரிசை பெற்றவர் அரசனுக்கு நல்லர் ஆதலானே. தாம் இருந்த இடம் எல்லாம் அரசன் இருந்தானாகக் கொண்டு இராசகாரியத்தைத் தப்பாமல் செய்வராதலால் தான் கண்டாலொக்கும் என்றது. இஃது அமாத்தியர்க்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று. 8

389. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ-ள்) குற்றஞ் செய்தாரை அதற்குச் செய்யும் முறைமை தப்பாமற் செய்து, எல்லாவுயிரையுங் காத்தல் செய்கின்ற அரசன், மக்களுக்கு நாயகனென்று எண்ணப்படும். (எ-று)

390. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(இ-ள்) தன் செவி வெறுக்கும்படியாகப் பிறர் செய்த குற்றங் களைக் கேட்டுவைத்தும், அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தனது குடைக்கீழே கிடக்கும் உலகு, (எ-று]

வேறு ஒரு நிழல் தேடாது என்றாயிற்று. இஃது அமாத்தியர் குற்றம் செய்தார் என்று பலரும் சொல்லுங்கால் பலவாற்றானும் பொறுக்க வேண்டும் என்றது. அன்றியும் மந்திரி புரோகிதர் அவனிடத்துச் சொல்லுஞ் சொற்களைப் பொறுக்க வேண்டும் என்பாருமுளர். 19

2. கல்வி

கல்வியாவது கல்வியாமாறும் அதனானாகிய பயனுங் கூறுதல். இது முதலாகப் பொருள் வரவு இயற்றுந் திறங் கூறுகின்றாராதலின், அஃதியற்றுங்கால் கல்வி முந்துறவேண்டும் என்று இது முன் கூறப்பட்டது.

391. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(இ-ள்) கற்கப்படுவனவற்றைக் குற்றமறக் கற்க; கற்றபின்பு அக்கல்விக்குத் தக வொழுக, (எ-று).

கல்வி பலவகைத்து அவை எல்லாவற்றுள்ளும் கற்கப்படுவனவற்றைக் கற்று அக்கல்வியிற் கூறினது தப்பாமற் செய்க. அது கல்வியாற் பயன் என்றவாறாயிற்று. இது கற்கவும் வேண்டும்; அதனைக் கடைபிடிக்கவும் வேண்டுமென்றது. 1

392. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(இ-ள்) எண்ணென்று சொல்லப்படுவனவும் ஒழிந்த எழுத்தென்று சொல்லப்படுவனவுமாகிய இவ்விரண்டு பொருளும் ஓர் உலகின்கண் வாழுமுயிர்களுக்குக் கண்ணென்று சொல்லுவர் அறிவார், (எ-று).

மேல் பொதுப்படக் கூறிய கல்வி பலவற்றுள்ளும் இவை யிரண்டும் சிறப்புடைத்து என்று கூறிற்று. உயிர் என்றது மக்களை, இவை அறிவார் மக்கள் ஆதலின். 2

393. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(இ-ள்) கண்ணுடையரென்று சொல்லப்படுவோர் கற்றோர்; கல்லாதார் முகத்திலே இரண்டு புண்ணுடையரென்று சொல்லப்படுவர், (எ-று).

2. கல்வி

அறிவு கல்வியின் கண்ணாதலான், அக்கல்வியில்லாதார் கண் புண்ணாயிற்று. இது மேற்கூறிய அதனை வலியுறுத்திற்று. 3

394. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(இ-ள்) அகழ்ந்த அளவு மணற்கேணி நீருண்டாம்; அது போல, மாந்தர்க்குக் கற்ற அளவும் அறிவுண்டாம், (எ-று).

இஃது அறிவுண்டாமென்றது. 4

395. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(இ-ள்) ஒருவற்கு ஒரு பிறப்பில் கற்ற கல்வி தானே எழு பிறப்பினும் ஏமமாதலை யுடைத்து, (எ-று).

கற்ற கல்வி தானென்று கூட்டுக. இது வாசனை தொடர்ந்து நன்னெறிக்கண் உய்க்குமென்றது. 5

396. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(இ-ள்) ஒருவனுக்குக் கேடில்லாத சீரிய பொருளாவது கல்வி; மற்றவை யெல்லாம் பொருளல்ல, (எ-று)

இது கல்வி அழியாத செல்வமென்றது. 6

397. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(இ-ள்) யாதோரிடத்துச் செல்லினும் அதுவே தனது நாடும் ஊரும் போலாம்; ஆதலால், ஒருவன் சாந்துணையுங் கல்லா தொழுகுதல் யாதினைக்கருதியோ, (எ-று).

இது கல்வி எல்லாரானுங் கைக்கொள்ளப்படுவதென்றது. 7

398. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

2. கல்வி

(இ-ள்) உவக்குமாறு கூடி அவர் நினைக்குமாறு பிரிதல் போலவே; கற்றோர் செய்யுந்தொழிலுமாம், (எ-று).

இஃது இன்பம் நுகரினும் வினை செய்யினும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியானாமென்றது. 8

399. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(இ-ள்) தாம் இன்புறுதற்கேதுவாகிய கல்வியை உலகம் நுகர்ந்து இன்புறுதல் கண்டால், அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர்கள், (எ-று).

அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின், அதுவும் கல்வியானே வருமென்றது. 9

400. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(இ-ள்) பொருளுடையார் முன்பு பொருளில்லாதார் நிற்குமாறுபோலத் தாழ்ந்தும் கற்றாரிடத்தராவர் கல்லாதவர், (எ-று).

இது எல்லாரினுந் தலைவனாமென்றது. 10

---

3. கல்லாமை

கல்லாமையாவது கல்வியில்லாமையால் உளதாகுங் குற்றங் கூறுதல், மேற்கல்வி வேண்டுமென்றார் அஃதிலார்க்கு உளதாகுங் குற்றமென்னையென்றார்க்குக் கூறியதாதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

3. கல்லாமை

(இ-ள்) அரங்கமின்றி வட்டாடினாற் போலும்; நிரம்பிய நூல்களைக் கற்றலின்றி வார்த்தை சொல்லுதல், (எ-று).

அரங்கு-கோட்டம்; வட்டாடுதல்-உண்டை யுருட்டுதல்; கோட்டிகொளல்-"புல்லா வெழுத்திற் பொருளில், வறுங்கோட்டி" என்றாற்போல. இலக்கணமறியாதான் வார்த்தை சொல்லின், தப்பு மென்றது. 1

402. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதான் பெண்காமுற் றற்று.

(இ-ள்) கல்வியில்லாதான் சொல்லுதற்கு ஆசைப்படுதல், இரண்டு முலையுமில்லாதாள் பெண்மைக்குக்காமுற்றாற்போலும், (எ-று)

இது தன்னாசையல்லது பிறர்க்குப் பொருந்தாது; சொன்னாலும் விரும்புவாரில்லையென்றது. 2

403. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(இ-ள்) கல்லாதவரும் ஓரிடத்து மிகவும் நல்லராவார்கள்; கற்றவர்கள் முன்பு உரையாடா திருக்கக்கூடுமாயின், (எ-று).

சொல்லாதொழிய அறிவாரில்லையாம் என்றவாறாயிற்று. கல்லாதார்க்கு உபாயம் இது வென்றது. 3

404. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்) கல்லாதானது ஒண்மை மிகவும் நன்றாயிருப்பினும், அதனை ஒண்மையாகக் கொள்ளார் அறிவுடையார், (எ-று)

ஒண்மை சாமர்த்தியம்; அறிவெனினும் அமையும். இது ஒள்ளியாராயினும் மதிக்கப்படாரென்றது. 4

405. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

3. கல்லாமை

(இ-ள்) கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி யுரை யாட மறையும், (எ-று).

இது, கல்லாதார்க்குப் பெருமை இல்லை என்றது.

406. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

(இ-ள்) உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும், கல்வியில் லாதார் இழிகுலத்துப் பிறந்த கற்றாரோடு ஒத்த பெருமையிலர்,

இது குலமுடையராயினும் மதிக்கப்படாரென்றது. 6

407. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

(இ-ள்) நுண்ணிதாய் மாட்சிமைப்பட ஆராய்ச்சியையுடைய கல்வியில்லாதான் அழகு, மண்ணினானே நன்றாகச் செய்த பாவை யினது அழகை யொக்கும், (எ-று)

அறிவிற்கு மாட்சியாவது பொருளைக் கடிதிற்காண்டலும். மறவாமையும் முதலாயின. இஃது அழகியராயினும் மதிக்கப்படா ரென்றது. 7

408. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(இ-ள்) உளரென்னும் அளவினை யுடையாரல்லது, பயன் படாத களர் நிலத்தை யொப்பர் கல்லாதவர், (எ-று).

இது பிறர்க்குப் பயன்படாரென்றது. 8

409. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

(இ-ள்) நல்லார்மாட்டு உண்டாகிய வறுமை போலப், பிறர்க்கு இன்னாமையைச் செய்யும்; கல்லாதார்மாட்டு உண்டாகிய செல்வமும், (எ-று).

3. கல்லாமை

இது செல்வமுண்டாயின், பிறரைத் துன்பமுறுவிப்ப
தென்றது. 9

410. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(இ-ள்) விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறுபாடுடையர்; விளங்கின நூல்களைக் கற்றவர்களோடு கல்லாதவர், (எ-று).

இது கல்லாதவர் விலங்கென்றது. 10

4. கேள்வி

கேள்வியாவது கேள்வியினானாய பயன் கூறுதல். நூல்களைக் கற்கமாட்டாதார் அவற்றைக் கற்றார் மாட்டுக் கேட்டலும் அறிவுக்குக் காரணமா மென்பதனால், அதன்பின் கூறப்பட்டது.

411. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவன்
ஒற்கத்தினூற்றாந்[1] துணை.

(இ-ள்) கற்கமாட்டானாயினுங் கற்றோர்மாட்டே கேட்க; அக்கேள்வி ஒருவன் தளர்ச்சிக்கண் தாங்குவதொரு துணையாம், (எ-று).

இது கேள்வி வேண்டுமென்றது. 1

412. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(இ-ள்) செவிக்கு உணவாகிய கேள்வி யில்லாதபொழுது வயிற்றுக்குச் சிறிது உணவு கொடுக்கத் தகும், (எ-று).

சிறிதுணவு என்றார்; பெருகவுண்ணின் கேள்வியை விரும்பாது காம நுகர்ச்சியை விரும்புமாதலான். மேல் கேள்வி வேண்டும்

1. 'ஒற்கத்துக் கூற்றாந்' என்பது மணக்பாடம்.

4. கேள்வி

என்றார்; இஃது ஒருகால் கேட்டுவிட அமையுமோ என்று ஐயுற்றார்க்கு எல்லாக் காலமும் கேட்கவேண்டுமென்று கூறப்பட்டது. 2

413. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ-ள்) யாதொன்றாயினும் நல்ல நூல்களைக் கேட்க; அக் கேள்வி அவ்வளவிற்றே யாயினும், நிரம்பின பெருமையைத்தரும், (எ-று).

இஃது எல்லாக்காலமுங் கேட்டிலனாயினும், கேட்குங்கால் நல்லது கேட்க வேண்டுமென்றது. 3

414. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ-ள்) வழுக்குத லுண்டாயின விடத்து உதவும் ஊன்றுகோல் போலும்; ஒழுக்கமுடையார் கூறுஞ் சொற்கள், (எ-று)

இது, கேட்பது ஒழுக்கமுடையார் மாட்டென்பது கூறிற்று. 4

415 நுணங்கிய கேள்விய ரல்லவர் வணங்கிய
வாயின ராத லரிது.

(இ-ள்) நுண்ணிதாகிய கேள்வியை யுடையரல்லாதார், தாழ்ந்த சொற்கூறும் நாவுடையராதல் இல்லை, (எ-று).

இது கேள்வியுடையார் மிகை சொல்லாரென்றது. 5

416. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்
தீண்டிய கேள்வி யவர். [துணர்ந்

(இ-ள்) ஒரு பொருளைத் தப்ப உணர்ந்தாலும், அறியாமையாயின சொல்லார்; ஆராய்ந்துணர்ந்த நிரம்பிய கேள்வியையுடையார், (எ-று).

இது, கேட்டறிந்தார் அறியாமை சொல்லாரென்றது. 6

4. கேள்வி

417. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(இ-ள்) செல்வத்துள் வைத்துச் செல்வமாவது, செவியுணர் வுடைமையாகிய செல்வம்; பயன்படுமிடத்து மற்றுள்ள செல்வம் எல்லாவற்றினும் தலையாம் ஆகலான், (எ-று). 7

418 செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

(இ-ள்) செவிக்கு உணவு போன்ற கேள்வியை யுடையவர் நிலத்தின் கண்ணே யிருப்பினும், அவியை யுணவாக வுடைய தேவரோடு ஒப்பர், (எ-று).

இஃது, எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவரென்றது. 8

419. செவியுற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(இ-ள்) செவியால் நுகரும் இன்பத்தை யறியாது வாயால் நுகரும் இன்பத்தையறியும் மாக்கள் செத்தால் வருந் தீமை யாது? வாழ்ந்தால் வரும் நன்மையாது? உலகத்தார்க்கு, (எ-று).

இது கேள்வியில்லாதார் பிறர்க்குப் பயன் படாரென்றது. 9

420. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(இ-ள்) ஓசை மாத்திரம் கேட்டனவாயின், அதுவுங்கேளாத செவி போலும்; நல்லோர் கூறுஞ் சொற்களால் துளைக்கப்படாத செவி, (எ-று).

இது கேள்வியில்லாதார் செவிடரென்றது. 10

5. அறிவுடைமை

அறிவுடைமையாவது அறிவாவது இன்னதென்பதூஉம் அத னானாகிய பயனும் கூறுதல். இது கல்வியும் கேள்வியுமுடையராயி னும் கேட்ட பொருளையுள்ளவாறு உணர்ந்தறிதல் வேண்டுமாத லின், அதன்பின் கூறப்பட்டது.

421. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

(இ-ள்) அறிவினை யுடையயார் யாதொன்றும் இலராயினும் எல்லாமுடையர்; அறிவிலாதார் எல்லாப் பொருளும் உடையரா யினும் (ஒரு பொருளும்) இலர், (எ-று).

ஆதலான் அறிவுடைமை வேண்டுமென்றது. 1

422. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(இ-ள்) யாதொருவாற்றா லொழுகுவது உலகம், அதனோடு கூடத்தானும் அவ்வாற்றா னொழுகுதல் அறிவாவது, (எ-று).

அறிவு என்பது எத்தன்மைத்து என்றார்க்கு, முற்பட உயர்ந் தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்று கூறுப்பட்டது. 2

423. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(இ-ள்) ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந் தினது; அதனை நீர்ப்பூப்போல மலர்தலுங் குவிதலுமின்றி யொரு தன்மையாகச் செலுத்துதல் அறிவு ஆவது, (எ-று).

இஃது உயர்ந்தாரோடு, நட்புப் பண்ணுதலும் அறிவென்றது 3

424. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

(இ-ள்) யாதொரு பொருளை யாவர் சிலர் சொல்ல கேட்பி னும், அப்பொருளினது உண்மையை யாராய்வது அறிவாவது, (எ-று).

5. அறிவுடைமை

யாவர் சிலர் நட்டாராயினும் பகைவராயினும் இது கேட்டபொற்றாற் றெள்ளியராய் ஆராய்ந்து துணித லறி வென்றது. 4

425. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(இ-ள்) அறிதற்கரிய பொருளவாகிய சொற்களை எளிய பொருளாம்படி பிறரியையச் சொல்லிப் பிறர் சொல்லுஞ் சொற்களின் நுண்ணியதாய பொருளை அவர் சொல்லுமாற்றானே காண்பது அறிவாவது, (எ-று).

இது சொற்பொருள் காண்ட லறிவென்றது.

426. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ-ள்) உள்ளஞ் சென்ற விடத்தே உடம்பையுஞ் செல்ல விடாது, தீமையை நீக்கி, நன்மைப்பகுதியிலே செலுத்துவது அறிவாவது, (எ-று).

இது காமநுகர்ச்சியின்கண் பழியும் பாவமும் பொருட்கேடும் வாராமற் செலுத்துவது அறிவென்றது. 6

427. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(இ-ள்) அஞ்சத் தகுவதனை அஞ்சாதொழிதல் ஒருவற்கு அறிவின்மையாவது; அஞ்சத்தகுவதனை அஞ்சுதல் அறிவார் தொழில் ஆவது, (எ-று).

மேல் அஞ்சாமை வேண்டுமென்றாராயினும், ஈண்டு அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்தகுல் அறிவென்றார். 7

428. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

(இ-ள்) அறிவுடையாராவார் பிற்பயக்குமது அறிவார்; அறிவில்லாதாராவார் அதனை யறியாதவர், (எ-று).

5. அறிவுடைமை

இது மேற்சொல்லிச் சொல்லாதனவெல்லாம் தொகுத்துக் கூறிற்று இத்துணையும் அறிவிலக்கணம் கூறப்பட்டது. 8

429. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
உள்ளழிக்க லாகா அரண்.

(இ-ள்) ஒருவனுக்கு குற்றங்காக்குங் கருவியாவது அறிவு; பகைவரால் உட்புகுந்து அழிக்கலாகா அரணும் அதுதானே, (எ-று)

இது தனக்குள்ள குற்றத்தை மறைக்குமென்றும், பிறரால் வருந்தீமையைக் காக்குமென்றும், அறிவாற் பயன் கூறிற்று. 9

430. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்,

(இ-ள்) துன்பம் வருவதற்கு முன்னே வருமென்று நினைத்துக் காக்கும் அறிவையுடையார்க்கு நடுங்கவருவதொரு துன்பமும் இல்லை, (எ-று).

முன்னை வினையால் வருந் துன்பமும் முற்பட்டுக் காக்கின், கடிதாக வாராதென்றது. 10

6. குற்றங்கடிதல்

குற்றங்கடிதலாவது காமக் குரோத லோப மதமானம் உவகை என்னும் ஆறு குற்றங் கடிந்து ஒழுகுதல், (இஃது அறிவுடையாராயினும் குற்றங் கடிதல்) வேண்டுமென்று அதன் பின் கூறப்பட்டது

431. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை.

(இ-ள்) தமக்குப் பொருளாகக் குற்றம் வாராமற்காக்க; அக்குற்றந்தானே இறுதியைத் தரும் பகையும் ஆதலான், (எ-று).

இது குற்றங்கடிய வேண்டுமென்றது. 1

6. குற்றங்கடிதல்

432. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(இ-ள்) பிறர்மனை நயத்தலும், வெகுளியும், சிறியார் செய்வன செய்தொழுகுதலும் இல்லாதார் ஆக்கம் தலையெடுக்கும் நீர்மையையுடைத்து (எ-று).

பிறர்மனை நயத்தல் செருக்கினால் வருதலின், செருக்கு என்றார். சினம் குரோதத்தால் வருதல் சிறியார் செய்வன செய்தலாவது காம நுகர்ச்சியும், சூதும் கள்ளும் வேட்டையும் முதலானவற்றின் மிக்கொழுதல். இதனை வடநூலார் இந்திரிய சயமின்மை என்பர். இவை பெரியரால் கடியப் படுதலின் சிறுமை என்றார். இவை மூன்று குற்றமு மில்லாதார் ஆக்க முடையார் என்றதனாலே, இவை உடையார்க்குக் கேடுவரும் என்ற வாறாயிற்று. பிறர்மனை நயத்தலாற் கெட்டான் இராவணன். வெகுளியாற் கெட்டான் சனமேசயன். நுகர்ச்சியாற் கெட்டான் சச்சந்தன். **2**

433. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு.

(இ-ள்) உலோபமும், நன்மையைக் கடந்த மானமும், நன்மையைத் தாரா மகிழ்ச்சியுமாகிய விம்மூன்றும் அரசர்க்குக் குற்றமாம் (எ-று).

இது பொதுப்படக்கூறாது இறைக்கு என்றமையால் பெரும்பான்மையும் அரசர்க்கே வேண்டுமென்பது கூறிற்று. உலோபம் இரண்டு வகைத்து; தனக்கு முறைமையல்லாத பொருளை விரும்புதலும் உண்டானபொருளைவிடாமையும். அஃதாமாறு பின்பே கூறப்படும். மாண்பிறந்த மானமாவது, தொடங்கின வினை நன்மை பயவாதாயினும் அதனை விடாதொழிதல். இதனாற் கெட்டான் துரியோதனன். மாணா உவகையாவது எளியாரையடர்க்கையால் பிறந்ததொரு மகிழ்ச்சியால் வலியார் மாட்டும் செல்லுதல். இதனாற் கெட்டான் வாதாபி 3

434. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தின்றிக் கெடும்.

6. குற்றங்கடிதல்

(இ-ள்) செய்யும் முறைமை செய்யாதே ஈட்டுதற்கு விரும்பினவனும் அவனது செல்வமும் உய்யும் பகுதியின்றிக் கெடும்.

'கெடும்' என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக. இது, பிறர் பொருளை விரும்பினால் வரும் குற்றம் கூறிற்று. இதனாற் கெட்டான் புருரவா என்பது. 4

435. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(இ-ள்) கூடின பொருளை விடாமையாகிய உலோபம் யாதொன்றினுள்ளும் எண்ணப்படுவதொன்றன்று, (எ-று).

இஃது தனக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் உலோபம் ஒரு பொருளாக மதிக்கப்படாதென்றது. 5

436. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(இ-ள்) எல்லா நாளுந் தன்னைப் பெரியனாக வியவாதொழிக; வியந்தானாயினும், அவ்வியப்பினானே நன்மை பயவாத வினையைச் செய்யாதொழிக, (எ-று).

செய்யிற் கேடுதருமென்றவாறாயிற்று. இதனை மதமென்ப. இதனாற் கெட்டான் கார்த்தவீரியார்ச்சுனன். 6

437. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(இ-ள்) காதலிக்கப்பட்ட யாவற்றின்மேற் செல்லுங் காதலைப் பிறரறியாமற் செலுத்துவனாயின், பகைவர் இவனைக் கொள்ளுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன் மாட்டுச் செல்லாது அயலாம், (எ-று).

நூலென்பது அவ்வேதிலாரது சித்தம்; அதனாலேயே சிந்தித்தலின் நூல் என்றார். இது மேற்கூறிய குற்றமேயன்றி அறம் பொருளின்பத்துக்கு மாறாகாத பொருள்கள் மேற் செல்லும் ஆசை

யைப்பிறர் அறியின் அதுவே வாயிலாக வஞ்சிப்பர் ஆதலான் அக் காதலை அடக்காமையும் குற்றம் மென்று கூறப்பட்டது. ஒத்து பாயைப் பானை பிடிக்கப் போய்ச் சிறைப்பட்டான். 7

438. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(இ-ள்) துன்பம் வருவதன்முன், அதற்குத்தக்கது அறிந்து காவல் செய்யாதஅரசனது செல்வம். எரியின்முன்னர்க் கிடந்த வைத்திரள் போலக் கெடும், (எ-று).

இது முந்துற்றுக் காவல் செய்யவேண்டுவன செய்யாமையும் குற்ற மென்றது. 8

439. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

(இ-ள்) தனக்குள்ள குற்றத்தை நீக்கிப் பிறர்மாட்டுள்ள குற்றத்தை ஆராயவல்லவனாயின் அரசனுக்கு என்ன குற்றமுள தாம? (எ-று).

இது தன்மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலேயன்றிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தையும் கடிய வேண்டுமென்றது. 9

440. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

(இ-ள்) தினையளவு குற்றம் வந்ததாயினும், அதனை அவ் வளவிற்றென்று [இகழாது பனையளவாகக் கொள்வர் பழிக்கு நாணுவார்]* (எ-று).

மேற்கூறியவேயன்றி உளதாகும் குற்றமும் கடிய வேண்டு மென்றது. 10

---

* மணக் குடவருரை நோக்கி இருதலைப் பகரத்தின் கண் உள்ளவை சேர்க்கப் பெற்றன

7. பெரியாரைத் துணைக் கோடல்.

பெரியாரைத் துணைக் கோடலாவது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதல். அரசன் குற்றமற்றானாயினும், தன்னின் முதிர்ந்த அறிவுடையாரைத் துணையாகக் கொண்டு வினைசெய்ய வேண்டுதலின், இஃது அதன்பின் கூறப்பட்டது.

441. அரியவற்று ளெல்லாமரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(இ-ள்) செய்தற்கரியன வெல்லாவற்றினும் செய்தல் அரிது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரை விரும்பித் தமக்குச் சுற்றமாகக் கூட்டிக்கொள்ளுதல், (எ-று).

பெரியாரென்றது மந்திரி புரோகிதரை; அவரைத் தேடிக் கூட்டுதலரிதென்றது. 1

442. உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியாரைப் பேணிக் கொளல்.

(இ-ள்) அரசர்க்குற்ற நோயை விடுவித்துப் பின்பு துன்பமுறாமல் முன்பே காக்கவல்ல தன்மையுடையாரை விரும்பிக்கொள்க (எ-று).

மேல் பெரியாரென்று பொதுப்படக் கூறினார், இது மந்திரியைக் கூட்டுமாறு கூறிற்று. 2

443. அறனறிந்து மூத்தவறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(இ-ள்) அறத்தின் பாடறிந்து முதிர்ந்த அறிவுடையாரது கேண்மையை அவரவர் செய்தியாகிய திறன்களையறிந்து ஆராய்ந்து கொள்க. (எ-று).

இது புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று. 3

444. சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

7. பெரியாரைத் துணைக்கோடல்

(இ-ள்) அரசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொள்ள நினைப்பாரையுஞ் சூழ்ச்சியாற் கொள்ள வல்லனாதல்; காரியமெண்ணவல்லார் தனக்குக் கண்ணாக வொழுகலானே,, (எ-று).

பகைவர் சூழ்ச்சியால் தேற்றாமையால் அவரைத்தோள் வலியாற் கோடலரிதாம் ஆகலால் சூழ்வார் கண்ணாக ஒழுகவேண்டும் என்றது. 4

445. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

(இ-ள்) தகுதியுடையார்க் கினவனாய்த் தானும் அவரோடொக்க ஒழுக வல்லானைப் பகைவர் செய்யக் கிடந்ததொரு நெறியில்லை, (எ-று).

தகுதியுடையார்க்கு இனவனாதலாவது, தன்னோடொத்த வரிசை அவர்க்கு. உண்டாக்குதலும், தன்னைக்கண்டாற்போல அவரை மதிக்கப்பண்ணுதலும். ஒக்க ஒழுகலாவது, ஒத்தசூழ்ச்சியுடையனாதல்.

இஃது இவனைப்பகைவரால் வெல்லவொண்ணாதென்றது. 5

446. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்

(இ-ள்) குற்றங் கண்டால் கழறுந் தன்மையுடையாரைத் தமக்குத் தமராகக்கொள்ள வல்லாரைக் கெடுக்குந் தகைமை யுடையர் உலகத்து யாவர், (எ-று).

இது கேடில்லை யென்றது. இதனானும் தம்மில் பெரியராக மதித்து வைக்கப்படும் என்று கண்டு கொள்க. 6

447. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

(இ-ள்) முதலில்லாதார்க்கு இலாபமில்லையானாற் போல, தாங்குதலாகிய சார்பு இல்லாதார்க்கு அரசு நிலை நிற்றல் இல்லை. (எ-று).

7. பெரியாரைத் துணைக்கோடல்

பெரியாரைத் துணையாகக் கொள்ளாதார்க்கு வரும் குற்றம் கூறுகின்றா ராதலின், முற்படப் பொருட்கேடுண்டாம் என்று கூறினார். 7

448. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்[1]

(இ-ள்) பலரோடு பகைகொண்டால் எவ்வளவு துன்பமுறும் அதனினும் பத்துமடங்கு துன்பமுறும்; பெரியாரைத் துணையாகக் கொள்ளாதொழியின், (எ-று).

இஃது இடுக்கண் வருமென்றது.

449. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

(இ-ள்) கழறுவாரை யில்லாத காவலில்லாத அரசன் தன்னைப் பகைவராய் வந்து கெடுப்பார் இல்லையாயினும், தான் வேண்டியவாறொழுகிக்கெடும்

இஃது உயிர்க்குக் கேடு வருமென்றது*. 9

450. தம்மிற் பெரியார் தமராவொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(இ-ள்) தம்மின் மிக்க அறிவுடையார் தமக்குத் தமராக ஒழுகுதல்; வலியானவை யெல்லாவற்றினும் தலையானவலி, (எ-று).

இவர்கள் உண்டாகவே யானை குதிரைபடையினால் உண்டான வலியினும் மிகவலியுடையனாவன் என்றது.

(பிரதிபேதம்) தபோதனர் தம்மோடு நட்பா யொழுகுதல் தமக்கு உள்ள வரிசை எல்லா வற்றினும் தலை, (எ-று). (தி. பொ. பிள்ளை பதிப்பு) 10

---

1. 'விடின்' என்பது மணக்பாடம்.

* இது மணக்குடவருரையிற் கண்டது.

8. சிற்றினஞ் சேராமை

சிற்றினஞ் சேராமையாவது காமுகரும் சூதாடிகளும் பெண்டிரும் முதலாயினாரைச் சேர்ந்தொழுகினால் வருங்குற்றமும் சேராமையால் வரும் நன்மையும் கூறுதல். பெரியார் துணையானாலும் சிறியாரினத்தராய் ஒழுகின், அது தீமை பயக்குமென்று அதன்பின் கூறப்பட்டது.

451. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(இ-ள்) சிற்றினத்தாரை யஞ்சுவர் பெரியார்; சிறியார் அதனைச் சுற்றமாகக் கொண்டுவிடுவர், (எ-று).

இது பெருமை வேண்டுவார் கொள்ளாரென்றது. 1

452. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉமில்.

(இ-ள்) நல்லினத்தின் மிக்க துணையாயிருப்பதும் இல்லை தீயினத்தின் மிக்க அல்லற்படுப்பதும் இல்லை, (எ-று).

இது சேராமைக்குக் காரணங் கூறிற்று. 2

453. மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னானெனப்படுஞ் சொல்.

(இ-ள்) மாந்தர்க்கு அறிவு மனத்தினானே யுண்டாம்; ஆயினும் தான் சேர்ந்த இனத்தினானே இனியரல்லர் என்று பிறர் பழிக்கப்படுஞ் சொல்உண்டாம், (எ-று).

இது பிறரால் பழிக்கப்படுவரென்றது. 3

454, நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(இ-ள்) நிலத்தின் இயல்பாலே நீர் நிறம் திரிந்து நிலத்தின் நிறம் ஆகுமாறு போல மாந்தர்க்குத் தமக்கு இயல்பாகிய அறிவும் தாம் சேர்ந்த இனத்திற்கு இயல்பாகிய அறிவும்ஆம்,

8. சிற்றினஞ் சேராமை

நா திரிந்து ஆகும் அற்று என்று கூட்டுக. இது தமது அறிவு திரியும் என்றது. 4

455. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

(இ-ள்) ஒருவனுக்கு உண்டாகும் அறிவு முற்பட மனத்துள்ளது போலத் தோன்றித் தான் சேர்ந்த இனத்தினுண்டான அறிவாகும், (எ-று).

மேல் மனத்தினானே அறிவுண்டாமென்றார். அதன்பின் இனத்தினானே திரியும் என்றார். அது மாறுபட்டாற்போலப் பட்டது நோக்கி இது கூறப்பட்டது. இத்துணையும் சேர்ந்ததனால் வரும் குற்றம் கூறிற்று. 5

456. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்

(இ-ள்) மனம் நன்றாதலும் செய்யும்வினை நன்றாதலும் இரண்டும், இனம் நன்றாதலைப் பற்றி வரும், (எ-று).

இனிச் சேராமையான் வரும் நன்மை கூறுவார் இவையிரண்டும் நன்றாம் என்று கூறினார். 6

457. மனந்தூயார்க் கெச்ச நன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

(இ-ள்) மனநல்லார்க்குத் தமக்குப் பின்பு நிற்கும் மக்கள் முதலான பொருள்கள் நல்லவாம்; இன நல்லார்க்கு நன்றாகாத தொருவினையும் இல்லை, (எ-று)

இது மேலதற்குப் பயன் கூறிற்று. 7

458. மனநலத்தி னாகு மறுமையஃது[1]
மினநலத்தி னேமாப் புடைத்து.

(இ-ள்) மன நன்மையானே மறுமைப் பயன் நன்றாகும்; இம் மனத்தின் நன்மையும் இன நன்மையாலே தீத்தொழிலிற் செல்லாமைக் காந்தலையுடைத்தாம் (எ-று).

---

1. "மறுமை மற்றஃது" என்பது மணக். பாடம்

இது மறுமைக்குத் துணையாமென்றது. 8

459 மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(இ-ள்) மன நன்மை மிகவுமுடையவராயினும், இன நன்மை யுடைமை சான்றோர்க்குக் காவலாதலையுடைத்து, (எ-று).

இஃது இனம் நன்றல்லாவாயின் பிறரா லிகழப்படுவராதலான், இனநலம் இகழ்ச்சி வாராமற் காக்குமென்றது. 9

460. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

(இ-ள்) மனநன்மை நிலைபெற்ற உயிர்க்கு ஆக்கமாம்; அது போல, இன நன்மை எல்லாவற்றானும் வரும் புகழினைத் தரும், (எ-று).

இஃது எல்லாப் புகழுந் தருமென்றது. 10

9. தெரிந்து செயல்வகை

தெரிந்து செயல் வகையாவது வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்யவேண்டுமென்பது கூறுதல். அறிவுடையவனாய்க் குற்றங் கடித்து, மந்திரி புரோகிதரைத் துணையாகக் கொண்டு சிற்றினஞ் சேராதொழுகும் அரசனும் வினை செய்யுங்காலத்து முன்பே எண்ணிச் செய்யவேண்டுதலின், அவையிற்றின் பின் கூறப்பட்டது.

461. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

(இ-ள்) அமாத்தியர் பலருள்ளும் ஆராய்ந்து கூட்டிக்கொள்ளப்பட்ட மந்திரிகளாகிய இனத்தோடே கூடச் செய்யும் வினையை ஆராய்ந்து, அதனைச் செய்யுமாறு எண்ணிச் செய்ய வல்லவனுக்குப் பெறுதற்கு அரியதொரு பொருளுமில்லை, (எ-று).

9 தெரிந்து செயல்வகை

இனம் என்றார் மந்திரிகள் பலர் வேண்டும் என்றற்கு. இஃது எண்ணுதற்காவாரையும் கூறி, எண்ணிச் செய்ய வேண்டும் என்பதும் கூறிற்று. 2

462. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(இ-ள்) ஆராய்ந்தறிதலில்லாத வினையைச் செய்யத் தொடங்கார், இகழ்ச்சியாகிய குற்றப்பாட்டிற்கு அஞ்சுபவர், (எ-று).

ஒருவினை செய்ய நினைக்கும்காலத்து நின்றநிலை அறிய வேண்டும் என்றது. 2

463 எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு

(இ-ள்) ஒருவினையைச் செய்யத் [துணிவதன் முன்னே அதனால் வரும் பயனை எண்ணிப் பின்பு செய்யத்]* துணிக; துணிந்தபின் எண்ணுவோமென்றல் தப்பாமாதலான், (எ-று).

காரியம் நின்ற நிலை அறிந்தாலும் எண்ணாது துணிதலாகாது என்றது. 3

464. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(இ-ள்) வினை செய்து முடித்தற்கு அழியும் பொருளும், அது செய்து முடித்தாலுளதாகும் பொருளும், ஆய்நின்று அப்பொருளினாற் பின்புண்டாய் வரும் பயனும் எண்ணிப் பின்பு வினை செய்ய வேண்டும், (எ-று).

வழி பயக்கும் ஊதியமாவது முன்பு நன்றாகத் தோற்றிப் பின்புத் தீதாகாத வினை, இது முதலாக எண்ணுமாறு கூறுகின்றாராதலின் முற்பட இவை மூன்றும் எண்ணுதல் வேண்டும் என்று கூறிற்று. 4

---

* இருதலைப் பகரங்கட்குள் இருப்பவை மணக்குடவருரை நோக்கிச் சேர்த்தவையாம்.

9. தெரிந்து செயல்வகை

465. ஆக்கங் கருதி முதலி ழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடையார்

(இ-ள்) தமக்கு ஆக்கம் உண்டாகவேண்டி, முன்புண்டான முதலும் இழக்கவரும் வினையைச் செய்யார் அறிவுடையார், (எ-று)

மேல் பிற்பயக்கவேண்டும் வினை செய்ய வேண்டும் என்றார்; இது பிற்பயவாதவினை செய்யலாகாதென்றது. 5

466. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(இ-ள்) முடியுமாயினும், பிறராலிகழப்படாதவற்றை எண்ணிச் செய்தல் வேண்டும்; தமக்குத் தகாத செய்தியை யுலகத்தார் கொள்ளாராதலான், (எ-று).

இது பிறராலிகழப்படாதன செய்யவேண்டு மென்றது. 6

467 நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

(இ-ள்) நன்மை செய்யுமிடத்தினும் குற்றம் வரும்; அவரவர் குணமறிந்து செய்யாத விடத்து, (எ-று).

இதுவுமோரெண்ணம் கூறிற்று. 7

468. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(இ-ள்) செய்யத்தகாதனவற்றைச் செய்ததனாலும் கெடும், செய்யத் தகுவனவற்றைச் செய்யாமையாலும் கெடும், (எ-று).

இது மேற்கூறாதனவெல்லாம் தொகுத்துக் கூறிற்று. 8

469. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(இ-ள்) மேற்கூறிய நெறியினாலே முயலாத பொருள், பலர் நின்று காப்பினும் குற்றப்படும், (எ-று).

எண்ணிச் செய்யாதது தப்பு மென்றது 9

9. தெரிந்து செயல்வகை

470. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(இ-ள்) மேற்சொன்னவகை எல்லாம் போக்கறச் சூழாதே போர் கருதி யெழுதல், பகைவராகிய விதையை விளை நிலத்தின் கண்ணே இடுவதொரு நெறி, (எ-று).

இது பகைவர்க்கு ஆக்க முண்டாமென்றது. 10

---

10. வலியறிதல்

வலியறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல். செய்யத்தக்க வினையை யெண்ணினாலும் அதனைச் செய்து முடிக்குங்கால் வலியறிந்து செய்யவேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

471. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(இ-ள்) செய்யும் வினையினது வலியும், தனக்குண்டான வலியும், பகைவனது வலியும், தனக்கும் பகைவர்க்கும் துணையாயினார் வலியும் எண்ணிப் பின்பு வினை செய்க. (எ-று)

இது வலியறியும் இடம் கூறிற்று. 1

472. உடைத்தும் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(இ-ள்) தம்முடைய வலியறியாது மனமிகுதியாலே வினை செய்யத் தொடங்கி, அது முடிவதன் முன்னே கெட்டார் பலர்,

இது வலியறியாதார் கெடுவரென்றது. 2

10. வலியறிதல்

473. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்

தனக்கியலும் திறம் இதுவென அறிக; அறிந்தபின் அவ்வளவிலே நின்று ஒழுகுவனாயின் அவனுக்கியலாததில்லை. 3

இது வலியறிந்தாலும் அமைந்தொழுக வேண்டுமென்றது.

474. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(இ-ள்) அமைவுடையனாயொழுகுதலும் இன்றித், தன்வலியளவும் அறியாதே, தன்னை மதித்தவன் விரைந்து கெடுவன், (எ-று)

மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவரென்றது. 4

475. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(இ-ள்) ஒரு மரத்தின் நுனிக்கொம்பி லேறியவன் தன்னளவறிந்து வைத்துப் பின்னும் மேலே செல்வனாயின், அது தன்னுயிர்க்கு இறுதியாகிவிடும், (எ-று).

இஃது அரசன் தன்னாற் செல்லலாமளவும் சென்றால் பின்பு மீள வேண்டுமென்றது. இதுவும் ஒரு வலியறிதல். 5

476 பீலிபெய்சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(இ-ள்) பீலியையடைந்த சகடமும் அச்சுமுறியும்; அப்பீலியை மிகவும் நெருங்க இடின், (எ-று).

அரண் வலிது என்றார்க்குப் படைமிகின் அரண் நில்லாதென்றற்குக் கூறிற்று எனவே பகைவர் மேலே நெருங்கிச் செல்லினும் அளவறியாது செல்லின் கெடும் இடனுமுண்டாம். என்றது, 6

10. வலியறித்தல்

477. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

(இ-ள்) வருவாய் அளவறிந்து கொடுக்க; பொருளுண்டாக்கும் * நெறி அது வாதலான், (எ-று).

இனிப்பொருளினது வலியறிதல் கூறுகின்றாராதலின் இதற்குத் தக்க செலவுசெய்ய வேண்டுமென்று கூறிற்று. 7

478. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும்.

(இ-ள்) தன் வருவாய் அளவறிந்து வாழாதான் வாழ்க்கைகள் உளபோலத் தோன்றி, அதன்பின் இல்லையாகித் தோன்றாது கெடும், (எ-று).

தோன்றாக்கெடும் என்பது பின்பும் ஆக்கம் இன்றிப்போகுமென்றது. இது மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவரென்றது. 8

479. ஆகா றளவிட் டிதாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை

(இ-ள்) பொருள் வரும் வழியளவு சிறிதாயினும் கேடில்லையாம்; அது போம்வழி போகாதாயின், (எ-று)

இது முதலுக்குச் செலவு குறையவேண்டுமென்றது. 9

480. உளவரை தூக்காத வொப்புர வாளன்
வளவரை வல்லைக் கெடும்.

(இ-ள்) தன் அளவை, நினையாதே ஒப்பரவு செய்வானது செல்வத்தினளவு விரையக்கெடும், (எ-று)

மேல் முதலிற் செலவு குறையவேண்டு மென்றார், அவ்வாறு செய்யின் ஒப்புரவு செய்யுமாறு என்னை யென்றார்க்குக் கூறப்பட்டது. ஒப்புரவாண்மையென்று ஒப்புரவிற்கே போக்குவாருமுளர் 10

---

* உண்டாக்கி வழங்கும் என்பர் மணக்குடவர்

11. காலமறிதல்

காலமறிதலாவது வினைசெய்தற்கு ஆங்காலமறிதல், வலியறிந்தாலும் வினைசெய்யுங் காலம் அறிந்து செய்யவேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

481. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(இ-ள்) இராப்பொழுது வெல்லுங் கூகையைக் காக்கை பகற்பொழுது வெல்லும்; ஆதலான், மாறுபாட்டை வெல்லும் அரசற்குக் காலம் வேண்டும்.

இது காலமறிதல் வேண்டுமென்றது. 1

482. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்

(இ-ள்) வினை செய்யுங்காலம் வருமளவும் நினைத்து அசைவின்றி யிருப்பர்; ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர், (எ-று)

இது காலம் வரவு பார்த்திருக்குங்கால் பின்பு செய்யும் வினை புலப்படாமல் இருக்க வேண்டும் என்றது. 2

483. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

(இ-ள்) மன மிகுதி யுடையவன் காலவரவு பார்த்து ஒடுங்குதல், போரைக் கருதின தகர்வலி பெறத்தாக்குதற் பொருட்டுப் பெயர்ந்தாற்போலும், (எ-று).

இது காலம் வருமளவும் பொறுத்தால்வலி மிகு மென்றது. 3

484. பொன்னென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப[1] ரொள்ளி யவர்.

---

1 "துள்வொப்பர்" என்பது மணக். பாடம்

11. காலமறிதல்

(இ-ள்) கதுமென அவ்விடத்தே யுடப்புவேரார்; தமக்குச் செய்யுங்காலம் வரவு பார்த்து மனம்வேர்ப்பர் ஒள்ளியார். (எ-று)

வேர்ப்புப் பொறாமையால் வருவதொன்று. பகைவர் பொறாதவற்றைச் செய்தாலும் காலம் பார்க்க வேண்டுமென்றது. 4

485. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(இ-ள்) பகைவரைக் கண்ணினாலேகாணின் தலையினாலே சுமக்க; இறுவரைகாணின், தலைகீழாகி விடலாம், (எ-று)

பகைவரைக்கண்டு வாளாதே இருப்பது ஆண்மை அல்ல என்று கருத வேண்டா; அவரைக் கண்டால் தலையிலே கொண்டாற் போலத்தாழ்ச்சி செய்து பின்பு அவர் இகழ்ச்சியாலே தலையினின்று விழவிட்டாற்போல வினைசெய்யலாம் என்று கூறப்பட்டது, 5

486. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து

(இ-ள்) காலம் பார்த்திருக்குமிடத்துக் கொக்குப் போல ஒடுங்கிஇகழ்வின்றி யிருக்க, வினை செய்தற்குச்சீர்த்தகாலம் வந்த விடத்து (அக்கொக்குக்) குத்துமாறுபோலத் தப்பாமல் செல்க, (எ-று).

இது காலம் வருமளவும் இகழ்ச்சியின்றி இகழ்ந்தார்* போல இருத்தல் வேண்டுமென்பதூஉம், காலம் வந்தால் தப்பாமல் விரைந்து செய்யவேண்டுமென்பதூஉம், கூறிற்று. 6

487. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(இ-ள்) பெறுதற்கு அரிய காலம் வந்தால் அப்பொழுதே தன்னாற் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க (எறு).

இடி காலம் வந்தால் அரிதென்று நாணாது செய்யவேண்டுமென்றது. 7

---

* கொடுக்குப் போல என்பர் மணக்குடவர்

11. காலமறிதல்

488. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

(இ-ள்) காலத்தொடு பொருந்த ஒழுகுதல், செல்வத்தை நீங்காமல் கட்டுவதொரு கயிறாம், (எ-று)

இனிக் காலமறிந்ததனால் (வரும்) பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடா தென்றார். 8

489. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(இ-ள்) அருவினையென்று சொல்லப்படுவனவும் உளவோ? முடிக்கலாங் கருவியோடே கூடக் காலத்தை யறிற்து செய்ய வல்லராயின், (எ-று).

இது முடியாத வினையில்லை என்றது. 9

490. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(இ-ள்) உலகமெல்லாம் பெறுதற்கு நினைந்தானாயினும் பெறலாம்; காலத்தைக் குறித்து இடனறிந்து செய்வனாயின், (எ-று)

இஃது எல்லாப் பொருளு மெய்துமென்றது. இனி இடனறிதல் கூறுகின்றாராதலின் அது இடன் பிற்கூறப்பட்டது 10

12. இடனறிதல்

இடனறிதலாவது வினைசெய்யும் இடமறிதல். காலமறிந்தாலும் இடனறிந்து செய்ய வேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

491. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(இ-ள்) முடியுமிடங் கண்டாலல்லது, யாதொரு வினையுந் தொடங்கா தொழிக; எளிதென்றிகழ்வதும் செய்யா தொழிக, (எ-று)

இஃது இடமறிதல் வேண்டுமென்பதூஉம் பகைவர் இடம் சிறிதென்று இகழலாகா தென்பதூஉம் கூறிற்று. 1

492. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

(இ-ள்) சிறு படையுடையவனுக்கு இயலுமிடத்தே பெரும் படையுடையவன் பொருந்துவனாயின், மன மிகுதி கெட்டுவிடும், (எ-று).

இஃது இகழ்ந்து செல்லின், வெற்றியில்லையாமென்றது. 2

493. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு.

(இ-ள்) கண்ணஞ்சாத வேலழுத்தப்பட்ட முகத்தினையுடைய களிற்றைக் கால் வீழப்பட்ட களரின்கண் நரி கொல்லவற்றாம், களர்-போரிற் புறமான கழி.

இது மேலதற்குக் காரணங்கூறிற்று. 3

494. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

(இ-ள்) அரண் மிகுதியும் பெருமையும் இலராயினும், மாந்தர் உறைநிலத்தின் கண் பொருந்துத லரிது, (எ-று)

இது, மாந்தர் உறைவிடத்துச் செல்லுங்கால், அறிந்து செல்ல வேண்டுமென்றது. 4

12. இடனறிதல்

495 நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலு
னீங்கி னதனைப் பிற.

(இ-ள்) நெடிய நீரின்கண் பலவற்றையும் முதலை வெல்லும்; அது நீரினின்று நீங்குமாயின், அதனைப் பிறவெல்லாம் வெல்லும், (எ-று)

இது மேலதற்குக் காரணங் கூறிற்று. இவையைந்தும் இடமறிய வேண்டுமென்பது கூறிற்று

496. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(இ-ள்) தப்பாமலெண்ணி இடத்தோடு பொருந்தவினை செய்ய வல்லனாயின். வேறு துணையாவாரைத் தேட வேண்டுவதில்லை, அஞ்சாமையே வேண்டுவது, (எ-று).

இடமறிந்தால், துணையின்றியும் வெல்வரென்றது. 6

497. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

(இ-ள்) வலியிலாதாரும் வலியுடையராய் வெல்வர்; பகைவர் மாட்டு வினைசெய்யும் இடமறிந்து தம்மைக் காத்துவினை செய் வாராயின் (எ-று).

இது வலியிலாதாரும் வெல்வரென்றது. 7

498. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

(இ-ள்) பகை கொள்ளும் வலியுடையவர்க்கும் அரணைச் சேர்ந்தாகின்ற ஆக்கம், பலபயனையுந் தரும், (எ-று).

இது, பகைவரிடம் அறிதலே யன்றித் தமக்கு அமைந்த இடமும் அறிய வேண்டுமென்றது. 8

499. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

12. இடனறிதல்

(இ-ள்) கால் வலிய நெடுந்தேர் கடலின்கண் ஓடாது; கடலின்கண் ஓடும் நாவாயும் நிலத்தின்கண் ஓடாது, (எ-று).

இஃது, இடத்திற்காங் கருவி பண்ண வேண்டுமென்றது. 9

500. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(இ-ள்) தன்னைக் கெடுத்தற் கெண்ணினவர், தங்களெண்ணம் இழப்பர்கள்; வினைசெய்யும் இடமறிந்து நட்டோரானவர் மனம் பொருந்திச் செய்வாராயின், (எ-று).

இஃது, இடமறிந்தாலும் செய்வோர் அமைதியும் வேண்டுமென்றது. இனி அமாத்தியர் இலக்கணம் கூறுகின்றாராதலின் இதுபிற் கூறப்பட்டது. 10

13. தெரிந்து தெளிதல்

தெரிந்து தெளிதலாவது அமாத்தியரை ஆராய்ந்து தெளிதல், காரியந்தப்பாமலெண்ணி, அதற்காங் காலமும் இடமும் அறிந்தாலும், அது செய்து முடிக்கும் அமாத்தியரையும் எண்ணிக்கொள்ள வேண்டுதலின், அவற்றின்பின் கூறப்பட்டது.

501 அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(இ-ள்) கற்றற்கரியனவற்றைக் கற்றுக் குற்றமற்றார் மாட்டும் ஆராயுங்கால் குற்றமின்மை இல்லை, (எ-று).

கல்வியுடையார் உள்ளும் புறம்பும் தூயாரைத் தேறலாம் என்பது துரோணாசாரியார் மதம். அவ்வளவில் தேறலாகா தென்று இது கூறப்பட்டது. 1

13. தெரிந்து தெளிதல்

502. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

(இ-ள்) ஒழுக்கமற்றாரைத் தேறுதலைத் தவிர்க; அவர் ஒரிடத்துப் பற்றுடையரும் அல்லர்; பழிக்கும் நாணுராதலான், (எ-று)

அரசனோடொத்த மறைந்த குற்றமுடையாரைத் தேறலாம், அவர் தம் குற்றம் மறைக்கு மாறு போல அவர் குற்றமும் மறைப்பர் ஆதலான் என்பது மகேச்சுரர் மதம். அது குற்றமென்று கூறப்பட்டது, 2

503 காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

(இ-ள்) அன்புடைமையே பற்றாக, அறிவுடையாரல்லதாரைத் தேறுதல், எல்லா அறியாமையும், தரும் (எ-று).

அரசர் அன்புடையாரைத் தேறலாமென்பது பராசரர்மதம். இஃது, இவ்வளவினால் தேறலாகாதென்றது.

504. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(இ-ள்) பிறனை ஆராயாதே வழிமுறையென்று தெளிந்தவனுக்கு அத்தெளிவு, தீர்தலில்லாத துன்பமுண்டாகும், (எ-று)

வழிமுறை என்றது தன்வழியின் உள்ளார்க்கு அவன் வழியின் உள்ளார் அமாத்தியராய்ப் போந்த முறைமை. தன் குலத்திலுள்ளாருள் அமாத்தியராயினார் வழியில் உள்ளாரைத்தேறலாமென்பது வியாதன் மதம். அது குற்றமென்று இது கூறப்பட்டது. 4

505. தேரான் றெளிவுந் தெளிந்தான் கணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(இ-ள்) (ஒருவனை) ஆராயாது தெளிதலும் தெளிந்தபின்பு ஐயுறுதலும் தீர்தலில்லாத துன்பத்தைத் தரும், (எ-று).

13. தெரிந்து தெளிதல்

முன்பு ஒருவினை செய்து அறியாதாரைத் தேறலாம்; அவர்கள் வறியராதலான் என்பது உத்தவாசாரியர் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது. 5

506. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்

(இ-ள்) ஒருவனைப் பெரியனாக்குதற்கும் (மற்றைச்) சிறியனாக்குதற்கும் வேறு தேடவேண்டா; அவரவர் செய்யவல்ல கருமந் தானே படிக்கல்லாம் அதற்குத்தக ஒழுகுக, (எ-று).

இஃது, ஒருவனை ஒருகாரியத்திலே முற்படவிட்டு, அவன் செய்ய வல்ல அளவுங் கண்டு, பின்னைப்பெரியனாக்க அமையுமென்பது நாரதர் மதம். இது, குற்றங்கூறாமையால் யாவர்க்கும் உடம்பாடென்று கொள்ளப்படும். 6

507 குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி[1] வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(இ-ள்) உயர்குடிப் பிறந்து, காமம் வெகுளி முதலான குற்றத்தினின்று நீங்கித் தனக்குவரும் பழியை அறுக்கவல்ல நாணமுடையவன் கண்ணே தெளிதல் (எ-று)

இது சுக்கிரர்மதம். இதுவும் உடன்பாடென்று கொள்ளப்படும் 7.

508. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(இ-ள்) ஒருவனுக்குள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனை யறிந்து, அவற்றுள்ளும் தலைமையானும் பன்மையானும் மிக்கதனை அறிந்து கொள்க, (எ-று)

இது கௌடிலியர் மதம். காரியம் பல காலின் அது செய்வாரும் பலர் வேண்டும். ஆதலால் அவர் எல்லாரையும் நற்குணத்தராகத்தேடுதலரிது என்பதனால் இது கூறப்பட்டது. 8

---

[1] 'குற்றத்துணீங்கி' என்பது மணக். பாடம்

13. தெரிந்து தெளிதல்

509. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

(இ-ள்) அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமுமென்னும் நான்கினையும் கூறுபார்த்து ஆராய்ந்து பின்பு தேறப்படும் (எ-று).

மேற்கூறிய குற்றமும் குணமும் ஆராய்தலேயன்றி அறத்தை வேண்டியாதல், பொருளை வேண்டியாதல் இன்பத்தை வேண்டியயாதல், அச்சம் உளதாம் என்றாதல் அரசன் மாட்டுந்தீமையை நினையாமையை ஆராய்ந்து பின்பு அவரைத் தேறப்படும் என்று கூறப்பட்டது. 9

510. தேறற்க யாவரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்

(இ-ள்) யாவரையும் ஆராயாது தெளியாதொழிக; ஆராய்ந்த பின்பு அவராற்றேறப்படும் பொருளைத் தேறுக, (எ-று)

மேல் நாலுபொருளையும் ஆராய வேண்டும் என்றார்; அந் நாலினும் ஒரோர் பொருளில் தேறமுடியாமை அவரவர் பொருளிலே தெளிக; எல்லாப்பொருளினும் தெளிக. 10

14. தெரிந்து வினையாடல்

தெரிந்து வினையாடலாவது வினை செய்வாரும் அவரால் செய்யப்படும் வினையும் பலவாதலின், அவ்வவரால் செய்யப்படும் வினைகளை யறிந்து அவரை இட்டுச் செய்வித்தல். மேல்வினை செய்வாரை ஆராய்ந்து கூட்டவேண்டும் என்றார். அவரால் செய்ய படும் வினையும் ஆராய்ந்து செய்யவேண்டும் என்பதனால் அதன் பிற் கூறப்பட்டது.

511. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று

(இ-ள்) வினைதான் உள்பாடு அறிந்து செய்யும் காலத்து உற்ற துன்பத்தையும் பொறுத்துச் செய்ய வல்லாற்கு அல்லது தமக்குச் சிறந்தான் என்று ஒருவனை ஏவும் பகுதியுடைத்தன்று என்றவாறு.

இது, வினையினது இயல்பு கூறிற்று 1

512. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(இ-ள்) வினை செய்வானையும் ஆராய்ந்து, அவ்வினையினது இயல்பையும் ஆராய்ந்து, அது முடியுங்காலத்தோடே பொருந்த அறிந்த பின் அவ்வினையை அவன் செய்வானாக அமைக்க வேண்டும், (எ-று).

மேல் வினையினது இயல்பு கூறினார்; இது செய்விக்குமாறு பொதுவாகக் கூறியது, 2

513. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும்.

(இ-ள்) நன்மையான வற்றையும் தீமையானவற்றையும் ஆராய்ந்து, தீமையை ஒருவி நன்மையின் கண்ணே பொருந்தின தன்மையுடையவனைச் செய்வனாகப்படும், (எ-று)

இது பெரும்பான்மையும் அற ஆராய்ச்சிக்குக் கடவாரை நோக்கிற்று. 3

14 தெரிந்து வினையாடல்

514. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(இ-ள்) அன்புடைமையும், அறிவுடைமையும், ஒரு பொருளை ஆராய்ந்து துணிவுடைமையும், அவாவின்மையு மென்னும் நான்கு குணங்களையும் நிலைபெற வுடையவன் கண்ணதே யெல்லாப்பொருளின் கண்ணும் தெளிதல், (எ-று)

இது பெரும்பான்மையும் அறவாராய்ச்சிக்கு கடவாரை நோக்கிற்று. 4

515. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

(இ-ள்) பொருள் வருதற்கு இடமானவற்றை முன்பு நின்ற நிலையிற் பெருக்கி, அவ்விடங்களி லுண்டாகும் பயனை முன்பு நின்ற நிலையிலுண்டாக்கி, அவ்விடத் துற்ற மிகுதி குறைவுகளை ஆராயவல்லவன் வினை செய்வானாக, (எ-று)

பொருள் வருவதற்கிடமாவது நிலமுதலான விடம்; அதனைப் பெருக்குதல் ஆவது காடு கெடுத்து நாடாக்குதல் முதலாயின. வளம் படுத்தலாவது பயிர் ஏற்றுங்கால் வான் பயிர் ஏற்றுவித்தலும் பாழான இடங்களில் குடியேற்றி ஆயம் பொருள் உண்டாக்குதலும். இது பெரும்பாலும் (அரசன் வினை) செய்வானை நோக்கிற்று. 5

516. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

(இ-ள்) இவ்வினைக்கு இவன் உரியவனென்று ஆராய்ந்த பின்பு, அவனை அவ்வினை செய்தற்கு உரியவனாகப் பண்ணுக, (எ-று).

ஒழிந்த காரியங்களின் வினை செய்வாரை ஆக்குமது கூறிற்று. 6

517. இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

(இ-ள்) இக்கருமத்தினை இக்கருவியாலே இவன் செய்து முடிக்க வல்லவனென்று ஆராய்ந்து, பின்பு அக்கருமத்தினை அவன் கண்ணே விடுக, (எ-று).

14. தெரிந்து வினையாடல்

இது, பெரும்பான்மையுஞ் சேனாதிபதியை நோக்கிக் கூறிற்று 7

518. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு.

(இ-ள்) வினையிடத்து வினைசெய்ய வல்லவனது நட்பை வேறாக நினைக்கும் அரசனைத் திருமகள் நீங்குவள், (எ-று)

இது வினை செய்ய வல்லாரை அருள்பண்ண வேண்டும் என்பதூஉம் அவருடன் மாறுபட ஒழுகின் பொருள் கேடுவரும் என்பதூஉம் கூறிற்று. 8

519. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

(இ-ள்) வினைசெய்வான் கோடாதொழிய உலகம் கோடாது செவ்வையிலே நிற்கும்; ஆதலான் அவன் செயலை நாடோறும் ஆராய்க மன்னவன், (எ-று)

இது வினைசெய்வார் செயலை நாடோறும் ஆராயவேண்டு மென்றது. முறை செய்வான் என்றதனால், அற ஆராய்ச்சி செய்வாரை நோக்கிற்றே ஆயினும் ஏனை அமாத்தியர் (வினை) செய்தல் தொழில் உடையராதலால் (அவ்வமாத்தியரை நோக்கிற்று.) 9

520. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்.

(இ-ள்) *எல்லா வகையினாலும் ஆராய்ந்து தெளிந்தவிடத்திலும், அவர் செய்யும் வினையின் வகையினாலே மனம் வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலர், (எ-று).

இது, தெளிந்தேமென்று இகழலாகாதென்றது. 10

---

* இது மணக்குடவருரை

15. சுற்றந்தழால்

சுற்றந்தழாலாவது அரசன் தனது சுற்றத்தினோடு பொருந்தி ஒழுகுதல். மேல் அமாத்தியர்மாட்டு அரசன் ஒழுகுந்திறன் கூறினார். இனிச் சுற்றத்தார்மாட்டு அரசன் ஒழுகுந்திறன் கூறுகின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

521. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(இ-ள்) சுற்றத்தாலே சூழப்பட்டு ஒழுகுவது, செல்வத்தைப் பெற்றவதனான் உண்டாய பயன், (எ-று).

இது, சுற்றம் தழுவ ஒழுக வேண்டுமென்றது. 1

522. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

(இ-ள்) வேண்டுமளவு கொடுத்தலும் இன்சொற் கூறுதலும் செய்வானாயின், தனக்கு முன்னாகியும் பின்னாகியும் வருகின்ற சுற்றத்தாலே சூழப்படுவன், (எ-று).

இஃது ஒழுகுந் திறன் கூறிற்று. 2

523. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(இ-ள்) மிகக் கொடுக்க வல்லனாய்ச் சினத்தையும் விரும்பானாயின், அவனின் மிக்க துணையுடையார் பெரிய உலகின்கண் இல்லை, (எ-று).

இது, மேற்கூறிய வாறன்றி யிவ்வாறு செய்யின், துணையுடையனா மென்றது. இது செய்தலருமையின் வேறு வகுத்துக் கூறினார். 3

524. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(இ-ள்) பொருளற்ற கண்ணும் பழமையைக் கொண்டாடி விடா தொழுகுதல், சுற்றத்தார் மாட்டே யுளவாம், (எ-று).

15. சுற்றந்தழால்

இஃது, இல்லாத காலத்தினும் விடாரென்றது.

525. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

(இ-ள்) கலக்கப்படுவானோடு கலப்பின்றி யொழுகுவானது வாழ்க்கை. குளமாகிய வளைவு கரையின்றி நீர் நிறைந்தாற் போலும், (எ-று).

இது, சுற்றந் தழுவிக்கொள்ளாக்கால் செல்வங் காவல்படா தென்றது. இத்துணையும் சுற்றத்தா ரெல்லாரோடும் ஒழுகுந் திறன் கூறிற்று. 5

526. விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும்

(இ-ள்) அன்பறாச் சுற்றம் ஓரிடத்தே பொருந்தி யொழுக மாயின், அது கிளைப்பறா ஆக்கமாகிய பலவற்றையுந் தரும், (எ-று).

பிள்ளைகளை வேறு வேறு இடத்து நிறுத்த வேண்டும் என்பது சில ஆசாரியர் மதம். அதனை மறுத்து மக்களை ஓரிடத்தே கொண்டிருக்கவேண்டும் என்பதூஉம் அதனானே குலம் வளரும் என்பதூஉம் கூறிற்று. 6

527. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

(இ-ள்) அரசன் எல்லாரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே பார்ப்பானாயின், அத்தலைமையை நோக்கி வாழ்வார் பலர், (எ-று).

மக்கள் பலருண்டானால் எல்லாரையும் ஒக்கப்பாராது நீதிமான் ஒருவனை இளவரசாக்க வேண்டுமென்றது. 7

528. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

15. சுற்றந்தழால்

(இ-ள்) காக்கை ஒரிரை பெற்றால் அதனை மறையாது தன் இனமாயின வெல்லாவற்றையும் அழைத்து உண்ணும்; அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தா ரெல்லாரோடும் நுகர்வார்க்கே ஆக்கம் உளதாவது, (எ-று).

இது மக்கள் பலருண்டானல் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்க வேண்டும் என்றது. இவை மூன்று பாட்டானும் அன்ப றாத மக்கட்குச் செய்யுந் திறங் கூறிற்று. 8

529. தமராகித் தற்றுறந்தரார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(இ-ள்) மூன்பு தனக்குத் தமராகி வைத்துத் தன்னை விட்டுப் போனவர்கள் (பின்பு வந்து) சுற்றமாதல், தான் அவர்மாட்டு அம ராமைக்குக் காரணம் இன்றி யொழுகவரும், (எ-று).

காரணம் இன்றி ஒழுகுதலாவது அவனுடைய சுற்றத்தோடு மேவி ஒழுகுதலும் அவைபோல் வனவும். இது, விட்டுப்போன இராஜபுத்திரனைக் கூட்டிக் கொள்ளுமாறு கூறிற்று. 9

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(இ-ள்) தன்னிடத்தினின்று நீங்கி ஒரு காரணத்தால் வந்த வனை அரசன் இனிமைசெய்து வைத்துப், பின்பு காரியமானபடி யெண்ணி, அதற்குத் தக்கபடி கூட்டிக்கொள்ளுக, (எ-று).

எண்ணிக்கோடலாவது அவன் வந்த காரணத்தை எண்ணு தலும், ஒருவனாகில் அதற்குத்தக்கவும், பலருண்டாகில் அதற்குத் தக்கவும் எண்ணுதலும். இது மீண்டுவந்த இராஜபுத்திரனோடு செய்யும் திறன் கூறிற்று. 10

16. பொச்சாவாமை

பொச்சாவாமையாவது மறவியின்றி யொழுகுதல். அது எவ்விடத்தெனின் தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சகஞ் செய்யுமிடங்களினும், அறம் பொருளின்பங்கள் செய்ய வேண்டுமிடங்களினும் மறத்தலின்மை. பொச்சாப்பு எனினும் மறவி எனினும் இகழ்ச்சி எனினும் ஒக்கும். மேல் அமாத்தியர் மாட்டும் சுற்றத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறினார். அதனாற்பயன் உண்டாவது தன்னைத் தான்கடைட்பிடித்து ஒழுகின் என்று அதன்பின் கூறப்பட்டது.

531. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானு லோர்க்குந் துணிவு.

(இ-ள்) பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமையில்லையாம்; அஃது உலத்து வழங்குகின்ற எவ்வகைப்பட்ட நூலோர்க்குந் துணிவு, (எ-று).

இது, பொச்சாப்பாகாதென்றது. 1

532. இகழ்ச்சியிற் கெட்டாரை யெண்ணுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(இ-ள்) அரசர் குறித்துணரும் உணர்ச்சியின்மையானே முன்பு கெட்ட அரசரை நினைக்க; தாமும் தம்முடைய மகிழ்ச்சியாலே வலிதாயிருக்கும் பொழுது, (எ-று).

இதனாற் சொல்லியது வலியாரைப் பகைவர் வெல்லுங்கால் அவரைச்சோர்வு பர்த்துக் களவினால் கொல்வர்; ஆதலால் தன் வலியை நினையாது பகை உண்டாகும் என்று நினைத்துக் கோயிலும் அந்தப்புரமும் நீர்விளையாட்டு ஆடும் இடமும் இளமரக்காவும் வேட்டையாடும் காடும் உண்பனவும் பூசுபனவும் இகழாது சோதித்துக் கொள்க என்றது. 2

533. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(இ-ள்) அச்சமுடையார்க்கு அவ்வச்சம் தீர்க்கவல்லதோர் அரணில்லை; அது போலப் பொச்சாப்புடையார்க்கு வருவதொரு நன்மை இல்லை, (எ-று)

16. பொச்சாவாமை

இது, பொச்சாப்புடையார்க்குக் காவலில்லை என்றது. 3

534. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

(இ-ள்) உயர்ந்தாரால் புகழப்பட்டவையிற்றைக் கடைப் பிடித்துச் செய்தல் வேண்டும். அவற்றைச் செய்யாது இகழ்ந்தவர் களுக்கு எழுபிறப்பினும் நன்மையில்லையாமாதலான், (எ-று).

இஃது, அறத்தின் கண் இகழாமை கூறிற்று. 4

535 உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

(இ-ள்) தான் நினைந்த பொருளைப் பெறுதல் எளிது; பின்பும், அதனை மறவாதே நினைக்கக் கூடுமாயின், (எ-று).

இனிப் பொருளின்கண் மறவாமை கூறுவார், முற்பட நினைத்ததனை மறவாமை வேண்டுமென்றார். 5

536. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(இ-ள்) செயற்கு அரியவென்று செய்தலாகாதனவில்லை மறவாமையாகிய கருவியாலே பாதுகாத்துச் செய்வனாயின் (எ-று).

இது வினைசெய்யுங்கால் மறவாமை வேண்டுமென்றது. 6

537. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

(இ-ள்) மறவியாகின்றது புகழைக்கொல்லும்; அற்றைத் தேட்டூண் அறிவைக் கொல்லுமாறு போல, (எ-று).

புகழ்பட வாழுங்கால் தன் அளவை மறந்து கொடுப்பனாயின் தான் கருதின புகழும் முடியச் செல்லாது அளவிலே நின்றுசாம் இயற்கையாகிய அறிவு நல்குரவினால் சாமாறுபோல என்றவாறா யிற்று. இது கொடையில் கடைப்பிடித்தல் வேண்டும் என்றது. இவை மூன்றினானும் பொருளில் கடைப்பிடித்தல் கூறிற்று. 7

16. பொச்சாவாமை

538. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(இ-ள்) மிக்க வெகுளியுடையனாதலினும் தீது, மிக்க உவகை யால் உண்டான மகிழ்ச்சியால் தன்னை மறந்திருத்தல்.

இது காமத்தின் கண்ணும் வெகுட்சியின் கண்ணும் கடைப் பிடித்தல் கூறிற்று. 8

539. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்.

(இ-ள்) யாவர்மாட்டும் எல்லாநாளும் தப்புச்செய்யாமை தப்பாமல் வாய்க்குமாயின், அதனையொக்க நன்மை பயப்பது பிறி தில்லை, (எ-று).

இது, முறைசெய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்ய வேண்டு மென்றது. 9

540. முன்னுறங் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(இ-ள்) எதிரது ஆகவே பழிவரும் வழியைக் காவாதே அதனை இகழ்ந்து தப்பச்செய்தவன் அத்தப்பினால் வரும் குற்றத்துக்கு இரங்கிவிடும் என்றவாறு.

தன்பழி முன்னுறக் காவாதான் என்று கூட்டுக, மேற் கூறிய வாறு செய்யாதார் முன்பே செய்யப்பெற்றிலேம் என்று இரங்குவர் என்றபடி. 10

17. செங்கோன்மை

செங்கோன்மையாவது செவ்விதாகிய முறைசெய்தலுடைமை. குற்றமும் குணமும் தூக்கித் பார்த்தலாற் கோல் என்றார்; அது கோடாமையால் செங்கோல் ஆயிற்று. மேல் அமாத்தியர் மாட்டுஞ் சுற்றத்தார் மாட்டுந் தன்மாட்டுஞ் செய்யுந்திறங் கூறினார்; இஃது உலகத்தார்மாட்டுச் செய்யுந்திறன் கூறுகின்றதாகலின், அதன்பின் கூறப்பட்டது.

541. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(இ-ள்) ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து, நட்டோரென்று கண்ணோடா, தலைமையைப் பொருந்தி, யாவர் மாட்டும் குற்றத்திற்கு தக்க தண்டத்தை நூல்முகத்தானாராய்ந்து, செய்வது முறையென்று சொல்லப்படும், (எ-று).

யார்மாட்டும் என்றது தன்சுற்றமாயினு மென்றது. இறைபுரிதலாவது சுற்றம் என்று கண்ணோடாத அரசனாயிருத்தல். இது செங்கோன்மையாவது இத்தன்மைத்து என்று கூறிற்று. 1

542. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

(இ-ள்) குடிகளை நலியாமற் காத்து ஓம்புதற்காகக் குற்றஞ் செய்தாரை ஒறுத்தல் குற்றமன்று; அரசன் தொழில் (எ-று)

ஓம்ப என்று திரிக்க. பிறர்க்கு இன்னாசெய்தல் அறம் அல்ல என்றார் ஆகலின், ஈண்டுக் கூறுகின்றது அறம் அல்லவாம் பிற என்று ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது. 2

543. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(இ-ள்) கொடுமை செய்தாரைக் கொலையினானே அரசன் ஒறுத்தல் குற்றமன்று; உழவன் பைங்கூழ் வளர்தற்குக் கவர்களை களைந்ததனோடு ஒக்கும், (எ-று).

17. செங்கோன்மை

கொடியாராவார்கள் பலர்: ஆறலைப்பார் சூறை கொள்வார் இவர்கள் போல்வார். பிறரைக் கொல்லாதாரைக் கொல்லுதல் நீதி அன்று ஆயினும் கொடியாரைக் கொல்ல வேண்டும் என்றது. 3

544. வானோக்கி வாழு முலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(இ-ள்) உலகத்துயிரெல்லாம் மழையை நோக்கி யின்புறா நிற்கும் அதுபோலக் குடிகளும் அரசன் செங்கோன்மையை நோக்கி யின்புறுவர், (எ-று).

இது முறை செய்தல் குடிமக்கட்கு இன்றியமையாது என்பது கூறிற்று. 4

545. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

(இ-ள்) குடியைப் பொருந்தி முறைமையைச் செலுத்துகின்ற பெரிய நில மன்னனது அடியைப் பொருந்தி நிற்கும் உலகு, (எ-று)

இது, முறைமை செய்யும் அரசன் கண்ணதாம் உலகு என்றது 5

546. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

(இ-ள்) நூல் சொன்ன முறையினானே முறைமையை நடத்த வல்ல அரசனது நாட்டாம் மழைபெய்தலும் விளைதலுங்கூட (எ-று)

மேற்கூறிய முறைசெய்ய மழையும் விளைவும் உண்டாமென்றது. 6

547. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(இ-ள்) அந்தணரதாகிய வேதத்திற்கும் அதனால் கூறப்பட்ட அறத்திற்கும் முதலாய் நின்றது அரசன் செய்யும் முறைமை, (எ-று).

17. செங்கோன்மை

ஓதுவாரும் அறம் செய்வாரும் முறைசெய்யும் அரசன் நாட்டகத்து உளராவர்; ஆதலான் முதலாயிற்று. இது கல்வியும் அறமும் வளமும் என்றது.

548. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

(இ-ள்) அரசனுக்கு வென்றி தருவது அவன் கைவேலன்று, முறை செய்தல்; அதனைக் கோடச் செய்யாதொழியின், (எ-று)

இது, செங்கோன்மை செய்ய வெற்றியுண்டாமென்றது. 8

549. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

(இ-ள்) வையகமெல்லாவற்றையும் அரசன் காக்கும், அவ்வரசனை அவன் றான்செய்யும் முறை காக்கும்; அதனைத் தப்பாமற் செய்யின், (எ-று).

இது, தனக்குக் காவலாம் என்றது. 9

550. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்

(இ-ள்) எளிய காலத்தோடே நூலாராய்ந்து முறைமை செய்யாத அரசன், தனது தண்பதத்தாலே கெடுப்பாரின்றியும் தானே கெடும், (எ-று).

எண்பதமாவது, வந்தவர்கள் குறையைச் சொல்லுதற்கு எளியகாலம்; தண்பதமாவது, குறையைச் சொல்லுதற்குத் தாழ்க்குங் காலம். இது காலம் தப்பாமல் கேட்டுச் செய்யவேண்டும் என்பதூஉம் முறை செய்யாக்கால் வரும் குற்றமும் கூறிற்று. 10

18. கொடுங்கோன்மை

கொடுங்கோன்மையாவது கொடுங்கோன்மையால் வருங் குற்றங் கூறுதல். அது முறை செய்யாமையும், பிறர் நலியாமற்காவாமையும், முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலுமெனப் பல வகைப்படும். இது மேற்கூறிய செங்கோன்மையின் மாறுபட்டு வருதலின், அதன்பின் கூறப்பட்டது.

551. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னாவா மன்னர்க் கொளி.

(இ-ள்) அரசர்க்கு ஒளி நிலைபெறுதல் செங்கோன்மையானாம்; அஃதில்லையாயின், அரசர்க்கு ஒளி நிலையாதாம், (எ-று)

முறை செய்யாமையால் வரும் குற்றங்கூறுவார், முற்படப் புகழில்லையாம் என்றார். 1

552. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

(இ-ள்) குற்றமும் குணமும் நாடோறும் ஆராய்ந்து, அதற்குத் தக முறைசெய்யாத அரசன் நாடு நாடோறும் கெடும், (எ-று).

இது, நாடு கெடுமென்றது. 2

553. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

(இ-ள்) நல்குரவினும் செல்வம் துன்பமாகும்; முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின் கீழே குடி யிருக்கின், (எ-று).

இது, பொருளுடையாரும் துன்பமுறுவரென்றது. இவை மூன்றும் முறை செய்யாமையாலே வருங் குற்றங் கூறின. 3

554. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

18. கொடுங்கோன்மை

(இ-ள்) பசுக்கள் பால் குறையும், அந்தணர் வேதம் ஓதார்; அரசன் காவானாயின், (எ-று).

இது, காவாமையால் வருங் குற்றங் கூறிற்று. 4

555. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(இ-ள்) முறைமைகோட மன்னவன் செய்வனாயின், மழை துளிவிடுதலைத் தவிர்ந்து பெய்யாதொழியும், (எ-று).

இது முறைமை கோடினால் வரும் குற்றம் கூறிற்று. 5

556. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

(இ-ள்) பொருளையும் பொருள்தரும் குடியையும் கூட இழப்பன், முறை கோடி ஆராயாமல் செய்யும் அரசன், (எ-று).

இஃது ஆராயாது செய்வதனால் வருங் குற்றங் கூறிற்று 6

557. கொலைமேற்கொண் டாரிற்கொடிதேயலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

(இ-ள்) *கொலைத்தொழிலை மேற்கொண்டவரினும் கொடியன், அலைத்தற்றொழிலை மேற்கொண்டு நீதியல்லாதன செய்து ஒழுகுகின்ற அரசன், (எ-று). 7

558. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு

(இ-ள்) * உலகத்திற் பல்லுயிர்க்கும் மழையில்லையானால் வருந்துன்பம் எத்தன்மைத்தாகின்றது, அத்தன்மைத்து; அரசன் அருளிலனாதல் அவன் கீழ்வாழும் மக்கட்கு, (எ-று).

இஃது அருள் செய்யாமையால் வருங் குற்றங் கூறிற்று 8

---

* இது மணக்குடவருரை

18. கொடுங்கோன்மை

559. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(இ-ள்) நீதியல்லன செய்தலானே அல்லற்பட்டு, அதற்கு ஆற்றாது, அழுத கண்ணீரன்றோ? செல்வத்தைத் தேய்க்கும் படையாவது, (எ-று).

இஃது, அவ்வரசன் தான் கெடுமென்றது. இவையிரண்டும் அல்லவை செய்ததனாலே இம்மை மறுமை இழப்பரென்று கூறின. 9

560. வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு.

(இ-ள்) தனியிடத்தே வேலொடு நின்றவன் கையினுள்ளன தாவென்றாற் போலும்; முறைசெய்தலை மேற்கொண்டு நின்றவன் குடிகள் மாட்டு இரத்தல், (எ-று).

கோலொடு நிற்றல்-செவ்வை சய்வானரப் போன்று நிற்றல். நிச்சயித்த கடமைக்கு மேல் வேண்டுகோளாகக்கொளினும், வழியிற் பறிப்பானோடு ஒக்குமென்றவாறு. 10

---

19. வெருவந்த செய்யாமை

வெருவந்த செய்யாமையாவது, பிறர்க்கு அச்சம் (வருவன) செய்யாமையும், தனக்கு அச்சம் (வருவன) செய்யாமையும். தான் முறை செய்வாரைப் போன்றிருந்து அதனை உலகத்தார் வெருவுமாறு செய்வனாயின், அதுவுங் கொடுங்கோலோடு ஒக்குமென்று பின் கூறப்பட்டது.

19. வெருவந்த செய்யாமை

561, தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(இ-ள்) குற்றத்துக்குத் தக்கவை ஆராய்ந்து, ஒருவர் மேற் செல்லாமைக் காரணமாக உலகத்தார்க்குப் பொருந்துமாறு ஒறுப்பவன் அரசன், (எ-று).

இது செங்கோன்மையன்றோ எனின் ஒக்கும் முறை செய்யுங்கால் அரசன் வெகுட்சியுடையனாய் உலகத்நார் அஞ்சுமாறு செய்யாது இம்முறை செய்யாக்கால் ஒருவர் ஒருவரை அடர்ப்பர் என்று உலகத்தார் தாமே இசையச் செய்யவேண்டும் என்றற்கு வேறுபடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு செய்தல் வெருவந்த செய்யாமை என்றது. 1

562. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

(இ-ள்) கடிதாகச் செய்வாரைப் போன்று மெல்லிதாகச் செய்க, நெடிதாக வருகின்ற ஆக்கம் நீங்காமையை வேண்டுவார், (எ-று).

இது, குற்றத்திற்குத் தக்க தண்டத்தினும் குறையச் செய்ய வேண்டுமென்றது. இனிவெருவந்த செய்ததனால் உளதாகும் குற்றம் கூறுகின்றனர். 2

563. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

(இ-ள்) கடுங்கோலனாகிய அரசன் அறிவில்லாரை அமைச்சராகக் கூட்டிக்கொள்ளும்; அவ்வரசன் அல்லது நிலத்துக்குப் பாரம் வேறொன்றும் இல்லை, (எ-று).

அறிவில்லாதார் அமாத்தியர் ஆனால் அவரானே உலகம் அச்சமுறும்; அதற்காகக் கடுங்கோலரசன் அவரைக் கூட்ட அவனை நிலம் பொறாது என்றது. 3

5ό4. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

19. வெருவந்த செய்யாமை

(இ-ள்) தன்கீழ் வாழ்வார் அரசன் கடியனென்று கூறப்பட்ட இன்னாத சொல்லையுடைய வேந்தன் தானுறையும் இடம் வெகுளப்பட்டு*விரைந்து கெடும். (எ-று).

இது, நாடும் நகரமும் பொறாதென்றது.

565. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும்.

(இ-ள்) அரசன் அச்சம் வருவன செய்தொழுகும் வெங்கோலையுடையனாயின், அவன் ஒருதலையாக விரைந்து கெடுவன், (எ-று).

இது நாடும் நகரமும் பொறுப்பினும் தெய்வத்தினால் கெடுவன் என்றது. 5

566. இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிற்[1]
சீறிற் சிறுகுந் திரு.

(இ-ள்) பிறர் செய்த குற்றத்தைத் தனக்கு இனமாயினாரோடு அமைந்து ஆராயாத அரசன் சினத்தின் நெறியினானே சீறுவனாயின், செல்வம் குறைபடும், (எ-று).

இது செல்வம் குறைபடு மென்றது. இனம் என்றது மந்திரி புரோகிதரை. 6

567. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(இ-ள்) (அரசன்) கடியசொல்லை யுடையவனுமாய்க் கண்ணோட்டமும் இலனாயின், அவனது தொன்றுதொட்டு வருகின்ற செல்வம் பின்பு நிற்றலின்றி அக்காலத்தேகெடும், (எ-று).

இஃது, குறைதலேயன்றி முழுதுங் கெடுமென்றது. 7

---

1 "சினத்தாற்றிச்" என்பது மணக் பாடம்.

19. வெருவந்த செய்யாமை

568. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

(இ-ள்) கடுஞ்சொற் கூறுதலும் குற்றத்தின் மிக்க தண்டஞ் செய்தலும் அரசனதாகிய பகைவரை வெல்லும் வலியைத் தேய்க்கும் அரம், (எ-று).

இது, வலியைக் கெடுக்கும் என்றது. 8

569. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேய்கண்ட தன்ன துடைத்து.

(இ-ள்) காண்டற்கரிய காலத்தினையும் கண்டால் இன்னாத முகத்தினையும் உடையவனது பெரிய செல்வம் பேயைக் கண்டாலொக்க அச்சந்தருதலுடைத்து, (எ-று).

இது, செல்வத்தை வாங்குவார் இன்மையின் படை சேராதென்றது. 9

570. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

(இ-ள்) தனக்குக் காவலானவற்றை முன்னேயமைத்துச் செய்யாத வேந்தன் செருவந்த காலத்து அச்சமுற்றுக் கடிது கெடும், (எ-று).

இது தனக்கு அச்சம் வருவன செய்யலாகாதென்றது. 10

20. கண்ணோட்டம்

கண்ணோட்டமாவது கண்ணாற் காணப்பட்டாரை யருள் செய்தல். குற்றஞ்செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தாரிசைய ஒறுக்க வேண்டு மென்றாராயினும் அவ்வாறு செய்தவரைத் தமது கண்முன் னாகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டுமென்று அதன் பின் கூறப்பட்டது. இது பெரும்பான்மையும் முன்பு கண்டு பழகி னார் மேற்று.

571. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

(இ-ள்) கண்ணோட்டமாகிய பெரிய அழகு அரசன் மாட்டு உண்டானபடியினாலே உலக நடை உண்டாகின்றது, (எ-று).

இஃதில்லையாயின், உலகங்கெடும்; ஆதலால், கண்ணோட்டம் வேண்டுமென்றது. செங்கோன்மை கூறுகின்ற வழிக் கண் ணோடாது முறைசெய்க என்று கூறி ஈண்டுக் கண்ணோடுக என்று கூறுதல் மாறுபடக் கூறுதலாம் பிறவெனின், அற்றன்று; அது முறைசெய்யும் திறன் கூறிற்று; இஃது உலகத்தார் பலராதலாங் குற்றம் செய்வார் மிகுந்திருப்பர்; அதற்கெல்லாம் தண்டம் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம்; அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்க வேண்டும் என்று கூறிற்று. 1

572. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(இ-ள்) தம்மை யொறுத்துச் செய்யும் இயல்புடையார் மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச் செய்யும் குணமே தலையான குணம், (எ-று)

அன்றியும் ஒறுத்துச் செய்யவேண்டும் இயல்பினை உடையார் மாட்டும் என்றும் ஆம். உம்மை சிறப்பும்மை. பிறர்க்குக் குற்றம் செய்தாரையே அன்றித் தமக்குக் குற்றம் செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்றது. 2

20. கண்ணோட்டம்

573. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(இ-ள்) நஞ்சு பெய்தது கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர், எல்லாரானும் விரும்பத்தக்க நாகரிகத்தை வேண்டி விரும்புவார், (எ-று).

நாகரிகம்-அறம்பொருள் இன்பத்தின்கண் நற்குணங்கள் பலவும் உடைமை. மறாமையால் கண்ணோட்ட மாயிற்று. இது பொறுத்தலேயன்றித் தமக்குச் செய்யும் தீமைக்கும் உடன் படுபவர் புகழ் வேண்டுபவர் என்றது. 3

574. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(இ-ள்) தங்கருமத்திற்கு அழிவு வாராமற் கண்ணோட வல்லவர்களுக்கு, இவ்வுலகம் உரிமையாதலை உடைத்து, (எ-று).

இது, நற்குணமாவது கண்ணோட்டமாயினும், அரசர்க்குப் பொருட்கேடு வாராமல் கண்ணோடவேண்டுமென்று எய்தியது விலக்கிக் கூறிற்று. உரிமையிருந்ததென்று பாடம் ஆயினும் அமையும் 4

575. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

(இ-ள்) உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணது: ஆதலால் அஃதில்லாதார் உளராதல் நிலத்துக்குப் பாரமாம், (எ-று)

இது, கண்ணோட்ட மில்லாதாரை நிலம் பொறாதென்றது 5

576. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்.

(இ-ள்) கண்ணோட்ட மில்லாதார் கண்ணிலரே; கண்ணுடையார் கண்ணோட்டமின்மையுமிலராதலான், (எ-று).

20. கண்ணோட்டம்

உம்மை ஐயத்தின் கண் வந்தது. கண் உண்டாயின், நோக்குமாயின், வந்து நிலைமையைக் கண்டு கண்ணோடும்; ஆதலான் கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணிலர் என்று மிகுத்துக் கூறிற்று. 6

577. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண்.

(இ-ள்) பண் என்ன பயனுடைத்தாம், பாடலோடு பொருந்தாதாயின்; அதுபோலக். கண் என்ன பயனுடைத்தாம், கண்ணோட்டமில்லாத காலத்து, (எ-று).

பாடலாவது பாடுதல் தொழில்; அஃதாவது மந்தம் உச்சம் சமம் குடிலம் முதலாயின. அதனொடு பொருத்தமின்மையாவது எடுத்துக்கொண்ட பண் இவ்விடங்களில் ஒவ்வாது நின்று கேட்டார்க்கு இன்பம் பயவாமை.

இது, பிறர்க்கு இன்பம் பயவாதென்றது. 7

578. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினற்
கண்ணோட்ட மில்லாத கண்.

(இ-ள்) அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணோடுதலைச் செய்யாத கண்கள், முகத்து உளபோன்று தனக்கென்ன பயனைத் தரும்? (எ-று).

அளவென்றது தகுதியை. இது தனக்கும் பயன்படாதென்றது. 8

579. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்.

(இ-ள்) கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலனாவது கண்ணோட்டமுடைமை; அஃதில்லையாயின், அவையிற்றைப் புண்ணென் றறியப்படும், (எ-று).

இது, கண்ணோட்டமில்லாத கண்ணிற்குப் பெயர் கூறிற்று 9

20. கண்ணோட்டம்

580. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

(இ-ள்) சுதை மண்ணோடு கூடச்செய்த மரப்பாவையோடு ஒப்பார்; ஒருவன் கண்ணோடு தங்கண் கலந்தபின்பும் கண்ணோட்டத்தைச் செய்யாதவர், (எ-று).

இது, கண்காணாமை பாவைக்கும் ஒக்கும், இது மகனல்லன் என்றது. 10

---

21. ஒற்றாடல்

ஒற்றாடலாவது ஒற்றரையாளவேண்டுமென்பதும், அவ்வொற்றர் திறனும் கூறுதல். பெரியாரைத் துணைக்கோடல் முதலாகக் கண்ணோட்டம் ஈறாகத் தன் அரசிலிருந்து செய்ய வேண்டுவன கூறினார். இது செய்யுங்கால் அவரவர் செய்தியை ஒற்றரான் ஒற்றியறியவேண்டுதலானும், இனி அவர் பிறர் நாடு கொள்ளுங்கால் செய்யவேண்டுவன கூறுகின்றாராதலின் அந்நாட்டியல் பறிந்து வினைசெய்ய வேண்டுதலானும் இவ்வதிகாரம் வேண்டப்பட்டது.

581. ஒற்று முரைசான்ற[1] நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

(இ-ள்) ஒற்றினையும் உரையமைந்த நூலினையும் தெளிய வறிக மன்னவன்; இவையிரண்டும் கண்களாதலான், (எ-று).

மறைந்தவைகாணுங்கால் ஒற்றரானாதல் நூலினானாதல் காண வேண்டுமாதலின் அதற்காக இரண்டினையும் தெளிய அறிக;

---

1. 'முறைசான்ற' என்பது மணக். பாடம்

ஐயம் ஆகிய பொருண்மை தோற்றாது என்றாயிற்று. ஈண்டு நூல் கூறியது எற்றுக்கு எனில், அரசர்க்குக் கல்வி இன்றியமையாதது என்றற்கு. இஃது, ஒற்றுவேண்டுமென்றது. 1

582. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

(இ-ள்) வினாவப்படாத வடிவோடேகூடிக், கண்ணஞ்சுத லும் இன்றி, அறிந்த பொருளை எவ்விடத்தினும் சோர்வின்றியே அடக்கவல்லவன் ஒற்றவனாவன், (எ-று).

வினாவப்படாத வடிவாவது வணிகரும் பார்ப்பாரும் ஆகிய ஒற்றற்குத்தகை எவ்விடத்தும் சோர்வு இன்றியே அடக்க வல்லவன் ஒற்றன். 2

583. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென் செயினுஞ் சோர்வில தொற்று.

(இ-ள்) தவஞ்செய்வார் வேடத்தாராகி, நாட்டெல்லையைக் கடந்துபோய் அங்குள்ள செய்தியை ஆராய்ந்த விடத்து அகப்படா மல் துன்பமாயினும் இன்பமாயினும் செய்யினும், தனதுள்ளத் தைச் சோரவிடாதவன் ஒற்றனாம், (எ-று). 3

584. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

(இ-ள்) பிறரால் மறைக்கப்பட்டவற்றைக் கேட்டறிய வல்லனாகி, அறிந்தவையிற்றைத் தீர அறியவல்லவன் ஒற்றனா வான், (எ-று).

இவை மூன்றானானும் ஒற்றனிலக்கணங் கூறிற்று. 4

585. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(இ-ள்) பகைவராகியும் நட்டோராகியும் மத்திமராகிய உதா சீனராகியும் இருக்கின்ற அரசர்க்கும், அவர் சுற்றத்திற்கும், தஞ்

21. ஒற்றாடல்.

சுற்றத்திற்கும், அறம் பொருள் இன்பங்களைப் பற்றி நிகழ்பவை யெல்லாவற்றையும் நாடோறும் பிறர் அறிவதன் முன்னம் தான் அறிதல் வேந்தனது தொழில், (எ-று). 5

586. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(இ-ள்) தனக்குக் காரியமானவை பார்த்துச் செய்வாரையும் தமக்குச் சுற்றமாயிருப்பாரும், தம்மை வேண்டாதிருப்பாருமாகிய அனைவரையும் ஆராய்ந்தறிவான் ஒற்றனாவன், (எ-று).

மேல் எல்லார்க்கும் நிகழ்பவை ஒற்றவேண்டும் என்றார்; இது தன்காரியத்தில் செய்வார் செய்கின்ற அளவும் தனக்கு நட்பும் பகையுமாய் இருப்பாரையும் ஒற்றவேண்டும் என்றது.

இவையிரண்டும் ஒற்றவேண்டுமிடங் கூறின. 6

587. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல்.

(இ-ள்) ஓரொற்றன் அறிந்து சொன்னபொருளைப் பின்னையும் ஓரொற்றினாலே ஒற்றியறிந்து பின்பு அதனுண்மை கொள்க, (எ-று)

ஒற்றர் தங்களிலே மாற்றரசன் மாட்டும் பொருள் பெற்று மாறுபடச் சொல்லுவாரும் உளராதலான் அவர் சொன்ன பொருளைப் பின்பும் ஒருவனைவிட்டு ஆராய வேண்டும் என்றது. 7

588. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப்படும்.

(இ-ள்) ஒற்றரை விடுங்கால், ஒருவரையொருவர் அறியாமல் விடுக; மூவர்சொல் உடன்கூடின், அது தெளியப்படுமாதலால், (எ-று);

21. ஒற்றாடல்

இஃது ஒருவர் சொன்னாலும் தெளியப்படாது; மூவர் சொன்னது தெளிவு என்றது. இவை இரண்டும் ஒற்றரை யாளுந்திறங் கூறின. 8

589. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

(இ-ள்) ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால், பிறரறியாமற் செய்க; பிறரறியச் செய்தானாயின், அவர் ஒற்றிவந்த பொருளைப் புறத்துவிட்டானாம், (எ-று),

இஃது. ஒற்றர்க்குச் சிறப்பு செய்யுங்கால் பிறரறியாமற் செய்யவேண்டு மென்றது. 9

590. ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(இ-ள்) ஒற்றராலே ஒற்றிப் பொருளை விசாரியாத மன்னவன் கொள்ளக்கிடந்ததொரு வெற்றி இல்லை, (எ-று).

இஃது, ஒற்றின்மையால் வருங்குற்றம் கூறிற்று. 10

22. ஊக்கமுடைமை

ஊக்கமுடைமையாவது ஒருவினை செய்யுங்கால் அதனது அருமையை ஓராது இவ்வாறு செய்யக்கடவேனென்று கருதுங் கருத்துடைமை பிறர்நாடு கொள்ளுங்கால் அவ்விடத்துள்ள செய்தியை ஒற்றரால் அறிந்த பின்பு அதனை அறிந்து கொள்ளக்கடவேனென்று நினைக்குங் கருத்து வேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

22. ஊக்கமுடைமை

591. உடையரெனப்படுவ[1] தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

(இ-ள்) ஒன்றையுடைய ரென்று சொல்லப்படுவது ஊக்கம்; அஃதில்லாதார் மற்றுடைமையாகிய பொருளெல்லாம் உடையரா கார், (எ-று).

இஃது ஊக்க முடைமை வேண்டுமென்றது. 1

592. உள்ள[2]முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(இ-ள்) ஒருவனுக்கு உடைமையாவது அறிவுடைமை; மற்றப் பொருள்முதலாகிய செல்வம் நில்லாது தன்னைவிட்டு நீங்கும், (எ-று).

(பொருள் உடையார்க்கு எல்லா முண்டா மென்பார்க்கு இது கூறப்பட்டது*). 2

593. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு.

(இ-ள்) புகுந்த நீரின் அளவினது பூக்களது வளர்ச்சி; அது போல மாந்தரது உள்ளத்தின் அளவினது ஆக்கம், (எ-று).

ஆக்கம்-அனைய மலர்நீட்டம். ஆக்கம் இதனானே வரும் என்றது. 3

594. ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

(இ-ள்) அசைவில்லாத ஊக்கமுடையான்மாட்டு ஆக்கம் தானே வழி கேட்டுச் செல்லும், (எ-று)

---

1. 'உடைமையெனப்படுவ' என்பது மணக் பாடம்.
2. 'உள்ள' என்பது மணக். பாடம்
* இஃது, மணக்குடவருரையிலுள்ளது.

22. ஊக்கமுடைமை

நினைத்ததனானே ஆக்கமுண்டாமோ என்றார்க்கு இது கூறப்பட்டது. 4

595. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(இ-ள்) நினைப்பனவெல்லாம் உயர்வையே நினைக்க; அந் நினைவு முடியாமல் தப்பினும், முயன்று பெற்றதனோடு ஒக்கும், (எ-று).

இது, தப்பினும் பழிக்கப்படா தென்றது. 5

596. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(இ-ள்) ஒருவனுக்கு அறிவாவது உள்ளமிகுதியுடைமை, அஃதில்லாதாரை மரமென்று சொல்லப்படும்; மக்கள் வடிவோ மரத்தின் வேறாகத் தோன்றுகின்றது, (எ-று).

அறிவும் இதுதானே யென்றது. 6

597. சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு.

(இ-ள்) தளர்ச்சி வந்தவிடத்துத் தளரார் உள்ள மிகுதியுடையார்; மெய்புதைந்த அம்பினுட்பட்டும் பாடுஆற்றும் களிறுபோல, (எ-று).

இது, உயிர்க்கேடு வரினுந் தளரார் என்றது. 7

598. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(இ-ள்) செல்வத்தை இழந்தே மென்று அலம் வருவாரல்லர்; உள்ள மிகுதியை ஒரு தலையாகத் தம்மாட்டுடையார், (எ-று).

22. ஊக்கமுடைமை

இது, பொருட்கேடுவரினுந் தளராரென்றது. 8

599. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(இ-ள்) உள்ளமிகுதியில்லாதார் உலகின்கண் வண்மையுடையே மென்னுங் களிப்பினைப் பெறார், (எ-று).

இஃது, ஊக்க மில்லாதார்க்கு (பொருள்வரவு இல்லையாம்; ஆதலான், அவர் பிறர்க்கு)* ஈயமாட்டாரென்றது. 9

600. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(இ-ள்) யானை பரிய உடம்பினதாய்க் கூரிய கோட்டையும் உடையதாயினும், புலி பொருமாயின் அஞ்சும், (எ-று).

இஃது ஊக்கமில்லாதார் பெரியராயினும் கெடுவர் என்றது. 10

---

23. மடியின்மை

மடியின்மையாவது சோம்பலின்மை. செய்யுங்காரியம் உயர நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்குங்கால், சோம்பாமை வேண்டுமென்று அதன்பின் கூறப்பட்டது.

601. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

(இ-ள்) மடிசெய்தலை மடித்து ஒழுகுக; தங்குடியை உயர் குடியாக வேண்டுவார், (எ-று).

இது, மடியாமை வேண்டுமென்றது. 1

602. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

---

* இருதலைப் பகிரத்துள்ளது மணக்குடவருரையிற் கண்டது.

23. மடியின்மை

(இ-ள்) நெஞ்சத்து மடியினாலே வினையின்கண் மடித்தலைச் செய்து, ஒழுகாநின்ற அறிவிலி பிறந்தகுடி தனக்கு முன்பே கெடும், (எ-று).

மடியுடையார்க்கு உளதாகுங் குற்றம் என்னையென்றார்க்கு இது கூறப்பட்டது. 2

603. குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து விடும்[1]

(இ-ள்) குடியென்னா நின்ற குறைவில்லாத ஒளி, மடியென்று சொல்லப்படுகின்ற மாசு மறைக்கத் தோன்றாது, (எ-று).

இது முன்பே தோற்றமுடைத்தாகிய குடியுங் கெடுமென்றது. 3

604. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(இ-ள்) குடியுங் கெட்டுக்குற்றமும் மிகும்; மடியின் கண்ணே ஒன்றி மாட்சிமைப்பட்ட முயற்சியில்லாதார்க்கு, (எ-று).

இது, குடி கெடுதலேயன்றிக் குற்ற மூண்டா மென்றது. 4

605. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

(இ-ள்) நட்டோரால் கழறுதலையும் பெற்று ஏதிலார் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லையும் கேட்பர், மடியைவிரும்பிச் செய்து மாட்சிமைப்பட்ட முயற்சி யில்லாதார், (எ-று).

இது பிறரால் இகழப்படுவரென்றது. 5

606. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.

1, 'கெடும்' என்பது மணக். பாடம்.

23. மடியின்மை

(இ-ள்) குடிப்பிறந்தார்மாட்டே மடிமை தங்குமாயின், அது தன்பகைவர்க்கு அடிமையாக்கிவிடும், (எ-று).

இது, கீழ்ப்படுத்தலேயன்றி அடிமையும் ஆக்குமென்றது. 6

607. மடியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

(இ-ள்) நில வேந்தர் பலபொருளினாலும் அமைந்த விடத்தும் மடியுடையராயின், மாட்சிமைப்பட்ட பொருளைப் பெறுதல் இல்லை, (எ-று).

இது, செல்வமுண்டாயினும் கெடுமென்றது. 7

608. நெடுநீர் மறவி மடிதுயி னான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

(இ-ள்) விரைந்து செய்யும் வினையை நீட்டித்தலும், செய்ய நினைந்ததனை மறத்தலும், அதனைச் செய்தற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலுமாகிய இவை நான்கும் கெடுந் தன்மையார் காதலித்தேறும் மரக்கலம் (எ-று).

தம்மைக்காதலித்தேறினாரை நடுக்கடலுள் தள்ளும் மரக்கலம் போறலின கலமெனப்பட்டது. துயிலும் மறவியும் நெடுநீர்மையும் மடியினோடு ஒத்த இயல்பின ஆகலான் இவையும் ஒரு வாற்றால் கூற வேண்டுதலின் ஈண்டுக் கூறப்பட்டது. இத்துணையும் மடியினால் வருங் குற்றங் கூறிற்று. 8

609. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

(இ-ள்) குடியை யாளுதலுடைமையின்கண் வந்த குற்றமானது ஒருவன் மடியை ஆளுதலுடைமையைக் கெடுக்கக்கெடும் (எ-று).

குற்றம் என்பது குடிக்குவேண்டுவன செய்யாமை வருங் குற்றம்.

23. மடியின்மை

இது மடியில்லார்க்குப் போக்கலாமென்றது.

610. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

(இ-ள்) மடியில்லாத மன்னவன் எய்துவன், அடியினால் அளந்தானால் கடக்கப்பட்ட வுலகமெல்லாம் கூட (எ-று).

இது, மடியின்மையால் வரும் பயன் கூறிற்று. 10

---

24. ஆள்வினையுடைமை

ஆள்வினை யுடைமையாவது முயற்சியுடைமை. செய்யுங் காரியம் உயர நினைத்துச் சோம்புதல் இலராயிருந்தாலும் அதனை முடியுமாறு முயலவேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

611. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(இ-ள்) தன்னுடம்பிற்கு இன்பத்தை விரும்பாது வினை செய்தலை விரும்புமவன், தன் கேளிர்க்கு உற்றதுன்பத்தை நீக்கி அவர் தளராமல் தாங்குவதொரு தூணாம், (எ-று).

ஆதலால், வருத்தம் பாராது முயலவேண்டு மென்றது. 1

612. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(இ-ள்) ஒரு வினையைச்செய்தல் அருமையுடைத்தென்று முயலாமையைத் தவிர்தல் வேண்டும்; முயற்சி தனக்குப் பெருமையைத் தருமாதலால், (எ-று).

24. ஆள்வினையுடைமை

இது, வினைசெய்து முடித்தல் அருமையுடைத்தென்று தவிர் தலாகா தென்றது. 2

613. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(இ-ள்) வினை செய்யுங் காலத்து வினைகெடுதலைத் தவிர்க; வினைக் குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டதில்லை (எ-று).

இது, தொடங்கின வினையைக் குறைபட விடலாகா தென்றது. 3

614. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்.

(இ-ள்) வினை செய்யுங்கால் சோம்புவானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவாள்; அதனைச் சோம்பின்றி முயலுவான் முயற்சிக் கண்ணே திருமகள் உறைவாளென்று சொல்லுவர். (எ-று)

இது, வினையை மடியின்றிச் செய்யவேண்டு மென்றது. 4

615. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

(இ-ள்) முயற்சியில்லாதான் பிறர்க்கு உபகரித்தல், பகை கண்டா லஞ்சுமவன் கையில்வாள் பிடித்தாற்போலக்கெடும், (எ-று)

இஃது அறம் செய்யமாட்டானென்றது. 5

616. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

(இ-ள்) முயற்சி செல்வத்தினை உண்டாக்கும்; முயலாமை வறுமையை உண்டாக்கிவிடும், (எ-று).

செல்வமும் நல்குரவும் இதனானே வருமென்றது. 6

24. ஆள்வினையுடைமை

617. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(இ-ள்) யார்க்கும் புண்ணிய மின்மை குற்றமாகாது; அறிவன அறிந்து முயற்சியின்மையே குற்றமாவது, (எ-று).

அறிவு - காரிய அறிவு. புண்ணியமில்லாதார் முயன்றால் வருவதுண்டோ வென்றார்க்குக் கூறப்பட்டது. 7

618. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(இ-ள்) புண்ணியம் இன்மையான் ஆக்கம் இன்றாயினும், ஒரு வினையின் கண்ணே முயல்வனாயின், முயற்சி தம்முடம்பினான் வருந்திய வருத்தத் தளவு பயன் கொடுக்கும், (எ-று).

இது, புண்ணியமின்மை யாயினும், பயன்படும் என்றது. 8

619. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ-ள்) ஒரு வினையை மனத்திற் றளர்வு இன்றியே நீட்டியாமல் முயலுமவர், அது பயன் படாமல் விலக்குகின்ற தீவினையை முதுகு புறங்காண்பர், (எ-று).

இஃது, ஊழ்தன்னையும் வெல்வ ரென்றது. 9

620. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(இ-ள்) முயற்சியாகிய நன்மையின் கண்ணே கிடந்தது பிறர்க்கு உபகரித்தலாகிய பெருமிதம், (எ-று).

இஃது அறஞ் செய்தலும் இதனாலே யாகுமென்றது.

25. இடுக்கணழியாமை

இடுக்கணழியாமையாவது யாதானும் ஒரு துன்பம் வந்துற்ற காலத்து அதற்கு அழியாமை. வினை செய்யுங்காலத்தினை முடிவு செய்வதன் முன்னம் சில இடையூறு வரும்; வந்தால் அதனைப் பொறுத்துச் செய்கின்ற வினையை முற்ற முயல வேண்டுமென்று அதன்பின் கூறப்பட்டது.

621. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(இ-ள்) தனக்குத் துன்பம் வந்த காலத்து அதனை இகழ்ந்து நகுக; அத்துன்பத்தை மேன்மேலும் அடர்க்க வல்லது அந்நகுதல் போல்வது பிறிதில்லை, (எ-று).

இஃது, இடுக்கணுக்கு அழியாமை வேண்டுமென்றது. 1

622. இன்பம் விழையா திடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

(இ-ள்) இன்ப முறுதலை விரும்பாது இடும்பை யுறுதலை இயல்பாகக் கொள்ளுமவன், துன்ப முறுதல் இலன் (எ-று).

இது, இடுக்கணை யியல்பாகக் கொள்ள வேண்டுமென்றது 2

623. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(இ-ள்) துன்பத்துக்குத் துன்பத்தைச் செய்வார், அத்துன்பத்துக்குத் துன்ப முறாதவர், (எ-று).

இது. பொறுக்க வேண்டு மென்றது. இவை மூன்றும் பொதுவாகக் கூறப்பட்டன. 3

624. மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து

25. இடுக்கணழியாமை

(இ-ள்) இடுக்கண் வந்து உற்றவிடத்தெல்லாம் பகடு போலத் தளர்வின்றிச் செலுத்த வல்லவனை உற்ற துன்பம் இடர்ப் படுதலை யுடைத்து, (எ-று).

இது, தளர்வில்லாதவன் உற்ற துன்பம் கெடு மென்றது. 4

625. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(இ-ள்) மேன்மேலே துன்பம் வந்தனவாயினும், மனனழி வில்லாதவன் உற்ற இடுக்கண், தான் இடுக்கண் படும், (எ-று).

இது மனனழிவில்லாதவன் உற்றதுன்பம் மேன்மேல் வரினுங் கெடுமென்றது. 5

626. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

(இ-ள்) வெள்ளம் போன்ற துன்பம், அறிவுடையவன் நெஞ்சினானே வினைப்பயனென்று நினைக்கக் கெடும், (எ-று).

இது பலவா யொருங்கு வரினும், அறிவுடையா னுற்ற இடுக்கண் கெடுமென்றது. 6

627. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்.

(இ-ள்) உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று கருதித்தமக்கு உற்ற துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளார் கற்று மேலாயினார், (எ-று).

இது, மேல் என்றமையாற் றவஞ் செய்யுங்கால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று; அதுவும் ஒரு வினை ஆதலான் 7

628. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்.

(இ-ள்) பொருளற்றேமென்று இரங்கித் துன்ப முறார்கள்; அதனைப் பெற்றேமென்று போற்றி வைத்தலை நன்றென்று தெளியாதவர், (எ-று).

25. இடுக்கணழியாமை

தெளிவு-துணிவு இது, பொருட்கேட்டினால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று. 8

629. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

(இ-ள்) இன்பம் நுகருமிடத்து அதனை விரும்பாதவன், அதனால் வருந்துன்பம் நுகருமிடத்து வருத்த முறுதலிலன் (எ-று).

இன்பம் நுகருமிடத்து அதனை விரும்பாமையாவது அவ்விடத்துத் தான் அழிந்து நில்லாமை. இது, காமத்தால் வருந்துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று. 9

630. இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு.

(இ-ள்) இன்னாமையை இன்பம்போலக் கொள்வனாயின், அது பகைவரும் விரும்புவதொரு சிறப்பாம், (எ-று).

மேற்கூறியவாற்றால் செய்தலே யன்றித் துன்பத்தை இன்பம் போல கொள்வனாயின், பகைவரும் மதிப்பரென்றது. 10

அரசியல் முடிந்தது.

2. அமைச்சியல்

1. அமைச்சு

அமைச்சாவது அமைச்சர் செய்யுந் திறன்கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினார் எனின் அது கூறிய அதிகாரம் பத்தினும் முற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்களெல்லாம் ஓரதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்யவேண்டுவன நாலதிகாரத்தானும், புறமண்டலத்திற் போம் தூதர் இலக்கணம் ஓரதிகாரத்தானும், அவர் செய்யுந்திறன் நான்கதிகாரத்தானுங் கூறினாரென்று கொள்ளப்படும். மேல் அரசர் செய்யுந் திறன் கூறினார். இனி ஒருவினையைச் செய்து முடிக்குங்கால் அமைச்சர் வேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

631. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(இ-ள்) அஞ்சாமையும் குடிப்பிறத்தலும் இந்திரியங்களைக் காத்தலும் நூல்முகத்தானறிதலும் முயற்சியும் என்னும் ஐந்துங் கூட மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான், (எ-று).

இவை அமைச்சனாவதன் முன்னே வேண்டுமாதலின், முற்கூறப்பட்டன. 1

632. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

(இ-ள்) மேற்கூறிய நூற்கல்வியோடுகூட நுண்ணிதாகிய மதியினையும் உடையார்க்கு அதனினும் நுண்ணியவாய் மாற்றாராலெண்ணப்பட்டு எதிர் நிற்கும் வினைகள் யாவுள? (எ-று)

இது மேற்கூறியவற்றோடு மதியும் வேண்டுமென்றது. 2

633. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

2. அமைச்சியல்—1. அமைச்சு

(இ-ள்) அறத்தினையும் அறிந்து, நிரம்பியமைந்த சொல் லினையும் உடையனாய், எல்லாக் காலத்தினும் செய்யுந் திறன் களையும் அறிய வல்லவன் அரசற்கு அமைச்சனாவான், (எ-று)

தேர்ச்சித்துணை ஆதலின் தேர்ச்சித்துணை என்று பெயரிட் டார். எஞ்ஞான்றும் என்றது நிகழ்காலத்தினும் எதிர்காலத்தினும். 3

634. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(இ-ள்) ஒருவினையை நன்றோதீதோ என்று ஆராய்தலும், அதனைச் செய்ய நினைத்தால் முடியுமாறெண்ணிச் செய்தலும், ஐயமாகிய வினையைத் துணிந்து சொல்லுதலும் வல்லவன் அமைச் சனாவான், (எ-று). 4

635. கருவியுங் கால முஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

(இ-ள்) செய்தற்கு அரியவினையும், அதற்காங்கருவியும், அதற்காங்காலமும், அதனையிடையூறு படாமற் செய்து முடித்த லும் இந்நான்கும் மாட்சிமைப் பட்டவன் அமைச்சனாவான், (எ-று)

செய்ய வேண்டும் அரியவினையாவதுமறுமண் டலங்கோடல்; கருவியாவது யானை குதிரை முதலியபடை; காலமாவது நீரும் நிழ லுமுள்ள காலம்; செய்தலாவது மடியின்றிச் செய்தல். 5

636. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

(இ-ள்) மாற்றரசரிடத்து உள்ளாரையும் அவர்க்கு நட்பா கிய அரசரையும் அவரிடத்தினின்று பிரித்தலும், அவ்வாறு பிரிக்கப் பட்டாரை விரும்பித் தம்மிடத்துக் கோடலும், தம்மிடத்து நின்றும் பிரிந்தாரைக் கூட்டிக்கொளலும் வல்லவன் அமைச்சனாவான், (எ-று). 6

637. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

(இ-ள்) செயத்தகுவன அறிந்த விடத்தும், அது செய்யுங்கால் உலகத்து நடை அறிந்து செய்க, (எ-று).

உலகநடை அறிதலாவது அரசன் சீலமும் பரிவாரத்திலுள்ளார் நிலைமையும் அறிதல். இவையிற்றையறியாது செய்யிற் குற்றமென்றவாறு ஆயிற்று. 7

638. அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(இ-ள்) அரசன் அமைச்சன் கூறிய பொருளை யறிக; அவன் ஒன்றறியானாயினும், அவனுக்கு உறுதியாயினவற்றை அருகிருந்த அமைச்சன் சொல்லுதல் கடன் (எ-று).

அரசன் கேளானென்று சொல்லாதொழிதலாகாது. இத்துணையும் அமைச்சரிலக்கணம் கூறப்பட்டது. 8

639. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(இ-ள்) அடைவுபட எண்ணியும், தம்மால் முடிதல் இல்லாதவற்றைச் செய்யாநிற்பர்; வினைசெய்யுந் திறன் இல்லாதார், (எ-று)

இஃது எண்ணவல்லாராய் வினை செய்ய மாட்டாதாரும் உளரென்று கூறிற்று. 9

640. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வ
ரெழுபது கோடி யுறும்[1]

(இ-ள்) குற்றப்பட எண்ணும் அமைச்சனில் எழுபதுகோடி மடங்கு நல்லர், உட்பகையாய்த் தன் னருகிலிருப்பவர் (எ-று).

இவனைப்போல் அவர்கள் செறுக்க மாட்டார் என்றவாறு. இவை யிரண்டும் மந்திரிகள் ஆகாதாரது இலக்கணங் கூறின. 10

---

1. ‘ தலை ’ என்பது மணக். பாடம்.

2. சொல்வன்மை

சொல்வன்மையாவது வார்த்தைசொல்ல வல்லவனாதல். அரசர்க்குக் கல்வி இன்றியமையாததுபோல அமைச்சர்க்கு இஃது இன்றியமையாமையின், அதன்பின் கூறப்பட்டது.

641. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(இ-ள்) சொல்லைச் சொல்லுக; தான் சொல்ல நினைத்த சொல்லைப் பிறிதொரு சொல்லாய் வெல்லுஞ் சொல் இல்லையாதலை யறிந்த பின்பு (எ-று).

சொல்வன்மையாயின பலவற்றுள்ளும் தோலாவகை சொல்லுதல் சிறப்புடைத்தாதலின் இது முற் கூறப்பட்டது. 1

642. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(இ-ள்) சொற்களைச் சேர்த்து இனிதாகச் சொல்ல வல்லாரைப்பெற்றாராகில், உலகத்தார் தாமே விரைந்து சென்று 'செய்யுந் தொழில்யாது' என்று கேட்பர், (எ-று).

இஃது இனிதாகச் சொல்லவேண்டுமென்றது. 2

643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(இ-ள்) வினாவினாரைப் பிணித்துக் கொள்ளுந் தகையவாய், வினாவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது, (எ-று).

கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார் எனினும் அமையும்; சொல்லக் கேட்டார் எனினும் அமையும். கேளாமையும் அவ்வாறே கொள்ளப்படும். இது நயம்படக் கூற வேண்டுமென்றது. 3

644. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்.

2. சொல்வன்மை

(இ-ள்) தாம்சொல்லுங்கால் பிறர் விரும்புமாறு சொல்லிப் பிறர் சொல்லுங்கால் அச்சொல்லின் பயனைத் தெரிந்துகொள்ளுதல் மாட்சிமைற் குற்றமற்றாரது கோட்பாடு, (எ-று).

இது, நயம்படக் கூறுதலே யன்றிப், பிறர் சொல்லுஞ் சொல் லறிந்தும் சொல்லல் வேண்டுமென்றது. 4

645. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(இ-ள்) ஆக்கமும் கேடும் சொல்லினால் வருதலால், அச் சொல்லின்கண் சோர்வைப் போற்றிக் காக்க, (எ-று)

இது, சோர்வுபடாமற் சொல்ல வேண்டு மென்றது. 5

646. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

(இ-ள்) பல சொற்களைச் சொல்லக் காதலியா நிற்பர், குற்ற மற்ற சில சொற்களைத் தெளியச் சொல்லுதலை அறியமாட்டா தார், (எ-று).

மன்ற-தெளிய. இது, சுருங்கச் சொல்லல் வேண்டுமென் றது. 6

647. இணருழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(இ-ள்) இணராக மலர்ந்தும் நாற்ற மில்லாத பூவையொப் பர், கற்றதனைப் பிறரறிய விரித்து உரைத்துச் சொல்லமாட்டாதார். (எ-று).

இது, சுருங்கச் சொல்லுதலே யன்றி, வேண்டுமிடத்து விரித் துஞ் சொல்ல வேண்டு மென்றது. 7

648. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

2. சொல்வன்மை

(இ-ள்) ஒருவன் சொல்ல வல்லனுமாய் அதனைச் சோர விடுதலும் இல்லானாய் அஞ்சாது சொல்லுதலும் உடையவனாயின், அவனை மாறுபாட்டின் கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது, (எ-று)

இம் மூன்று பகுதியினும் என்பதனால் அவனைச் சொல்லில் வெல்வாரில்லை என்றது. 8

649. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

(இ-ள்) சொல்லைச் சொல்லுந் திறனறிந்து சொல்லுக; அதனின் மேம்பட்ட அறனும் பொருளும் இல்லை, (எ-று).

திறனறியவே, புறங்கூறாமையும் பயனில சொல்லாமையும் பொய் கூறாமையும் உளவாம்; ஆதலின், அறனாயிற்று; அரசர் மாட்டும் ஏனையோர் மாட்டும் தகுதியறிந்து சொல்லுதலால் பொருளுமாயிற்று; என்னை? அதனானே ஆக்கமும் கேடுமாகலான். இஃது அறனும் பொருளும் பயக்கு மென்றது. 9

650. நாநல னென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

(இ-ள்) நாவினது நலமென்று சொல்லப்படுகின்ற நலம் ஒருவற்கு உடைமையாவது;; அந்நலம் எல்லா நலத்துள்ளும் உள்ளதொரு நலமன்று; மிக்கது, (எ-று)

இஃது எல்லா அழகினும் மிகுந்த அழகு என்றமையால், இன்பம் பயக்கு மென்றது. 'சொல்வலை வேட்டுவன்' என்றாருமுளர் (புறம்-252) 10

3. வினைத்தூய்மை

வினைத்தூய்மையாவது செய்யும் வினை குற்றம் பயவாமற் செய்தல். மேற் சொல்லுங்கால் சொல்வதையும் பிறர் விரும்புமாறு சொல்லல் வேண்டுமென்றார், அது செய்யும் வினையும் அவ்வாறு செய்ய வேண்டுதலின், அதன் பின் கூறப்பட்டது.

651. துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

(இ-ள்) துணைநன்மை ஆக்கத்தைக் கொடுக்கும்; வினை நலம் அவ்வளவே யன்றி, வினை நன்மை வேண்டியதெல்லாம் ஒருங்கு கொடுக்கும், (எ-று).

துணைநன்மை ஆக்கங் கொடுத்தல் எல்லாரானும் அறியப் படுதலின், ஈண்டு எடுத்துக்காட்டாக வந்தது. இது வினைத்தூய்மை வேண்டும் என்பதூஉம் அதனால் பயனும் கூறிற்று. 1

652. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

(இ-ள்) எல்லாக் காலமும் தவிர்தல் வேண்டும்; புகழோடு நன்மை பயவாத வினையை, (எ-று).

என்றுமென்றது, செயலற்ற காலமுமென்றது. இது முதலாகக் கடிய வேண்டுவன கூறுகின்றாராகலின் முற்பட அறமும் புகழும் பயவாத வினையைத்தவிர்க என்றது. 2

653. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

(இ-ள்) தமக்குப் புகழ் கெடவரும் வினையைச் செய்தலை ஆக்கங் கருதுவார் தவிர்க, (எ-று).

ஓஒதல் வேண்டும் என்றது ஓவுக என்னும் பொருட்கண் ஓவுதல் வேண்டும் என ஒரு சொல் நீர்மைப்பட வந்தது. இது, மூன் புள்ள புகழ் கெடவரும் வினையையும் தவிர்க என்றது. 3

3. வினைத்தூய்மை

654. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

(இ-ள்) துணியப்பட்ட தென்று பின்னிரங்கப்படும் வினையைச் செய்யா தொழிக; வினை செய்வானாகில், அது போல் வனவுஞ் செய்யாமையே நல்லது, (எ-று).

இது, பின்னிரங்கப்படும் வினை செய்யலாகா தென்றது. 4

655. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

(இ-ள்) தன்னைப் பயந்தாள் பசி கண்டானாயினும், சான்றோரால் பழிக்கப்படும் வினையைச் செய்யா தொழிக, (எ-று).

இது, நல்லோர் பழிக்கும் வினையைத் தவிர்க என்றது. 5

656. இடுக்கண் வரினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

(இ-ள்) துன்பம் வரினும் இழிவாகிய வினைகளைச் செய்யார், துளக்கமற்ற தெளிவுடையார், (எ-று).

அவர் வருமது வரும் என்றுநினைப்பர். இது, பிறரால் இகழப் படுவன செய்யற்க வென்றவாறாயிற்று. இத்துணையும் கடிய வேண்டுவன கூறப்பட்டது. 6

657. கடிந்த கடிந்தொரரார் செய்வார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(இ-ள்) நல்லோரால் கடியப்பட்டவற்றைக் கடிந்து நீக்காது செய்யுமவர்க்கு, அவ்வினை தான் கருதினவாற்றான் முடிந்த பின்பு பீடையைத் தரும், (எ-று).

உம்மையால் முடிவதன் முன்னும் பீடைதரும் என்றது. இது, நன்மையல்லாத வினை செயின், அதுவும் தீமை தருமென்றது. அவை பின்பே காட்டப்படும் என்றார். 7

3. வினைத்தூய்மை

658. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(இ-ள்) பிறர் (அழக்)கொண்ட பொருள்களெல்லாம் தாமும் அழப்போம்; அவ்வாறன்றி நற் பகுதியால் கொண்ட பொருளை இழந்தாராயினும், பின்பு பயன்படும், (எ-று).

இது, தேடின பொருள் கெடுமென்றது. 8

659. சலத்தாற் பொருள்செய்தே மாத்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(இ-ள்) வஞ்சத்தாலே பொருள் தேடி மகிழ்ந்திருத்தல், பசுமட் கலத்திலே நீரை முகந்துவைத்த தன்மைத்து, (எ-று).

இது, தானும் பொருளுங் கூடிக் கெடுமென்றது. 9

660. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(இ-ள்) பழிப்பினாலே மிகுதியாக எய்துகிற ஆக்கத்தினும், சான்றோர்க்குப் பெறுமிடியே தலை, (எ-று). 10

---

4 வினைத்திட்பம்

வினைத்திட்பமாவது வினையின்கண் திண்ணியராதல். மேல் நல்வினை செய்யவேண்டுமென்றார்; அது செய்யுங்கால் திண்ணியராச் செயல் வேண்டுமாதலின், அதன்பின் கூறப்பட்டது.

661. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

4. வினைத்திட்பம்

(இ-ள்) தாம் எண்ணிய கருமங்களை எண்ணியபடியே பெறுவர்; அவ்வாறு எண்ணியவர் அவ்வினையைச் செய்து முடிக்குந் திண்மையுடையாராகப் பெறுவாராயின், (எ-று).

இது, வினையின்கண் திண்மை வேண்டுமென்றது. 1

662. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

(இ-ள்) கருவி முதலாயின வெல்லாவாற்றானும் திண்மை பெற்றவிடத்தும், வினையினது திண்மையை விரும்பாதாரை உலகத்தார் விரும்பார், (எ-று).

பல பொருளும் மிகுதியுடையார்க்கு வினைத்திட்ப மின்றானால் வருங் குற்ற மென்னை யென்றார்க்கு, இது கூறப்பட்டது. 2

663. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய[1] வெல்லாம் பிற.

(இ-ள்) வினைத் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவன் மனத்தின் உண்டான திண்மை; அதனையொழிய மற்றையவெல்லாம் திண்மையென்று சொல்லப்படா, (எ-று).

மற்றைய வென்பது கருவியும் உபாயமுடித்தலும், வினைத்திட்பம் யாதென்றார்க்கு இது கூறப்பட்டது. 3

664. * ஊறொரா குற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள்.

---

1. 'மற்றவை' என்பது மணக். பாடம்.

* [பரிமேலழகர் கூறும் பாட பேதம் 'ஊறொரார்' என்பது. இப்பாடம் மணக்குடவர் பரிப்பெருமான் கொண்டனவே யாதல் உரையான் அறியப்பெறும் ஆகவே 'ஊரொறாவ்' என்றபாடம் 'ஊறொரார்' என்று இங்குத் திருத்தப் பெற்றது. பின்னும் ஊறுஓராது என்றமை காண்க.]

4. வினைத்திட்பம்

(இ-ள்) வினை செய்யுங்கால் உறும் துன்பத்தை ஓரார் ஆதலும் துன்பமுற்றால் தளரார் ஆதலுமாகிய இவ்விரண்டினது நெறியென்று சொல்லுவர்கள் வினையை எண்ணினவர்கள் செய்து முடிக்கும் கோட்பாடு. மனத்திட்பமாவது யாது என்றவர்க்கு அஃது இரண்டுவகைப்படும் என்று கூறிற்று. 4

665. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(இ-ள்) ஒரு வினையை இவ்வாறு செய்தும் என்று சொல்லுதல் யாவர்க்கும் எளியவாம்; அதனைச் சொல்லிய வாற்றால் செய்து முடித்தல் யாவர்க்கும் அரியவாம், (எ-று).

மேற்கூறிய இருவகையினும், ஊறுஓராது செயலின் வகை கூறுவார், முற்படச் சொல்லியவாறு செய்ய வேண்டும் என்று கூறினார். 5

666. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(இ-ள்) கலக்கமின்றி ஆராய்ந்து கண்ட வினையிடத்துப் பின்னைத் துளக்கமின்றி, அதனை நீட்டியாது செய்க, (எ-று).

இது, விரைந்து செய்யவேண்டுமென்றது.

667. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும்.

(இ-ள்) ஒரு வினையைத் தொடங்கினால், முடிவிலே சென்று மீளல் செய்வது ஆண்மையாவது; இடையிலே மீள்வனாயின், அது மிகுதியைக் கெடாத நோயைக் கொடுக்கும், (எ-று).

சென்று மீளல் சுழல்தல் ஆயிற்று. இது, தொடங்கின வினையை முடியச் செய்ய வேண்டுமென்றது. 7

668. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

4. வினைத்திட்பம்

(இ-ள்) முற்பாடு துன்பம் உறவரினும், துணிந்து செய்க; பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை, (எ-று).

இனி உற்ற பின் ஒல்காமையின் பகுதி கூறுவார், முற்படத் துன்பம் உறவரினும் துணிந்து செய்க பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை என்றார். 8

669. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

(இ-ள்) யாவரையும் வடிவுண்டு இகழ்தலைத் தவிர்தல் வேண்டும்; உருளாநின்ற பெரியதேர்க்குக் காலாய் நடக்கின்ற உருளைகளைக் கழலாமல் தாங்குகின்ற சிற்றாணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் உளது; ஆகலான்; (எ-று).

திண்ணியாரை அறியுமாறு என்னை என்றார்க்கு வடிவு கண்டு அறியலாகாது என்பதூஉங் கூறிற்று. 9

670. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கு
றூரெய்தி யுள்ளப் படும்.

(இ-ள்) மிகுதியெய்தி மாட்சிமைப்பட்டாரது வினைத்திட்பமானது அரசன் மாட்டு உறுதலையெய்திலான் எல்லாராலும் நினைக்கப்படும், (எ-று).

எய்த என்பது திரிந்தது. இது, வினைதிட்ப முடையாரை எல்லாரும் விரும்புவாரென்றது. 10

5. வினைசெயல்வகை

வினைசெயல்வகையாவது வினை செய்யுமாறு கூறுதல். மேல் வினை செய்யுங்கால் திண்ணியராக வேண்டுமென்றார். அவ்வாறு திண்ணியார் வினைசெய்யும் வண்ணம் கூறுகின்றாராதலின், அதன் பின் கூறப்பட்டது.

671. பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
இருடீர வெண்ணிச் செயல்.

(இ-ள்) பொருளும் கருவியும் காலமும் செய்யும் வினையும், பகைவரைப் பொருதற்குரிய இடமுமென்னும் ஐந்தினையும் மயக்கந் தீர எண்ணிப் பின்பு வினைசெய்யத் தொடங்குக, (எ-று).

இஃது; ஒவ்வொன்றும் இரண்டு வகைப்படும்: பொருளாவது கெடும் பொருளும் பெறும் பொருளும்; கருவி தனக்கு உள்ளபடையும் மாற்றரசர்க்கு உள்ள படையும்; காலம் தனக்காங்காலமும் பிறர்க்காங் காலமும்; வினை தான் செய் வினையும் பகைவர் செய் வினையும்; இடம் தனக்காமிடமும் பகைவர்க்கா மிடமும் இவை செய்யும் வினைக்கு முற்படவேண்டுமென்று முற்கூறப்பட்டன. 1

672. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

(இ-ள்) தாழ்த்துச் செய்யவேண்டும் வினையைத் தாழ்த்துச் செய்க; தாழாமற் செய்யவேண்டும் வினையைத் தாழாமற் செய்க, (எ-று).

இஃது எய்தியது விலக்கிச் செய்யத்துணிந்தாலும் காலம் பார்த்துச் செய்ய வேண்டுவன தாழாது செய்க என்றது. 2

673. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(இ-ள்) வினையும் பகையுமென்னும் இரண்டினது ஒழிவும் விசாரிக்குங் காலத்துத் தீயினது ஒழிவுபோலக் கெடுக்கும் (எ-று).

5. வினை செயல்வகை

எச்சம்-சேஷம். இது, வினைசெய்யுங்கால் சிறிதொழியச் செய்தோமென்று விடலாகாதென்றது. ஈண்டுப்பகை கூறியது பன்மையெனின் வினைசெய்வார் பகைவர் மாட்டு ஆதலான் அவரைச் சிறியர் என்று இகழாமையும் வேண்டும் ஆதலான் ஈண்டுக் கூறப்பட்டது. 3

674. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

(இ-ள்) இயலும் இடமெல்லாம் வினைசெய்தல் நன்று; இயலாத காலத்து அதனை நினைந்திருந்து, இயலும் இடம் பார்த்துச் செய்க, (எ-று)

மேல் பகை எஞ்சவிடலாகாது என்றார்; அதுமுடியாத காலத்துச் செய்யுமாறென்னை என்றார்க்கு அதனை இகழாது பின்பு காலம் பார்த்துச் செய்க வென்றது. 4

675. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

(இ-ள்) உறையும் இடம் சிறியார் தமது இடன் நடுங்குதற்கு அஞ்சித் தமது குறைதீரப்பெறின், தம்மின் பெரியாரைத் தாழ்ந்து, நட்பாகக் கொள்வர், (எ-று).

இது சிறியனாயின் இவ்வாறு செய்ய வேண்டுமென்றது. இவையெல்லாம் அரசர்க்கும் ஒக்கச் செய்ய வேண்டுமாயினும் அமைச்சுத் தொழில் ஆதலான் ஈண்டுக் கூறப்பட்டன. 5

676. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

(இ-ள்) தஞ் சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்ய வேண்டும் (எ-று).

இது, சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், வேண்டுவன விரைந்து செய்யவேண்டும் அன்றே அதனினும் பகைகொள்ளாமை

5. வினை செயல்வகை

விரைந்து செய்தல் வேண்டும், அவரும் தம்மோடு ஒத்தவலியுடைய ராயின் (எ-று). 6

677. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(இ-ள்) வினை தொடங்கினால் அது முடியும் வண்ணமும், அதற்கு வரும் இடையூறும், முடிந்த இடத்துண்டாகும் பயனும் முன்பே அறிந்து வினைசெய்க, (எ-று).

முடிவு-மேற்கூறியவற்றால் செய்யுங்கால் முடியும் முடியாது என்றறிதல். இடையூறு பகைவர்க்கு வரும் படைத்துணை, முற்றியாங்கெய்தும் படுபயன்-நேரும் இடையூறு சிறிதாய்ப் பெறும் பொருள் பெரியதாயினும் அதன் பின்பு விளையும் விளைவு. இது வெற்றிப்பகை தோற்றுதல். 7

678. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

(இ-ள்) செய்யத்தகும் வினையைச் செய்யுமவன் செய்யும் முறைமையாவது, அவ்வினையினது உளப்பாடு அறிவானது உள்ளத்தைக் கூட்டிக்கோடல்.

உள்ளங்கொளல் என்றது உண்மை (யறிந்தவர் முன்னரேயு) ளர் என்றற்கு. இது வினைசெய்யுங்கால் அவ்வினையை முன்பு அறியுமவர்களைக் கொள்ளவேண்டும் என்றது. 8

679. வினையால் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(இ-ள்) ஒரு வினையாலே பிறிதொரு வினையைச் செய்து கொள்க; அது மதயானையோடே மதயானையைப் பிணைத்தாற் போலும், (எ-று)

நனைகவுள் எனபதனை இரட்டித்துக் கூட்டித் தனக்கு ஒரு பகைவர் தோன்றினால் அவர்க்குப் பகையாயினாரை அவரோடு பகைக்குமாறு பண்ணுக; அவர் தம்முள் தாம் பொருதல்லது தம்பக் கல் வருவாரில்லை யென்றவாறாயிற்று. 9

5. வினை செயல்வகை

680. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

(இ-ள்) சூழ்ச்சிக்கு எல்லை துணிவு பெறுதல்; அவ்வாறு துணிந்தவினை தாழ்ச்சியின் கண்ணே கிடக்குமாயின், அது தீதாம், (எ-று).

இது, வினைசெயத் துணிந்த காலத்து நீட்டிக்குமாயின், அதனையறிந்து பகைவர் தம்மைக் காப்பர்; ஆதலால், நீட்டியாது விரைந்து வினை செய்யவேண்டுமென்றது. 10

6. தூது

தூதாவது மாற்றரசர்மாட்டுச் சந்துசெய்யும் அமாத்தியரிலக்கணங் கூறுதல். இனிப் பகைவர்மாட்டு அமாத்தியர் செய்யுந் திறங் கூறுகின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

681. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(இ-ள்) அரசன் மாட்டு அன்புடைமையும், அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்தனால் விரும்பப்படும் குணனுடைமையும், தூதாகிச் சென்று சொல்லுமவனது இயல்பு, (எ-று).

வேந்தனால் விரும்பப்படும் குணமாவது அவன் விரும்புமவற்றைத்தான் விரும்பாமை. 1

682. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

6. தூது

(இ-ள்) தூய்மையுடைமையும், சுற்றமுடைமையும், ஒரு பொருளை யாராய்ந்து துணிதலுடைமையும், இம்மூன்றின் கண்ணும் மெய்யுடைமையும் தூதற்கு இயல்பு. (எ-று).

தூய்மை-மெய்யும் மனமும் தூயனாதல். இதன் மெய்ம்மையாவது பிறர்க்கு வேண்டிச் செய்யாறு தனக்கு வேண்டிச் செய்தல். சுற்றத்தார் மாட்டும் பொய் கூறாமற் பகைவர் மாட்டும் பொய் கூற வேண்டுதலின், இது பிற்கூறப்பட்டது. துணிவு - துணிந்த பின்பு ஐயம் தோற்றாமல் துணிதல். வழியுரைப்பார் என்பது, அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுதலால். 2

683. நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(இ-ள்) பல நூல்களையும் கற்றார்முன்னர் அந்நூல்களைத் தானுஞ் சொல்ல வல்லவனாதல், வேலுடையார் முன்னின்று தன்னரசனுக்கு வெற்றியாகிய வினையைச் சொல்லுமவனது இயல்பு, (எ-று)

684. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றின்
செறிவுடையான் செல்க வினைக்கு

(இ-ள்) அறிவும், வடிவும், தெளிந்த கல்வியும் இம் மூன்றினது அடக்கமுடையவன் வினைக்குச் செல்லுக, (எ-று).

அறிவு-இயற்கையறிவு. உருவு-வடிவழகு. ஆராய்ந்த-கலைகளை அறிந்து ஆராய்ந்ததனால் ஆட்சியான கல்வி. இவையிற்றினது அடக்கமாவது இம்மூன்றினால் வரும் பெருமிதத்தை அடக்கி ஒழுகுதல். 4

685. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பாற்
கின்றி யமையாத மூன்று.

(இ-ள்) அன்புடைமையும் அறிவுடைமையும், தெரிந்த சொல்வன்மை யுடைமையும் என்னும் மூன்றும் தூதுரைப்பாற்கு இன்றியமையாதனவாம், (எ-று).

6. தூது

ஆராய்ந்த என்றமையால் கல்வி ஆயிற்று. மேற் கூறிய குணங்கள் எல்லாவற்றினும் இவை மூன்றும் இன்றியமையாதன என்று கூறிற்று. இத்துணையும் தூதரிலக்கணம் கூறிற்று. 5

686. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

(இ-ள்) தன்னரசன் சொல்லிவிட்ட மாற்றத்தைப் பகையரசர்க்குச் சொல்லுமவன், தன்னரசன் சொல்லும் சொற்களுக்கு வடுவான சொற்களை மறந்துஞ் சொல்லாத அஞ்சாமையையுடையவன்; (எ-று).

இது முதலாகச் சொல்லும் திறன் கூறுகின்றதாகலின் முற்படச் சொல் சொல்ல வேண்டும் என்றது. 6

687. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(இ-ள்) தன் உயிர்க்கு இறுதி பயக்குமாயினும், சொல்லுதலை ஒழியாதே, சொல்லுதலின், தன் அரசனுக்கு உறுதியுண்டாம் சொற்களை கூறுமவன் தூதனாவான், (எ-று).

இஃது இறுதி பயப்பினும் என்றமையான் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுக என்றது. 7

688. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

(இ-ள்) சுருங்கச்சொல்லி விரும்பாத சொற்களை நீக்கி, மகிழுமாறு சொல்லித் தன்னரசனுக்கு நன்மையைத் தருமவன் தூதனாவான், (எ-று).

இது, சொல்லுமாறு கூறிற்று. 8

689. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

6. தூது

(இ-ள்) தன்னரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுங்கால் பகையரசன் வெகுண்டானாயின் அது மாற்றுதற்காம் உபாயத்தைக் கற்று. அவ்விடத்து அஞ்சுதலின்றி, வெகுட்சி தீருமாறு இசையச் சொல்லி, நாளோடே கூடச்செய்யத் தகுவன அறிந்து செய்ய வல்லவன் தூதனாவான், (எ-று).

தக்கதறிதலாவது சொல்லின வார்த்தையைச் சொல்லாமற் போதலும், வினை செய்து போதலும். இஃது இவ்விடத்திற்கு ஆவனசெய்யவேண்டும் என்றது. 9

690. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(இ-ள்) காரியம் நின்ற முறைமையை யறிந்து காலத்தையும் நினைத்து, இடமும் அறிந்து, தானேயெண்ணிச் சொல்ல வல்லவன் தலையான தூதனாவான், (எ-று).

தலை இடை கடை என மூன்று வகையாருள் மேற்கூறின வெல்லாம் இடையும் கடையும் ஆகிய தூதர் இயல்பு கூறினார். இது தலையான தூதரிலக்கணம் கூறிற்று, தலையான தூதன் தானே காரியம் அறிந்து சொல்லும்; இடையான தூதன் சொன்ன மாற்றத்தைச் சொல்லும்; கடையான தூதன் ஓலை காட்டும். 10

7. மன்னரைச்சேர்ந்தொழுகல்

மன்னரைச் சேர்ந்தொழுகலாவது அரசர்மாட்டு அமாத்தியர் ஒழுகுந்திறன் கூறுதல். இது முதலாக அவையஞ்சாமை ஈறாகக் கூறுகின்றவை தம்மரசர்மாட்டு வேண்டுமாயினும், மாற்றரசர் மாட்டும் வேண்டுதல் இன்றியாமையாத சிறப்புடைத்தாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

691. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

(இ-ள்) அரசன் குறிப்பையறிந்து, காலம் பார்த்து, வெறுப்பில்லாதனவாய்ச் சொல்ல வேண்டுவனவற்றை விரும்புமாறு சொல்லுக, (எ-று).

இது, சொல்லுந் திறன் கூறிற்று. 1

692. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(இ-ள்) வேந்தனால் விரும்பப்படுவனவற்றைச் சொல்லித் தமக்குப் பயன்படாதனவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக, (எ-று).

சொல்லாது விடலாவது தூதனை நுமக்குப் படை எவ்வளவு உண்டென்று பகையரசன் வினாவினால், நீ அறியாத தொன்றோ வென்று அளவு கூறாமை. வினையில என்றமையால் பயன் உண்டாயின் சொல்லுக என்பது கருத்து. தன் அரசன் பெண்டிர் முதலாயினாரைக் கேட்டார்க்குச் சொல்லாமை. இவை போல்வன சொல்லாமை வேண்டும் என்றது. 2

693. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
வான்ற பெரியா ரகத்து.

7. மன்னரைச் சேர்ந்தொழுகல்

(இ-ள்) ஒருவன் செவியுட் சொல்லுதலும், ஒருவன் முகம் ார்த்துத் தம்மில் நகுதலும், தவிர்ந்தொழுகுக அமைந்த பெரியா 'டத்து (எ-று).

இது, செவிக் கூற்றும் நகையும் ஆகாவென்றது. 3

694. **எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை**
விட்டக்காற் கேட்க மறை.

(இ-ள்) யாதொரு பொருளையும் செவிகொடுத்து ஓராது, தொடர்ந்து கேளாது, அப்பொருளை மறைத்தல் தவிர்ந்தால் பின்பு கேட்க, (எ-று).

இது, கேட்டல் விருப்பமும் குற்றமென்றது. 4

695. **மன்னர் விழைப விழையாமை மன்னரான்**
மன்னிய வாக்கந் தரும்.

(இ-ள்) எல்லார்க்கும் பொதுவாகக் கருதினவையன்றி, மன்னரால் விரும்பப்பட்டவையிற்றை விரும்பாதொழிக; அவ் விரும்பாமை, அம்மன்னன்தானே நிலையுள்ள செல்வத்தைத் தருமா தலான், (எ-று).

அவை நுகர்வனவும் ஒப்பனை முதலாயினவுமாம். இஃது, அவற்றைத் தவிர்தல் வேண்டுமென்றது. 5

696. **போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்**
றேற்றுதல் யார்க்கு மரிது.

(இ-ள்) காப்பானாயின், காத்தற்கு அரியனவற்றைக் காக்க; குற்றமுண்டென்று ஐயப்பட்ட பின்பு தெளிவித்தல் யாவர்க்கும் அரிது, (எ-று)

இஃது, அடுத்தொன்று சொல்லாமலொழுக வேண்டுமென்றது. அது பெரும்பான்மையும் பெண்டிர் மாட்டே வரும். 6

697. **அகலா தணுகாது தீக்காய்வார் போல்க**
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

7. மன்னரை சேர்ந்தொழுகுதல்

(இ-ள்) தீக்காய்வாரைப் போல நீங்குதலும் செய்யாது, குறுகுதலும் செய்யாது மாறுபாடு இல்லாத* வேந்தரைச் சேர்ந்தொழுக அமாத்தியர், (எ-று).

இது, சார்ந்தொழுகுந் திறன் கூறிற்று. இத்துணையும் பெரும்பான்மையும் மாற்றரசரை நோக்கிற்று. 7

698. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாதசெய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

(இ-ள்) யாம் அரசனாலே கைக்கொள்ளப்பட்டே மென்று நினைத்து, அவன் நெஞ்சிற் கொள்ளாதன செய்யார், அசைவற்ற தெளிவுடையார், (எ-று)

இஃது, அரசன் இசைவன செய்ய வேண்டுமென்றது. 8

699. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

(இ-ள்) யாம் பழைய மென்றுகருதி, இயல்பல்லாதனவற்றைச் செய்யும் நட்பின் தகைமை, தனக்குக் கேட்டைத்தரும், (எ-று).

இது, இயற்கையல்லாதன தவிரல் வேண்டுமென்றது. 9

700. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

(இ-ள்) இவர் நமக்கு இளையரென்றும் இத்தன்மையாகிய முறையரென்றும் இகழாது, அவர் பெற்றுநின்ற தலைமையோடே பொருந்த ஒழுகவேண்டும். (எ-று).

முறையர் என்றது இளங்கிழமை முறை. இது காலத்துக்குத் தக்க காட்சி செய்யவேண்டுமென்றது. இவை மூன்றும் பெரும்பான்மையும் தன் அரசனை நோக்கிற்றின. 10

---

* 'உடைய' என்பது மணக்குடவர் பாடம்

8. குறிப்பறிதல்

குறிப்பறிதலாவது அரசர் உள்ளக் கருத்தை அமைச்சர் அறிதலும் அமைச்சர் உள்ளக் கருத்தை அரசர் அறிதலும் இஃது அமைச்சரியலாதலின் அமைச்சர் குறிப்பறிதல் கூறியதென்னை யெனின், குறிப்பறிதல் அரசர்க்கு வேண்டுமாதலின், இறந்தது காத்தலென்னுந் தந்திரயுத்தியாற் கூறப்பட்டதென்க, இது பெரும் பான்மையும் அரசர்க்கும் வேண்டுதலின், மன்னரைச் சேர்ந் தொழுகலின் பின் கூறப்பட்டது.

701. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

(இ-ள்) முகம்போல முதிர்ந்த அறிவுடையது பிறிதுண்டோ? ஒருவனை உவப்பினும் வெறுப்பினும் தான் முற்படக் காட்டும், (எ-று).

குறிப்பறியுமாறு என்னை யென்றார்க்கு, இது முகம் அறி விக்குமென்றது. 1

702. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(இ-ள்) தன்னையடுத்த வண்ணத்தைக் காட்டுகின்ற பளிங்கைப்போல நெஞ்சத்து மிக்கதனை முகம் காட்டும், (எ-று)

மேல்முகமறிவிக்கு மென்றார்; அஃதறிவிக்குமாறென்னை என்றார்க்கு (முகம்) வெகுட்சி யுண்டாயின் கருகியும் மகிழ்ச்சி யுண்டாயின் மலர்ந்தும் காட்டுமென்றது. 2

703. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற.

(இ-ள்) யாம் நுண்ணிய அறிவுடையமென்பார் பிறரை அளக்குங் கோலாவது விசாரிக்குமிடத்துக் கண்ணல்லது பிற இல்லை. ஆதலான் கண்கொண்டறிந்து கொள்க, (எ-று)

8. குறிப்பறிதல்

நுண்ணியார் முகத்தின் தோற்றம் விடார்; அவரைக் கண்டு அறிய வேண்டும் என்றது. 3

704. பகைமையுங்கேண்மையுங் கண்ணுரைக்குங்கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

(இ-ள்) ஒருவனோடுள்ள பகைமையும் நட்பையும் கண்கள் சொல்லும்; கண்ணினது வேறுபாட்டை யறிவாரைப் பெறின், (எ-று)

இது, கண் கண்டு குறிப்பறிதல் நுண்ணியார்க் கல்லது அரிதென்றது. 4

705. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.

(இ-ள்) ஒருவன் முகக் குறிப்பினானே அவனவன் மனக் குறிப்பை யறியமாட்டாவாயின், தன்னுறுப்புக்களுள் கண்கள் மற்றென்ன பயனைத் தருமோ? (எ-று).

இது, குறிப்பறியாதார் குருடரோடு ஒப்பரென்றது. 5

706. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

(இ-ள்) நினைந்ததனைச் சொல்லாமைக் கொள்ளவல்லாரோடு மற்றையார் உறுப்பு ஒரு தன்மையர் அல்லது அறிவினால் வேற்றுமை யுடையர், (எ-று).

இது, குறிப்பறியாதார் அறிவில்லாதார் என்றது. 6

707. கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி.

(இ-ள்) அரசன் மனநிகழ்ச்சியை அவன் கூறுவதன்முன்னே நோக்கி அறியுமவன், எல்லாநாளும் மாறாநீர் சூழ்ந்த வையத்துக்கு அணிகலனாவான், (எ-று).

இது மக்களிற் சிறப்புடையனா மென்றது.

8. குறிப்பறிதல்

708. ஐயப் படாஅ தகத்த துணர்வாரைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(இ-ள்) பிறர் நினைத்ததனை ஐயப்படுதலின்றித் துணிந்து அறியவல்லாரைத் தேவரோடு ஒப்பக் கொள்க, (எ-று).

அவரும் பிறர்நினைவு அறிவர்; இவரும் அவ்வாறு அறிதலான் இவரைத் தேவராக மதிக்கப்படும் என்றது. இவையிரண்டும் குறிப்பறிந்தார்க்கு உளதாகும் நன்மை கூறின. 8

709. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(இ-ள்) முகத்தை நோக்கி நிற்க, அமையும்; தன் மனத்தை நோக்கி அறிலுற்றதனை அறியவல்லாரைப் பெறின், (எ-று)

எனவே, அமாத்தியர் குறிப்பை அரசரும் அறியவேண்டுமென்றவாறாயிற்று; நிற்கின்ற தொழில் அமாத்தியன் கண்ணதாகலான். 9

710. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாதுங் கொடுத்துக் கொளல்.

(இ-ள்) முகக்குறிப்பினாலே உள்ளக்கருத்தை அறியுமவர்களைத் தன் உறுப்பினுள் வேண்டுவது யாதொன்றாயினும் கொடுத்துத துணையாகக் கூட்டிக் கொள்க, (எ-று).

உறுப்பினுள் என்பதனைத் தனக்கு அங்கமாயினவற்றுள் எனினும் அமையும். குறிப்பறிவாரை அறிதல் குறிப்பறிதலாயிற்று. குறிப்பறிவாரை அரசன் கடியப்படுமோ கூட்டப்படுமோ என்று ஐயமுற்றார்க்குக் கூறப்பட்டது. இவையிரண்டும் அரசன் மேலன 10

9. அவையறிதல்

அவை யறிதலாவது இருந்த அவையத்தாரையறிந்து அதற்கு நக்க சொல்லுதல். அரசன் குறிப்பறிந்தாலும் அவையறிந்து சொல்ல வேண்டு மாதலின், அதன்பின் கூறப்பட்டது.

711. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

(இ-ள்) இருந்த அவையத்தாரை யறிந்து, அதற்குத் தக்க சொல்லும் திறனை ஆராய்ந்து சொல்லுக; சொல்லின் தொகையை யறிந்த தூய்மையை யுடையர், (எ-று).

தொகையறிதல்-திறனறிதல். இது, அவையறிந்து ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று. 1

712 ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

(இ-ள்) ஒரு நெறியின்கண் நின்றார் அந்நிலைமை குலைந் தாற்போல இகழப்படும், அகன்ற கல்வியைக் கேட்டறிய வல்லார் முன்னர்த் தப்புதல், (எ-று).

ஏற்று என்பது கேள்வியின்கண் வருதலின் கேள்வி ஆயிற்று. மேல் தப்பு வாராமற் சொல்லவேண்டுமென்றார்; அதனால் வரும் குற்றமென்னை என்றார்க்கு இது கூறபபட்டது. 2

713. நன்றென் றெவற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

(இ ள்) நன்றென்று சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் மிக நன்று, தம்மின் முதிர்ந்தார்முன் முந்துற்றுச் சொல்லாத அடக்கம், (எ-று)

9. அவையறிதல்

முதுவர்-தவத்தானும் குலத்தானும் மூதிர்ந்தார். இஃது, இருந்த அவையின்கண் முந்துற்றுச் சொல்லல் ஆகாதென்றது. இவை மூன்றும் ஆராய்ந்து சொல்லுமாறு கூறின. 3

714. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிய வல்லா ரகத்து.

(இ-ள்) நூல்களைக்கற்று, அதன்பயனும் அறிந்தவர்களது கல்வி விளங்காநிற்கும்; குற்றமறச் சொல்லை ஆராயவல்லார் முன்னர்ச் சொல்லின், (எ-று).

இது, கல்வியின் விழுப்பம் கற்றோர்க்கல்லது அறிதலரிது; ஆதலான் அவர்முன்பு சொல்லுக. அதனானே அக்கல்வி விளங்கும் என்றது. 4

715. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

(இ-ள்) சொன்னால் அதற்கு வருங்குற்றத்தை ஆராய்ந்து, நன்மையாமவற்றை யறிந்து, சொல்லுக; சொல்லினது வழக் காராய்ந்த நன்மையுடையார், (எ-று).

இஃது, ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று. 5

716. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

(இ-ள்) யாதானும் ஒன்றைச் சொல்லுங்கால், அதனைத் தெரிந்துணரும் அறிவுடையார் முன்பு சொல்லுக; அது வளர்வதொன்று நின்ற பாத்தியின்கண்ணே நீர் சொரிந்தாற்போலும், (எ-று).

உணர்வது-அறிவது; மேல் சொல் அறிவார் முன்னே சொல்லுக என்றார்; அப்பொருள் அறிவார் முன்னர்ச் சொல்லுக என்பதூஉம், அச்சொல்லினாலே தம் கல்வி வளரும் என்பதூஉம் கூறிற்று. 6

6. அவையறிதல்

717. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(இ-ள்) புல்லியாரிருந்த அவையின்கண் மறந்துஞ் சொல்லா தொழிக; நல்லாரிருந்த அவையின்கண் நல்லதனை இசையச் சொல்லவல்லார், (எ-று).

இது வெளியார் முன் வெள்ளையாயிருத்தலால் அவர் முன்பு சொல்லாதிருத்தல் என்றது. 7

718. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(இ-ள்) அங்கணத்தின் உக்க அமிழ்தம் போல இகழப்படுவர்; தம்முடைய இனமல்லாதார் முன் சொல்லுவாராயின், (எ-று).

கல்வியுடையார் புல்லவையுள் சொன்னால் உளதாகுங் குற்ற மென்னையென்றார்க்கு, இஃது இகழப்படுவரென்றது. 8

719. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

(இ-ள்) அவையினது அளவை அறியாது ஒன்றைச் சொல்லுதலை மேற்கொள்பவர், சொல்லின் வகையும் அறியார் ஆவர்; அன்றி வேறு வல்லதுவும் இலராவார், (எ-று).

வகை-சிலசொல். இது பிறரான் மதிக்கப்படார் என்றது. 9

720. ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங்கொளல்.

(இ-ள்) ஒள்ளிய அறிவுடையார் முன்னர்த் தாமும் ஒள்ளிய அறிவுடையாராயிருத்தலும், வெள்ளறிவினார் முன்னர் வாலிய சுதை வண்ணம் போன்ற வெண்மையைக் கொண்டிருத்தலும், அவை யறிதலாவது, (எ-று). 10

10. அவையஞ்சாமை

அவையஞ்சாமையாவது அவையின்கண் அஞ்சாது சொல்லுதல்; அவை அறிந்தாலும் அஞ்சாது சொல்ல வேண்டு தலின், அதன்பின் கூறப்பட்டது.

721. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

(இ-ள்) பகையின்கண் அஞ்சாது நின்று சாவார் பெறுதற்கு எயளிர்; அவையின்கண் அஞ்சாது சொல்லவல்லார் பெறுதற்கு அரியர், (எ-று).

இஃது, அவையஞ்சாமை அரிதென்றது. 1

722. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(இ-ள்) தாம் கற்றதனைக் கற்றவர்கண்முன்பே இசையச் சொல்லித் தாம் கற்றதினினும் மிகக்கற்றார்மாட்டு அவர் மிகுதியாகக் கற்ற பொருளைக் கேட்டுக்கொள்ளுதல் அவையஞ்சாமையாவது, (எ-று)

கேட்டல் நாணாமையால் வருதலின் அஞ்சாமை ஆயிற்று. மேல் அரிதென்று கூறிய அவையஞ்சாமை எத்தன்மைத் தென்றார்க்கு இத்தன்மைத்தென்று கூறப்பட்டது. 2

723. கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(இ-ள்) கற்றாரெல்லாரினும் கற்றாரென்று சொல்லப்படு வார்; தாம் கற்றதனைக் கற்றார்முன்பு அவர்க்கு ஏற்கச் சொல்ல வல்லார், (எ-று).

இது, கற்றாரென்பதூஉம் அவையஞ்சாதவரையே என்று கூறிற்று. 3

10. அவையஞ்சாமை

724. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச் சொல்லா தார்.

(இ-ள்) பலநூல்களைக் கற்றாலும் ஒருபயனுடையரல்லர்; நல்லவையின் கண் நன்றாக அவர்க்கு ஏற்கச் சொல்லமாட்டாதார்; (எ-று).

இஃது, அவையஞ்சுவார் கற்றகல்வி பிறர்க்குப் பயன்படா தென்றது. 4

725. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

(இ-ள்) வாளினாற் பயனென்னை வன்கண்ணரல்லாதவர்க்கு அதுபோல நூலினாற் பயனென்னை நுண்ணிய அவையின்கண் அஞ்சுபவர்க்கு (எ-று).

இது, பிறர்க்கு பயன்படாமையன்றித் தமக்கும் பயன் படா தென்றது. 5

726. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

(இ-ள்) பகையின்கண் அஞ்சுமவன் பிடித்த கூர்வாள் போலும், அவையின்கண் அஞ்சுமவன் கற்ற நூலும், (எ-று).

மேல் பயனில்லை யென்றார், இது பயனில்லாதவாறு காட்டிற்று. 6

727. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(இ-ள்) கல்லாதவரினும் கடையென்று சொல்லுவார் உலகத்தார் கற்றறிந்துவைத்தும், நல்லாரிருந்த அவையின்கண் சொல்லுதலஞ்சுவாரை, (எ-று).

இது, கல்லாதவரினும் இகழப்படுவரென்றது. 7

10 அவையஞ்சாமை

728. உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(இ-ள்) உளராயினும் செத்தாரோடு ஒப்பர்; அவைக்களத் தஞ்சித் தாம் கற்றதனை அவர்க்கு இசையச் சொல்ல மாட்டா தார், (எ-று).

(இது, செத்தாரோடு ஒப்பரென்றது.) இவை ஐந்தும் அவையஞ்சுதலான் வருங்குற்றம் கூறின. 8

729. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(இ-ள்) அவையஞ்சாது மறுமாற்றம் சொல்லுதற்காக, நெறியானே அளவு கூறு நூல்களை அளவறிந்து கற்க, (எ-று).

அளவு-பிரமாணம். அது கூறும் நூல்களாவன; மீமாம்சை முதலான நூல்கள். கல்வியாவது மெய்யாராய்ச்சியான நூல்களைக்கற்றலும், வேத வேதாங்கம் கற்றலும், உழவும் வாணிகமும் கற்றலும், படைவழங்கல் ஆகியதண்ட நீதி கற்றலுமென நான்கு வகைப்படும் என்பது கௌடல்ய மதம் அந்த நான்கினும் பின்கூறிய இரண்டும் சொல்லாண்மை அன்மையானும், வேதம் கேட்டல் சொல்லாதே அமைதலானும், அவையிற்றைக் கூறாது தருக்கம் கற்றார்க்கல்லது மறு மாற்றம் சொல்லுதல் அரிதாதலின் அதனைக் கற்க வேண்டும் என்று இது கூறப்பட்டது. 9

730. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

(இ-ள்) தப்பினால் வருங் குற்றத்தை வகையறிந்து கற்று வல்ல அவையின் கண் அச்சத்தினால் சோர்வுபடச் சொல்லார், சொற்களின் தொகுதியையறிந்த தூய்மையையுடையவர் (எ-று).

மேற்கூறிய வாற்றால் கற்றவர்கள் தப்பச் சொல்லாரென்று அக்கல்வியால் வரும் பயன் கூறிற்று. 10

(அமைச்சியல் முற்றிற்று)

3. பொருளியல் (5)

1. நாடு.

பொருளியலாவது பொருளின் பகுதி கூறுதல். அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்படப் பொருளாகுதற்கு இடமாகிய நாட்டியல்பு ஓரதிகாரத்தானும், அந்நாட்டிற்கு ஏமமாகிய அரணியல்பு ஓரதிகாரத்தானும், அவ்விடங்களிலாக்கப்பட்ட பொருள் ஓரதிகாரத்தானும், அப்பொருளினானுண்டாக்கப்பட்ட படையியல் இரண்டதிகாரத்தானும், (அப்படையின் நன்மையாலாக்கும் படைச்செருக்கு ஓரதிகாரத்தானும்) கூறப்பட்டது. இஃது அமைச்சராற் செய்யப்படுதலின், அதன்பின் கூறப்பட்டது. அவற்றுள் நாடாவது நாட்டிலக்கணங் கூறுதல்.

731. வருபுனலும்[1] வாய்ந்த மலையும் இருபுனலும்[2]
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

ஆற்று நீரும் வாய்ந்த மலையும் நிலைநீரும் ஊற்று நீரும் வலிய அரணும் நாட்டிற்கு அங்கம். நாடாக்கும் இடத்துயாறொழுகும் இடத்தினையும், பயன்படுமலையினையும், ஏரி ஆக்கும் நீர் நிறுத்தலா மிடத்தினையும் குன்று கல்லி நீருண்டாக்கலாமிடத்தினையும், அரணாக்கும் இடத்தினையும் கண்டு, அவ்விடத்தை நாடாக்குக; அவை நாட்டிற்குறுப்பாதலால், (எ-று).

இவ்வைந்துங் குறையாமல் வேண்டுமென்றது. 1

732. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(இ-ள்) நோயின்மையும், செல்வமுடைமையும், விளைவுடைமையும், இன்பமுடைமையும், காவலுடைமையு மென்று சொல்லப்பட்ட இவையைந்தும் நாட்டிற்கு அழகென்று சொல்லுவர், (எ-று).

---

1. இருபுனலும்
2. வருபுனலும் என்பன மணக்பாடம்.

செல்வம்-பொன்னும் பசுவும் பலவாயின மிகுதல். விளைவாவது, பல தானியங்களும் பொலிவுடைமை. இன்பமாவது, கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் இன்புறப்படும் பொருள்களையுடைமை. காவலாவது, மாற்றரசனாலும் தன் அரசனாலும் நலிவின்மை. மேல் நாட்டிற்கு அங்கமாவன கூறினார், இஃது அழகாவன கூறிற்று. 2

733. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(இ-ள்) நாடென்று சொல்லுவர் தேடவேண்டாத வளத்தினை யுடைய நாட்டை; நாடல்ல வென்று சொல்லுவர், தேடினால் வளந்தருகின்ற நாட்டை, (எ-று).

இஃது, எல்லா நிலத்தினும் உள்ள பண்டம் கலத்தினாலாதல் காலினாலாதல் தன்னிடத்தே உடைத்ததாதலும், தன் நிலத்தில் உள்ள பண்டத்தை மிகுதியாக உடைத்ததாதலும் வேண்டுமென்றது. 3

734. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

(இ-ள்) தப்பாமல் விளையும் நிலங்களும், தகுதியுடையாரும் தாழ்வில்லாத செல்வரும் சேருவது நாடு, (எ-று).

தள்ளா விளையுள்—மழையில்லாத காலத்தினும் சாவிபோகாத நிலம். தக்கார்—குலத்தாலும் குணத்தாலும் அமைந்தார். தாழ்வில்லாத செல்வர்—பிறரால் இகழப்படாத செல்வர்; பிறர்க்கும் பயன்படும் செல்வர் என்றது. இம்மூன்றும் எல்லாஉயிர்க்கும் ஆகலின் சேரவேண்டும் என்று கூறப்பட்டது. 4

735. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

(இ-ள்) மிக்க பசியும், இடையறாத பிணியும், ஒறுக்கும் பகையும் சேராது இயன்றது நாடு, (எ-று).

இது, சேர்தலாகாதன இவை என்று கூறிற்று. 5

736. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

(இ-ள்) பலவாய்த் திரளும் திரட்சியும், பாழ் ஆக்கு உட்பகையும், வேந்தனை யலைக்கின்ற (கொலைத்) தொழிலினை யுடைய குறும்பரும், இல்லாதது நாடு, (எ-று).

பாழ்ஆக்கும் உட்பகையாவது, நாட்டுத் தலைவராயினும் அதிகாரியாயினும் நாட்டைக்கெடுக்குமவர்கள். அவை ஆராய்ந்து கடிய வேண்டுதலின் இது கூறப்பட்டது. 6

737. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(இ-ள்) பெரும் பொருளாலே விரும்பத்தக்கதாகிக் கேடரிதாலோடே மிகவும் விளைவது நாடு, (எ-று).

விரும்பத் தக்கது என்றமையால் பெரும் பொருள் ஆவது நெல்லு. கேடாவது விட்டில், கிளி, நால்வாய், பெரும் புயலென்றிவற்றான் வரும் நட்டம். இதுமேல் சொன்னவும் சொல்லாதனவும் தொகுத்துக் கூறிற்று. 7

738. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை.

(இ-ள்) கெடுதலை யறியாதாய்க் கெட்டதாயினும், பயன் குன்றாத நாட்டினையே எல்லா நாடுகளிலும் தலையான நாடென்று சொல்லுவர், (எ-று).

இது மேற்கூறிய விட்டில் முதலாயினவற்றால் கெட்டதாயினும், பின்பும் ஒருவாற்றால் பயன்படுதல் ஆவது தலையான நாடென்றது. 8

739. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(இ-ள்) குடிமை செய்தல் பல காலத்திலே ப்ல வரினும் அதனைப், பொறுத்து நிச்சயித்த கடமையை அரசனுக்கு ஒருங்கு கொடுக்கவல்லது நாடு, (எ-று).

தளர்ச்சியைச் செய்தலின் பொறை ஆயிற்று. குடிமையாவது கடமையொழிய வருமவை. இதனானே குடிமக்கள் பண்புடையராக வேண்டும் என்பது கூறிற்று. 9

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(இ-ள்) மேற்கூறியவாற்றான் எல்லாம் நேர்ந்ததாயினும், பயனில்லையாம்; வேந்தனது அமைதியை உடைத்தல்லாத நாடு, (எ-று).

இது, நாட்டிற்கு அரசனும் பண்புடையனாக வேண்டுமென்றது. 10

---

2. அரண்

அரணாவது அரணிலக்கணங் கூறுதல், மேல் நாட்டிலக்கணங் கூறினார் நகர் இலக்கணங் கூறுகின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

741. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

(இ-ள்) வலியாற்றுவார்க்கும் அரண் பொருளாம்; வலியின்மையான் அஞ்சித் தம்மைக் காப்பார்க்கும் அரண் பொருள்; ஆதலால், அதனைச் செய்யவேண்டும், (எ-று).

2. அரண்

வலியுடையோர்க்கும் ஒரு காலத்தே வேண்டுதலின் வேண்டும் என்றார். இஃது அரண்செய்ய வேண்டும் என்றது. 1

742. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

(இ-ள்) தெளிந்த நீராயினும், நிழலும் நீருமிலாத வெறு நிலமாயினும், மலையாயினும், அழகிய நிழலினையுடைய காடாயினும் உடைய இடம் அரண், (எ-று).

மலையரண் என்றும் காட்டரண் என்றும் கூறுபசேற்றரண் என்பதும் ஒன்றுண்டு. அதுவும் இவற்றினுள் அடங்கும். இஃது அரண் செய்யும் இடம் கூறிற்று. 2

743. உயர்வகலந் திண்மை யருமைஇந் நான்கி
னமைவரணா மென்றுரைக்கு நூல்.

(இ-ள்) உயர்ச்சியும் அகலமும், திண்மையும் கிட்டுதற்கு அருமையுமென்னும் இந்நான்கினது அமைதியுடையது மதிலாமென்று சொல்லுவர் நூலோர், (எ-று).

அருமையாவது, முதலையும் கிடங்கும் அடியொட்டியும் முதலாயினவற்றால் கிட்டுதற்கருமை. அமை வென்றது, இதனின் மேல் செய்யப்படாது என்னும் அளவுடைத்தாதல் திண்மையென்பது கல்லும் இட்டிகையும் இட்டுச்செய்தல். இஃது அரண்செய்யுமாறு கூறிற்று. 3

744. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

(இ-ள்) முந்துற்ற முகத்தினையுடைய பகைவர் கெடும்படியாக, வினை செய்யும் இடத்து வெற்றியெய்தி மாட்சிமைப்பட்டது அரணாவது, (எ-று).

அஃதாவது அட்டாலகமும் மதிற்பொறியும் முதலாயின மதிற்றலையில் அமைத்தல். இது மதில் தலையில் கருவிகள் அமைக்க வேண்டும் என்றது. 4

2. அரண்

745. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
ஊக்க மழிப்ப தரண்,

(இ-ள்) காக்க வேண்டும் இடம் சிறிதாய், மதிலகலம் பெரிய இடத்தை யுடைத்தாய், மதிலையுற்ற பகைவரது மிகுதியைக் கெடுப்பது அரணாவது, (எ-று).

சிறுகாவலாவது ஒருபக்கம் மலையாயினும் காடாயினும் நீராயினும் உடைத்தாதல். இஃது இடம் பெரிதாகவும் காவல் சிறிதாகவும் வேண்டுமென்றது. 5

746. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(இ-ள்) பகைவரால் கொள்ளுதற்கு அரிதாய்த், தன்னகத்தே அமைக்கப்பட்ட உணவையும் உடைத்தாய் அகத்துறைவார்க்கு நிற்றற்கு எளிதாகும் நீரையுமுடைத்தா யிருப்பது அரணாவது, (எ-று).

எனவே, புறத்தார்க்கு நிற்றற்கரிய நீரையுடைத்தாக வேண்டுமென்றவாறாயிற்று; அஃதாவது அரணுக்கு நீங்குகிற்பதோர் ஆற்றினின்றும் பிறர்க்குத் தோற்றாமல் சுருங்கையாகப்படுத்து உள்ளே நீர்புகுதலும், மதிலைமுற்றினார்க்கு அனைய நீரின்மையும், இன்னும் அதனானே வெற்றிலையும் பூவும் உள்ளே உண்டாக்குதலும் பிறவும் ஆம் 6

747. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவும்
நல்லா ளுடைய தரண்.

(இ-ள்) எல்லாப்பொருள்களையும் உடைத்தாய், உற்ற விடத்து உதவ வல்ல நல்ல வீரரையுமுடையது அரண், (எ-று).

இது நல்ல வீரரும் வேண்டும் என்றது. எல்லாப் பொருளுமாவது நுகரவேண்டுவனவும் படைக்கலங்களும். 7

748. முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

2. அரண்

(இ-ள்) சூழவிட்டும், சூழவிடாதே ஒருபக்கம் முறிய எறிந்தும், அரணுள்ளாரைக் கீழறுத்தும் இம்மூன்றினாலும் கொள்ளுதற்கு அரியது அரணாவது, (எ-று).

அரண் கொள்வார்க்கு உபாயம் இம்மூன்றல்லதில்லை. இம்மூன்றினானும் கொள்ளப்படாமை வேண்டும் என்றது. 8

749. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

(இ-ள்) சூழவிடுதலைச் செய்து, மதிலைச் சூழ்ந்து பொருவாரையும் அரணையும் பற்றுதலைச் செய்து மதில்தலையைப் பற்றியார் வெல்வது அரணாவது, (எ-று).

இஃது அரணில்லாமையேயன்றி வெல்லவும் வேண்டும் என்றது. 9

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்லை யரண்.

(இ-ள்) சொல்லப்பட்ட எல்லா மாட்சிமையும் உடைத்தாயினும், வினையின்கண் மாட்சிமை இல்லாதார்மாட்டு அரணாற் பயனில்லை, (எ-று).

இது, வினைசெய்ய வல்லாரும் வேண்டுமென்றது. 10

3. பொருள் செயல்வகை

பொருள் செயல் வகையாவது பொருள்தேடுமாறும் அதனாற் பயன் கொள்ளுமாறும் கூறுதல். இது (மேற் கூறிய) நாடும் நகரமு முடையார்க் குளதாவதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

751. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
எஃகதனிற் கூரிய தில்.

(இ-ள்) பொருளையுண்டாக்குக; பகைவரது பெருமிதத்தை யறுக்கலாங்கருவி, அப்பொருள்போலக் கூரியது பிறிது இல்லை, (எ-று).

இது, பொளீட்ட வேண்டுமென்றது. 1

752. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

(இ-ள்) அருளோடும் அன்போடும் வாராத பொருளால் வரும் ஆக்கத்தை பொருந்தாது போக விடுக, (எ-று).

எனவே பொருள் ஈட்டுங்கால் பிறர் வருத்தத்துக்குப் பரியாதும் பயின்றார் மாட்டுக் காதலழியவும், பொருள் தேடுதலைத் தவிர்க வென்ற வாறாயிற்று. 2

753. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

(இ-ள்) அறத்தையும் பயக்கும்; இன்பத்தையும் பயக்கும்; பொருள் திறனறிந்து பிறர்க்குத் தீமை பயத்தலின்றி வந்த பொருள் (எ-று).

பொருளால் பயன் அறஞ்செய்தலும் இன்பம் நுகர்தலும் அன்றே; அவ்விரண்டினையும் பயப்பது நியாயமாகத் தேடின பொருளாதலின் பொருள்தேடுங்கால் நியாயத்தோடு தேட வேண்டும் என்றது. 3

3. பொருள் செ

754. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(இ-ள்) தானே வந்துற்ற பொருளும், ஆயவற்கத்தால் வரும் பொருளும், தன் பகைவரை யடர்த்துக்கொண்ட பொருளும், அரசனுக்குப் பொருளாம், (எ-று).

உறுபொருள்-காவற்ற பொருள் மேல் நியாயமாகத் தேட வேண்டும் என்றார்; இவை நியாயமோ என்று ஐயுற்றார்க்கு அரசற்கு நியாயம் என்று கூறப்பட்டது. 4

755. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

(இ-ள்) குன்றின்மேலேயிருந்து, யானைப்போர் கண்டாற் போலும்; தன் கையகத்து ஒரு பொருளுண்டாகக் கொண்டு செய்யத் தொடங்கினவன் செய்யும் வினை, (எ-று).

பொருளுடையார்க்குத் தாம் வருந்தமுறாமல் பிறரை வினை செய்வாராகவே கண்டிருக்கலாமென்றது. 5

756. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

(இ-ள்) ஒள்ளிய பொருளை முற்ற உண்டாக்கினார்க்கு ஒழிந்த அவ்வறமும் காமமுமாகிய பொருளிரண்டும் (ஒருங்கே) எளிய பொருளாக வெய்தலாகும், (எ-று).

மேல் சில பொருளுடையார்க்குப் பொருள் எய்துதல் வருந்தாமை வரும் என்றார். இஃது அறமும் இன்பமும் எய்தலாமென் கூறிற்று.

757. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

(இ-ள்) அறம் செய்தற்குக் காரணமாகிய அன்பினின்றும் தோற்றின அருளாகிய குழவி, பொருளாகிய நல்ல செவிலித்தாய் வளர்த்தலாலே உண்டாம் (எ-று).

3. பொருள் செயல்வகை

மேல் பொருளுடையாற்கு அறம் எளிதென்றார்; இது பெறுமாறென்னை என்றார்க்கு, அன்பும் அருளும் இயல்பாக உடையராயினும் பொருளிலராயின் அவற்றால் பயனில்லையாம்; ஆதலால் பொருளுடையாற்கே அறஞ் செய்யலாவதென்று கூறப்பட்டது 7

758. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

(இ-ள்) ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் பொருளாக மதிக்கப் பண்ணுகின்ற பொருளையல்லது வேறு பொருள் என்று சொல்லலாவதில்லை, (எ-று).

மேல் இன்பம் எளிதாகவரும் என்றார்; அஃது எளிதாக வருமாறு என்னை? வடிவில்லாதாரைப் பெண்டிரிகழ்வார்; ஆகலின் நன்னெறி உற்றார்க்குப் பொருளுடையாரை யாவரும் நன்கு மதிப்பரென்று கூறப்பட்டது. 8

759. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(இ-ள்) பொருள் ஆகிய மெய்யான ஒளி, எண்ணப்பட்ட தேசமெல்லாவற்றினுஞ் சென்று இருள் அறுக்கும், (எ-று).

இருளாவது ஒளியில்லாத இடம். பொருள் உண்டாகப்புகழுண்டாம்; புகழ் உண்டாக ஒளி எங்கும் பரக்கும் என்றது. அரசன் பொருளுடையனாயின் தான் கருதிய தேயமெல்லாவற்றினும் தன்னாணை நடக்குமென்றுமாம். 9

760. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(இ-ள்) பொருளில்லாதாரை எல்லாரும் இகழ்வர், பொருளுடையாரை எல்லாருஞ் சிறப்புச் செய்யர், (எ-று).

சிறப்பெய்தலும் இதனானே வருமென்றது. 10

4. படைமாட்சி

படைமாட்சியாவது படையினது நன்மை கூறுதல். இது மேற்கூறிய பொருளின் உண்டாமாதலானும், அதனை ஈட்டுதற்கும் காத்தற்கும் படை வேண்டும் என்பதனாலும், அதன்பின் கூறப் பட்டது.

761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(இ-ள்) யானை குதிரை தேர் கருவிகளாகிய உறுப்புக்களால் அமைந்து, இடுக்கண் உற்றால் அதற்கு அச்சமின்றி, வெற்றி யுடையபடை, அரசன்தேடியபொருளெல்லாவற்றினும் தலையான பொருள்; (எ-று).

ஆதலால், படைவேண்டும் என்றது. 1

762. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

(இ-ள்) கெடுதலின்றிக் கீழ் போகாதாகிக் குலத்தின் வழி வந்த அஞ்சாமையையுடையது படையாவது, (எ-று).

வழிவருதல்-வீரன்மகன் வீரனாகுதல். இது, படையினது தன்மை கூறிற்று. 2

763. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(இ-ள்) மறமும், மானமும், நல்வழிச்சேறலும், தெளிவு உடைமையுமென்னும் நான்கும் படைக்கு அரணாம், (எ-று).

நல்வழிச்சேறலாவது, மறஞ்செய்யுங்கால் அறத்தின் வழிச் செய்யும் தெளிவு, கலக்கமின்மை. மேல்கெடாமை வேண்டும் என்றார்; இது கெடாமைக்குக் காரணம் கூறிற்று. 3

764. தார்தாங்கிச் செல்வது தானை தலை வந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

(இ-ள்) முன்வந்த படையைப் பொறுத்து மேற் செல்ல வல்லது படையாவது; அவ்விடத்துற்ற போரினைத் தடுக்கும் இயல் பறிந்து, (எ-று).

இது, முந்திச்செல்ல வேண்டுமென்பதூஉம், செல்லுங்கால் இடமறிந்து செல்ல வேண்டுமென்பதூஉம், கூறிற்று. 4

765. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

(இ-ள்) கூற்றமானது வெகுண்டு மேல் வரினும், சிதறுத லின்றி எதிர் நிற்கவல்ல வலிமையையுடையது படையாவது, (எ-று).

இது, மாற்றார் மேல்வந்தால் நின்று பொறுக்க வேண்டு மென்றது. 5

766. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

(இ-ள்) அரசு கெடுமிடத்து, வழிவந்த படைக்கு அல்லது போர்க்களத்து அழிவு வந்தவிடத்து உயிர்க்கு வரும் ஊறுஅஞ்சாத வன்கண்மை இல்லை, (எ-று).

தொலைவிடம் என்பதனை முன்னே கூட்டுக. மேல்வழிவந்த படை வேண்டும் என்றார்; அதனால் பயன் என்னை என்றார்க்கு, அவர் தமக்குமுன்பு உள்ளார் செயலை நினைப்பார்; ஆதலால் அவர்க்கல்லது படைகெட்டால் நிற்றலரிது என்ற வாறாயிற்று. 6

767. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

(இ-ள்) சிறுமை உறுதலும் போகாத்துன்பம் உறுதலும் வறுமையும் இல்லை யாயின் படைவெல்லும், (எ-று).

4. படைமாட்சி

சிறுமைஉறுதலாவது, இழிந்தார் பெற்ற சிறப்பு உயர்ந்தார் பெருமை. போகாத்துன்பமாவது, பெண்டிரைக் கைக்கொள்ளுதலும் இளிவரவு செய்தலும் போல்வன. வறுமையாவது கொடாமை. இது படைக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று. 7

768. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

(இ-ள்) பகைவரைக் கொல்லுந் தகுதியும், அவர்மேல் வந்தால் பொறுக்கும் அற்றலும் இல்லையாயினும், சேனையானது படையழகினானே பெருமை பெறும், (எ-று).

படையழகென்றது (தேர் யானை குதிரைகளின்) அலங்காரமும், கொடியும் குடையும் முரசும் காகளமும் முதலாயினவற்றால் அழகு பெறுதல். இதுவும் அரசன் அமைக்க வேண்டுமென்றது. 8

769. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(இ-ள்) கடல்போல ஒலித்தக்காலும் எலியினது மாறுபாட்டினால் வருந்தீமை யென்னுளதாம்; அவ்வொலி நாகம் உயிர்த்தவளவிலே கெடும். (எ-று).

இது படைமிக்கது வெல்லுமென்று கருதாது வீரரைத் தெளிந்தாள வேண்டுமென்றது. 9

770. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

(இ-ள்) நிலையுடைய வீரரைப்பெரிது உடைத்தாயினும் படையானது தனக்குத் தலைவனை இல்லாத விடத்து வெற்றியில்லையாம், (எ-று).

இது படையமைந்தாலும் படைத்தலைவன் அமைக்க வேண்டுமென்றது. இவையிரண்டும் படையாளும் திறம் கூறின. 10

5. படைச்செருக்கு

படைச்செருக்காவது படையினது வீரியங் கூறுதல். இது படைக்கு இன்றியமையாதது ஆயினமையின், அதன்பின் கூறப் பட்டது.

771\. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(இ-ள்) ஒன்றுஉற்ற காலத்து உயிர்ப்பொருட்டு அஞ்சாத மறவர் தம்மரசனால் செறுக்கப்பட்டாராயினும், தமது தன்மை குன்றுதல் இலர், (எ-று).

மேல் அதிகாரத்துச்சிறுமை முதலாயின செய்யின் படை வெல்லாது என்றார்; ஆயினும் இயல்பாக அஞ்சாமையுடையார் வீரியஞ் செய்யுமிடத்துக் குறைய நில்லாமை வேண்டுமென்றது. 1

772\. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு.

(இ-ள்) ஒருவனுக்குப் பெரிய ஆண்மையென்று சொல்லுவர்; ஒன்றுஉற்றக்கால் அஞ்சானாதலை அவ்வாண்மைக்குப் படைக்கல மென்று சொல்லுவர் உலகியலறிந்து செய்தலை, (எ-று).

உலகியலறிதல்-தனக்கு எளியார்மேல் செல்லாமை, இது வீரம் செய்யுங்கால் எளியாரை அடராமை வேண்டும் என்றது. 2

773\. கான முயலெய்த வம்பினின் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

(இ-ள்) காட்டகத்து முயலைப் பட எய்த அம்பினும், யானையைப் பிழைக்க எறிந்த வேலை யேந்துதல் இனிது, வீரற்கு, (எ-று).

இது மேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது. 3

5. படைச்செருக்கு

774. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

(இ-ள்) என்னுடைய அரசன் முன்னேர்ப் பகைவீர்; நில்லா தொழிமின்; முன்னாள் இவன் முன்னே நின்று, கல்லெழுதப்பட்டு நிற்கின்றார் பலராதலான், (எ-று).

இஃது எளியாரைப் போகச்சொல்லி எதிர்ப்பாரோடு பொர வேண்டுமென்றது. 4

775. கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

(இ-ள்) தன் கையில் வேலை ஒரு களிற்றோடே போக்கி, அதன்பின் கருவி தேடிச் செல்லுமவன், தன் மெய்யின் மேற்பட்ட வேலைப் பறித்துக் கருவி பெற்றேமென்று மகிழும், (எ-று).

வீரர் செயல் இத்தன்மையதாதலால், புண்பட்டால் அதற் காற்றிப்பின்னும் போரின்கண்காதல் செல்ல வேண்டும் என்றது. 5

776. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு

(இ-ள்) மாற்றாரோடு எதிர்த்துச் சிவந்து நோக்கின கண்ணிலே ஒரு வேலினானே எறிய, அதற்கு மீண்டும் இமைப் பராயின், இது கெட்டதனோடு ஒக்கும் அஞ்சாதார்க்கு (எ-று).

விழித்தகண் என்பதற்கு மாற்றாரை நோக்கி யிமையாத கண் எனினும் அமையும். புண்பட்டால் ஆற்றாராயின் கெட்டத னோடொக்கும் என்றது. 6

777. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.

(இ-ள்) தனது வாழ்நாளாகியநாளை யெண்ணி, அவற்றுள் விழுமிய புண்படாத நாளெல்லாவற்றையும் தப்பின நாளாக வெண்ணி வைக்கும் வீரன், (எ-று).

5 படைச்செருக்கு

இது போரின்கண் முகத்தினும் மார்பினும் புண்படவேண்டும். முதுகு புறங்கொடாமையும் வேண்டு மென்றது. 7

778. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(இ-ள்) பரவும் புகழை விரும்பி உயிரை விரும்பாதவர் கழல் கட்டுதல் அழகுடைத்து, (எ-று).

இது புகழ் விரும்பும் படை வேண்டுமென்றது. 8

779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

(இ-ள்) முற்கூறிய வஞ்சினம் தப்பாமல் சாவாரைத் தப்பினா ரென்று பழிக்கவல்லவர் யாவர், (எ-று).

இது வஞ்சினம் தப்பின் படவேண்டுமென்றது. 9

780. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(இ-ள்) தம்மை ஆண்டவரது கண் நீர்மல்குமாறு சாவக் கடவராயின், அச்சாக்காடு எல்லாராலும் வேண்டிக்கொள்ளும் தகுதி யுடைத்து, (எ-று).

இஃது ஆண்டவனுக்குக் கேடுவரின் படவேண்டுமென்றது.

பொருளியல் முற்றிற்று 10

4. நட்பியல் (5)

1. நட்பு

நட்பியலாவது, அறம் பொருளின்பமென்னும் மூன்றின் கண்ணும்நின்று நன்னெறிக்கண் உய்க்கும் ஆதலின் அதனிலக்கணம் கூறுதல். அரசன் தானும் திருந்தித்திருந்தினாரையும் கூட்டிக் கொண்டுநாடு முதலான பொருளையும் பெற்று அதனை அழியாமல் காக்கும் படையை உடையராயினும், காமத்தானாதல் மயக்கத் தானாதல் பிறழ ஒழுகுவனாயின், இவை எல்லாப் பொருளையும் கெடுத்துத் தானும் கெடுவன் என்று அவ்வாறொழுகுங்கால் தன்னில் பெரியவராகிய மந்திரி புரோகிதரை ஒளித்தும், தன்ஏவல் வழிவரும் அமாத்தியரையும் கேளாதும் ஒழுகுவன் ஆதலின், அவ்விடத்து உடன்பட்டு நின்று பாதுகாப்பர் வேண்டும் என்று இப்பொருள் கூறப்பட்டது. அதுகூறிய அதிகாரம் ஐந்தினும் முற்பட நட்பிலக்கணம் ஓரதிகாரத்தானும், அவரை ஆராயுமாறு ஓரதிகாரத்தானும், நட்கப்படாதாரிலக்கணம் ஓரதி காரத்தானும் மனத்தினால் நட்பின்றி நட்டார் போன்று ஒழுகுவார் திறன் ஓரதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள், நட்பாவது நட்போர்மாட்டுச் செய்யும் திறன் கூறுதல்.

781. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

(இ-ள்) நட்புப்போல உண்டாக்குவதற்கு அரியன, யாவை யுள? அவ்வாறு உண்டாக்கப்பட்ட நட்புப் போலப்பிறர் நல்வினை செய்தற்கு அரிதாகக் காக்கும் காவல் யாவையுள? (எ-று).

இது நட்புத் தேடலரிது என்றது. 1

782. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு.

(இ-ள்) முகத்தொடு முகமகிழக் கொள்ளும் நட்பு நட்பன்று; மனத்தோடு மனமகிழக் கொள்ளும் நட்பே நட்பு. (எ-று).

மேல் நட்பு அரிது என்றார்; உலகத்தும் பலரும் தம்மில் கலந்தது காணா நின்றோம்; அஃது அரிதாயினவாறு (என்) என்றார்க்குக் கூறப்பட்டது.

783. நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(இ-ள்) ஒருவனோடு ஒருவன் நட்புப்பண்ணுதல் நகுதற் பொருட்டன்று; மிகையாயின செய்யுமிடத்து முற்பட்டுக் கழறுதற் பொருட்டு, (எ-று).

இது மனமகிழ நட்டலேயன்றித் தீக்கருமங்கண்டால் கழறவும் வேண்டுமென்றது. 3

784. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

(இ-ள்) உடை இழந்தவன் கைகுறிப்பின்றித் தானே மறைக்குமாறுபோல, இடுக்கண் உற்ற அப்பொழுதே அதனைப் போக்கவல்லது நட்பு, (எ-று).

இது கழறுதலே அன்றித்துன்பம் துடைக்கவும் வேண்டும் என்றது. 4

785. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(இ-ள்) அழிவு வந்தவிடத்துத் துன்பத்தை நீக்கி இன்ப நெறியின்கண் நிறுத்திச் செயலற்ற அழிவு வந்தவிடத்து அவரோடு கூட அல்லல்படுவது நட்பு, (எ-று).

இது துன்பம் கெடுக்கமாட்டாக்கால் தானும் துன்பமுற வேண்டும் என்றது. 5

786. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

4. நட்பியல்

(இ-ள்) நட்புக்குச் சுழல்வின்றி இனிது இருக்கல் ஆவது யாதென்னில், அதுவும் இடத்துஊன்றியாகி நிற்றல் என்று கொட்பின்றி வீற்றிருத்தல் எனக்கூட்டுக. இதனாற்சொல்லியது; நட்புத் திரிவின்றியிருத்தலாவது நட்டார்க்குத்தளர்ச்சி வந்தால் தாங்குதல் என்றவாறாயிற்று. மேல் கூறினவெல்லாம் உவந்தார் மாட்டும் செய்யுந்திறன் கூறிற்றின. இது செல்வர் குறைபாட்டினால் தம்மின் தாழ்ந்தார் மாட்டும் செய்யும்திறன் கூறிற்று. 6

787. இனைய ரிவர்நமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

(இ-ள்) இவர் நமக்கு இத்தன்மையர், யாமும் இவர்க்கு இத்தன்மையே மென்றுபேணிச் சொல்லினும் நட்புவாடும் ஆகலான் தன்னை நினைக்குமாறுபோல நினைக்குதல் (எ-று).

இது மேற்கூறியவாறு செய்தலேயன்றித் தான் அவன் என்னும் வேற்றுமையின்றி ஒழுக வேண்டும் என்றது. இத்-துணையும் நாட்டின் இலக்கணம் கூறப்பட்டது. 7

788. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

(இ-ள்) படிக்குந்தொறும் நூல்நயம்போல அறிவுதரும், பழகுந்தொறும் பண்புடையாளரது நட்பு, (எ-று).

மேல் பொதுவாக நட்டோர் செய்யும் திறன் கூறினார். இது குணவானோடு நட்புக்கொள்ளின், அறிவுண்டாமென்று கூறியது. 8

789. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

(இ-ள்) நட்பாதற்குப் பலநாள்பழுகுதல் வேண்டா; ஒரு நாள் கண்டாராயினும் உணர்வுடையார்க்கு அவ்வுணர்வுடைமை தானே, நட்பாகும் உரிமையைத் தரும், (எ-று).

மேல் குணவான் அறிவுண்டாக்கும் என்றார்; இஃது ஒத்த அறிவுடையார்க்கும் அவ்வறிவுடைமைதானே நட்பாகு மென்று கூறப்பட்டது. 9

4. நட்பியல்

790. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

(இ-ள்) பிறை நிறையும் நீர்மைபோல, ஒருநாளைக் கொருநாள் வளரும் அறிவுடையாரொடு கொண்ட நட்பு; மதியின் பின்னீர்மைபோலத் தேயும் பேதையாரொடு கொண்ட நட்பு (எ-று).

இஃது அறிவுடையார் நட்பு வளருமென்பதூஉம் அறிவில்லாதார் நட்புத் தேயுமென்ப தூஉங் கூறிற்று. பின் நட்பாராய்தல் கூறுகின்றாராதலின் இதுபின் கூறப்பட்டது. 10

---

2. நட்பாராய்தல்

நட்பாராய்தலாவது நட்டாற்கு ஆவாரை ஆராய்ந்து கொள்ளுமாறு கூறுதல், இது நட்குங்கால் ஆராய்ந்து நட்கவேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

791. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(இ-ள்) (நட்பை விரும்பியாள்பவர்க்கு) ஆராயாது நட்புப் பண்ணுதல் போலக் கெடுதல் வருவதில்லை; நட்டபின்பு அவர்க்கு விடுதலில்லையாதலால் (எ-று).

இது ஆராய வேண்டுமென்றது. 1

792. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனு மறிந்தியாக்க நட்பு.

2 நட்பாராய்தல்

(இ-ள்) ஒருவனுடைய குணமும் குடிப்பிறப்பும் குற்றமும் குறைவில்லாத சுற்றமும் முன்பே ஆராய்ந்து, பின்பு அவனை நட்பாகப்பிணிக்க, (எ-று).

இவையெல்லாம் ஒத்தனவாயின், உறவு நாள் செல்லும். இஃது ஆராய வேண்டுவன கூறிற்று. 2

793. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(இ-ள்) மேற்கூறியவற்றுள் உயர்குடிப்பிறந்து, (தன் பாட்டுப்) பிறர் சொல்லும் பழிக்கு அஞ்சுமவனை, அவன் வேண்டிய தொன்று கொடுத்தும் நட்பாகக் கொள்க, (எ-று).

கொடுத்தும் கொளல் வேண்டுமென்றமையால் அரசன் நட்பாவாரைக் கூறிற்று. 3

794. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(இ-ள்) குற்றம் கண்டால் அழுமாறு சொல்லி, நெறியல்லாதனவற்றிற்குக் கழறி, உலகவழக்கறிய வல்லாரது நட்பை ஆராய்ந்துகொள்க, (எ-று).

இது மந்திரிகளின் நட்பாவாரைக் கூறிற்று. அரசர் அல்லாதார்க்குத்தம்மில் உயர்ந்தாரை நட்பாக வேண்டும் என்று கொள்ளப்படும். 4

795. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

(இ-ள்) குற்றமற்றார் நட்பைக் கொள்க; ஒரு பொருளைக் கொடுத்தாயினும், தனக்கு நிகரில்லாதார் நட்பினின்று நீங்குக (எ-று).

இது குற்றமற்றார் நட்பைக் கொள்ள வேண்டும் என்பதூஉம் நிகர் அல்லாதார் நட்புத் தவிர வேண்டும் என்பதூஉம் கூறிற்று. 5

2. நட்பாராய்தல்

796. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

(இ-ள்) ஒருவற்கு இலாபம் ஆவது அறிவிலாதாரோடு நட்பாகுதலை நீங்கி விடுதல், (எ-று).

இது பேதையார் நட்புத் தவிர்கவென்றது. 6

797. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ் கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு.

(இ-ள்) தான் சிறுகுமவற்றை உள்ளத்தால் நினையாதொழிக; அதுபோல, அல்லல் வந்துவிடத்து வலியறுப்பாரது நட்பைக்கொள்ளாதொழிக, (எ-று).

இது இழிகுணத்தார் நட்புத் தவிர்க வென்றது. 7

798. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

(இ-ள்) கெடும்பொழுது கைவிடுவாரது நட்பைத் தன்னைப் பிறர் கொல்லுங் காலத்து நினைப்பினும் நினைத்த மனத்தினை அந்நட்புச் சுடும்; அவர் சொல்லுமதனினும், (எ-று).

இது கேட்டிற்கு உதவாதார் நட்பைத் தவிர்கவென்றது. 8

799. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(இ-ள்) கேடுவந்தவிடத்தினும் ஒரு பயனுண்டாம்; அக்கேடு நட்டாரது தன்மையை (நீட்டி) யளந்தறிதற்கு ஒரு கோலாமாதலால், (எ-று).

மேல் கெடுங்காலைக்கைவிடுவாரை விடவேண்டுமென்றார்; அவரை அறியுமாறென்னை யென்றார்க்குக் கேட்டாலல்லது அறிதல் அரிதென்று கூறிற்று. 9

2. நட்பாராய்தல்

800. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(இ-ள்) குற்றம் (ஆய்ந்து குணமும் ஆய்ந்து) கொள்ளாதான் கொண்ட நட்புப் பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும், (எ-று). 10

இஃது ஆராயாமையால் வருங்குற்றங் கூறிற்று.

---

3. பழைமை

பழைமையாவது நட்டோரது உரிமை கூறுதல். இஃது அவருரிமையால் செய்வனவற்றிற்குப் பொறுக்கவேண்டுமென்று அதன்பின் கூறப்பட்டது.

801. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

(இ-ள்) பழைமையென்று சொல்லப்படுகின்றது யாதெனின், யாதொன்றினையும் உரிமை அறுத்தலில்லாத நட்பு, (எ-று)

இது பழைமையாவது இது என்று கூறிற்று. 1

802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

(இ-ள்) நட்பிற்கு அங்கமாவது உரிமை; அவ்வுரிமையால் செய்யுமதற்கு உடம்படுதல் சான்றோர்க்கு இயல்பு, (எ-று)

3. பழைமை

இது (பேய்ச்சுரைக்காய்க்குப்) பல காயமும் அமைந்தாலும் உப்பு இன்றாயின் இனிமையுண்டாகாதது போல, உடன் படாராயின் இனிமைஇன்றாதலான் உடம்பட வேண்டுமென்றது. 2

803. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(இ-ள்) நட்டோர் தமது உரிமையாலே கேளாது இசைவில்லாதவற்றைச் செய்வாராயின், அதற்கு முனியாது அதனையுந் தாமே விரும்பும் தன்மையோடு கூடவிரும்பியிருப்பார் மிக்கார், (எ-று).

(இஃது உடன்படுதலன்றி விரும்பவும் வேண்டுமென்றது.) 3

804. கேளிழக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழக்க நட்டார் செயின்.

(இ-ள்) நட்டாரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமையறியவல்லார்க்கு நட்டோர் தப்புச்செய்யின், அந்தநாள் நல்ல நாளாம், (எ-று)

இது கேளாது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமையவேண்டுமென்றது. 4

805. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(இ-ள்) தமக்கு அழிவுவரும் காரியத்தைப் பழைய நட்டோர் செய்தாராயினும் அவரோடு உள்ள அன்புவிடார்; முற் காலத்து அன்பின் வழியாக வந்த நட்பையுடையவர்கள் (எ-று).

இது கேடுவருவன செய்யினும் அமையவேண்டுமென்றது. 5

806. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(இ-ள்) தாம் நோவத்தக்கனவற்றை நட்டோர் செய்வாராயின், அதற்கு முனியாது ஒன்றில் அறியாமையாலே செய்தாரென்று கொள்க; ஒன்றில் பெரிய உரிமையாலே செய்தாரென்று கொள்க, (எ-று). 6

3. பழைமை

807. எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு.

(இ-ள்) பழைமையின் கண்ணே நின்றாரது நட்பை அவரானே நீக்கு வழியுள வந்த விடத்தும் விடார்கள் ஒழுக்கத்தின் கண்ணே நின்றார் (எ-று).

எல்லையாவது வரம்பு. அஃது ஒழுக்கமாயிற்று மேற்கூறிய வாற்றான் அமைந்து விடுதலன்றி நட்புவிடுதல் உயர்ந்தோர் செய்யாரென்றது. 7

808. கெடாஅர் வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

(இ-ள்) குற்றம் உண்டாயின் அவ்விடத்து நட்பினிற் கெடா ராய்க் குலத்தின்வழி வந்த நட்புடையாரது நட்பை விடுதலின்றி உலகத்தார் விரும்புவர், (எ-று).

இது பழைமையைக் கொண்டாடுவாரை உலகத்தார்தாமும் நட்பாடுதற்கு விரும்புவர் என்றது. 8

809. விழையார் விழையப் படுவர் பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(இ-ள்) விரும்பாதாராலும் விரும்பப்படுவர், பழைய நட்டோர்மாட்டுக் குணத்தினின்று நீங்காதார், (எ-று).

இது பகைவரும் விரும்புவாரென்றது. 9

810. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

பழகிய நட்பால் பெறும் பயன் என்னை? உன் உரிமையால் ஒருவன் பிழை செய்த காலத்து அரசன்தான் அமையாதவிடத்து. 10

4 தீ நட்பு

தீ நட்பாவது தீயகுணத்தாராகிய மாந்தரோடு நட்டனால் வருங்குற்றங் கூறுதல். மேல் நட்பாராய்தல் கூறுகின்றுழி நட்கப்படாதாரைக் கூறி ஈண்டும் கூறுதல் (கூறியது கூறலாம் பிற வெனில், அற்றன்று; அதனுள் நட்கப்படாதாரைக் கூறினார்; இதனுள் அவரால் பயனின்மை கூறினார். ஆதலின் வேறு படுத்துக் கூறப்பட்ட தென்க. மேல் நட்பினால் வரும் பயனும் அவரோடு ஒழுகும் திறனும் கூறினார்; இது நட்பினால் வரும் பயன் கூறுகின்றது ஆதலின் அதன்பிற் கூறப்பட்டது.

811. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

(இ-ள்) தெருவின்கண் நெறிப்பட நடந்து அமரின்கண் ஏறினவன் வலிமையைக் கெடுக்கும் நெறியில்லாத குதிரையைப் போல்வார் தமராவதின் தனியனாதல் நன்று, (எ-று).

தனிமை தீதென்பது முன்பே அமைந்துகிடந்தது. இந் நட்பின் கொடுமை யதுவும் நன்றாயிற்று. தீமைக்கு அளவின்மையின் இவ்வாறு கூறினார். இவ்வுரை மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும். இது கயவர் நட்புத் தீமைபயக்கு மென்றது. 1

812. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(இ-ள்) நட்புச்செய்து தனக்குப் பாதுகாவலாகாத புல்லியாரது புல்லிய நட்பைப் பெறுவதினும், பெறாமை நன்று, (எ-று).

இது சிறியார் நட்புத் தீமைபயக்கு மென்றது. சிறியார் ஆவார் சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார். 2

813. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

4. தீ நட்பு

(இ-ள்) அறிவில்லாதார் மிகவும் கெழுமிய நட்பாகுமதனினும், அறிவுடையார் பகைமை கோடிமடங்கு மிக்க நன்மை உடைத்தாம், (எ-று).

இது பேதைமையார் நட்புத் தீமை பயக்கு மென்றது. 3

814. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

(இ-ள்) கண்ணினால் பருகுவாரைப் போலத் தமக்கு அன்புடையாராயிருப்பினும், குணமில்லாதார் நட்புப்பெருகுமதனினும் குறைதல் நன்று, (எ-று).

இது குணமில்லாதார் நட்புத் தீதென்றது. 4

815. ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

(இ-ள்) தம்மாலியலும் கருமத்தை முடியாது வருந்துமவர் நட்பை, நட்பென்று சொல்லுவதும் செய்யாராய் வீழவிடுக, (எ-று).

இஃது அழுக்காறுடையார் நட்புத் தீதென்றது. 5

816. எனைத்துங் குறுகுத லோம்பல் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(இ-ள்) சிறிதும் செறிதலைத் தவிர்க, மனையின்கண் நட்டோராயிருந்து, மன்றின்கண் குற்றங் கூறுவாரது நட்பைத் தவிர்க. (எ-று).

இது குற்றங்கூறுவார் நட்புத் தீதென்றது. 6

817. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(இ-ள்) பயன்படும் நனவின்கண்ணேயன்றிக் கனவின் கண்ணும் இன்னாதாம் செய்யுந்தொழில் வேறாக, சொல்லுங்கூற்று வேறாக, ஒழுகுவாரது நட்பு, (எ-று)

இது பொய்கூறுவார் நட்புத் தீதென்றது. 7

4. தீ நட்பு

818. உறினட் டறினொருஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

(இ-ள்) செல்வம் மிக்க காலத்து நட்டு, அஃது அற்ற காலத்து நீங்குகின்ற நிகரில்லாதார் நட்பைப் பெற்றவதனால் வரும் நன்மை யாது? இழந்தவதனால் வரும்தீமை யாது? (எ-று).

மக்களுள் இவரோடு ஒத்த இழிவுடையார் இன்மையான், ஒப்பிலாதார் என்றனர். அன்றியும் தன்னோடு பொருத்தமில்லாதார் என்றுமாம். இது காலபுருடர் நட்புத் தீதென்றது 8

819. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

(இ-ள்) நட்டோர்க்கும் தமக்கும் வரும் நன்மை தீமைகளை நோக்கப் பார்த்துத் தமக்கு நன்மையாகுமதனைச் சீர்மைதூக்கும் நட்டோரும், பெற்றது கொள்ளும் கணிகையரும், கள்வரும் மேற கூறியவர்களோடு ஒப்பர், (எ-று)

இம்மூவர் நட்பையும் ஆராயின் அவர்களும் தீமை தருவர் என்றது. 9

820. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்.

(இ-ள்) நகையின் பகுதியார் செய்த நட்பினும், பகைவராலே பத்துக் கோடி மடங்கு நன்மை மிகும், (எ-று).

நகைவகையார் நட்பு ஆகிய அதனினும் பகைவராதல் நன்மைபயக்கும் என்று பொருள் உரைக்கினும் அமையும் நகை வகையர்-காமுகர் வேழம்பர் முதலாயினார். இவர்கள் நட்புத் தீதென்றது. பின் கூடாத நட்புக்கூறுவார் ஆதலின் இவர்களும் அதற்குரியர் என்பதற்கு ஈண்டுரைத்ததென்க. 10

5. கூடாநட்பு

கூடா நட்பாவது சுற்றத்தாராயினும் பிறராயினும் மனத்தினால் நள்ளாது நட்டாரைப் போல ஒழுகுவார் இயல்பும் அவரொடு ஒழுகுந்திறனும் கூறுதல். அவர் தாம் இருக்கையர் தமக்கு இடமின்றிக் கருமங் காரணமாக நட்பாரும், பகைவராய் நட்பாருமென அவ்விருவகையாரையும் தீநட்புப்போலக் கடியவேண்டுமாதலின், அதன்பின் கூறப்பட்டது.

821. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

(இ-ள்) நட்டோர் போன்று மனத்தினான் நட்பில்லாதார் நட்பு பெண் மனம்போல வேறுபடும்; ஆதலான் அவருள்ளக் கருத்தறிந்து கொள்க, (எ-று).

இது நட்பாயொழுகுவாரது உள்ளக்கருத்தறிய வேண்டுமென்றது. 1

822. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.

(இ-ள்) முகத்தான் இனியவாகச்சிரிக்கு மனத்திலே பொல்லாங்கு நினைக்கும் வஞ்சரை அஞ்சவேண்டும், (எ-று).

மேல் நட்பாய் ஒழுகுவாரது உள்ளக்கருத்து அறிய வேணும் என்றார்; இஃதறியுங்கால் குறிப்பினாதல் சொல்லினாதல் அறிய வேண்டுமன்றே, அவையெல்லாவற்றானும் அறிதல் அரிதென்பார் முற்படக் குறிப்பினால் அறிதலரிதென்பது கூறப்பட்டது. 2

823. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேற்றபாற் றன்று.

(இ-ள்) மனத்தால் பொருத்தமில்லாதாரை யாதொன்றின் கண்ணும் அவர் சொல்லினால் தெளியற்பாற்றன்று, (எ-று).

இது சொல்லினால் அறிதலரிதென்றது. 3

5. கூடாநட்பு

824. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லோல்லை யுணரப்படும்.

(இ-ள்) நட்டாரைப்போல நல்லவை ஆராய்ந்து சொல்லினும் மனத்தினான் பொருந்தாதார் சொல்லை இதுவும் ஒருவினையுடைந் தென்று விரைய ஆராயப்படும்.

இது காரிய மானவற்றைச் சொல்லினும் தேறல் அரி தென்றது. 4

825. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணார்க் கரிது.

(இ-ள்) நல்லவாகிய பல நூல்களைக் கற்றவிடத்தும், மன நல்லாராகுதல் மாட்சிமையில்லாதார்க்கு அரிது, (எ-று).

மனநன்மையாவது செம்மை; அஃது இவ்விடத்தின்மையால் மனநன்மை இல்லாதாராயினார். இது கல்வியான் அறிதல் அரி தென்றது. 5

826. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.

தாழச்சொல்லுஞ் சொல்வல்ல பகைவர் மாட்டு நன்று சொன்னாரென்று கொள்ளா தொழிக வில்லினது வணக்கம் தீமை யைக் குறித்தமை ஏதுவாக, (எ-று).

இது தாழச்சொல்லினும் தேறப்படா தென்றது. 6

827. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து.

(இ-ள்) தொழுதகையுள்ளும் கொலைக்கருவி ஒடுங்கும்; பகை வர் அழுத கண்ணீரும் அவ்வாறு கொள்க, (எ-று).

இது மெல்லியராகத் தொழுத காலத்தினும் அழுதகாலத் தினும் தேறப்படா ரென்பது. இத்துணையும் கூடாநட்பினது இயல்பு கூறப்பட்டது. 7

5. கூடாநட்பு

828. சீர்விடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(இ-ள்) முடியுமுடங்காணின், மற்றொருவன் எறிதற்குப் பட்டையாம்; மனத்தினால் தேராது புறத்து ஒத்தார் போல ஒழுகுவாரது நட்பு, (எ-று).

பட்டடையாவது தான் தாங்குவதுபோல நின்று வெட்டுவார்க்கு உதவி செய்வது. இது கூடா நட்பினால் வரும் குற்றம் கூறிற்று. 8

829. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(இ-ள்) நட்டாரைப்போலச் செய்யுமவற்றை மிகச்செய்து மனத்தினால் தம்மை இகழுமவர்களைத் தாமும் மகிழுமாறு செய்து நட்பின்கண் நட்புச்சாவநட்க, (எ-று).

இது கருமம் காரண மாகி நட்டாரோடு ஒழுகும் திறன் கூறிற்று. 9

830. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

(இ-ள்) பகைவர்நட்பின் நட்பாங்காலம் வந்தவிடத்து முகத்தால் நட்பினைச் செய்து அகத்தால் நட்பினை நீங்கிவிடுக, (எ-று). 10

இது பகைவோரய நட்டோர் மாட்டு ஒழுகுந்திறன் கூறிற்று.

நட்பியல் முற்றிற்று.

5. துன்பவியல் (12)

1. பேதைமை

துன்பவியலாவது கேட்டிற்குக் காரணமாகியவற்ற தியல்பு கூறுதல். இறைமாட்சி முதலாகக் கூடாநட்பு ஈறாகப் பொருட்பகுதி யாகிய அரசர்க்குரிய அமைச்சும் நாடும் அரணும் பொருளும் படையும் நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்புங் கூறினார், இனி அவ்வரசர்க்கும் அவராலாக்கப்பட்ட பொருட்கும் கேடுவரும் நெறி யையறிந்து காக்குமாறு கூற வேண்டுமாதலின், இது கூறப் பட்டது. மேலதனோடியையுமிது. அஃது யாங்ஙனம் கூறினா ரெனின், அது கூறிய அதிகாரம் பன்னிரண்டினும் இதன் முத லாகப் பெரியாரைப் பிழையாமை ஈறாகப் பிறரால் கேடுவரும் திறனும் அதனைக் காக்குமாறும், தன்னான் வரும் துன்பப்பகுதி ஐந்து அதிகாரத்தானும் கூறப்பட்டது.

831. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்.

(இ-ள்) அறியாமை யென்று சொல்லப்படுவது யாதெனின், குற்றம் பயப்பனவற்றைக்கைக் கொண்டு நன்மை பயப்பன வற்றைப் போகவிடுதல், (எ-று).

பேதைமையின் இலக்கணம் கூறுவார் முற்படத்தன் கருமம் அறியாமை என்று கூறினார். 1

832. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

(இ-ள்) அறியாமை யெல்லாவற்றுள்ளும் அறியாமை யாவது தனக்குக் கைவாராத பொருளின்கண் காதன்மை செய்தல் (எ-று).

இது வருந்தினாலும் பெறாததற்குக் காதல் செய்தலும் பேதை மையென்றது. 2

1. பேதைமை

833. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(இ-ள்) நூல்களைக் கற்றறிந்தும், அவற்றைப் பிறர்க்கு இசையச் சொல்லியும், தாம் அடங்குதலைச் செய்யாத பேதையார் போலப் பேதையார் உலகத்து இல்லை, (எ-று).

கல்வியுடையாரை அறிவுடையார் என்று உலகத்தார் கூறுவராதலின், அதனை மறுத்துக் கூறாராயினும் அடக்கம் இல்லையாயின் பேதையர் என்று கூறப்பட்டது. 3

834. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

(இ-ள்) நாணமில்லாமையும், தெரிந்துணராமையும், ஈரமின்மையும், யாதொரு பொருளையும் போற்றாமையும் பேதையார் தொழில், (எ-று).

இது, பேதையார் தொழில் கூறிற்று. இவை நான்கினானும் பேதையா ரிலக்கணம் கூறியவாறு. 4

835. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

(இ-ள்) பேதை ஒரு பிறப்பின்கண் செய்யும் செயலானே செய்யவல்லனாம் எழுபிறப்பினும் தான் புக்கழுந்தும் நரகத்தை, (எ-று).

எனவே அதற்குக் காரணம் ஆயின செய்யும் என்றவாறாயிற்று. எழுபிறப்பினும் என்றது ஒருகால் அதனகத்திலே பிறந்தால் அவ்வுடம்பு நீங்கினாலும், பின்னும் அதனுள்ளே பிறந்து அகலாது உறப்பேதை அறம் செய்யுமாறு கூறிற்று. 5

836. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன்று டைமை பெறின்.

1. பேதைமை

(இ-ள்) முன்னே பித்தாய் மயங்கிய ஒருவன் மது வுண்டு களித்தாற்போலச் செய்வதறியானாம் பேதையானவன் கையகத்தே ஒரு பொருள் உடையனாகப் பெற்றானாயின் (எ-று).

இது பொருள் பெற்றால் ஒழுகும் திறன் கூறிற்று. 6

837. பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

பயனறியாப் பேதை ஒரு வினையை மேற்கொள்வனாயின், அஃது ஒன்றில் தப்பும்; ஒன்றில் செய்யவல்லாரைத் தேடும்; அல்லது தான் செய்து முடிக்க மாட்டான். இது பொருள் செய்யும் திறன் கூறிற்று. 7

838. ஏதிலா ரரரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

(இ-ள்) அயலார் உண்ண, உற்றார் பசித்திருப்பர்; பேதையானவன் பெரிய செல்வத்தை உற்றவிடத்து, (எ-று).

இது, பேதை பொருள்பெற்றால் வழங்குந்திறன் கூறிற்று. 8

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(இ-ள்) மக்கட்குப் பேதையாரதுநட்பு மிகவும் இனிது; பிரிந்தவிடத்துவருவதொரு துன்பம் இல்லையாதலான், (எ-று).

இது, (பேதை) காமந்துய்க்குமாறு கூறிற்று. 9

830. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

(இ-ள்) கழுவாதகாலைப் பள்ளியின்கண் வைத்தாற்போலும்; சான்றோர் அவையின்கண் பேதைபுகுந்து கூடியிருத்தல், (எ-று).

இது, பேதையிருந்த அவை யிகழப்படுமென்றது. 10

2. புல்லறிவாண்மை

புல்லறிவாண்மையாவது சிற்றறிவின் இயல்பும் அதனால் வருங் குற்றமும் கூறுதல். இதுவும் பேதைமையோ டொத்த இயல் பிற்றாதலான் அதன்பின் கூறப்பட்டது.

841. வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

(இ-ள்) புல்லறி வென்று சொல்லப்படுவது யாதெனின், அது யாம் அறிவுடையோ மென்று தம்மை தாம் மதிக்குங்களிப்பு (எ-று).

வெண்மை-காழ்ப்பின்மை; முற்றுதலின்மையின் வெண்மை யெனப்பட்டது. புல்லறிவாவது இத்தன்மைத்து என்று கூறுவார் முற்பட அறிவு இல்லாதவன் அறியேன் என்னாது அறிவுடை யோனாகத் தன்னை மதித்தல் புல்லறிவென்றது. 1

842. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

(இ-ள்) தாம் உய்யக் கல்லாதவற்றைக் கற்றானா ஏறட்டுக் கொள்ளுதல், குற்றந்தீரக் கற்றதனையும் ஐயமாக்கும், (எ-று).

இது, கல்லாததனை மேற் கொள்ளுதல் புல்லறிவென்றது. 2

843. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(இ-ள்) உலகத்து அறிவுடையார் பலரும் உண்டென்பது ஒரு பொருளை இல்லையென்று சொல்லுமவன், இவ்வுலகின் கண்ணே ஒரு பேயென்று எண்ணப்படும் (எ-று).

இஃது, உயர்ந்தோர் உண்டென்பதனை இல்லையென்றல் புல்லறி வென்றது. 3

2. புல்லறிவாண்மை

844. காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு.

(இ-ள்) அறியாதானை அறிவிக்கப் புகுவான் தானறியானா கும்; அவ்வறியாதவன் தான் அறிந்தபடியே அறிந்திருக்கு மாத லான், (எ-று).

இது, கொண்டது விடாமை புல்லறிவென்றது. 4

845. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

(இ-ள்) தம்மாட்டுள்ள குற்றத்தைப் பிறரறியாமை மறைத்த காலத்துப் பிறர் காணாமல் மறைக்க வேண்டும் உறுப்பை ஆடை யான் மறைத்தல் புல்லறிவு, (எ-று).

எனவே, அதுவும் மறையானாயின், குற்றம் நாடுவாரில்லை யென்றவாறாயிற்று. இது குற்றமறையாமை புல்லறிவென்றது. 5

846. ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

(இ-ள்) அறிவுடையார் சொல்லவுந்தான் செய்யான்; (தானும் தெளியான்;) அத்தன்மையானாகிய சீவன் போமளவும் உலகத் தார்க்கு ஒரு நோயைப் போல்வான், (எ-று).

ஏவுதல்-தான்தெரிய என்று ஏவுதல். தெளிதல் பொருள் யாதொன்று தெளிதல். இஃது, ஈட்டின பொருளைக் கொடுத்தலும் தொகுத்தலும் செய்யாமை புல்லறிவென்றது. மேவறு செய்யும் வினைக்கும் ஒக்கும். 6

847. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் றவம்.

(இ-ள்) அறிவிலாதான் மகிழ்ந்து கொடுத்தற்குக் காரணம் வேறொன்றும் இல்லை; அப்பொருளைப் பெறுகின்றவன் நல்வினைப் பயன, (எ-று).

2. புல்லறிவாண்மை

இது, கொடுத்தானாயினும் வரிசையறியாது கொடுக்குமாதலின் அது புல்லறிவாயிற்று. இத்துணையும் புல்லறிவின் இயல்பு கூறப்பட்டது 7

848. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

(இ-ள்) நல்குரவினுள் நல்குரவாவது அறிவின்மை; பொருளின்மையை நல்குரவாக எண்ணார் உலகத்தார்; அது புண்ணியம் செய்யாதார்மாட்டே சேருமாதலான், (எ-று)

அறிவு புண்ணியம் செய்தாற்கு உளதாமோ எனின், அது முயற்சியானும் வருமாதலின் வேறு பகுத்துக் கூறினார் இது அறிவின்மையான் வரும் குற்றம் கூறுவார் முற்பட இதனின் மிக்க நல்குரவில்லை என்றார். 8

849. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(இ-ள்) அறிவில்லாதான் தான் அரிதாக எண்ணின மறைப்பொருள் சோரவிடும்; அதுவேயன்றித் தனக்குத்தானே பெரிய துன்பத்தினையும் செய்துகொள்ளும், (எ-று).

சோரவிடுதல்-பிறர்க்குச் சொல்லுதல். இது, பொருட்கேடும் உயிர்க்கேடும் தானே செய்யுமென்றது. 9

850. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

(இ-ள்) அறிவிலாதார் தாமே தம்மை யிடர்ப்படுத்துமது பகைவர்க்கும் செய்தல் அரிது, (எ-று).

இது, மேற்கூறியவதனை வலியுறுத்திற்று. இதனானே பீழை கூறுகின்ற துன்பத்தை உண்டாக்குமவற்றுக்குக் காரணமாம் என்பதூஉம் கண்டு கொள்க. 10

3. இகல்

இகலாவது பிறரோடு மாறுபாடு கொண்டார்க்கு வரும் குற்றங்கூறுதல். இஃது அறியாதார்க்கு உளதாமாதலின், பின் கூறப்பட்டது.

851\. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

(இ-ள்) எல்லா வுயிர்க்கும் வேறுபடுதலாகிய குணமின்மையைப் பரப்பும் துன்பத்தை, இகலென்று சொல்லுவர் அறிவோர். (எ-று).

இஃது, இகலாவது இதுவென்று கூறிற்று. 1

852\. இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடுநரற்கு[1].

(இ-ள்) மாறுபடுவதற்குக் காரணமுண்டாயினும், ஆக்கம் வருங்காலத்து மாறுபாடு காணான்; அதனை மிகுதலைக் காணும் கேடு வருங்காலத்து, (எ-று).

இம் மாறுபாடு நல்வினை யுடையார்க்குத் தோற்றாதென்றது. 2

853\. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(இ-ள்) மாறுபாட்டிற்குச் சாய்ந்தொழுகுதல் ஆக்கமாம்; அதனை மிகுதலை நினைக்கின் கெடும், (எ-று).

இது மாறுபாட்டிற்குச் சாய்ந்தொழுகல் வேண்டுமென்றது 3

854\. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

(இ-ள்) இகலின் எதிர் சாய்ந்தொழுக வல்லாரை வெல்ல நினைக்கும் தன்மையவர் யாவர்தான், (எ-று).

---

[1] 'தரற்கு' என்பது மணக் பாடம்

மேல் இகலின் கண் சாய்ந்தொழுக வேண்டுமென்றார், அது தோல்வி யாகாதோ வென்றார்க்கு, அவரை வெல்வாரில்லை யென்றது. 4

855. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

(இ-ள்) பிறருடன் மாறுபாட்டின்கண் மிகுதல் இனிதென்று கூறுமவனும், அவன் மனை வாழ்க்கையும், சாதலும் கெடுதலும் அணித்து (எ-று).

நிரனிறை. இது சாயானாயின், உயிர்க்கேடும் பொருட்கேடு முண்டாமென்றது. 5

856. மிகன்மேவு மெய்ப்பொருள் காணா ரிகன்மேவ
லின்னா வறிவி னவர்.

(இ-ள்) மிகுதலைப் பொருந்துகின்ற உண்மைப்பொருளைக் காணமாட்டார், மாறுபாட்டினைப் பொருந்தின இன்னாத அறிவுடையார், (எ-று).

மெய்ப்பொருள் காணார் என்றமையால் கல்வியின்கண் தருக்கத்தினால் மாறுபடுவானா நோக்கிற்று.

இதுமாறுபடுவார்க்கு மெய்ப்பொருள் தோன்றாதென்றது. 6

857. இகலானா மின்னாத வெல்லா நகலானா
நன்னய மென்னுஞ் செருக்கு.

(இ-ள்) மாறுபாட்டினாலே துன்பங்களெல்லாம் உளவாம்; உடன்பட்டு நகுதலாலே நல்ல நயமாகிய வுள்ளக்களிப்பு உண்டாம், (எ-று).

மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின் அதனைத் தவிரத் தனக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சி யுண்டாம் என்றது. 7

858. இகலெவ்வு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

(இ-ள்) மாறுபடுதலாகிய இன்னாத நோயை நீக்குவானாயின், அந்நீக்குதல் கேடில்லாத குறையற்ற ஒளியினைத் தரும், (எ-று).

இது, தோற்றமுண்டாக்கு மென்றது. 8

859. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ-ள்) இன்பத்தின் மிக்க இன்பத்தை எய்தும்: மாறுபாடாகிய துன்பத்தின் மிக்க துன்பம் போமாயின், (எ-று).

எல்லா இன்பத்தினும் மிக்க வீடுபேற்றின்பமும் எய்தும் என்றது. 9

860. இகல்கருதிப் பற்றார் செயினு மிகல்கருதி
யின்னாசெய் யாமை தலை.

(இ-ள்) தம்மொடு பற்றில்லாதார் வேறுபடுதலைக் கருதித் தீயவற்றைச் செய்தாராயினும், அவரொடு மாறுபடுதலைக் கருதித் தாமும் அவர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை நன்று, (எ-று)

இது, மேற்கூறிய குற்றமும் குணமும் பயக்குமாதலின், மாறுபடுதற்குக் காரணமுள்வழியும் தவிர்தல் வேண்டும் என்றது. 10

4. பகைமாட்சி

பகைமாட்சியாவது பகைகொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல் மேல் பகைகோடலாகாதென்றார், இது பகை கொள்ளுங்கால் நன்மை பயக்குமாயின் கொள்கவென்றமையால், அதன் பின் கூறப்பட்டது.

4. பகைமாட்சி

861. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(இ-ள்) தம்மின் வலியார்க்குப் பகையா யெதிர்தலைத் தவிர்க; தம்மைப் போற்றாத எளியார்மாட்டுப் பகைகோடலை மேவுக; (எ-று).

இது, தனக்கு எளியாரோடு பகைகோடலாமென்றது. 1

862. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானை யொல்லா தொளி.

(இ-ள்) கல்லாதானுமாய் வெகுட்சியுடையனுமாய்ச் சிறு பொருளனுமாகிய பகைவனை எல்லாநாளும் ஒளி பொருந்தாது, (எ-று).

மேல் தம்மைப் பாதுகாவாத எளியாரைப் பகை கொள்ளலாம் என்றார்; அவர் எத்தன்மையர் என்றார்க்கு, அவரது இலக்கணம் கூறுவார், முற்பட இவை மூன்றும் உடையார்க்கு விளக்கம் உண்டாகாது ஆதலின் அவரொடு பகை கொள்ளலாம் என்றார். 2

863. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(இ-ள்) அறிவில்லாத அச்சமுடைய பகைவரைப்பெறின், அவரைச் செறுவார்க்கு இன்பம் தூரப்போகாது, அணித்தாக வரும், (எ-று).

அறிவு - காரியவறிவு. இவையிரண்டும் ஒருங்குடையார் வெல்ல மாட்டார். ஆதலால், பகை கொள்ளலாம் என்று கூறப் பட்டது. 3

864. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

(இ-ள்) மீண்டு பாராச் சினத்தனுமாய் மிகப்பெருகிய காமந் தனுமாகியவன் பகை, விரும்பப்படும், (எ-று).

4. பகைமாட்சி

காணாச்சினம் என்றது மேல் கூறிய வெகுட்சியின் மிகுதியை இவையுடையார் நட்டோரிலராவாராதலால், பகை கொடலாமென்றது. 4

865. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

(இ-ள்) பகையை உற்றிருந்தும் மாட்சிமை யில்லாதன செய்யுமவன் பகையினை ஒன்றனைக் கொடுத்தும் கொளல் வேண்டும் துணிந்து, (எ-று).

மாணாதசெய்தலாவது பகைக்காவன செய்யாது பிறிது செய்தல், இவன் வினைசெய்யமாட்டானாதலால், பகை கோடலாமென்றது. 5

866. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து.

இ-ள்) குணங்கள் யாதும் இலனாய்க் குற்றங்கள் பல உடையனாயின், அவன் துணையிலனாம்; அது மாற்றார்க்கு ஏமமாதலை உடைத்தாம், (எ-று).

அன்றியும் மாற்றார்க்கு இவன் துணையிலன் என்று மனத்தின்கண் கொள்ளும் வலியுடைத்தாம் என்றுமாம். மேல் பகைவர் மாட்டுக் குற்றம் பெருகின் அவரை வெல்லலாம் என்றார்; இக்குற்றம் தம்மாட்டும் உளதாயின் வெல்லவொண்ணாது என்று, இது பொதுவாகக் கூறப்பட்டது. குற்றவகை மேல்கூறப்படுகின்றன. 6

867. அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(இ-ள்) சுற்றத்தார்மாட்டு அன்புறுதலும் இலன், வேற்றரசராகிய வலிய துணையும் இலன்; தான் வலியுமிலன்; இப்பெற்றிப்பட்டவன் பகைவன் வலியை யாங்ஙனம் அறுக்கும் (எ-று).

என்பரியும் என்பது இகழ்ச்சிக் குறிப்பு. இம் மூன்றும் இல்லாதவன்வெல்ல மாட்டான் என்பது. 7

4. பகைமாட்சி

868. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

(இ-ள்) அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுவான், பகைவன் வலிமை அறியன், அமதியிலன், ஈயமாட்டான்; இப் பெற்றிப் பட்டவன் பகைவர்க்கு மிகவும் எளியன், (எ-று).

இஃது, இவை நான்கு முடையவன் தோற்குமென்றது. 8

869. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

(இ-ள்) வெகுளியின் நின்று நீங்கானாய், நிறையுடைமை யிலனாயின் அவனை வெல்லுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் எளிது, (எ-று).

இஃது, இவையிரண்டு முடையவ னெல்லார்க்குந்தோற்கு மென்றது. 9

870. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

(இ-ள்) ஒருவினை செய்யத் தொடங்குங்கால் பின் வருவன பாரான், பயன்படுவனவற்றைச் செய்யான், அதனால் உறும் பழியைப் பாரான், குணமுமிலன்; இவன் பகைமை பகைவர்க்கு இனிது ஆம், (எ-று).

இவன் பகைமையால், பகைவர்க்கு இனிமை உண்டாகு மென்றது. இவை ஐந்தினாலும் தான் திருந்த வேண்டும் என்று கூறப்பட்டது. 10

5. பகைத்திறந் தெரிதல்

பகைத்திறந் தெரிதலாவது: பகையின்கண் செய்யுந் திறன் ஆராய்தல். மேல் பகைகொண்டால் வெல்வாரையுந் தோற்பாரையுங் கூறினார். இனி அப்பகைவர் மாட்டுச் செய்யுந்திறன் எண்ணிச் செய்யவேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

871\. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

(இ-ள்) பகை யென்று சொல்லப்படுகின்ற குணமில்லாததனை, ஒருவன் விளையாட்டின்கணணும் விரும்பற்பாலதன்று, (எ-று).

இஃது, எவ்விடத்தும் பகையாகாது என்றது. பகையாகாதென்றமையால் எண்ணமாயிற்று. 1

872\. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

(இ-ள்) பகைவரது தலைமையைக் கெடுக்க மாட்டாதார், பகைவர் உயிர்க்கும் மாத்திரத்திலே அறுதியாகச் சாவார் (எ-று).

இது, பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகைகோடலாகாதென்றது. 2

873\. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

(இ-ள்) வில்லை ஏராக உடைய உழவரோடு பகைகொள்ளினும், சொல்லை ஏராக உடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக, (எ-று).

இஃது. அரசனோடு பகைகொளினும் அமைச்சரோடு பகை கொள்ளலாகாதென்றது. 3

5. பகைத்திறந் தெரிதல்

874. தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.

(இ-ள்) பகையிரண்டாய்த் தான் ஒருவனாய்த் தனக்குத் துணையும் இல்லாயின், பகை யிரண்டினுள் ஒன்றை இனிய துணையாகச் செய்து கொள்க, (எ-று).

இஃது, இருவரொடு பகைகொள்ளத்தகா தென்றது.

875. ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

(இ-ள்) பித்து உற்றவரினும் அறிவிலன்; தனியனாயிருந்து பலரோடும் பகை கொள்ளுமவன், (எ-று).

இருவரோடு பகை கொள்ளுதல் நீதி அன்றாகப் பலரோடு பகை கொண்டவன் பித்தனோடொக்கும் என்றவாறாயிற்று. இது, பலரோடு பகைகோடலாகா தென்றது. 5

876. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல்.

(இ-ள்) பகைவனை ஆக்கமுள்ள காலத்து நட்டோனென்று தெளியலுமாம்; பகைவனென்று ஐயப்படலுமாம்; அழிவுவந்த விடத்துத் தெளிவதுஞ் செய்யாது நீக்குவதுஞ் செய்யாது ஒழுகுக, (எ-று).

இது, பகைவராயினார்மாட்டு அழிவின்கண் செய்வதோரியல்பு கூறிற்று. 6

877. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கு முலகு.

(இ-ள்) பகைவரை நட்புப்போலக் கொண்டொழுகவல்ல பண்புடையவன் பெருமையின் கீழே உலகம் தங்கும், (எ-று).

இது, பகை கொள்ளாமையால் வரும் பயன் கூறிற்று. 7

5. பகைத்திறந் தெரிதல்

878. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

(இ-ள்) தாம் வருத்த முற்றதனை அறியாதார்க்கு வருத்த முற்றுச் சொல்லா தொழிக; அதுபோலப் பகைவரிடத்துத் தமது மென்மையைத் தோற்றுவித்தலை விரும்பாதொழிக, (எ-று).

இது, பகைவர்மாட்டுத் தமது மென்மை தோற்றுவியா தொழிக வென்றது. 8

879. இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(இ-ள்) முள்மரத்தை இளைதாகவே களைக; முற்றின விடத்துத் தன்னைக்களைய நினைத்தார் கையைக் கொல்லுமா தலான், (எ-று).

இது, பகைவர் வலியராகும் முன்னே களையவேண்டு மென்றது. 9

880. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

(இ-ள்) வினை செய்யும்வகையையறிந்து, தன்னைப் பெருக்கித் தான் தன்னைக்காக்கப், பகைவர்மாட்டு உண்டான பெருமிதம் கெடும், (எ-று).

இது, பகையை வெல்லுந் திறன் கூறிற்று. 10

6. உட்பகை

உட்பகையாவது உடனே வாழும் பகைவர் செய்யுந் திறங் கூறுதல். அஃதாவது புறம்பு நட்டார் போன்றும், சுற்றத்தாராயும் ஒழுகி மனத்தினாற் பகைத்திருப்பார் செய்யுந் திறங்கூறுதல். இதுவும் ஆராய்ந்து காக்கவேண்டுமாதலின், அதன்பின் கூறப் பட்டது.

881. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(இ-ள்) வாளைப் போலக் கொல்லுந் திறத்தினையுடைய கொடிய பகைவரை அஞ்சாதொழிக்; முகம் நட்டாரைப் போன்று மனத்தினாற் பகைத் திருப்பார் தொடர்பு அஞ்சுக, (எ-று).

இது, பகைவரை அஞ்சுவதனினும் மிக அஞ்சவேண்டு மென்ற வாறாயிற்று. உட்பகையாவது இது என்பதூஉம் அதற்கு அஞ்சவேண்டும் என்பதூஉங் கூறிற்று. 1

882. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

(இ-ள்) உடனே வாழும் பகைவரைத்தான் அஞ்சித் தன்னைக் காக்க; தனக்குத் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் வினை கலத்தை அறுக்குங் கருவி போலத் தப்பாமல் கெடுக்கும் ஆதலான், (எ-று).

மட்பகை தான் அறுக்குங்கால் பிறரறியாமல் நின்று அறுக்கும். இது தன்னைக் காக்கவேண்டும் என்றது. இவையிரண்டினாலும் அஞ்சவேண்டும் என்பதும். காக்க வேண்டும் என்பதும் கூறப் பட்டன. 2

883. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(இ-ள்) எள்ளின் பிளவே போன்ற சிறுமைத்தேயாயினும். உடன் வாழும் பகையினாலுள்தாகும் ஒருவர்க்குக் கேடு. (எ-று).

இது, உட்பகை சிறிதென் றிகழற்க வென்றது; 3

6. உட்பகை

884. நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு 3
மின்னாவா மின்னா செயின்.

(இ-ள்) நிழலகத்து நீர் இனிதேயாயினும் அவற்றுள் இன்னாங்கு செய்யின் (நீர்) இன்னாதாகும்; அதுபோலச் சுற்றத்தார் நன்மையும் இனிதாயினும் அவர் இன்னாதவற்றைச் செய்வாராயின், இன்னாதாகவே விடும், (எ-று).

இது, சுற்றமென் றிகழற்க என்றது. இவை இரண்டினானும் இகழாமை கூறப்பட்டது. 4

885. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(இ-ள்) உட்பகையானது உட்பட்ட குடி, அரத்தினால் தேய்க்கப்பட்ட பொன் போல, அவரால் பொரப்பட்டுத்தன் வலி தேயும், (எ-று).

இஃது, உட்பகை அழகு செய்வது போல வலியையறுக்கு மென்றது. 5

886. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

(இ-ள்) செப்பினது புணர்ச்சிபோலப் புறத்துவேற்றுமை தெரியாமல் கூடினார் ஆயினும் பொருத்தம் இல்லாதவர் ஆவர்; உட்பகையும் அஃது உட்பட்ட குடியும், (எ-று).

(உட்பகையுற்றார்) செப்பும் மூடியும் ஒன்றுபட்டாற்போல இருந்து, செப்பகத்துட்பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய்ச் சுழன்று நிற்குமது போல அகன்று நிற்பரென்றவாறு. செப்பிற்கு உவமை குடி; மூடிக்கு உவமை உட்பகை. 6

887. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

(இ-ள்) மனத்தினால் பொருத்தமில்லாதாரோடு ஒத்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிலகத்தே பாம்போடு கூட வாழ்ந்தாற் போலும், (எ-று).

6. உட்பகை

இது, பாம்பு எய்த வந்தால் கடிக்கும்; அதுபோல, உட்பகைவர் இடம் வந்தால் கொல்வாரென்றது. 7

888. மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
வேதம் பலவுந் தரும்.

(இ-ள்) மனம் நன்றாகாத உட்பகை தோன்றுமாயின், தனக்கு இனமாயினார் நல்லராகார்; அற்றன்றிப் பல குற்றங்களும் உண்டாம், (எ-று)

இஃது, இனம் பொருந்தாமல் கூடநின்று பகைப்பிக்குமென்றது. இவை நான்கினானும் அவர் செய்யும் திறன் கூறப்பட்டது 8

889. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்.

(இ-ள்) உறவின் முறையோடே உட்பகை தோன்றுமாயின், அது கெடுதல் முறைமையோடே கூடப் பல துன்பத்தினையும் தரும் (எ-று).

உறவு-உறுதலாயிற்று. இது, சுற்றத்தாராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று. 9

890. ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது.

(இ-ள்) தன்னோடு ஒன்றினார்மாட்டு ஒன்றாமை உளதாயின் எல்லா நாளினும் சாவாமையைக் கூடுதல் அரிது, (எ-று).

இது, நட்டாராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று. 10

7. பெரியாரைப் பிழையாமை

பெரியாரைப் பிழையாமையாவது தம்மிற் பெரிய அரசரையும், முனிவரையும், அறிஞரையும் பிழைத்தொழுகாமை. மேல் பகையும் பகையின்கண் செய்யும் திறமும் கூறினார்; இது தம்மிற் பெரியார் தம்மைப் பகையாகக் கொள்ளாராயினும், தமது இகழ்ச்சி அவரால் தீமை பயக்குமாதலின், அதன்பின் கூறப்பட்டது.

891. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு.

(இ-ள்) தான் கெடுதல் வேண்டுவனாயின் பெரியாரைக் கேளாதே ஒருவினையினைச் செய்க; தன்னைக் கொல்ல வேண்டுவனாயின், வலியுடையார் மாட்டே தப்புச்செய்க, (எ-று).

கேளாது செய்தல் என்பதனை மந்திரி புரோகிதரைக் கேளாது செய்தல் என்று கொள்ளப்படும். அவ்வாறு செய்தால் அவரை அவமதித்தலாம் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. அறிவாரைக் கேளாது செய்தலும் வலியார்க்குத்தப்புச் செய்தலும் குற்றமென்றது. 1

892. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
பேரா விடும்பை தரும்.

(இ-ள்) பெரியாரைப் போற்றாது ஒழுகுவானாயின், அவனொழுக்கம் அவரானே எல்லாரானும் இகழப்படும் துன்பத்தைத் தரும், (எ-று).

இது, முனிவரைப் போற்றா தொழுகின், அது குற்றம் பயக்குமென்றது. இவையிரண்டும் பிழையாமை வேண்டும் என்று கூறப்பட்டது. 2

893. கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்.

7. பெரியாரை பிழையாமை

(இ-ள்) வலியுடையார்க்கு வலியில்லாதார் இன்னாதவைந் தாம் செய்தல், தம்மைக் கொல்லும் கூற்றைக் கைகாட்டி அழைத் தாற்போலும், (எ-று).

மேற்கூறிய மூவரினும் அரசரைப்பிழைத்தலால் வரும் குற்றம் கூறுவார் முற்பட உயிர்க்குக் கேடுவரும் என்றார். 3

894. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந் தகைமாண்ட தக்கார் செறின்.

(இ-ள்) எல்லாவகையும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் மிக்க பொருளும் என்ன பயனுடையனவாம்; பெருமையான் மிக்க தகுதியையுடையார் செறுவாராயின், (எ-று).

எல்லாவகையுமாவன-சுற்றமும், நட்டோரும், குற்றிளை யோரும், இல்லும், நிலமும் முதலாயின. வான்பொருள் - ஈட்டி வைத்த பொருள்களெல்லாம் அழியுமென்றது. 4

895. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின் வேந்து செறப்பட் டவர்.

(இ-ள்) எவ்விடத்துச் செல்லினும் எவ்விடத்தும் உளராகார்; வெய்யவலியுடைய வேந்தனால் செறப்பட்டவர், (எ-று).

இது, கெட்டுப்போனாலும் இருக்கலாவதோர் அரணில்லை யென்றது. 5

896. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார் பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

(இ-ள்) தீயினால் சுடப்படினும் உய்தல் உண்டாம்; பெரியா ரைப் பிழைத்தொழுகுவார் உய்யார், (எ-று).

இது முனிவரைப் பிழைத்ததனால் வருங்குற்றம் கூறிற்று. மூற்பட உயிர்க்கேடு வருமென்று கூறினார். 6

897. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார் சிறந்தமைந்த சீரார் செறின்.

7. பெரியாரைப் பிழையாமை

(இ-ள்) மிகவும் அமைந்த துணையுடைய ராயினும் கெடுவர்; மிகவும் அமைந்த சீர்மையுடையார் செறுவாராயின், (எ-று),

இது, துணையுடையாராயினும் உயிர்க்கேடு வருமென்றது. 7

898. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(இ-ள்) உயர்ந்த கோட்பாட்டை யுடையசர் வெகுள்வராயின், இந்திரனும் இடையிலே இற்றுத் தன்னரசு இழக்கும். (எ-று)

'வேந்தன் மேய தீம்புனலுலகமும்' என்றார் பிறரும் (தொல். பொருள். அகம் 5) இது. பொருட்கேடு வருமென்றது. 8

899. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

(இ-ள்) மலைபோலப் பெரியாரைக் குறைய மதிப்பாராயின், உலகத்தின் கண்ணே நின்றார்போலத் தோன்றுகின்றவர் குடியோடே கூடமாய்வர், (எ-று).

நின்றாற்போல என்றது நிலையாமை குறித்தது, குன்ற மதித்தல்-அவமதித்தல். இது மந்திரி புரோகிதரைப் பிழைத்து ஒழுகினால் அவர் அவமதிப்பர் ஆயின் தாமும் தம் கீழ்வாழும் குடியும் மாய்வர் என்று கூறிற்று. 9

900. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

(இ-ள்) தவத்தினாலும் வலியினாலும் பெரியாரது வலியை இகழாதொழிக; அது தம்மைக் காப்பார்க்குப் போற்றிக்கொண்டிருக்கப்பட்டவை எல்லாவற்றுள்ளும் தலையாம், (எ-று).

இகல் முதலாகப் பிழையாமையீறாகப் பிறரால் வரும் துன்பப் பகுதி ஆயினவாறு கண்டு கொள்க. 10

8. பெண்வழிச் சேறல்

இனித்தன்னான் வரும் துன்பப் பகுதியாவது இன்பங் காரணமாக மனையாள்வழி ஒழுகுதலும், கணிகையரோடு கூடுதலும், நாவண்டு களித்தலும், சூதாடலும், தீயஉண்டி மிக உண்டலுமென ஐந்து வகைப்படும்; இவையெல்லாம் இறுதியில் துன்பம் பயத்தலின் துன்பப் பகுதி ஆயிற்று. அவற்றுள், பெண்வழிச் சேறலாவது மனைவியர் வழியொழுகுதலினால் வரும் குற்றங் கூறுதல். இது மூன்று வகைப்படும்: மனையாளையஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்தினும் பொருளினும் சாராது காதலினும் மிக்க காதலும் என. 10

901. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(இ-ள்) தேவரைப்போல இன்புற்று வாழினும், பெருமை யிலராவர்; மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர், (எ-று).

இது, செல்வமுடையராயினும் அவரால் பயன் இல்லாமையால் பிறரால் மதிக்கப்படாரென்றது.

902. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(இ-ள்) மனையாளை அஞ்சுவான், எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்லவை செய்தலை அஞ்சும், (எ-று).

இஃது, அறஞ்செய்ய மாட்டாரென்றது. 2

903. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(இ-ள்) மனையாளை அஞ்சுகின்ற மறுமைப் பயனெய்தாதவன், ஒரு வினையை ஆளுந்தன்மை, பெருமை யெய்துதல் இல்லை, (எ-று).

8. பெண்வழிச் சேறல்

இது, பொருள் செய்ய மாட்டானென்றது. 3

904. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

(இ-ள்) மனையாள்மாட்டுத் தாழ்ந்தொழுகும் இயல்பாகிய கேடு, எல்லா நாளும் நல்லாரிடத்து நாணுதலைத் தரும், (எ-று).

மனையாளை அஞ்சித்தாழ்ந்து ஒழுகுவனாயின் அவனைக் கடியும் தன்மையிலனாவன்; அதனானே நல்லார்முன்பு நாணி நிற்கும்; ஆதலால் காம நுகர்ச்சியும் பெறான் என்றது. இவை நான்கினும் அஞ்சியொழுகுவார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது. 4

905. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

(இ-ள்) பெண்டிர் ஏவின தொழிலைச் செய்தொழுகும் ஆண்மையின், நாணமுடைய பெண்மையே, தலைமை உடைத்தாம், (எ-று).

இது, பிறரால் மதிக்கப்படானென்றது. 5

906. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

(இ-ள்) தம்மோடு நட்டார் குறைதீர்க்க மாட்டார், அவர்க்கு நல்லது செய்யவுமாட்டார்; நல்ல நுதலினையுடையாள் விரும்பிய வாறு செய்தொழுகுவார், (எ-று).

குறைதீர்த்தல் ஆவது உற்ற துன்பம் தீர்த்தல். நன்றாற்றல், சிறந்தன செய்தல், இவையும் அவன் செய்யவேண்டுதலின் செய்ய மாட்டார் என்றது 6

907. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

(இ-ள்) அறஞ்செய்தலும், அமைந்த பொருள் செய்தலும், ஒழிந்த காமம் நுகர்தலும், பெண்ணேவல் செய்தொழுகுவான் மாட்டு இல்லையாம், (எ-று).

8. பெண்வழிச் சேறல்

அச்சமில்லாராயினும் சொன்னது செய்வராயின், இம்மூன்று பொருளும் எய்தார் என்றது என்னை? தலைமை அவன் கண்ணதாகலான் இவை மூன்றினானும் ஏவல் செய்தார்க்கு உளதாகும் குற்றம் கூறப்பட்டது. 7

908. மனைவிழைவார் மாண்பயனெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

(இ-ள்) மனையாளைக் காதலித் தொழுகுவார் நற்பயனைப் பெறார்; யாதானும் ஒருவினையைச் செய்து முடிக்க வேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழையாமையே, (எ-று).

இஃது அறத்தினும் பொருளினும் காதலின்றி, அவர் தம்மையே காதலித்தொழுகுவார்க்கு அறனும் பொருளும் இல்லையாமென்றது. 8

909. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

(இ-ள்) அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பானது செல்வம், பெரியதோர் நாணம் உலகத்தே நிற்கும் படியாகத், தனக்கு நாணினைத், தரும், (எ-று)

அவன் செல்வத்திற்குப் பயன் நாணமாய் முடியும்; என்னை? இச்செல்வம் அற்றால் பின்பு என்ன செய்வேம் என்று நாணுவனாதலின், பெரியதோர் நாணுதலாவது, இவன் காமத்தால் கெட்டான் என்று உலகத்தார் அறிய நிற்பதோர் நாணம் உண்டாதல். சச்சந்தன் திறம் காண்க. 9

910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

(இ-ள்) எண்ணஞ் சேர்ந்த மனத்தின் விரிவுஉடையார்க்கு எல்லாம் நாளும் பெண்ணைச் சார்ந்து ஆம் அறிவின்மை இல்லையாம், (எ-று).

எண்சேர்தல் ஆவது இதனால் வருங்குற்றத்தைத் தெரிந்து உணர்தல். இதனையுடையார் அறிவுடையார் என்றது. 10

9. வரைவின் மகளிர்

வரைவின் மகளிராவது கணிகையரொடு கலந்தால் வரும் குற்றங் கூறுதல். முயக்கத்தில் வரைவின்மையால், வரைவின் மகளிரென்று கூறப்பட்டது. மேல் மனைவியர் மாட்டு மிக்க காதலினால் வரும் குற்றம் கூறினார். இது கணிகையர் காமத்தினால் வரும் குற்றம் கூறுதலின் பின் கூறப்பட்டது,

911\. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(இ-ள்) தமக்கு உள்ளதாம் பயனை நோக்கிக் (குணமாகக் கூறும்) குணமில்லாத மகளிர் இன்பத்தை யாராய்ந்து பார்த்து, அவரைச் சாராதொழிக, (எ-று).

இதனானே கணிகையர் இலக்கண மெல்லாந் தொகுத்துக் கூறினார். இது கணிகையர் கலவியைத் தவிர்க்க என்றது. 1

912\. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழக்கந் தரும்.

(இ-ள்) அன்பால் கலத்தலின்றிப் பொருளால் கலக்கும் ஆய் தொடியார் சொல்லும் இன்சொல் பின்பு கேட்டினைத் தரும், (எ-று)

இது கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறப்பட்டது. 2

913\. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

9. விரைவின் மகளிர்

(இ-ள்) பொருளே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே மயங்கும் மயக்கம், இருட்டறையினுள்ளே கிடந்ததொரு வேற்றுமைப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியது போலும், (எ-று).

கேடுவரினும் இன்பம் தருமாயின் புணர்ச்சியான் வரும் குற்றமென்னையென்றார்க்கு அவர் இவ்வாறு வருந்துவர் ஆதலின் இன்பம் இல்லை என்று கூறப்பட்டது. இவை இரண்டினாலும் கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் கூறப்பட்டது. 3

914. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னிவர்.

(இ-ள்) பொருளைப் பொருளாகக் கொள்வாரது புல்லிய நலத்தைத் தோயார், அருளைப் பொருளாக ஆராயும் அறிவுடையார், (எ-று).

அருளுடையார் ஆ(ராயு)ம் அறிவு என்றமையான் இவரை அறனறிவார் சாரார் என்றது; என்னை அறத்தைக் கெடுப்பார் ஆதலின். 4

915. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

(இ-ள்) எல்லார்க்கும் பொதுவாகிய நலத்தினையுடையவரது புல்லிய நலத்தைச் சேரார் மதிநலத்தாலே மாட்சிமைப்பட்ட அறிவுடையார், (எ-று).

புத்திமான்கள் சேராரென்றமையால், பொருள் கருதுவார் சேரார் என்றார் பொருளைக்கெடுப்பராதலின். 5

916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

(இ-ள்) தம்முடைய நலத்தினை உலகின்கண் பரப்புவார் சேரார்; வனப்பினால் களிப்புற்றுத் தமது புல்லிய நலத்தை எல்லார் மாட்டும் பரப்புவார் தோளினை, (எ-று).

புல்லிய நலனென்றார்; வனப்புடையராயினும் இழிந்தார் மாட்டும் பரப்புதலின். தம் நலம் பாரிப்பார் என்றமையால், இன்பம் நுகரவல்லார் சாரார் என்றார், பின்னர் இன்பம் அது அகாமையின். இவைமூன்றும் அறம் பொருள் இன்பம் வேண்டுவார் சாரார் என்று கூறப்பட்டது. 6

917. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

(இ-ள்) யாதானும் ஒருபொருளை உள்ளவாறு ஆராய்ந்து காணும் அறிவு இல்லாதார்க்கு, வருத்தமமென்று சொல்லுவர், மாயத்தைவல்ல மகளிர் முயக்கம், (எ-று).

இஃது, இவரை அறிவில்லாதார் சார்வரென்றது. 7

918. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

(இ-ள்) நிறையுடைய நெஞ்சில்லாதவர் தோய்வர்; இன்பமல்லாத பிறவாகிய பொருளை நெஞ்சினாலே விரும்பிவைத்து அன்புற்றார் போலப் புணருமவர் தோளினை, (எ-று).

இது, நிறையில்லாதார் சேர்வரென்றது. 8

919. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

(இ-ள்) முயக்கத்தில் வரைவில்லாத மாணிழையாரது மெல்லிய தோளாவது, உயர்வில்லாத கயவர் அழுந்தும் நரகம், (எ-று).

கயவர் அழுந்துவது நரகின்கண் ஆதலின் நரகு எனப்பட்டது. இஃது, இழிந்தார் சார்வரென்றது. 9

920. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(இ-ள்) கவர்த்த மனத்தையுடைய பெண்டிரும், கள்ளும், கவறும், திருமகளால் கடியப்பட்டாரது நட்பு, (எ-று).

இது. நல்குரவிலார் சாராரென்றது. பின்பு கள்ளும் கவறும் கூறுகின்றாராதலின் அவை மூன்றும் ஒத்த இயல்பின என்று அறிதற்குப் பின் கூறப்பட்டது. இவை நான்கினானும் அவரைச் சார்வார் (கெடுவரென்பது) கூறப்பட்டது. 10

---

10. கள்ளுண்ணாமை

கள்ளுண்ணாமையாவது கள்ளுண்டலைத் தவிர்தல் வேண்டுமென்று கூறுதல். இது கணிகையர் கூட்டத்தினால் வருமாதலின், அதன்பின் கூறப்பட்டது.

921. உண்ணற்க கள்ளை யுணிலுண்ட சான்றோரா
லெண்ணப் படவேண்டா தார்.

(இ-ள்) கள்ளினை உண்ணாதொழிக; உண்ணவேண்டின் சான்றோரால் மதிக்கப்படுதலை வேண்டாதார் உண்க, (எ-று). 1

இது கள்ளுண்டலைத் தவிரவேண்டும் என்றது.

922. ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(இ-ள்) தன்னைப் பயந்தாள் முன்னும் களித்தல் இன்னாது, ஆதலால் சான்றோர் முன்பு களித்தல் மற்றியாதாகும்? (எ-று).

எல்லார் முன்பும் இன்னாமையே பயப்பதென்றவாறாயிற்று. கள் உண்டல் இனிமைதரும் அன்றே; இதனால் வரும் குற்றமென்னை என்றார்க்கு. அதனால் வரும் குற்றம் கூறுவார் முற்பட இன்னாமை பயக்கும் என்று கூறப்பட்டது. 2

923. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

1௦. கள்ளுண்ணாமை

(இ-ள்) நாணமென்று சொல்லப்படுகின்ற நன்படந்தை பின்பு காட்டிப்போம்; கள்ளுண்டலாகிய பிறரால் விரும்பப்படாத பெரிய குற்றத்தினையுடையார்க்கு, (எ-று).

இது, நாணம் போமென்றது. 3

924. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

(இ-ள்) பிறரால் மதிக்கவும் படார். தோற்றமும் இழப்பர், எல்லா நாளும் கள்ளினைக் காதல் செய்து ஒழுகுவார், (எ-று).

இது, மதிக்கவும் படார், புகழும் இலரென்றது. 4

925 துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(இ-ள்) உறங்கினார் செத்தாரோடு ஒப்பர், அறிவிழத்தலான் அது போல, எல்லா நாளும் கள்ளுண்பவர் நஞ்சுண்பவரை ஒப்பர், மயங்குதலான், (எ-று).

இஃது, அறிவிழப்பரென்றது. 5

926. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

(இ-ள்) தான் கள்ளுண்ணாதபோது கள்ளுண்டு களித்தவனைக் கண்ட விடத்து நினையான் போலும்; தான் கள்ளுண்டபொழுது தனக்குள்ளதாகுஞ் சோர்வினை நினைப்பனாயின் தவிரும், (எ-று).

இது தமக்குளதாகும் குற்றம் காணாரென்றது. 6

927. களித்தானைக் காரணங் காட்டுதல் நீர்க்கீழ்[1]
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள்ளுண்டு களித்தவனைக் காரணங் காட்டித் தெளிவித்தல் நீர்க்கீழ் முழுகினானைத் தீயினான் அறிகுற்றது போலும், (எ-று).

'1. கீழ்நீர்க்' என்பது மணக். பாடம்.

10. கள்ளுண்ணாமை

துருவுதல்-திசைச்சொல். இது, பிறர்சொல்லவும் கேளா ரென்றது. இத்துணையும் கள் உண்பாற்குளதாகும் குற்றம் கூறப் பட்டது. 7

928. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(இ-ள்) கள்ளுண்டால் களித்தறியே னென்பதனைக் கைவிடுக; மனத்தின் கண் கரந்ததூஉம் அப்பொழுதே வாய்சோர்ந்து புலப் படும்; அது கள்ளுக்கு இயல்பு, (எ-று).

இது மயங்கே னென்பார்க்குக் கூறப்பட்டது. 8

929. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(இ-ள்) தங்கள் ஒழுக்கத்தை உள்புக்கு அறிந்து உள்ளூ ராலே இகழப்படுபவர்; எல்லாநாளும் கள்ளுள்ளவிடத்தை நாடி அதன்கண்ணேவாழுமவர், (எ-று).

உண்ணுமது அறிவாரில்லை என்பார்க்கு இது கூறப்பட்டது. 9

930. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

(இ-ள்) பயன் அறியாமை யுடைத்து; பொருளினைக் கொடுத்துத் தம்மெய் அறியாமையைச் செய்யும் கள்ளினைக் கோடல், (எ-று).

மெய் என்பது தாம் என்பதும், ஒன்று என்பதும் அறத்துப் பாலில் கூறப்பட்டது. அன்றியும் பொருளில் உண்மை யறியாமை என்றுமாம். இது, மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின் இதனை அறிவுடையார் செய்யாரென்பது கருத்து. 10

11. சூது

சூதாவது சூதாடினால் வரும் குற்றங்கூறுதல். இது மேற்கூறிய வற்றோடொத்த வியல்பிற்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

931. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(இ-ள்) வெல்லு மாயினும் சூதினை விரும்பா தொழிக வென்று பெற்ற பொருளும், தூண்டிலின்கணுண்டாகிய பொன்னை மீன் விழுங்கினாற் போலும், (எ-று).

பொன்என்பது இரும்புமாம், பின்பு கேடுபயக்கு மென்ற வாறாயிற்று. உம்மையான் வெல்லான் என்பது துணிவு. இது சூதாடலைத் தவிர்க என்றது. 1

932. அகடாரா ரல்ல லுழப்பர்கூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

(இ-ள்) தமக்கு உளதாகிய இந்திரியங்களும் மனமும் இன்புற நிறையப்பெறார்; அதுவேயன்றி, அல்லற்படுவதும் செய்வர்; சூதாகிய மூதேவியாலே மறைக்கப்பட்டார், (எ-று).

மறைத்தல்-நற்குணங்களைத் தோன்றாமை மறைத்தல். மேல் சூதாடல் ஆகாதென்றார்; அதனால் குற்றமென்னை என்றார்க்கு, இவையிரண்டு குற்றமும் உளவாம் என்று கூறப் பட்டது. 2

933. உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

(இ-ள்) உடையும், செல்வமும் உணவும் புகழும் கல்வியு மென்று சொல்லப்பட்ட ஐந்து பொருள் சேரலான் அவற்றை கையகத்துக் கொள்ளின், (எ-று)

11. சூது.

செல்வம்-பொன்னும் மனையும் பூமியும் அடியொரு முதலாயின போல் சூதாடினார் இன்புற்று நிறைவு பெறார் என்றார்; இன்பத்திற்குக் காரணம் ஆகிய இவையைந்தும் அடையார் என்று காரணம் கூறிற்று. 3

934. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

(இ-ள்) புரளும் கவற்றை இடைவிடாது எக்காலத்தும் கூறுவனாயின், பொருள்வரவு தன்னைவிட்டுப் போய்ப் பிறர்பாற் செல்லும், (எ-று).

மேற்கூறிய ஐந்தும் அடையாமைக்குக் காரணம் என்னை யென்றார்க்கு, முயற்சியின்மையான் இவற்றை உண்டாக்கற்குக் காரணம் ஆகிய வருவாய் இல்லையாம் என்று அதற்குக் காரணம் ஆகக் கூறப்பட்டது. 4

935. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

(இ-ள்) தோன்றின நாள் தோட்டு வருகின்ற செல்வத்தினையும் தமக்கியல்பாகிய குணத்தினையும் கெடுக்கும் சூதுகழகத்தின் கண்ணே காலைப் பொழுது புகுவானாயின் (எ-று).

மேற்கூறிய இன்புறுதல் வாயிலராயினும், தோன்றின நாள் தொட்டு வருகின்ற செல்வம் உடையார்க்கும், பண்புடையார்க்கும் உளதாகுமே என்றார்க்கு அவையிரண்டும் போம் என்று கூறப்பட்டது. 5

936. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

(இ-ள்) சூது, முற்படப்பொருளைக் கெடுத்து, அதன்பின் பொய்மையை மேற்கொள்ளுவிக்கும்; பின் அருளைக் கெடுத்து, அதன்பின் அல்லற் படுத்துவிக்கும், (எ-று).

சூதாடினார் அல்லல் உழப்பர் என்றார்; பொருட்கேடு வருவ தல்லது அருள் கெடுவதுண்டோ என்றார்க்கு, அத்துணைவருமாறு இது என்று கூறப்பட்டது.

11. சூது

937. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
நன்றெய்தி வாழ்வதோ ராறு.

(இ-ள்) ஒருபொருளின்கண் ஒருபொருளினை எய்தி, அவ்வா சையாலே மற்றொரு பொருளின்கண் நூறு பொருளை யிழப்பிக் கும் சூதாடிகளுக்கு நன்றெய்தி வாழ்வதொரு நெறி உண்டாமோ? (எ-று).

இது தூண்டிலில் பொன்மீன் விழுங்கினாற்போலும் என் றார்; அதற்குக்காரணம் ஆகவும் இரக்கம் இல்லை என்பதூஉம் கூறிற்று. 7

938. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

(இ-ள்) பொருளை இழக்குந்தோறும் பொருளைக் காதலிக் கும் சூதுபோலத் துன்பம் உழக்குந்தோறும் இன்பத்திலே காத லுடைத்து உயிர்; இவை இரண்டினும் அஃதியல்பு, (எ-று).

ஈண்டு உயிர்க்கு அஃது ஆதல் கூறியது எற்றுக்கெனின்? இவையிரண்டையும் ஒன்றாகக் கூறினல்லது பிறிதுவமிக்கப்படும் பொருளில்லை என்றற்கெனக்கொள்க. மேல் ஒன்றெய்தி நூறிழக் கும் என்றார்; அஃது என்னை ஒருகால் தோற்றவன் பின்பு தவி ரானோ என்றார்க்கு இது கூறப்பட்டது. 8

939. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(இ-ள்) துன்பமாயின பலவற்றையுஞ் செய்து தலைமையை யழிக்கும் சூதுபோல, வறுமையைத் தருவது பிறிதொன்று இல்லை, (எ-று).

மேல் கூறிய எல்லாவற்றையும் தொகுத்து நன்குமதித்துக் கூறப்பட்டது. 9

940. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

11. சூது.

(இ-ள்) கவற்றினையும், கழகத்தினையும் கைத்தொழிலினையும் விரும்பி விடாதவர் முற்காலத்தினும் வறியரானார், (எ-று).

கவறு-நெத்தம்; கழகம்-உண்டையுருட்டு மிடம்; கைத்தொழில்-கவடி பிடித்தல். சூதாவது இம்மூன்று வகைத்தென்பதூஉம், இதனானே வறுமையுறுமென்றார், அஃதுயாங்ஙனம் அறியுமாறு என்பார்க்கு, முன்பு சூதாடிக்கெட்ட அரசராலே அறியலாமென்பதூஉங் கூறப்பட்டது. 10

---

12. மருந்து

மருந்தாவது யாக்கை நோயுறாமற் செய்யுந் திறன்கூறுதல். மேல் கடியவேண்டுவன கூறினார், இனிக்கடியப்படாத உணவும் தன்னளவில் மிகுமாயின் துன்பம் பயக்கு மாதலான், அதுவும் அளவு அறிந்து நுகரவேண்டு மென்று அதன்பின் கூறப்பட்டது.

941. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

(இ-ள்) மருந்தொன்றும் வேண்டாவாம் உடம்பிற்கு முற்காலத்து; அருந்திய உணவு அற்றமையறிந்து நுகர்ந்து பாதுகாத்து நுகர்வானாயின், (எ-று).

இவ்வாறு செய்வன் ஆயின் மருந்து தேட வேண்டா என்றது. 1

942. அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு.

(இ-ள்) முன்பு உண்டது அற்றால், பின்பு உண்ணுங்கால் இத்துணையறுமென்பதூஉம் தான் அறிந்து உண்க; உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்குரியவழி அதுவாம் (எ-று).

மேல் அற்றது போற்றியுண்க என்றார்; இதுபோற்றுதலாவது அளவறிந்துண்டல் என்று கூறப்பட்டது. 2

12. மருந்து

943. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

(இ-ள்) முன்பு உண்டவுணவு அற்றதனை அறிந்து, பின்பு அறுமளவும் கடைப்பிடித்து, உண்ணுங்கால் ஒன்றினோடொன்று மாறுகொள்ளாத உணவினை மிகவும் பசித்து உண்க, (எ-று).

மாறுகோடலாவது நெய்யும் தேனும் இனியவாயினும் தம்மிலளவொக்குமாயின் கொல்லும்; அதுபோல்வன. இஃது, உண்ணுங்கால் அளவறிந்துண்ணலேயன்றி மாறற்ற உணவை உண்ண வேண்டுமென்றது. 3

944. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு.

(இ-ள்) சுவையும் வீரியமும் மாறுபாடில்லாத உணவை நீக்கி யுண்பானாயின், தன்னுயிர்க்கு வரும் இடையூறு இல்லை, (எ-று).

மேல் மாறுபடாத உணவை உண்ண என்றார்; இதனானே, எவ்விடத்தும் மாறு ஆகாமை வருதலின் அஃது எய்தியது விலக்கிச் சுவையும் வீரியமும் மாறுபட்டன நுகர வேண்டும் என்றது. அஃதாவது பலாப்பழந்தின்றல் சுக்குதின்றல். 4

945. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

(இ-ள்) அறும் அளவறிந்து உண்பவன்கண் இன்பம்போல உண்டாம்; மிக உண்பான்கண் நோய், (எ-று).

மேற் கூறியவாற்றான் உண்ணாதாற்கு நோயுண்டாம் என்றது. 5

946. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

12. மருந்து

(இ-ள்) உணவும் உறக்கமும் இணைவிழைச்சும் தன்னுடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும், நூலோரான் எண்ணப்பட்ட வாதமும் பித்தமும் சிலேஷ்மமுமாகிய மூன்றும் நோயைச்செய்யும் (எ-று).

மேல் உணவு மிகின் நோய்செய்யும் என்றார்; அதுவே அன்றி மற்றுள்ளவை மிகினும் இவை மூன்றும் குறையினும் நோயாகும் என்றது. 6

947. நோய்நாடி நோய்முதனாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(இ-ள்) நோயினையும் ஆராய்ந்து, நோய்வருவதற்குக் காரணமும் ஆராய்ந்து, உளம் நோய்தீர்க்கும் நெறியும் ஆராய்ந்து, தப்பாமற் செய்க, (எ-று).

இது, நோய் தீர்க்குமாறு கூறிற்று.

948. உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்.

(இ-ள்) நோயுற்றவன் அளவும், நோயின் அளவும், அது பற்றிய காலமும் அறிந்து, அதற்குத் தக்கவாறு மருந்து செய்க; ஆயுளுவேதம் வல்லார், (எ-று).

மேல் வாய்ப்பைச்செய் என்றார்; இது வாய்ப்பர் செய்யுமாறு கூறிற்று. 8

949. உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து.

(இ-ள்) நோய்யுற்றவனும் நோய்தீர்க்குமவனும், அதற்குத் தக்க மருந்தும், அதனைக் காலம் தப்பாமல் இயற்றுவானும் என்றிவ்வகைப்பட்ட நான்கு திறத்தது மருந்து, (எ-று).

எனவே இந்நான்கினும் ஒன்று தப்புமாயின் நோய் தீராது என்றவாறாயிற்று. இது மருந்தின் பகுதி கூறிற்று. 9

12. மருந்து

950. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்.

(இ-ள்) வயிற்றில் பசியினது அளவன்றி ஆராயாதே மிக வுண்பானாயின், மிக நோய் உண்டாம், (எ-று).

இது, நோய் தீர்ந்தாலும் பசியளவு அறியாது உண்பானாயின், மீண்டும் நோய் வருமாதலான், அளவறிந்து உண்ண வேண்டுமென்றது.

துன்பவியல் முடிந்தது-

---

6. குடியியல் (13)

1. குடிமை

குடியியலாவது அரசரும், அமைச்சரும், வீரருமல்லாத மக்களது இயல்பு கூறுதல். இஃது யாங்ஙனம் கூறினார் எனின், அது கூறிய அதிகாரம் பதின்மூன்றினும் முற்படக் குடிப்பிறந்தார் இலக்கணம் ஓரதிகாரத்தானும், மானமுடையார் இயல்பும் சான்றோர் இயல்பும் நான்கதிகாரத்தானும், பண்பின்றிப் பொருளீட்டினார்க்கு உளதாகும் குற்றம் கூறுதலும், அந்தக் குற்றத்துக்கு அஞ்சி யொழுகுதல் ஆகிய நாணுடைமையும் அந்நாணுடையார் தம் குடும்பத்தை நோக்குமாறும் அவர் குடும்பத்தை நோக்குதற்குப்பொருள் வருநெறி பல வற்றுள்ளும் சிறப்புடைத்தாகிய உழவினது இயல்பும் நான்கு அதிகாரத்தானும், பொருளில்லாத மக்களதியல்பும் அவர் பொருள் தேடுமாறும் மூன்றதிகாரத்தானும், மக்களில இழிந்தாரிலக்கணம் ஓரதிகாரத்தானும் கூறப்பட்டது.

மேல் அரசர்க்கு முதலான பொருளும் பொருட்கேடும் கூறி, இனி நிலத்து மக்களது இயல்பும் கூறுகின்றாதலின், அவற்றின் பின் கூறப்பட்டது.

1. குடிமை

குடிமையாவது உயர்குடிப் பிறந்தசர் இயல்பு கூறுதல், மக்கள் உடைத்தாகிய குணங்கள் எல்லாவற்றினும் உயர்குடிப்பிறத்தல் சிறப்புடைத்தாதலின் இது முற் கூறப்பட்டது.

951. நகையீகை யின்சொ லிகழாமை நான்கின் [1]
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(இ-ள்) முகமலர்ச்சியும், கொடையும், இனியவை கூறுதலும் பிறரை இகழாமையுமாகிய நான்கினையும் மெய்ம்மையுடைய குலத்திலுள்ளார்க்கு அங்கமென்று சொல்லுவர், (எ-று).

தொகை என்பது பிண்டத்தின் பெயராதலின் வகை என்பது உறுப்பிற்கும் பெயராயிற்று. மெய்ம்மைக்குடி என்றதனானே எஞ்ஞான்றும் தப்பில்லாக்குடி என்று கொள்ளப்படும். இவை நான்கினையும் தமக்கு உறுப்பாக உடையார் என்றும் கூறிற்று. 1

952. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(இ-ள்) உயர்குடிப் பிறநதார் மாட்டல்லது நடுவு நிலைமையும், பழி நாணுதலும், இயல்பாக ஒருங்கு உண்டாகா, (எ-று).

இஃது. இற்பிறந்தார் இவ்விரண்டும் இயல்பாக உடையரென்றது. 2

953. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழக்கார் குடிப்பிறந் தார்.

(இ-ள்) ஒழுக்க முடைமையும், மெய்ம்மை கூறுதலும், குற்றம் மறைத்தலாகிய நாணமுடைமையும் ஆகிய இம்மூன்றினையும் தப்பார் உயர்குடிப்பிறந்தார். (எ-று).

இவை மூன்றினையும் தப்பியொழுகார் என்றது. 3

954. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

---

1. 'நான்கும்' என்பது மணக். பாடம்.

1. குடிமை

(இ-ள்) வித்து நிலத்தின்கண் மறைந்து கிடப்பினும், அது மறைந்து கிடந்தமையை அதன் முளை யறிவிக்கும்; அதுபோல, உயர்குடிப்பிறந்தாரை அவரவர் வாயிற்சொல் அறிவிக்கும் (எ-று).

இதனானே குடிப்பிறந்தார் இன்னாத சொல்லார் என்றவாறாயிற்று. 4

955. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

(இ-ள்) பல கோடிப் பொருளைப் பெறினும், உயர்குடிப் பிறந்தார் தங்குடிக்குத் தாழ்வாயின செய்யார், (எ-று).

இது, மானம் விடாரென்றது. 5

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

(இ-ள்) பொய்யைச் சார்ந்து, அமைவில்லாதவற்றைச் செய்யார் குற்றமற்ற குலத்தைச் சார்ந்து வாழ்வேமென்று கருதுவார், (எ-று).

இது, சான்றாண்மை விடார் என்றது. 6

957. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

(இ-ள்) வழங்கும் பொருள் தம்மளவிற்குக் குன்றிச் சுருங்கிய விடத்தும், பழைய மரபு வழுவாத குடிப்பிறந்தார் தமது இயல்பினின்றும் நீங்குத லிலர். (எ-று).

இது பொருளில்லாத காலத்தும் இயல்பு குறையார் என்றமையின், ஒப்புரவு செய்தலும் தவிரார் என்றவாறாயிற்று. இது, பண்புடைமை விடாரென்றது. இவை ஏழும் குடிப்பிறந்தார் இலக்கணம் கூறின. 7

958. நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

(இ-ள்) ஒருவர் தமக்கு நலம் வேண்டுவாராயின், நாணுடைமையை விரும்புக; அவ்வண்ணமே, குலத்தை விரும்புவாராயின் யாவர் மாட்டும் தாழ்ந்தொழுகுதலை விரும்புக, (எ-று).

இது பணிந்தொழுக வேண்டுமென்றது. 8

959. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(இ-ள்) உயர்குடிப் பிறந்தார்மாட்டுக் குற்றமுளதாயின், அது வானத்து மதியின்கணுள்ள மறுப்போல உயர்ந்து விளங்கும்; ஆதலால், குற்றப்படஒழுகற்க; (எ-று).

இது, குற்றஞ் செய்தலைத் தவிர வேண்டுமென்றது. 9

960. நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.

(இ-ள்) ஒருவன் குடிநலத்தின்கண்ணே நீர்மை யின்மை தோன்றுமாயின், அவனைக் குலத்தின்கண் தப்பினவனென்று ஐயப்படுக, (எ-று).

இதனானும் குடிப்பிறந்தார் நீரல்ல செய்யார் என்று நன்கு மதித்தவாறாயிற்று. 10

---

2. மானம்

மானமாவது எல்லாக்காலத்திலும் தமது நிலைமையின் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின் அதன் பின் கூறப்பட்டது. இது மூவகைப்படும்; தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார்மாட்டுச் செல்லாமையும், இளிவரவு பொறாமையுமென.

2. மானம்

961. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

(இ-ள்) இன்றியமையாத சிறப்புடையனவாயினும், தமது தன்மை குறையவரும் பொருளையும் இன்பத்தையும் விடுக, (எ-று).

இது, பொருளும் இன்பமும் மிகினும், தன்மை குறைவன செய்யற்க வென்றது. 1

962. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

(இ-ள்) செல்வம் பெருகிய காலத்து எல்லார்க்கும் பணிந் தொழுகுதல் வேண்டும்; செல்வம் மிகவுஞ் சுருங்கின காலத்துத் தமது தன்மை குறைவுபடாமல் ஒழுக வேண்டும், (எ-று).

இது, 'திருவுடையார் பணிவு புகழப்படும்; திரு இலாதார் பணிதல் இகழப்படும்; ஆதலான் நல்கூர்ந்த காலத்தும் தன்மை குறைவன செய்யற்க' என்றது. 2

963. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

(இ-ள்) தமக்குப் பொருள் மிகுதி உண்டாயினும், நிகரல் லாதன செய்யார், தலைமையோடே கூடப் பெரிய ஆண்மையை விரும்புவார், (எ-று).

இது, 'நல்கூர்ந்தகாலத்துச் செல்வம் உளதாயின் தமது தன்மை குறைந்து குடி செய்தல் வேண்டாவோ' என்றார்க்குத் 'தலைமக்கள் செய்யார்' என்று கூறப்பட்டது. 3

964. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(இ-ள்) தலையினின்று நீங்கின மயிரைப்போல இழப்படுவர், மாந்தர் தமது நிலையினின்று நீங்கித்தாழ ஒழுகின விடத்து, (எ-று).

மேல் தலைமக்கள் செய்யார் என்றதனாற் குற்றமென்னை என்றார்க்குக் கூறப்பட்டது. 4

2. மானம்

965. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(இ-ள்) மலைபோலப் பெரிய உயர்வுடையாரும் தமது தன்மை குறைவர்; குறைவு வருவன குன்றி அளவாயினும் செய்வாராயின், (எ-று).

இது, மிக்காராயினும் இகழப்படுவரென்றது. இத்துணையும் தன்மை மறைய ஒழுகுதல் ஆகாது என்று கூறப்பட்டது. 5

966. புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(இ-ள்) இம்மைப் பயனாகிய புகழைத் தாராதாயின், மறுமைப் பயனாகிய சுவர்க்கத்துப் புகுதலில்லை ஆயின், தன்னை இகழ்ந்துரைப்பார்பின் சென்று ஒருவன் நிற்கின்றது பின்னை என்ன பயனைக் கருதி? (எ-று).

இது, தன்னை இகழ்வார்மாட்டுச் சென்று நிற்றலைத்தவிர்கவென்றது 6

967. ஒட்டார்பின்சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

(இ-ள்) ஒருவன் தன்னை இகழ்வராபின் சென்று வாழும் அவ்வாழ்க்கையின், அவர்பால் செல்லாத அந்நிலையே நின்று கெட்டானென்று பிறரால் சொல்லப்படுதல் நன்று, (எ-று).

மேல் இம்மை மறுமையில் பயன்படாது என்றார்; அஃது யாற்றுக்குப் பொருள் பயக்குமே என்றாற்குக் கூறப்பட்டது. இவையிரண்டும் இகழ்வார்பால் சேறல் ஆகாது என்பது கூறிற்று. 7

968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

(இ-ள்) தமது பெரிய தகைமை வலியழிய வந்தவிடத்துச் சாவாதே இருந்து உயிரோம்பி வாழும் வாழ்க்கை பின்பும் ஒருகாலுஞ் சாவாமைக்கு மருந்தாமோ, (எ-று).

2. மானம்

பெருந்தகைமை அழியவந்தவிடத் தென்று கூட்டுக. இஃது அதற்கு அழிவு வரவுளதாயின் சாவ வேண்டும் என்றது. 8

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்.

(இ-ள்) ஒருமயிர் நீங்கின் உயிர்வாழாத கவரிமாவைப் போன்ற மானமுடையார், அம்மானம் அழியவரின் உயிரைவிடுவார், (எ-று).

மேல் சாவ வேண்டும் என்றார்; அது செய்யல் ஆகுமோ என்றார்க்கு, மானமுடையார் சாவர் என்றது. 9

970. இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு.

(இ ள்) இளிவரவு உண்டானால், உயிர் வாழாத மானமுடையாரது புகழைத் தொழுது துதிக்கும் உலகு, (எ-று).

மேல்சாவார் என்றதனாற் பயனென்னை என்றாற்கு இது கூறப்பட்டது 10

---

3. பெருமை

பெருமையாவது மேன்மை; அஃதாவது சிறியர் செய்வன செய்யாமை. அது பின்பு காணப்படும். இதுமானமுடையார்க்கு உளதாவதொன்றாதலின் அதன்பின் கூறப்பட்டது. அன்றியும் குடிப்பிறந்தார்க்கு உளதாகும் நற்குணம் எனினும் அமையும். இவ்வுரைமேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். குணங்கள் பலவும் சேரக் கூறுகின்றாராகலின் அதன்பின் கூறப்பட்டது.

3. பெருமை

971. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(இ-ள்) எல்லா வுயிர்க்கும் பிறப்பால் ஒரு வேறுபாடில்லை; ஆயினும், தத்தம்செய் தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே பெருமை ஒவ்வாது, (எ-று).

எனவே, பெருமையாவது குலத்தினான் அறியப்படாதென்பதூஉம் அதற்குக் காரணமும் கூறிற்று. 1

972. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல்ல வர்.

(இ-ள்) மேலான இடத்திலிருந்தாலும், மேன்மையில்லாதார் மேன்மக்களாகார்; கீழான இடத்திலிருந்தாலும், கீழ்மையில்லாதார் கீழ்மக்களாகார், (எ-று).

இடமென்பது செல்வத்தினால் இருக்குமிடம். இது செல்வத்தினால் பெரியாரையும் பெரியாரென்று கொள்ளப்படாதென்றது. 2

973. இறப்போ ரிருந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

(இ-ள்) செல்வமானது தனக்கு நிகரில்லாதார்மாட்டே நிற்குமாயின், நிதியை இறப்பாரிடத்தே பொருந்தின தொழிலை உடைத்தாம். (எ-று).

சீரல்லவர்-பெரியவரல்லவர். மேற்கூறியவற்றிற்குக் காரணம் கூறிற்று. 3

974. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடும்.

(இ-ள்) பெருமையாவது செருக்கின்மை; சிறுமை செருக்கினை மேற்கொண்டொழுகுமாதலான், (எ-று).

3. பெருமை

மேல், குலத்தினாலும் செல்வத்தினாலும் பெரியாரைப் பெரியாரென்று கொள்ளல் படாதென்றார்; இனிப் பெருமையிலக்கணங் கூறுவார், முற்படச் செருக்கில்லாமையே பெருமையென்று கூறப்பட்டது. 4

975. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(இ-ள்) பெருமை பிறருடைய குறையை மறைத்துச் சொல்லும்; சிறுமை அவர்க்குள்ள நன்மையைச் சொல்லுதலைத் தவிர்ந்து குற்றத்தையே சொல்லிவிடும், (எ-று).

இது, புறம் கூறாமை பெருமையென்று கூறப்பட்டது. 5

976. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ மெனல்.

(இ-ள்) ஒருவனுக்கு மனப்பெருமை புகழாம்; அதனை நீங்கி வாழுமென்று பிறர் சொல்லுதல் ஒருவனுக்கு இளிவாமாதலான் (எ-று).

இது, மிகக்கொடுக்க வல்லாரைப் பெரியரென்று கூறிற்று. 6

977. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

(இ-ள்) தன்னைப் பிறர் விரும்பும் காலத்தினும், தன் உள்ளம் பிறரை விரும்பும் காலத்தினும் வேண்டியவாறு ஒழுகாத கற்புடைய மகளிரைப் போலப் பாதுகாத்து ஒருவன் ஒழுகுவனாயின் பெருமையுண்டாம்; அல்லது இல்லையாம், (எ-று).

இது, பெருமையாவது நிறையுடைமை என்றுகூறப்பட்டது 7

978. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

(இ-ள்) பெருமையுடையவர் நெறியினானே செய்யவல்லர்; செய்தற்கு அருமையுடைய செயல்களை, (எ-று).

இது, செய்தற்கு அரிய செய்வார் பெரியரென்றது. 8

3. பெருமை

979. சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(இ-ள்) சிறுமையுடையார் உணர்வின்கண் இல்லை; பெருமையுடையாரைப் போற்றித் துணையாய்க் கொள்வே மென்னும் கருத்து (எ-று).

எனவே, பெருமையுடையார் மாட்டு உண்டு என்றவாறாயிற்று. இது, பெரியாரைப் பேணுதலும் பெருமையென்று கூறிற்று. 9

980. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

(இ-ள்) செல்வமும் கல்வியும் தனக்கு உள்ளதாகும் காலத்தும் பணிந் தொழுகுவர் எந்நாளும் பெருமைக்குணம் உடையார்; சிறுமைக்குணம் உடையார் அவை உளதாம் காலந்தொடங்கித் தம்மை வியந்து கொண்டு அணிவர் (எ-று).

இது பணிந் தொழுகுதலும் பெருமை என்றது. 10

---

4. சான்றாண்மை

சான்றாண்மையாவது நற்குணங்கள் பலவற்றானும் அமைந்தார் இலக்கணங் கூறுதல். இது பெரும்பான்மையும் அறத்தினால் தலையளிசெய்தொழுவாரை நோக்கிற்று.

981. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ-ள்) ஒருவனுக்குச் சால்பாகிய நிலைமை உண்டாகப் பெறின், பொருளின்மை இளிவாகாது, (எ-று).

இஃது, அமைதியுடையராதல் பெறுதற்கரிதென்றது. 1

4. சான்றாண்மை

982. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(இ-ள்) தவத்திற்கு உறுப்பான சீலங்கள் பல உளவாயினும் கொல்லாத நலத்தையுடையது தவம்; அதுபோலச் சான்றாண்மைக் குணங்கள் பல வாயினும், பிறரது பழியைச் சொல்லாத நலத்தை யுடையது சால்பு, (எ-று).

மேற்கூறிய சால்பிற்கு இலக்கணம் கூறுவார், முற்படப்புறஞ் சொல்லாமை எல்லாக் குணத்தினும் இன்றிமையாததாக வேண்டும் என்று கூறினார். 2

983. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

(இ-ள்) அன்புடைமையும் பழிநாணுதலும் ஒப்புரவுடைமை யும் கண்ணோட்டமும் மெய்யுரையுமென்று சொல்லப்பட்ட ஐந்தும் சால்பினைத் தாங்கும் தூண், (எ-று).

இவை ஐந்தும் சால்பிற்கு அங்கமென்றது. 3

984. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

(இ-ள்) சான்றோர்க்கு நலமாவது குணநல்லராகுதல்; அக் குணநலம், பிற நலமாகிய எல்லா நலத்தினும் உள்ளதொரு நல மன்று, (எ-று).

இது, குணநலம் சால்பிற்கு அழகென்றது. 4

985. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

(இ-ள்) பெரியாரது பெருமையாவது எல்லார்க்கும் தாழ்ந் தொழுகுதல்; அதுவே சான்றவர் மாறுபட்டவரை வெல்லும் கருவி, (எ-று).

இது சான்றவர்க்கு வலியாவது தாழ்ந்தொழுகுதல் என்ற வாறு. 5

4. சான்றாண்மை

986. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.

(இ-ள்) சால்பிற்கு அளவு யாது எனின், தோல்வியைத் தனக்கு நிகர் அல்லாதார் மாட்டும் கொள்ளுதல் என்றவாறு.

இஃது, எல்லார்க்கும் இனிமை செய்யவேண்டும் என்றது. 6

987. இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

(இ-ள்) தமக்கு இன்னாத செய்தவர்கட்கும் இனியவற்றைச் செய்யாத காலத்துச் சால்புடைமையால் பயன்யாதோ, (எ-று).

இஃது, இன்னாதார்க்கும் இனிமை செய்யவேண்டும் என்றது. 7

988. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(இ-ள்) உலகியற்கை அறிந்து சான்றாண்மையை மேலிட்டுக் கொள்ளும் அவர்களுக்கு நல்லவாயின எல்லாம் இயல்பு என்று சொல்லுவர் அறிவோர், (எ-று).

இது, மேற்கூறிய வாறே அன்றி நற்குணங்கள் எல்லாம் வேண்டும் என்றது. 8

989. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(இ-ள்) சான்றாண்மைக்கு ஒரு கடல் என்று பிறரால் சொல்லப்படுமவர்கள், காலம் தனது தன்மை குலையினும் நின்ற நிலை தலையார், (எ-று).

இது, சான்றார் நின்ற நிலை குலையார் என்றது. 9

990. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தாந்
றாங்காது மன்னோ பொறை.

4. சான்றாண்மை

(இ-ள்) சான்றார் தமது தன்மை குறைவர் ஆயின் பெரிய நிலமானது உயிர் முதலாகிய பாரத்தைத் தாங்குதல் கழியும், (எ-று)

அவர்களும் தானுமாய்ப் பொறுக்கின்றதனைத் தனிப் பொறுக்கல் ஆகாது என்று ஆயிற்று. மேல் ஊழிபெயரினும் சான்றோர் நிலை குலையார் என்றார்; இது, சான்றோர் நிலை தலையின் ஊழிபெயரும் என்றது. 10

---

5. பண்புடைமை

பண்புடைமையாவது யாவர் மாட்டும் அவரோடொத்த அன்பினராய்க் கலந்தொழுகுதலும் அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்துண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை. இது பெரும் பான்மையும் பொருளினால் தலையளி செய்வாரை நோக்கிற்றாதலான் பிற்கூறப்பட்டது.

991. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ-ள்) யாவர் மாட்டும் அன்புடைமையும் அமைந்த குடியின்கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்று உலகத்தார் வழங்கப்படுகின்றது, (எ-று)

அன்பு உடையவனாகப் பிறர் வருத்தத்திற்குப் பரிதலும், கலந்து ஒழுகுதலும், கொடுத்தலும் முதலாயின உளவாம்; குடிப் பிறப்பினானே பழிப்படுவ செய்யாமையும் புறங்கூறாமையும் முதலாயின உளவாம்; ஆதலான் இவ்விரண்டினையும் உடைமை பண்புடைமை என்று கூறப்பட்டது. 1

5. பண்புடைமை

992. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ-ள்) யாவர் மாட்டும் எளிய காலத்தை உடையவன் எய்துதல் எளிது என்று சொல்லுவர், பண்புடைமை என்று வழங்கப் படுகின்ற இதனை, (எ-று).

எளிய காலம் ஆவது, எல்லாரும் தத்தம் குறை சொல்லு தற்கு எளியசெவ்வி, அஃதுடையார்க்குப் பண்புண்டாம் என்றது. இது பெரும்பான்மையும் அரசரை நோக்கிற்று, மேற்கூறியவகையே யன்றி இதனாலும் பண்புண்டாம் என்று கூறப்பட்டது. 2

993. நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

(இ-ள்) அறிவார் மாட்டு நகையாடுதலின் கண்ணும் இகழ்ச்சி தோற்றுமாயின் இன்னாதாம்; பகையாகுமிடத்துப் பண்பு தோற்றுமாயின் பெருமை உளதாம், (எ-று).

எனவே, அறியாதார் மாட்டு இவை இரண்டும் இல்லையாம் என்றவாறாயிற்று. இகழ்ச்சி என்றது பண்பின்மை; இஃது அறிவுடையார் மாட்டு ஒரு தலையாகக் கொண்டு ஒழுக வேண்டும் என்றது. 3

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

(இ-ள்) பிறரால் விரும்பப் படுதலோடே கூட நன்னெறியின் கண்ணே பொருந்தின பொருளுடையாரது குணத்தினை உலகம் கொண்டாடும், (எ-று).

இவை, எல்லாரும் புகழ்வர் என்றது. 4

995. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

5. பண்புடைமை

(இ-ள்) பண்புடையாரைத் தோற்றி உலகமாகிய பலவகை உயிரும் உண்டாயிற்று; அத்தோற்றம் இல்லையானால் அவ்வுயிர்கள் எல்லாம் மண்ணின்கண் புக்குமாய்வது நிலை, (எ-று).

இது, பண்புடையார் பிறத்தலானே உலகநடை தப்பாமல் வருகின்றது என்றது. 5

996. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(இ-ள்) எல்லாரோடும் கூடி இருந்து நகுதலைச் செய்ய மாட்டாதார்க்குப் பெரிய உலகம் பகற் பொழுதும் இருளின்பாற் பட்டது, (எ-று).

எனவே, இவனும் அறியான், அறிவிப்பாரும் இல்லை என்றவாறாயிற்று. இது, கலந்து ஒழுகாமையால் வரும் குற்றம் கூறிற்று. 6

997. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரீந் தற்று.

(இ-ள்) குணமில்லாதவன் பெற்ற பெரிய செல்வம் நல்ல பால் கலத்தின் தீமையால் கெட்டாற் போலத் தனக்கும் பிறர்க்கும் இன்பம் பயவாது கெடும், (எ-று).

இது, பகுத்துண்ணாமையால் வரும் குற்றம் கூறிற்று. 7

998. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை.

(இ-ள்) நண்பு செய்யமாட்டாராய் விருப்பமில்லாத வற்றைச் செய்வார்க்கும் குணமாயின செய்யா ராதல் குணமுடையார்க்கு இழிவு, (எ-று).

குணம் செய்யாமை இன்னா செய்தலாம். ஆதலால் பிறர் வருத்தத்திற்குப் பரியாமையால் வரும் குற்றம் கூறிற்று. 8

5. பண்புடைமை

999\. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

(இ-ள்) மக்கள் ஒப்பாவது உறுப்பு ஒத்தலன்று; செறியத் தக்க குணங்களை ஒத்தல்; அதனை ஒப்பதே ஒப்பாவது, (எ-று).

செறியத் தக்க குணங்கள் உளவாதலின் செறியத் தக்க குணம் என்றார். பண்பு இல்லாதார் மக்களல்லர் என்றது. 9

1000\. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

(இ-ள்) அரத்தை ஒத்த கூர்மையை உடையராயினும் மக்கட் பண்பு இல்லாத மாந்தர் மரத்தை ஒப்பர், (எ-று).

அரம் போலும் தனக்குள்ள கூர்மை, பிறர் மாட்டு மடியாமையும் தான் பிறரைக் கூரியர் ஆக்குதலும் ஆம், இஃது உணர்வுடையார் ஆயினும் உணர்வில்லாத மரத்தை ஒப்பார் என்றது; என்னை? உணர்வால் பயன் இன்மையின். 10

---

6. நன்றியில் செல்வம்

நன்றியில் செல்வமாவது அறத்தையும் இன்பத்தையும் பயவாத செல்வத்தியல்பு கூறுதல். இது பண்பிலாதார்க் குளதாவ- தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

1001\. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

(இ-ள்) பொருள் தேடுங்கால் பிறர்மாட்டு அன்பு செய்தலையும் நீக்கி, அது தேடினான் நுகர்தலுமின்றி, அறத்தையுஞ் செய்யாது, தொகுத்த ஒள்ளிய பொருளைக் கொள்வார் பிறர், (எ-று).

6. நன்றியில் செல்வம்

இது. நன்றியில் செல்வமாவது இத்தன்மையது என்பதூஉம், அது பிறர் கொள்வர் என்பதூஉம் கூறிற்று பிறர் என்றது தன் வழியில் உள்ளார் அல்லாதாரை. 1

1002. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(இ-ள்) பொருளீட்டுதலை விரும்பிப் புகழை விரும்பாத மாந்தர் பிறத்தல் நிலத்துக்குப் பாரமாகும் (எ-று).

இத்தன்மையோர் பிறப்பதனினும் பிறவாமை நன்றென்றது. 2

1003. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

(இ-ள்) இடன் நிறைந்த பெரும்பொருளை யீட்டிவைத்தானொருவன் அதனை நுகரானாயின், செத்தான்; அவன் பின்பு செய்யக் கிடந்தது யாதுமில்லை, (எ-று).

இஃது, ஈட்டினானாயினும் தானொருபயன் பெறானென்றது. 3

1004. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியள்மூத் தற்று.

வறியவர்க்கு ஒன்றைக் கொடுக்கமாட்டாதான் பெற்ற பெரிய செல்வம் மிக அழகினைப் பெற்ற ஒருத்தி கொழுநனையின்றி மூத்துத்தமியளாய்க் கழிந்தது போலும் (எ-று)

தமியள் மூத்தல் தன்னைப் பிறர்க்கு ஈவாரின்றித் தமியளாகி மூத்தல். இது செல்வம் தானும் ஒருபயன் பெறாதென்றது. 4

1005. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

(இ-ள்) ஒருவராலும் நச்சப்படாத செல்வமுடையவன், தனக்குப் பின்பு நிற்குமென்று யாதனை எண்ணுமோ? (எ-று).

இது, புகழில்லையா மென்றது. 5

6. நன்றியில் செல்வம்

1006. பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு.

(இ-ள்) பொருளினாலே எல்லாச்சிறப்பும் எய்தலாமென்று ஈயாதே உலோகின்ற மயக்கத்தினாலே மாட்சிமையில்லாத பிறப்பு உண்டாம், (எ-று).

இது, தீக்கதியுள் உய்க்குமென்றது. 6

1007. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

(இ-ள்) பிறர்க்குக் கொடுத்தலும் தாம் அது நுகர்தலும் இல்லாதார்க்குப் பலகோடிப் பொருள் உண்டாயினும் அவை இன்மையோ டொக்கும் (எ-று).

இது நல்கூர்ந்தா ரோடொப்பரென்றது. 7

1008. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்.

(இ-ள்) தானுந் துவ்வாது தக்கார்க்கும் ஒன்று ஈயாத இயல்பினையுடையான் பெற்ற பெருஞ் செல்வம் குற்றமாம் (எ-று).

இஃது இறுதிபயக்கும் என்றது. 8

1009. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(இ-ள்) சீர்மையை உடைய செல்வர் சிறிது துனியால் ஈயாதொழிதல், மாரி பெய்யாமை மிக்காற் போலும், (எ-று).

மேற்கூறிய நன்றியில்செல்வ முடையாரன்றி, நற்செல்வமுடையாரும் பிறர்க்கு ஈயாராயின், மழை பெய்யாக்கால் உலகம் துன்பமுறுமாறு போலத் துன்புறுமென்றது. 9

1010. நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

6. நன்றியில் செல்வம்

(இ-ள்) பிறரால் நச்சப்படாதவனது செல்வம், ஊர்நடுவுள் பழுத்து நிற்பதொரு நச்சுமரம் பழுத்ததன்மைத்து, (எ-று).

இது, தமதாசையால் தின்பாருண்டாயின், அவரைக் கொல்லுமென்றவாறாயிற்று. 10

---

7. நாணுடைமை

நாணுடைமையாவது அறம்பொருள் இன்பங்களிற் பிறர் பழியாமலொழுகுதல். இது பண்புடைமையின் பின் கூறற்பாலது டண்பின்மையும் சேரச் சொல்ல வேண்டுதலின் பண்பு இன்மையாகிய நன்றியில் செல்வத்தைக் கூறி அதன்பிற் கூறப்பட்டது.

1011. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(இ-ள்) உணவும் உடையும் ஒழிந்தனவும் புன்மக்க ளெல்லார்க்கும் வேண்டும்; தலைமை மக்களுக்கு விசேடமாக வேண்டும்; அது நாணுடைமை, (எ-று).

இது, நாணம் வேண்டுமென்றது.

1012. ஊணைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(இ-ள்) மேற்கூறிய எல்லாவற்றினும் உண்டியைக் கருதிற்று பலவகை உயிரும் அதுபோல நாணாகிய நன்மையைக் கருதிற்றுச் சால்பு, (எ-று).

இது, சான்றோர்க்கு நற்குணங்கள் பலவும் வேண்டுமாயினும், இஃது இன்றியமையாதென்றது. 2

7. நாணுடைமை

1013. நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னாண்டுறவார் நாணான் பவர்.

(இ-ள்) நாண் பொருட்டாக உயிரைத்துறப்பர், உயிர்ப் பொருட்டாக நாணைத்துறவார், நாணம் வேண்டுவார், (எ-று)

இது, நாண் உயிரினும் சிறந்ததென்றது. 3

1014. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலாயவர்.

(இ-ள்) நாண் ஆகிய வேலியை அமைத்துக்கொள்வார்கள் அல்லது பெரிய உலகத்தினைப் பெறுதற்கு விரும்பார்கள் மேன் மக்கள் என்றவாறு.

இது, நாணம் அழியவரும் பொருள் கொள்ளார் என்றது. இது, பொருளினும் நாணம் சிறந்தது என்றது. 4

1015. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றோ பீடு நடை.

(இ-ள்) சான்றோர்க்கு நாணுடைமை அழகன்றோ? அஃதில்லையாயின், பெரிய நடை நோயன்றோ? (எ று).

இது, சான்றோர்க்கழகாவது நாணுடைமை யென்றது. 5

1016. பிறர்நாணத் தக்கது தானாணா னாயி
னறநாணத் தக்க துடைத்து.

(இ-ள்) உயர்ந்தார் பலரும் நாணத்தகுவ தொன்றனைத் தான் நாணாது செய்வனாயின், அவனை அறம் நாணியடையா தொழியும் தகுதியுடைத்தாம், (எ-று).

இது, நாணமில்லாதாரை அறம் சாரா தென்றது. 6

1017. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

7. நாணுடைமை

(இ-ள்) ஒழுக்கம் தப்புமாயின், அத் தப்புதல் குலத்தினைச் சுடும்; அது போல நாணின்மை நிற்குமாயின், தமது நலத்தினைச் சுடும், (எ-று).

இது, நலமில்லையா மென்றது. 7

1018. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று.

(இ-ள்) மனத்தின்கண் நாணமில்லாதார் இயங்குமது, மரப் பாவை கயிற்றினால் இயங்கி உயிருள்ளது போல மயக்குமதனை ஒக்கும், (எ-று).

இது, நாணமில்லாதார் மக்களல்லரென்றது. 8

1019. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

(இ-ள்) தாம் செய்யும் வினையினாலே நாணுதல் நாணம்; அஃதல்லாத நாணம் அழகிய நுதலினாலே நல்லாராகிய கணிகையர் நாணத்தோ டொக்கும், (எ-று).

மேற்கூறிய நாணம் எத்தன்மைத் தென்றார்க்கு, இது கூறப் பட்டது. 9

1020. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார்[1] நாணுக்
குறைபதி யென்னு முலகு.

(இ-ள்) பிறர்க்கு வரும் பழியையும் தமக்குவரும் பழியையும் அஞ்சி நாணுமவர்களை நாணுக்கு இருப்பிடமென்று சொல்லுவர் உலகத்தார், (எ-று).

இது, தம்பழிக்கு நாணுதலேயன்றிப் பிறர்பழிக்கும் நாண வேண்டுமென்றது 10

1, ''தம்பழிபோ னாணுவார்" ஒன்பது மணக். பாடம்.

8. குடி செயல் வகை

குடிசெயல் வகையாவது தம் குடியையோம்புதல் வேண்டு மென்று கூறுதல். இது நாணமுடையார் செய்தலாதலின் அதன்பின் கூறப்பட்டது.

1021. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

(இ-ள்) ஒருவனுக்கு மிக்க ஆண்மையென்று சொல்லப் படுவது, தான் பிறந்த குடியை ஆளுதலுடைமையை மனத்தின் கண் பெருக்கிக் கோடல், (எ-று).

ஆளுதலுடைமை-குடியோம்புதலை எப்பொழுதுஞ் சிந்தித் தல். எனவே, இது குடியோம்புதல் வேண்டுமென்றது.

1022. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

(இ-ள்) போர்க்களத்துச் செல்வார் பலருளராயினும் போர் தாங்கல் வன்கண்ணர் மாட்டே உளதானாற் போல, ஒருகுடிப் பிறந்தார் பலருளராயினும் குடியோமப வல்லவன் கண்ணதே குடி யாகிய பாரத்தைப் பொறுத்தல், (எ-று).

இஃது ஒரு குடிப்பிறந்தார் பலர் உளராயினால் அவருள் மூத்த வருக்குக் கடனோ எல்லார்க்கும் கடனோ என்று ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது. 2

1023. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

(இ-ள்) முயற்சியும் நிரம்பின அறிவும் என்று சொல்லப் பட்ட இரண்டினாலும் வளருகின்ற வினையினாலே குடி உயரும், (எ-று)

இது ஒரு வினையைச் செய்யுங்கால் நல்லதும் தீயதும் அறிய வேண்டுதலின் அறிவு வேண்டும் என்று கூறப்பட்டது.

8. குடி செயல் வகை

வளருகின்ற வினையாவது ஒரு வினையைச் செய்து முடித்தால் அவ்வளவிலே நின்று அமையாது பின்னும் ஒரு வினையைத் தொடங்குதல், மேல் குடி ஓம்ப வேண்டும் என்றார்; அஃது ஓம்பு மாறு என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது. 3

1024. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

(இ-ள்) ஒருவன் கை கருமஞ் செய்தலினாலே உண்டிலே னென்று சொல்லுகின்ற பெருமை போலப் பெருமையுடையது பிறிது இல்லை, (எ-று).

மேல் எப்பொழுதும் இடைவிடாமல் வினைசெய்ய வேண்டும் என்றார். அது பெரியோரால் செய்யலாகுமோ என்றார்க்கு இதனின் மிகுந்ததோர் பெருமையில்லையென்றது. 4

1025. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.

(இ-ள்) சுற்றத்தார் மாட்டு உளதாகிய குறையை மறைக்கக் கருதுவான் உடம்பு, துன்பத்துக்குக் கொள்கலமாம், (எ-று)

மேல் ஒழியாது கருமம் செய்தல் பெருமை என்றார்; அது துன்பமாக்கும் என்றார்க்குத் துன்பத்தற்கு நாணல் ஆகாது, அதனால் புகழாதலான் என்று கூறப்பட்டது. 5

1026. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்

(இ-ள்) குடியோம்புவார்க்கு நன்மை பருவம் இல்லையாம்; தங்குடும்பத்தின் குறையை நினைத்து மடிசெய்தலினாலுளதாகும் குற்றத்தை நினைக்கக் கெடும் ஆதலான், (எ-று).

இது. குடிசெய்வார் இன்பநுகர்ச்சியை விரும்பாரென்று மேல் துன்பத்திற்குக் கொள்கலம் ஆக வேண்டும் என்றார்;

8. குடி செயல் வகை

அவ்வாறு துன்புற்று ஒழுகுதல் ஆகுமோ என்றார்க்குக் கூறப்பட்டது. 6

1027. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

(இ-ள்) தங்குடியைத் தாழச்செய்யாதே உயரச்செய்யக் கருதுவார்க்கு அவ்வுயர்ச்சி எண்ணாமல் (தானே) முடிவுபெறும், (எ-று)

யாதானும் ஒரு வினையை முடியுமாறு எண்ணி அதன்பின் முயன்று முடிக்க வேண்டும் அன்றே இஃது அவ்வாறன்றி இவண் கருதினவளவிலே அவரது நல்வினைதானே முடிக்கும்; இவன் அதனை மேற்கோடலே வேண்டுவ தென்றவாறு ஆயிற்று. 7

1028. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(இ-ள்) குடியையோம்புவேனென்று கருதிமுயலுமவனுக்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முற்பட்டு முயலும் (எ-று).

மடிதற்றல்-தொழில்செய்வார் ஆடை உடுப்பதோர்திறன். மேல் சுற்றத்தார் நல்வினை இலராயின் ஓம்புமாறென்னை என்றார்க்குத் தெய்வம் அருள் செய்யும் என்று கூறப்பட்டது. இத் துணையும் குடிஓம்புதல் வேண்டும் என்று கூறிற்று. 8

1029. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

(இ-ள்) குற்றப்பட ஒழுகுத லிலனாய்த் தன்குடியை யோம்பி வாழுமவனை, உலகத்தாரெல்லாரும் தமக்குச் சுற்றமாக நினைத்துச் சூழ்ந்து நிற்பர், (எ-று).

இது குடி ஓம்புவார்க்குப் பயன் கூறிற்று. 9

1030. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

8. குடி செயல் வகை

(இ-ள்) இடும்பையாகிய நவியம் அடித்தூரை வெட்டுதலானே விழும்; பக்கத்திலே மடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கோல் போலத் தாங்க வல்ல நல்ல ஆண்மகன் இல்லாத குடியாகிய மரம், (எ-று).

இது, குடியோம்புவாரில்லாக்கால் அக்குடி கெடுமென்று கூறப்பட்டது. 10

---

9. உழவு

உழவாவது உழவின் திறனும் அதனால் பயனும் கூறுதல். இது குடி செய்வார்க்கு இன்றியமையாமையின் அதன்பின் கூறப்பட்டது.

உழவு தொழில் வரைவு வாணிகம் சிற்பம் வித்தை என்று சொல்லப்பட்ட அறுவகைத் தொழிலும் குடி செய்வார்க்கு வேண்டும் அன்றே, அவையெல்லாவற்றின் இயல்பும் கூறாதார், உழவு ஒன்றும் கூறியது எற்றுக்கு எனின்? அவற்றுள் கல்வி பொருள்தரும் என்பது முன்பே கூறப்பட்டது. தொழிலாவது ஒருவன் ஏவல் செய்தல். அரசரேவலால் அமைச்சர் செய்யும் தொழில் அமைச்சியலுள் கூறப்பட்டது. ஏனையோர் செய்யும் தொழிலும் வரைவு வாணிகமும் சிற்பமும் மேலை அதிகாரத்தில் 'ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினையால் நீளும் குடி' என்றதனாலே சொன்னாராம். என்னை? அவையெல்லாம் முயற்சியானும் அறிவானும் வருதலின். ஆயின் உழவும் அதனுள் அடங்காதோ எனின்? அடங்கும். அஃது ஈண்டுத் தொழிலை நோக்கிக் கூறப்பட்டது அன்று. முயன்று பொருளீட்டினால் எல்லாரும் குடி ஓம்புங்கால் தானியத்தால் ஓம்ப வேண்டுதலின் அதனை உண்டாக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

9. உழவு

1031. சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனா
லுழந்து முழவே தலை.

(இ-ள்) உழவு ஒழிந்த எல்லா நெறிகளினும் சுழன்று திரிந்தாலும், ஏரின் வழியே வருவர் உலகத்தார்; ஆதலான், வருந்தியும் உழவே தலைமையுடைத்து, (எ-று).

இஃது உழவு வேண்டுமென்றது. 1

1032. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாமற் சான்று படும்.

(இ-ள்) ஒரு பலப்புழுதியைக் கைசாக உணக்குவனாயின், ஒரு கையாற் பிடித்த எருவும் இடாமல் அமைவு படும், (எ-று).

மேற்கூறிய உழவு செய்யுந்திறன் கூறுவார் முற்படப் புழுதி யுணக்க வேண்டுமென்றார். 2

1033. ஏரினு நன்றா மெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

(இ-ள்) உழுகின்றதனினும் நன்றாம் எருவிடுதல்; களை கட்ட பின்பு நீர் விடுதலினும் நன்றாம் அழியாமற் காத்தல், (எ-று).

இது, பல்கால் உழவு வேண்டுமென்பதூஉம், எருவிட வேண்டுமென்பதூஉம், களைபறிக்க வேண்டுமென்பதூஉம், பசுப்புகுதாமற் காக்கவேண்டுமென்பதூஉம் கூறிற்று. 3

1034. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

(இ-ள்) நிலத்திற்கு உரியவன் நாடோறும் அந்நிலத்தின் பாற் செல்லாது மனையகத்திருப்பனாயின், அது தான் செல்லாமையினாற் புலந்த இல்லாளைப் போலப் புலர்ந்துவிடும், (எ-று).

இது, நாடோறுஞ்சென்று பார்க்க வேண்டுமென்பதூஉம் பாராக்கால் பயன் குன்றும் என்பதூஉம் கூறிற்று. இவை நன்றினானும் உழுந்திறம் கூறிற்று 4

---

1. "கசா" என்பது மணக். பாடம்.

9. உழவு

1035. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(இ-ள்) பிறரை இரவார்; தம்மை இரப்பார்க்குக் கரத்தலின்றி யாதொன்றாயினும் ஈவர்; கையாலே உழவுத் தொழிலைச் செய்து உண்ணும் இயல்பினையுடையார்க்கு, (எ-று).

உழவினால் பயன் கூறுவார் முற்பட இல்லறம் செய்வது இவர் கண்ணது என்று கூறினார். 5

1036. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

(இ-ள்) உழவை யுடையவர் அத்தொழிலைச் செய்யாது கைம்மடங்குவராயின், யாதொரு பொருளின்கண்ணும் விரும்புதனையும் விட்டோமென்பார்க்கு அந்நிலையின்கண் நிற்றல் இல்லை, (எ-று).

எனவே, துறவறத்தின்கண் நிற்பாரை நிறுத்துதல் உழுவார் கண்ண தென்று. விழைவது-ஆசை. 6

1037. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(இ-ள்) உலகின்கண் வாழ்வார் உழுதுண்டு வாழ்வாரே; மற்று வாழ்வாரெல்லாம் பிறரைத் தொழுது உண்டு அவரேவல் செய்கின்றவர், (எ-று).

இது, செல்வமாவது உழவினால் வருஞ் செல்வமென்றது. 7

1038. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(இ-ள்) பல அரசர் குடை நிழலையும் தம்மரசன் குடைநிழற் கீழே வரக்காண்பர், குடை அல்லாத நிழலை யுடையவர், (எ-று).

குடைஅல்லா நிழலாவது பைங்கூழ் நிழல். இது, தாம் வாழ்தலே யன்றித் தம்மரசனையும் வாழ்விப்பரென்றது. 8

9. உழவு

1039. உழவா ருலகத்திற்[1] காணியஃ தாற்றார்
தொழுவாரே யெல்லாம் பொறுத்து.

(இ-ள்) உலகமாகிய தேருக்கு அச்சாணிபோல்வார் உழவரே; அதனைச் செய்யாதவர் பிறர்பெருமிதத்தினால் செய்வனவெல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பர், (எ-று).

இஃது, உழுவார் தம்மையும் அரசனையும் பெரியராக்குதலன்றி உலகத்தையும் தாங்குவரென்று கூறிற்று. 9

1040. இலமென் றசைஇ யிருப்பாரைக்[1] காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(இ-ள்) பொருளிலே மென்று தளர்ந்து இருப்பாரைக் கண்டால், நிலமாகிய நல்லாள் இகழ்ந்து நகும், (எ-று).

இது, நிலம் மடியில்லாதார்க்கு வேண்டியது கொடுக்குமென்றது. 10

---

10. நல்குரவு

நல்குரவாவது பொருளில்லாதார்க்கு உளதாகுங் குற்றங் கூறுதல். இஃது உழவில்லாதார்க்கு உளதாவ தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது

1041. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.

(இ-ள்) நல்குரவுபோல இன்னாதது யாதெனின், நல்குரவுபோல இன்னாதது தானே, (தானே-நல்குரவே), (எ-று).

இது, தன்னை யொத்த இன்னாதது பிறிதில்லையென்றது 1

---

1. " யிருப்பாரை " என்பது மணக். பாடம்.

10. நல்குரவு

1042. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி விடும்

(இ-ள்) நல்குரவென்று கூறப்படுகின்ற நிகரில்லாத பாவத்தை யுடையவன், இம்மையின் கண்ணும் மறுமையின்கண்ணும் நுகர்ச்சியின்றிவிடும், (எ-று).

தானம் பண்ணாமையால், மறுமையிலும் நுகர்ச்சியில்லையாயிற்று. இது இன்பமில்லையாக்கு மென்றது. 2

1043. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

(இ-ள்) தொன்று தொட்டு வருகின்ற குடிப்பிறப்பினையும் வடிவழகினையும் ஒருங்கு கெடுக்கும்; நல்குரவென்று சொல்லப்படுகின்ற ஆசைப்பாடு, (எ-று).

நல்குரவு ஆசையைப் பண்ணுதலினால், ஆசையாயிற்று. தோல்ஆகு பெயர். இது, குலத்தினையும் அழகினையும் கெடுக்கு மென்றது. 3

1044. நற்பொருணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

(இ-ள்) நல்ல பொருளை மிகவும் ஆராய்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார் சொல்லும் பொருள் சோர்வு படும், (எ-று).

ஏற்றுக் கொள்வாரில்லை யென்றவாறாயிற்று. இது, கல்வி கெடும் என்றது. 4

1045. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

(இ-ள்) அறத்தைப் பொருந்தாத நல்குரவாளன், தன்னைப் பெற்ற தாயாயினும் ஏதிலாரைப்போல நோக்கப் படுவான், (எ-று).

அறம் சாரா நல்குரவாவது, பொருளும் இன்பமும் சிந்தித்து நல்கூர்தல். இது, சுற்றத்தாரும் கைவிடுவர் என்றது. 5

10. நல்குரவு

1045. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

(இ-ள்) நெருப்பினுள்ளே கிடந்து உறங்கலும் ஆகும்; நிரம்பிடும்பையுள் உறங்குதல் யாதொரு காலத்திலும் அரிது (எ-று)

இஃது, உறங்கவொட்டா தென்றது. 6

1047. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

(இ-ள்) இன்றும் வரும்போலும்; நெருநலும் என்னைக் கொன்றது போலும் நிரப்பிடும்பை, (எ-று).

இது. நாடோறும் அச்ச முறுத்து மென்று கூறியவாறு. 7

1048. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(இ-ள்) நல்குரவு, குடிப்பிறந்தார் மாட்டேயும் இளிவரவான சொற்கள் பிறக்குஞ் சோர்வினை உண்டாக்கும், (எ-று).

இது குடிப்பழி உண்டாக்கும் என்றது. 8

1049. நல்குர வென்னு மிடும்பையுட் பலகுரைத்
துன்பங்கள் சென்று படும்.

(இ-ள்) நல்குரவாகிய துன்பத்தினுள்ளே பலதுன்பங்களும் சென்று தோற்றும் (எ-று).

குரை-அசை. மேற்கூறிய வேயன்றி எல்லாத் துன்பமும் உண்டாமென்றது. 9

1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(இ-ள்) நுகரும்பொருள் இல்லாதார் அப்பொருளின் மேற் பற்றறத் துறவாது வருந்துதல், உப்பிற்குங் காடிக்குங் கேடாக வேண்டி, (எ-று).

10. நல்குரவு

துறப்பாராயின் நன்றென்றது நல்கூர்ந்தார்க்குத் துன்ப முறுதலின்றி, இன்ப நுகரும் நெறியுளவோ என்றார்க்குத் துறப் பாராயின், இன்பமுறலா மென்று கூறப்பட்டது. 10

11. இரவு

இரவாவது பிறர்மாட்டுச்சென் றிரந்து கோடல். இது நல் கூர்ந்தார் செயலாதலின், அதன்பின் கூறப்பட்டது.

1051. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

(இ-ள்) தமக்கு இல்லாதவிடத்து இரக்கத்தக்காரைக் காணின், இரந்து கொள்க; அவர் இல்லையென்பராயின். அஃது அவர்க்குப் பழியாம்; தமக்குப் பழியாகாது, (எ-று).

ஈண்டுக் கூறுகின்ற இரத்தல் எல்லார்மாட்டுஞ் செய்யலாகா தென்பதூஉம், தக்கார் மாட்டிரத்தலாமென்பதூஉம் கூறிற்று. 1

1052. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

(இ-ள்) குளிர்ந்த இடத்தையுடைய பெரிய உலகம் இரக்கு மவர்களை உடைத்தல்லவாயின் இதனின் உள்ள மக்களது இயக்கம் மரப்பாவை சென்றுவந்து இயங்கினாற்போலும், (எ-று).

மேற்கூறிய இரத்தல் இழிந்தது ஒன்று அன்றே; இதனைச் செய்க என்று விதித்தது என்னை என்றார்க்கு இரத்தலும் ஈதலும் உலகியல்பாதலான். இரத்தல் இழிவென்று கொள்ளப்படா தென்றது. 2

11. இரவு

1053. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவாரில் லாத கடை.

(இ-ள்) இரந்து கோடலைப் பொருந்துவார் இல்லாத விடத்து ஈயக் கருதியிருப்பார் மாட்டுப் புகழ் யாதான் உண்டாம், (எ-று).

இரந்து கோடல் இழிபல்ல ஆயினும் பழிக்கப்படும் என்றார்க்குப் பழிக்கப்படுமாயின் உலகத்து இரப்பரில்லையாம்; அவரில்லாராகப் புகழுடையார் இலராம்; ஆதலால், (இரவு) பழிக்கப்படாதென்று கூறப்பட்டது. 3

1054. இன்ப மொருவர்க்கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின்.

(இ-ள்) இரத்தல் ஒருவர்க்கு இன்பமாம்; இரக்கப்பட்ட பொருள்கள் தான் வருத்தமுறாதவகை எய்துமாயின், (எ-று).

பழிக்கப் படாதாயினும் துன்பம் ஆகுமே என்றார்க்கு வேண்டின பொருள்பெறின் துன்பமாகாது என்று கூறப்பட்டது. இவை மூன்றினானும் இரவு தீது என்பாரை மறுத்தவாறாயிற்று. 4

1055. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

(இ-ள்) இரப்பாரைக் கண்டால் உதாசனித்தலும் இன்றி, அவர் சொன்ன மாற்றத்தை இகழ்ந்துரைத்தலும் செய்யாது, வேண்டப்பட்டதனைக் கொடுப்பாரைக் காணில், இரந்து சென்றவர் மனம் மகிழ்ந்துநின்று உள்ளுள்ளே இன்புறுந் தன்மையுடைத்தாம் (எ-று).

மேல் இரக்கத்தக்கார் ஆவார் எத்தன்மையார் என்றார்க்கு இது கூறப்பட்டது. 5

1056. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

(இ-ள்) கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டு, இரந்து சேறலும் கொடுப்பதனோடு ஒக்கும், (எ-று).

11. இரவு

ஈதல் போலும் என்றது இரந்தேம் என்று சிறுமை உறுத லின்றி உயர்ந்தாரைப் போல் பெருமிதத்தர் ஆவர் என்றது. மேல் இகழாது ஈவார் மாட்டு இரக்கலாம் என்றார்; அவர் மூவகையர் ஆதலின் முற்படஉதவுவர் மாட்டு இரக்கலாம் என்று கூறப்பட்டது. கரத்தல் கனவினும் தேறாதார் என்றமையால் உதவுவார் என்று கொள்ளப்படும். 6

1057. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

(இ-ள்) கரப்பும் இடும்பையும் இல்லாதாரைக் காண்பா ராயின், நிரப்பினான ஆகிய இடும்பையெல்லாம் ஒருங்கு கெடும், (எ-று).

இவையிரண்டுமில்லதார் என்றமையால், இச் செல்வராயி னார் மாட்டு இரக்க லாமென்றது. 7

1058. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து.

(இ-ள்) கரப்பிலாத நெஞ்சினை யுடைய ஒப்புரவறிவார் முன்பே நின்று, இரத்தலும் ஓரழகுடைத்து, (எ-று).

ஏர்-யாழும் இவ்வாறு செய்ய வேண்டுமென்று கருதுதல். இஃது, ஒப்புர வறிவார்மாட்டு இரக்கலா மென்றது. 8

1059. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

(இ-ள்) ஒருவன் முன்னே நின்று இரத்தலை இரப்பார் மேற்கொள்வது, கரப்பில்லாதார் உலகத்து உண்டாதலானே; மற்றொன்றாலன்று, (எ-று).

மேல் கரவாதார்மாட் டிரக்கவென்றார், அஃது உலகத்துப் பெறுதலரிதென்றார்க்கு, இது கூறப்பட்டது. 9

1060. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

11. இரவு

(இ-ள்) ஒருவனை யிரந்தான் அவன் ஈந்திலனென்று தான் வெகுளாதொழிதல் வேண்டும்; பொருளரிதென்பதற்குத் தன்னுடைய நிரப்பிடும்பை தானேயும் அமையுஞ் சான்று, (எ-று).

வெகுளாமைக்குக் காரணம் பிறிது கூற வேண்டா என்றது. இஃது, இரப்பார்க்கு வேண்டியதோ ரியல்பு கூறிற்று. 10

---

12 இரவச்சம்

இரவச்சமாவது இரத்தலைத் தவிரவேண்டுமென்று கூறுதல். மேல் நல்கூர்ந்தார் ஈவார் மாட்டே இரத்தலமையுமென்று பொதுப் படக் கூறினாராயினும், மேலாயினார்க்கு அது தகுதியன்றென்பது குறித்து இவ்வதிகாரம் கூறப்பட்டது. மேலதனோடியையும் இது.

1061. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

(இ-ள்) பிறர்மாட்டு இரந்து செல்வா ரெல்லாரையும் யானிரந்து கொள்ளா நின்றேன்; இரக்குமிடத்து, இல்லை யென்பவர் மாட்டு இரவாது ஒழியுங் கோள் என்று, (எ-று).

'யாவர் மாட்டும் இரத்தலாகாது' என்று கூறுவார், முற்பட ஈயாதார் மாட்டு இரக்கலாகாது என்றது. 1

1062. கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(இ-ள்) இல்லை என்னாது மனம் மகிழ்ந்து கொடுக்கும் கண் போல்வார் மாட்டும் ஒரு பொருளை இரந்து செல்லாமை. இரந்து பெற்ற பொருளினும் கோடி மடங்கு மிகுதி உடைத்து என்றவாறு.

இஃது, ஈவார் மாட்டும் இரக்கல் ஆகாது என்றது. 2

12. இரவச்சம்

1063\. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

(இ-ள்) இப் பசுவிற்குத் தண்ணீர் தருமினென்று பிறரை இரப்பினும்; நாவிற்கு இரத்தல்போல் இளிவரவு தருவது பிறிது இல்லை, (எ-று).

இஃது, அறத்துக்காக இரத்தலும் ஆகா தென்றது. இவை மூன்றினாலும் இரத்தலைத் தவிர வேண்டும் என்று கூறப்பட்டது. 3

1064\. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ-ள்) வறுமையாலுற்ற துன்பத்தைப் பிறர்மாட்டு இரந்து பெற்ற பொருளினானே தீர்ப்பேமென்று கருதுகின்ற வன்மைபோல வன்பாயிருப்பது பிறிது இல்லை, (எ-று).

இஃது, இரந்தாலும் நல்குரவு தீரா தென்றது. 4

1065\. இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பாறார்தாக்கப் பக்கு விடும்.

(இ-ள்) ஒருவன் வறுமையாகிய கடலை நீந்தி ஏறுவதாக அமைத்துக்கொண்ட இரத்தலாகிய அரணில்லாத தோணி இரக்கப் பட்டார் மாட்டுக் கரத்தலாகிய கல்லோடே தாக்கப் பிரிந்துவிடும், (எ-று)

இஃது, நல்குரவு தீராமைக்குக் காரணங் கூறிற்று. இவை இரண்டினானும் இரவினால் பயனின்மை கூறப்பட்டது. 5

1066\. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(இ-ள்) இரப்பமென்று நினைக்க உள்ளம் கரையும்; இரக்கப் பட்டவா கரக்கு மதனை நினைக்கக் கரைந்து நின்ற உள்ளம் மாய்ந்து கெடும், (எ-று).

இஃது, இரப்பார்க்கு ஊக்கமில்லையாம் என்றது. 6

12. இரவச்சம்

1067. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பார்க்குச்
சொல்லாடப் போஒ முயிர்.

(இ-ள்) எமக்கு யாதும் இல்லை; சிறிது ஈயவேண்டு மென்று சொல்லுவார்க்கு அக் குறித்தவர்கள் இல்லையென்று சொன்ன அளவிலே உயிர்போய்ப் பிணம்போல நிற்பர்கள்; (பொருள்) உடையராய் வைத்து அவர் சொன்ன இல்லையென்னுஞ் சொல்லையே சொல்லி ஈயாதார்க்கு உயிர்க்கு உயிர் எவ்விடத்து ஒளித்து நிற்கின்றதோ, (எ-று)

இது, பிணத்தை யொப்பரென்றது. 7

1068. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(இ-ள்) துப்புரவு இல்லாக்கால் இறந்து படாதே பிறர்மாட்டு இரந்து கொண்டும் உயிர் வாழ்தல் வேண்டுமாயின், உலக நடையை இவ்வாற்றால் கற்பித்த முதல்வன் மிகக்கெடுவானாக வேண்டும். (எ-று).

இஃது, இரக்கு மதனின், இறக்க அமையுமென்றது. இவை மூன்றினானும் இரவினால் வரும் குற்றம் கூறப்பட்டது, 8

1069. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

(இ-ள்) மோரினும் காடியினும் அடப்பெறாது தெளிந்த நீரினாலே அடப்பட்ட புற்கையாயினும், தனது தாளாண்மையால் வந்ததனை உண்டலின் மிக இனிதாயிருப்பது பிறிது இல்லை, (எ-று).

இரந்து கொண்டக்காரம் பாலோ டயிறலின் புற்கை அயிறல் இனிது என்றது. 9

1070. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடனில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

12. இரவச்சம்

(இ-ள்) தன்சுற்றத்தளவு உணவுக்கு வருவாய் இல்லாத காலத்தினும், பிறரை இரத்தற்கு இசையாத சால்பு என்பது அகன்ற வுலக மெல்லாம் கொள்ளாத பெருமை யுடைத்து, (எ-று).

இஃது, இரவாதார் பெரிய ரென்றது. இவை இரண்டினா னும் இரவாமையால் வரும் நன்மை கூறப்பட்டது. 10

---

13. கயமை

கயமையாவது இழிகுணத்தாராகிய மாந்தரியல்பு கூறுதல். இவர் மேற்கூறப்பட்டார் எல்லாரினும், இழிந்தாராதலின் இறுதியிற் கூறப்பட்டது.

1071. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

(இ-ள்) கயவர் மக்களை யொப்பவர்; அம்மக்களை யொக்கு மாறு போல ஒப்பது ஒன்றனோடு மற்றொன்று உவமை கூறப்படு மவற்றில் யாங்கண்டறிவது இல்லை, (எ-று).

உறுப்பொத்துக் குணமொவ்வாமையால், கயவர் மக்களல்லராயினார்; உறுப்பொத்தலால் உவமிக்கப்பட்டார். இது குணமிலர் என்றது. 1

1072. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

(இ-ள்) கயவர் தேவரை யொப்பவர், அத்தேவரும் இக்கய வரைப் போலத் தாம் வேண்டியன செய்தொழுகுவ ராதலான், (எ-று).

இது கயவர் வேண்டிற்றுச் செய்வாரென்றது. 2

13. கயமை

1073. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்[1]
நெஞ்சத் தவல மிலர்.

(இ-ள்) நன்மை யறிவாரினுங் கயவர் திருவுடையர்; இம்மை மறுமைக்கு உறுதியான செய்யப் பெறுகின்றிலோ மென்னும் கவற்சி நெஞ்சின்கண் உறுதலில ராதலான், (எ-று).

இது, அறமறியாரென்பது. 3

1074. அச்சமே கீழ்களது ஆசார மெச்ச
மவாவுண்டேல் உண்டாஞ் சிறிது.

(இ-ள்) கயவர் ஆசாரமுடைய ராதற்குக் காரணம் அச்சமே; அஃதொழிய, ஒருபொருள்மேல் ஆசையுடையராயின், அது காரணமாகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம், (எ-று).

இஃது, இயல்பான ஒழுக்கம் இலரென்றது. 4

1075. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(இ-ள்) மனையகத்திருந்து பறட்டையாம் பெண்டிரைக் காணின், அவரினும் மிகப் பறட்டையாயின் அதனைப் பெற்றேமென்று இறுமாப்பர்கயவர், (எ-று).

இது, நிறையிலரென்றது. 5

1076. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

(இ-ள்) பிறர் உடுப்பதனையும் உண்பதனையும் காண்பாராயின், அவர்மாட்டு உள்ள குற்றங்களை ஆராயவல்லராவர் கயவர் (எ-று).

இஃது, அழுக்காறுடையாரென்றது. 6

---

1. "திருவுடையார்" என்பது மணக். பாடம்.
2. "கூன்கைய" என்பது மணக். பாடம்.

13. கயமை

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூர்ங்கைய[1] ரல்லா தவர்க்கு.

(இ-ள்) தங்கதுப்பினை ஒடிக்கும் வலியகையினை உடைய ரல்லாதார்க்கு, ஈரக்கையுந் தெரியார் கயவர், (எ-று).

ஈரக்கை-உண்டு கழுவினகை, கூன்கை என்று பாடம் ஓதினும் அமையும். இஃது இரப்பார்க்குக் கொடாரென்றது. 7

1078. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைத்த லான்.

(இ-ள்) கயவர் அறையும் பறைபோல்வர்; தாங்கேட்ட மறைகளைப் பிறர்க்குக் கொண்டு சென்று அறிவித்தலான், (எ-று).

இஃது, அடக்கமில ரென்றது. 8

1079. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(இ-ள்) பிறர் தங்குறையைச் சொல்ல அதற்கு இரங்கிப் பயன்படுவர் மேன்மக்கள்; அவ்வாறன்றிக் கரும்பு பயன்படுமாறு போலத் தம்மை நெருக்கினால் பயன்படுவர் கீழ்மக்கள், (எ-று).

இஃது, ஒறுப்பார்க்குக் கொடுப்பரென்றது. 9

1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(இ-ள்) கயவர் யாதினுக்குவல்லரெனின், தமக்கு ஒரு துன்ப முற்றால் விரைந்து தம்மை விற்க வல்லர், (எ-று).

இது, நிலைமையில ரென்றது. 10

குடியியல் முற்றிற்று
பொருட்பால் முற்றிற்று.

---

1. "கூன்கைய" மணக். பாடம்.

3. காமத்துப்பால் (25)

காமத்துப்பாலாவது மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவயினானாகிய இன்பப் பகுதி கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினாரெனின், ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்குரிய இடம் கன்னியரும் கன்னிகையரும் பிறர்தாரமும் என மூவகையல்ல தில்லை; அவற்றுள் பிறர் மனைக் கூட்டம் பாவம்தரும் என்று அறத்துப்பாலுட் கூறிக்கணிகையர் கூட்டம் பொருட் கேடுதரும் என்று பொருட்பாலில் கூறினார். ஆகலின் அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம் என்று அதனை ஈண்டுக் கூறப்பட்டதென்க. அதுதான் எட்டு வகைப்படும்; பிரமம், பிராஜாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம் இராக்கதம் பைசாசம் என அவற்றுள் அசுரம் முதலான மூன்றும் ஒருதலைக்காமம் ஆதலானும் பிரமம் முதலான நான்கும் ஒப்பில் கூட்டம் ஆதலானும், அவையிற்றுக்கு இன்பச் சிறப்பு இன்மையின் காந்துருவ நெறியே ஈண்டுக் கூறப்பட்டதென்று கொள்ளப்படும் என்னை? ''முன்னைய மூன்றும்'' கைக்கிளைக் குறிப்பே; பின்னைய நான்கும் பெருந்திணைபெறுமே. என்றும் ''காமக் கூட்டம் காணுங்காலை மறையோர்தேஎத்து மன்ற லெட்டினுட் டுறையமை நல்யாழ்த்துணைமை யோரியல்பே. என்றும் இலக்கணம் கூறுதலின் அஃதாவது கொடுப் போரும் அடுப் போரும் இன்றி ஒத்தார் இருவர் தாமே கூடுங் கூட்டம் என்னை? ''அதுவே, தானே யவளே தமியர் காணக், காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்'' $ என்பவாதலின் இச்சூத்திரம் நாடக வழக்கிற்குக் கூறியதாகலின், ஈண்டு உரைக்கின்ற காமமும் நாடக வழக்கே, எனின்? இச்சூத்திரம் கூறுகின்றுழி உரையாசிரியர் உலகத்தோடு ஒத்தும் ஒவ்வாவரும் என்று பொதுப் படக் கூறினாராதலின், இஃது உலக வழக்கை நோக்கி எடுத்துக் காட்டப் பட்ட தென்க. இக்காமப் புணர்ச்சியை வடநூலாசிரியர் அராகத்தாற் கூடும் கூட்டம் என்ப.

---

* தொல்-களவியல்—14.

† " " "

$ இறையனார்—களவியல்-2

3. காமத்துப்பால்

இதுதான் மூவகைப்படும். அருமையிற் கூடலும், பிரிந்து கூடலும், ஊடிக் கூடலும் என. அருமையிற் கூடுதல் ஆவது, கூடுதற்கு எளிது அன்மையால் ஒருவர் ஒருவரைக் கண்ட காலம் தொட்டும் ஒத்த நினைவினராய் நின்று கூடுதல். பிரிந்து கூடுதல் ஆவது இவ்வாறு கூடினார் பின்பு ஒரு காரணத்தால் பிரிந்து அதன்பின் கூடுதல். ஊடிக் கூடல் ஆவது, தலைமகன் மாட்டுத்தவறு கண்டு புலந்த தலைமகளைப்புலவி நீக்கிக் கூடுதல். இவை மூன்று கூட்டமும் இவற்றது நிமித்தமும் இக்காமத்துப் பாலும் கூறுதல் தமிழ் நடையன்று; ஆதலின் இதற்கு இலக்கணம் யாங்ஙனம் பெறுது மெனின் இவ்விலக்கணம் தமிழ் நடையாயின் அகப் புறம் என்று கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறாது அறம் பொருள் இன்பம் என வட நூல்வழியே கூறினார். ஆதலின் இதற்கு இலக்கணம் வாற்சாயனியம் என்னும் காமதந்திரத்துச் சுரதவிகற்பம் என்னும் அதிகாரத்துக் கண்டு கொள்க. அன்றியும், ''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை, தேருங்காலை திணைக்குரிப் பொருளே'' * என்றாராதலின், அவற்றுள் இருத்தலும் இரங்கலும் பிரிந்துழி நிகழுமன்றே; அவற்றைப் பிரிவினுள் அடக்கிப் புணர்தலும் பிரிதலும் ஊடலும் எனத் தமிழ் நடையிற் கூறினும் இழுக்காது இதனுள் தகையணங் குறுதல் முதலாகப் புணர்ச்சி மகிழ்தல் ஈறாக அருமையிற் கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் மூன்றும், நலம் புனைந்துரைத்தல் முதலாகப் புணர்ச்சி விதும்பல் ஈறாகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் பதினெட்டும், நெஞ்சொடு புலத்தல் முதலாக ஊடலுவகை ஈறாக ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் நான்கும் ஆக இருபத்தைந்ததிகாரமும் கூறப்பட்டது. அவற்றுள் முன்பு கண்டறியா அருமையிற் கூடலைப்புணர்ச்சி மகிழ்தலென்றும், அதனையறிதலாற் பிரிந்து கூடலைப் புணர்ச்சி விதும்பல் என்றும், கலாந்தீர்ந்து கூடுதலால் ஊடிக்கூடலை ஊடலுவகை யென்றும் கூறினார் என்று கொள்ளப்படும்.

---

* தொல்-அகம்-16.

1. களவியல் (7)

(அருமையிற் கூடல் 3)

1. தகையணங்குறுத்தல்

தகையணங் குறுத்தலாவது தலைமகனும் தலைமகளும் எதிர்ப் பட்ட இடத்துந் தலைமகளது கவின் தலைமகனை வருத்துதலும், தலைமகனது கவின் தலைமகளை வருத்துதலுமாம். இது முதலாகக் காமம் நிகழு மாதலின் இது முற்பாடு கூறப்பட்டது.

1081. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கணங்குழை[1]
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.

(இ-ள்) இக்கணங்குழையையுடையவள் தெய்வங் கொல்லோ? நல்லதொருமயில் கொல்லோ? அன்றிமக்க ளுள்ளாள் என என்மனம் மயங்கா நின்றது; இவற்றுள்யாதோ என்றவாறு.

எனக்குத் தெரிகின்ற தில்லை என்றவாருயிற்று. கணங்குழை-ஆகுபெயர். ஆய்தல் என்பது தெளிதல்; பலவற்றினும் தெரியப் படுதலின் நல்ல தென்று பொருளாயிற்று, மக்களும் தேவரும் ஒரு நீர்மையராதலின் தெய்வமோ மகளோ என்றையுறுக; மயிலோ என்ற தென்னையெனின்? இம்மணம் காந்தருவ மன்றே; தலைமகளைத் தலைமகன் எதிர்ப்படுங்கால் யாவரும் இல்லாததோர் பொழிலகத்தே எதிர்ப்படுதல் வேண்டும்; ஆயிடை எதிர்ப்பட்ட தலைமகன் இப் பெற்றியாள் இவ்விடைத் தனிவருதல் கூடாதாகலின் ஈண்டுஉறைவ தோர் தெய்வமோ என்ற ஐயுற்றான். அதன்பின் பொழிலகத்து வாழ்வன மயில்கள் பலவுள; அவற்றுள் இஃதொருமயில் விசேட மோ என்றையுற்ருன் என்று கொள்ளப்படும். இதனுட் காட்சி சொல்லி ஐயஞ் சொல்லுதலன்றே இலக்கணம்; அது கூறாததென்னை எனின் கண்ட காலத்துப் புணர்ச்சி வேட்கை தோற்றுகையும் தோற் றாமையும் நிகழுமாதலான் அதனை ஒழித்து அதற்குக் காரண மாகிய ஐயம் முதலாகச் சொன்னான் என்க. இது தலைமகன் தலை மகளை எதிர்ப்பட்டுழி ஐயுற்றது. 1

---

1. " கணங்குழை " என்பது மணக். பாடம்.

1. தகையணங்குறுத்தல்

1082. நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

(இ-ள்) இவ்வழக்கினையுடையவள் எனது நோக்கின் எதிர் நோக்குதல், தானே வருத்தவல்ல தெய்வம் சேனையைக் கொண்டு வந்தது போலும், (எ-று).

தெய்வத்திற்கு உவமை வடிவு; தானைக்கு உவமை நோக்கம். இது, மெய்கண்டு வருந்துவான் கண் கண்டதனால் வருத்த மிக்கமை கூறியது, 2

1083. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

(இ-ள்) பண்டு கூற்றினது வடிவு இன்னபெற்றித்தென்று அறியேன்; இப்பொழுது அறிந்தேன்; பெண்டகைமை யோடே கூடப் பெருத்து அமர்த்த கண்களை யுடைத்து, (எ-று).

கூற்றென்றறிந்தேன் என்றது மேல் ஐயப்பட்ட மூன்றினும் எம்மை வருத்துதற்குத் தககாளென்னுங் குறிப்பு. பெண்தகைமை யாகிய நடையும் கண் இமைத்தலும் கண்டு மக்களுள்ளாள் என்று தேறியது. 3

1084. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

(இ-ள்) தன்னைக்கண்டவர்கள் உயிரையுண்ணும் தோற்றத் தாலே, பெண்தகைமையையுடைய பேதைக்கு ஒத்தனகண் (எ-று).

அமர்தல்-மேவல். அது பொருத்தத்தின் வந்தது. இது பேதையோடு ஒத்த தொழிலுடைத்தென்று கண்ணின் கொடுமையை யுட்கொண்டு கூறியது. 4

1085. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

1 தகையணங்குறுத்தல்

இக்கொடிய புருவம், இவள் கண்கள் என்னைத் துன்பம் செய்வதன் முன்னே கோடி மறைத்தன வாயின், அதனைக் கடந்து போந்து, எனக்கு நடுங்கப்படும் துன்பஞ் செய்யலாற்றாவே அவை (எ-று).

இது, மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டு நாணமுற்ற தலைமகள் தலையிறைஞ்சியவழிக் கண்ணை மறைத்துத் தோற்றிய புருவ முறிவுகண்டு தலைமகன் கூறியது. 5

1086. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணாரு முட்குமென் பீடு.

(இ-ள்) இவ்வொள்ளிய நுதற்கு மிகவுங் கெட்டது, போரின்கண் கிட்டாதாரும் உட்கும் எனது வலி, (எ-று).

உம்மை எச்சவும்மை. கிட்டினார் உட்குமுன்னே அமைந்து கிடைத்தது. மேற்கூறிய சொற்கேட்ட தலைமகள் மிகவுங் கவிழ்ந்து நிலநோக்கிய வழிப் புருவத்தின் மேற்றோன்றிய (தலைமகள்) நுதல் கண்டு கூறியது. 6

1087. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவா
னோக்கமிம் மூன்று முடைத்து.

(இ-ள்) கொடுமை செய்தலால், கூற்றமோ, அருள்செய்தலால் கண்ணோ? வெருவுதலான் மான் பிணையோ? மடவரலே! நினது நோக்கமான இவை மூன்று பகுதியையும் உடைத்து, அவற்றுள் யாதோ? (எ-று).

தலைமகள் குறிப்பறிதற் பொருட்டுத் தலைமகன் கூறியது. 7

1088. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து.

(இ-ள்) பிணையை யொத்த மடப்பத்தினையுடைய நோக்கினையும் நாணினையும் உடையவட்குப் பிறிது அணிதந்து அணிகையாதினைக் கருதியோ? பிறரை வருத்துதற்கு இவைதாமே அமையும், (எ-று).

1. தகையணங்குறுத்தல்

மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டு நாணுற்ற தலைமகள், வாளாது நிற்றல் ஆற்றாது தன் அணிகலனைத் தொட்டுழி, அதனை நோக்கி இத்தன்மையாட்கு இதனையும் அணிதல் வேண்டுமோ என்று கொடுமை கூறுவான் போல நலம் பாராட்டியது. 8

1089. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

(இ-ள்) மதயானை முகத்துக் கண்மறைவாக இட்ட படாம் போலும்; மாதரே! நினது படாத முலைமேல் இட்டதுகில், (எ-று).

நீங்கிற் கொல்லும் என்பது கருத்து. முலை கண்டு அவ் வேட்கையால் தலைமகன் கூறியது. இத்துணையும் தலைமகன் கூற்று. 9

1090. உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

(இ-ள்) உண்டார் மாட்டல்லது அடப்பட்டநறவு காமம் போலக் கண்டார் மாட்டு மகிழ்ச்சி செய்தலின்று, (எ-று).

இது, தலைமகனைத் தலைமகள் கண்டுழி வருத்த முற்றுக் கருதியது. 10

---

2. குறிப்பறிதல்

குறிப்பறிதலாவது தலைமகளுள்ளக் கருத்துத் தலைமகனறிதல். இது தலைமகற்கேயுரித்து. பெண்டிர் நாணமுடைரயன்றே; அவரது உள்ளக் கருத்து வெளிப்படுமாறு என்னையெனின், மேலையதிகாரத்துத் தலைமகனைக் கண்ட தலைமகள். காமம் போல் கண்டார் மகிழ்செய்தலின்று" என்று நினைத்தாளாகக் கூறினாரன்றே; அதனானே கண்ணும் முகனும் வேறுபடும்; அதனானே அறியலாகும். மனக் குறிப்பு அறிதல் கூறியது எற்றுக்கு? பிறவாற்றானும்

2. குறிப்பறிதல்

நெறியுளவால் எனின்? பிறவாற்றாற் கூடுங்கால். சூரவரால் கூடில் பெருந்திணையாம்; பொருள்கொடுத்துச்சாரின் அசுரமாம வலியிற்சாரின் இராக்கதமாம்; மறவியிற்சாரின் பசாசமாம்; ஆதலின் இக்கூட்டத்துக்குக் குறிப்பறிந்தே புணரவேண்டுதலின், இதுகூறப் பட்டது. மேலதனோடியையபும் இது. இது தலைமகற் குரித்தன்றோ வெனின் அவன் வெளிப்பட இரத்தலான் வேண்டா வென்க.

1091. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

(இ-ள்) இவள் உண் கண்ணிலுள்ள நோக்கம் இரண்டு வகைத்து; அவ்விரு வகையினும் ஒருநோக்கு நோய் செய்யும்; ஒரு நோக்கு அதற்கு மருந்தாம், (எ-று).

நோய்நோக்கென்பது முதல் நோக்கின நோக்கம்; மருந்து நோக்கென்பது இதனால் வருத்தமுற்ற தலைமகனைத் தலைமகள் உள்ளங் கலங்கி நாணோடுகூடி நோக்கின நோக்கம். இது நாண முடைய பெண்டிரது உள்ளக் கருத்து வெளிப்படுமாறு கூறியது. 1

1092 நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

(இ-ள்) முற்பட நோக்கினாள், நோக்கின பின்பு நாணினாள், அஃது அவள் நட்புப் பயிர்வளர அதன்கண் வார்த்தநீர் (எ-று)

நாண் போகாமைக்குக் காரணங் கூறியவாறாயிற்று பந்தம் என்பதனையாப்பு என்று கூறினார், பார்த்தவள் பெயராது நாணி நிற்றலும் உடன்படுதலாம் என்றது. 2

1093, யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.

(இ-ள்) யான் தன்னைப் பார்க்குங்கால், தான் நிலத்தைப் பார்க்கும்; யான் பாராத காலத்துத் தான் பார்த்தது தோன்றாமல் நகும், (எ-று).

2. குறிப்பறிதல்.

மெல்ல நகுதல் - முகிழமுகிழ்ந்தல். எதிர்நோக்காமல் உடன் படுதலா மென்றது 3

1094. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

(இ-ள்) என் கண்களைச் சோர்வு பார்த்துக் களவினால் நோக்குகின்ற சிறிய நோக்கம், வேண்டப்பட்ட பொருளிற்பாதியே யன்று; பெரிது, (எ-று).

சோர்வு பார்த்தலாவது, தலைமகன் தனது காதலினாலே எப்பொழுதும் நோக்குவனன்றே; தலைமகளுக்கும் அவ்வாறு நோக்க வேண்டுதலின் அவன் பாராக்காலத்தைக் குறித்து நிற்றல் களவினான் நோக்குதலாவது அக்காலத்து நோக்குதல்; தலைமகன் காணாமல் நோக்குதலின் களவாயிற்று. கொள்ளுதல் நோக்குதற் பொருள் மேல்வருதலின் நோக்காயிற்று. சிறு நோக்காவது பார்த்ததும் மீளுதல் நெடிது நோக்காமையின் சிறிதாயிற்று. வேண்டப்பட்ட பொருள் ஆவது புணர்ச்சி. செம்பாக மன்று பெரிது என்பது அதற்குப் பாதி இசைவுக்குமேலே பெற்றோம் என்பது. இது மறைய/நோக்குதல் உடம்பாடென்றது. 4

1095. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

(இ-ள்) அயலார்போலப் பொதுப்பட நோக்குதல், காதலித்தார் மாட்டே யுளவாம், (எ-று).

நோக்குதற் பன்மையால் உளவென்றார். இது, குறித்து நோக்காமையும் உடன்படுதலென்றது. 5

1096. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

(இ-ள்) குறித்து (க்கொண்டு) நோக்காமை யல்லாது ஒருகால் உடம்பட்டாள் போல நகாநின்றாள், (எ-று).

உடம்பட்டாள் போல் நகுதல் அஃதாவது, காமக் குறிப்புடையார் போல நகுதல். அது வெளிப்பட நில்லாமையின் ''போல'

என்றார். அஃதாவது நகை தோற்றிய வழிப் பிறிதொன்று கண்டாள் போல நகுதல். இது தன் குறிப்புத் தோன்றாமல் மறைத்து நகுதல் உடம்படுதலாமென்றது. 6

1097. அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும்.

(இ-ள்) அசைந்த இயல்பினையுடையாட்கு அவ்விடத்தோர் அழகுண்டு; யான்நோக்க, நெழ்ந்து மெல்ல நகாநின்றாள், (எ-று).

அவ்விடமென்றது தானே நெகிழ்ந்து நக்க இடம்; அழகுண்டென்றது, தன்வடிவினும் மிக்கது குணம் எனக்குறிப்பறிந்தான் ஆகலான் என்றவாறு.

பையநகுதல்-ஓசைப்படாமல் நகுதல். இது காமக் குறிப்புத் தோற்ற நின்று நகுதல் உடம்படுதலா மென்றது. 7

1098. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும்.

(இ-ள்) கூடாதவர் போல் சொல்லினும், செறுதலில்லாதார் சொல்லை இதற்குக் காரணம் பிறிதொன்று உளதென்று விரைந்தறிய வேண்டும், (எ-று).

மனம் நெகிழ்ச்சி கண்டு சாரலுற்ற தலைமகனைத் தனகில் வலியுறுத்தற்பொருட்டுக் கடுஞ்சொற் கூறித் தலைமகள் நீங்கின வழி. இஃது உள்ளன்பு இன்மையால் கூறினாள் அல்லள்; அதற்கு காரணம் யாது? என்று தலைமகன் தன்னுள்ளே சொல்லியது. இஃது, உறுப்பினாலிசைவுகாட்டி, உரையினால் மறுப்பினும் உடன்படுதலாமென்றது 8

1099. செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு
முறாஅர்போன் றுற்றார் குறிப்பு.

(இ-ள்) செறுதலிலாக் கடுஞ்சொல்லும், செற்றாரைப் போல நோக்குதலும், அன்புறாதார்போல அன்புற்றாரது குறிப்பென்று கொள்ளப்படும், (எ-று).

2. குறிப்பறிதல்

மேல் தலைமகள் கூறிய கடுஞ்சொல்லும் அதன்பின் கடுத்து நோக்கின நோக்கமும் குறித்து இவ்வாறு செய்யினும் அன்பின்மை தோற்ற நில்லாமையின், உடன்பாடென்று தேறியது. 9

1100. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில

(இ-ள்) கண்களோடு கண்கள் காமக்குறிப்பினால் நோக்கும் நோக்கம் ஒக்குமாயின், வாயினாற் கூறுஞ் சொற்கள் ஒரு பயனுமுடையவல்ல, (எ-று).

இது, சார்தலுறுகின்ற தலைமகன் தன்நெஞ்சிற்குச் சொல்லியது. 10

---

3. புணர்ச்சி மகிழ்தல்

புணர்ச்சி மகிழ்தலாவது தலைமகள் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் புணர்ச்சியினை மகிழ்ந்து கூறுதல், மேலதனோடியைபுமிது. இது தலைமகட்கு உரித்தன்றோவெனின், அவட்கும் ஒக்குமாயினும் அவள் மாட்டுக் குறிப்பினான் நிகழின் அல்லது கூற்றினான் நிகழாதென்க.

1101. பிணிக்கு மருந்து பிறமன் னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.

(இ-ள்) நோயுற்றால் அதற்கு மருந்தாவது பிறிதொன்று; இவ்வணியிழையால், வந்த நோய்க்குக் காரணமாகிய இவள் தானே மருந்தாயினள், (எ-று).

3. புணர்ச்சி மகிழ்தல்

இது, புணர்வதன் முன்னின்ற வேட்கை தணிந்தமை கூறிற்று. 1

1102. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

(இ-ள்) கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலனும், இவ்வொள்ளிய தொடியை யுடையாள் மாட்டே யுள, (எ-று).

இது, பொறிகள் ஐந்தினுக்கும் ஒருகாலத்தே யின்பம் பயந்த தென்று புணர்ச்சியை வியந்து கூறியது. 2

1103. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.

(இ-ள்) தம்மிடத்தேயிருந்து, தமது தாளாண்மையால் பெற்ற பொருளை இல்லாதார்க்குப் பகுத்து உண்டாற்போலும்; அழகிய மாமை நிறத்தினையுடைய அரிவை முயக்கம், (எ-று).

உணவினும் அதனின் மிக்க இன்பம் தருவதில்லை; புணர்ச்சியின் இதனின் மிக்க இன்பம் தருவதில்லை என்று அதன் இனிமை கூறியது. 3

1104. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு.

(இ-ள்) தாம் விரும்பப்படுவாரது மெல்லிய தோளின்கண் துயிலுந்துயிலினும் இனிதோ? இந்திரனது சுவர்க்கம், (எ-று).

சுவர்க்கத்தின்பமும் இதுதானே யென்று கூறியது. 4

1105. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்.

(இ-ள்) காதலித்தபொழுது காதலிக்கப்பட்ட அவ்வப் பொருள்களைப் போலும்; தோளின்கண் தாழ்ந்த கூந்தலினை யுடையவள் தோள், (எ-று).

3. புணர்ச்சி மகிழ்தல்

தோட்டாழ்கதுப்பு - புணர்ச்சிக்காலத்து அசைந்து தாழ்ந்த கூந்தல். இதனை ஒழியப் பிறிதொன்று தோற்றுகின்றதில்லை என்று கூறியதன்றி, யாம் காதலிக்கப்பட்ட பொருள்கள் அக்காலத்தே முயலாமற் பெற்றதனோடு ஒத்த உவகையை மிகுவிக்கும் என்றுமாம். 5

1106. அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

(இ-ள்) யாதானும் ஒன்றை அறியுந்தோறும் அறியாமை தோற்றினாற் போலும்; இச் சேயிழைமாட்டுப் புணரும் புணர்ச்சியும் புணருந்தோறும் அமையாமை, (எ-று).

காமப்புணர்ச்சியாயிற்று. இஃது அமையின்மை கூறியது. 6

1107. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்.

(இ-ள்) தன்னை நீங்கினவிடத்துச் சுடும், குறுகினவிடத்துக் குளிரும்; இத்தன்மையாகிய தீ எவ்விடத்துப் பெற்றாள் இவள், (எ-று).

இரண்டாம் கூட்டத்துக் கூடலுற்ற தலைமகன், கேட்பது பயனாகத் தனது வேட்கை தோன்றச்சொல்லியது.

இது, புணர்ச்சி வேட்கையாற் கூறுதலான், புணர்ச்சி மகிழ்தலாயிற்று 7

1108. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

(இ-ள்) சாருந்தோறும் என்னுயிர் தழைப்பச் சார்தலால். பேதைக்குத் தோள்கள் அமிழ்தினால் செய்யப்பட்டனவாக வேண்டும், (எ-று).

சாராதகாலத்து இறந்து படுவதான உயிரைத் தழைக்கப் பண்ணுதலான், அமிழ்தம் போன்றது. இது கூடின தலைமகன் மகிழ்ந்து கூறியது. 8

3. புணர்ச்சி மகிழ்தல்.

1109. வீழு நிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

(இ-ள்) காதலுடையா ரிருவர்க்கு இனிதாம்; காற்றால் இடையறாத முயக்கம், (எ-று).

என்றது இடையறுதல் இல்லாத முயக்கம் என்றவாறு. தோழியிற்கூடிய தலைமகன் பகற்குறியாயினும், இரவுக்குறியாயினும் ஒழுகாநின்றுழிக் காவல் கடுகுதல், நிலவு வெளிப்பாடு அல்லகுறி முதலாயினவற்றால் இடையீடு பட்டதலைமகற்குத் தன் வயின் உரிமையும் அவன்வயின் பரத்தமையும் தோற்ற ஊடற் குறிப்பினால் தலைமகள் கூறியது. புணர்ச்சி விருப்பினால் கூறினமையால், புணர்ச்சி மகிழ்தலாயிற்று. இது குறிப்பினால் புகழ்ந்தது. 9

1110. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

(இ-ள்) ஊடுதலும், ஊடல் தீர்தலும் பின்னைப் புணர்தலுமென்னு மிவை அன்பினாற் கூடினார் பெற்ற பயன், (எ-று).

காமம்-அன்பு. ஊடற் குறிப்புத் தோற்ற நின்ற தலைமகளை ஊடல் தீர்த்துப் புணர்ந்த தலைமகன் அதனால் வந்த மகிழ்ச்சி கூறியது. காமம் கூடினார் பெற்ற பயன் என்றான், முன்பு இவை கண்டு அறியாமையால். இவையெல்லாம் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லினவும் தலைமகளே கேட்பது பயனாகச் சொல்லினவும் என்று கொள்ளப்படும். இவற்றுள் " நீங்கிற்றெறூஉம் " என்பது முதலாகக் கூறியது என்னையோ வெனின், முதலாகக் கூறியது குறள் நான்கும் நலம்புனைந்துரைத்தலின் பின்னும் காதற்சிறப்புரைத்தலின் பின்னும் கூறற்பாலன ஈண்டுக் கூறியது களவு காலத்துக் கூடும் கூட்டம் எல்லாம் அருமையுடைத்து ஆதலானும், ஆண்டுத்தனி ஓர் அதிகாரம் கூறவேண்டுதலானும் ஈண்டுச் சேரக் கூறப்பட்டன. ஆயின் இக் கூட்டங்கட்கு நிமித்தம் ஆகிய நலம் புனைந்துரைத்தல் முதலாகிய அதிகாரங்களை அருமையிற் கூடலென்று கூறவேண்டும் பிறவெனின், ஒக்கும். அவை எல்லாம் புணர்ந்த பின்பு நிகழ்தலானும் பாங்கற் கூட்டமும் தோழியிற்

3. புணர்ச்சி மகிழ்தல்

கூட்டமும் இயற்கைப் புணர்ச்சியோடு ஒத்த இயல்பிற்றன்மையா னும், அவைதாம் பெரும்பான்மையும் பிரிந்து கூடுதலானும், கூறப்படா என்க. இதனுள் ஆலிங்கனம் முதலாயின கூறாது பசுக்களைப்போலப் புணர்ச்சி மாத்திரமே கூறிவிட்டது என்னை யெனின், ''கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும் ஒண் டொடி கண்ணேயுள என்றாரகலின், அவையெல்லாம் இதனானே சொன்னாரென்று கொள்ளப்படும். இது காமப்பகுதியன்றோ இதனை வடநூலாசிரியர் கூறியவாறு போல விரித்துக் கூறாததென்னை யெனின் அந்நூலகத்து விரித்துக் கூறியதெல்லாம் அளவும் காலமும் வேகமும் ஒவ்வாதாரை ஒப்பிக்கும் நெறியும் கைக்கிளை பெருந்திணை பாற்பட்ட கன்னியரைக் கூடுந்திறனும் கணிகையர் சீலமும் கூறி னார். ஈண்டு உழுவலன்பினாற் கூடுகின்ற நற்கூட்டம் ஆதலின் இவையெல்லாம் விதியினாலே ஒக்க அமைந்து கிடக்குமாதலாற் கூறாராயினார் என்க. 10

---

4. நலம்புனைந்துரைத்தல்

நலம்புனைந்துரைத்தலாவது தலைமகளது நலத்தினை அலங் கார வகையாற் கூறுதல் புனைதலெனினும் அலங்கரித்தல் எனினும் பேணுதலெனினும் ஒக்கும். புனைந்துரை எனினும், பாராட்டெனினும் கொண்டாட்டெனினும், புகழ்ச்சியெனினும் ஒக்கும். புணர்ச்சியால் மகிழ்வுற்ற தலைமகன் பிரியக் கருதினகாலத்துப் புணராத முன்னின்ற வேட்கை புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்றலின், இத் தன்மை யாளை யாங்ஙனம் பிரிந்தாற்றுகேம் என்னும் கவற்சியால் நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து தன்னை அவள் காணாமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்று பாராட்டுகின்றான் ஆதலின் பிற் கூறப்பட்டது. இவ்வாறு கூறுதலானே தலைமகற்குச் சிறிது வேட்கை தணியும். இதனைத் தலைமகன் கேட்டலினாலே இவன் அன்புடை

4. நலம்புனைந்துரைத்தல்

யன் கொல்லோ என்றும் இப்புணர்ச்சியின்னும் கூடுமோ என்றும் சொல்கின்ற கவிற்சி நீங்கும் 'மதியும் மடந்தை முகனும் அறியா'- இது தலைமகன்கண உள்ளதோர் மெய்ப்பாடு. இது பிரிதற் குறிப்பு ஆகலின் பிரிந்து கூடலின் முன் கூறப்பட்டது. இது தலை மகட்கு உரித்தன்றோவெனின் உரித்தாயினும் குறிப்பினான் அல்லது கூற்றினான் நிகழாமையின் கூறாராயினார்.

1111. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

(இ-ள்) மதியினையும் மடந்தை முகத்தினையும் கண்டு, இவ்விரண்டினையும் யாது மதியென்று அறியாது, தம்நிலையினின்றுங் கலங்கித்திரியா நின்றன மீன்கள், (எ-று).

மீன் இயக்கத்தை கலங்குதலாகக் கூறினார். அன்றியும் பதியிற் கலங்கிய மீன் அறியா என்று பாடமோதித்தம் நிலைமையினின்றும் கலங்கிய மீனகள் மதியினையும் மடந்தை முகத்தினையும் அறியாவாயின எனினுமமையும். மீன்கள் கலங்கித் திரிதலானே இவள்முகம் மதியோடு ஒக்குமென்று கூறியது. 1

1112. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

(இ-ள்) குறைவிடம் நிறைந்த ஒளிர்மதிக்கு போல, இம்மாதர் முகத்து மறுவுண்டோ? (எ-று).

இது, மேல் கலக்கமுற்றுத் திரிகின்ற மீன் கலங்குதற்குக் (காரணம் அறிவின்மையாம்;) இவள் முகத்து மறுவில்லையாதலான் அது மதி ஒவ்வாதென்று கூறியது. 2

1113. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி.

(இ-ள்) நீ இம்மாதர் முகம்போல ஒளிவிடவல்லையாயின் நீயும் எம்மாற் காதலிக்கப்படுதி, மதியே! (எ-று).

4. நலம்புனைந்துரைத்தல்

வாழி - அசை. இது, மறுப்போயிற்றாயின் ஒக்குமென்று கூறப்பட்டது. 3

1114. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.

(இ-ள்) நீ மலர்போலுங் கண்ணினை யுடையாளது முகத்தை ஒப்பையாயின், பலர் காணுமாறு தோன்றாதொழிக, மதியே! (எ-று)

(இது, மதி) ஒளியும் வடிவும் ஒருவாற்றால் ஒத்ததாயினும், குணத்தினாலே ஒவ்வாதென்றது. 4

1115. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

(இ-ள்) இவள்கண் மலராயினும் பலராலும் காணப்படும் பூவையொக்கு மென்று மலரைக் கண்டபொழுதே மயங்கா நின்றாய் நெஞ்சே ! (எ-று).

இது, கண் பூவினது நிறமொக்குமாயினும், குணமொவ்வா தென்று கூறியது. இவையிரண்டினாலும் கிட்டுதற்கு அருமை கூறினானாம். 5

1116. காணிற் குவளை கவிழ்ந்து நிலநோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று.

(இ-ள்) குவளைமலர் காணவற்றாயின், கவிழ்ந்து நிலத்தை நோக்கும் மாட்சிமைப்பட்ட இழையினையுடையாளது கண்ணை ஒவ்வோமென்று நாணி (எ-று).

இது, வடிவு தானும் ஒவ்வாதென்றது. 6

1117. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

(இ-ள்) அனிச்சப்பூவே! நீ நல்ல நீர்மையாய், இருந்தாய்; நின்னினும் மெல் நீர்மையுடையள் காண் யாம் விரும்பப்பட்டவள், (எ-று).

இஃது, உடம்பினது மென்மை கூறிற்று. 7

4. நலம்புனைந்துரைத்தல்

1118. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

(இ-ள்) அனிச்சப் பூவைக் காம்புகழற்றாது மயிரில் அணிந்தாள்; ஆகலின் அவள் நுசுப்பிற்கு நல்லவாக ஒலிக்கமாட்டாபறை (எ-று).

எனவே இனி நெய்தல் பறையே ஒலிப்பது என்றவாறாயிற்று. இஃது, இடையினது நுண்மை கூறிற்று. 8

1119. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

(இ-ள்) தளிர்போலும் மேனி; முத்தம்போலும் முறுவல்; நறுநாற்றம் போலும் நாற்றம்; வேல் போலும் உண் கண்; வேயை யொத்த தோளினை யுடையாட்கு, (எ-று).

இது, நிறமும் எயிறும் நாற்றமும் கண்ணின் வடிவும் தோளும் புகழ்ந்து கூறிற்று. 9

1120 அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

(இ-ள்) அனிச்சப் பூவும், அன்னத்தின் தூவியும், மாதரடிக்கு நெருஞ்சிப் பழத்தோடு ஒக்கும், (எ-று).

இஃது, அவையிற்றினும் மெல்லியது அடியென்று கூறிற்று.

இதனுள் இரவு பகலும் காணப்பட்ட பொருள்களை உவமமாகக் கூறியவதனால் இயற்கைப்புணர்ச்சியும் நலம் பாராட்டுதலும் பகற்குறியினும் இரவுக் குறியினும் என்று கொள்ளப்படும். 10

5. காதற்சிறப்புரைத்தல்

காதற்சிறப்புரைத்தலாவது தலைமகன் காதல் மிகுதி கூறுதலும் தலைமகள் காதல் மிகுதி கூறுதலுமாம். இது நலம்புனைந்துரைத்தலின் பின் நிகழ்வதொன்றாகலின், அதன்பின் கூறப்பட்டது.

1121. உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

(இ-ள்) உடம்பினோடு உயிரிடையுள்ள நட்பு எத்தன்மைத்து அத்தன்மைத்து; மடப்பத்தை யுடையாளோடு எம்மிடையுள்ள நட்பு, (எ-று).

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரியலுற்ற குறிப்புக்கண்டு வேறுபட்ட தலைமகளை நோக்கி 'நின்னிற் பிரியேன் பிரியினாற்றேன்' என்று தலைமகன் தனது காதல் மிகுதி கூறியது. 1

1122. கருமணியுட் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

(இ-ள்) என் கண்ணுட் கருமணியகத்து நிற்கும் பாவாய்! நீ அங்கு நின்று போதுவாயாக, எம்மால் விரும்பப்பட்ட அழகிய நுதலினையுடையாட்கு இருத்தற் கிடம் போதாது. (எ-று).

இஃது, இரண்டாம் கூட்டத்து எதிர்ப்பட்ட தலைமகன், தலைமகளது நாணம் நீங்குதற் பொருட்டு அவளது கவின் தன்கண் நிறைந்ததென்று தலைமகள் கேட்பச் சொல்லியது. 2

1123. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து

(இ-ள்) இவ்வாயிழை உயிர்க்கு வாழ்தலோடு ஒப்பள் கூடுமிடத்து; சாதலோடு ஒப்பள் நீங்குமிடத்து, (எ-று).

5. காதற்சிறப்புரைத்தல்

இஃது, இரண்டாங் கூட்டத்துப் புணர்ந்து நீங்கா நின்ற தலைமகள் கேட்பத் (தலைமகன்) தன்னெஞ்சிற்குச் சொல்லியது. 3

1124. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

(இ-ள்) பாலொடுகூடத் தேனைக்கலந்தாற் போல; மிகவும் இனிமை தரும் தாழ்ந்த மொழியினையுடையாளது வெள்ளிய எயிற்றினின்றும் ஊறிய நீர், (எ-று).

இஃது இரந்து பின்னின்ற தலைமகனை நோக்கி 'நீர்பெரியீர் ஆதலானே எமது புணர்ச்சி நுமக்கு இன்பம் தரவற்றோ?' என்ற தோழிக்குத் தனது புணர்ச்சியுண்மையும் காதல் மிகுதியும் தோற்றத் தலைமகன் கூறியது. 4

1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம்

(இ-ள்) நினைப்பேன் யான் மறந்தேனாயின்; மறத்தலறியேன் ஒள்ளமர்க் கண்ணாள் குணத்தினை, (எ-று).

தோழியிற்கூடி, நீங்குந் தலைமகனை நோக்கி 'எங்களை' நினைக்கிலீரோ? என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது. இது நாணுத்துறவுரைத்தலிற் கூறற்பாலது, காதல் மிகுதி நோக்கிக் கூறுகின்றார் ஆதலின் ஈண்டும் கூறப்பட்டது. இவை ஐந்தும் தலைமகன் கூற்று. இனிக் கூறும் ஐந்துந் தலைமகள் கூற்று. காதல் மிக்கார்க்குத் தான் காதலிக்கப் பட்டாரை ஒழிவின்றி நினைதலும் அவர் தம்மாட்டு இல்லாத காலத்தினும் கண் முன்னாய்க் காண்டலும் உண்ணாமையும் உறங்காமையும் கோலம் செய்யாமையும் உளவாமன்றே; அவை ஐந்தும் ஈண்டுக் கூறப்படுகின்றது. 5

1126. உகந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.

(இ-ள், என் நெஞ்சத்தே (என்றும்) மகிழ்ந்து உறையாநிற்பார்; அவரை ஏதிலராய் நீங்கி யுறைவர் என்றே சொல்லாநின்றது இவ்வூர், (எ-று).

5. காதற்சிறப்புரைத்தல்

தலைமகன் வேறுபாடுகண்டு தலைமகனை அன்பிலனென்று இயற்பழித்த தோழிக்குத் (தலைமகள்) எனது நெஞ்சில் நின்று நீங்காரென்று ஊர் மேல் வைத்துக் கூறியது.

வேறுபாடு கண்டு கூறுதல் பின்வருவனவற்றிற்கும் ஒக்கும். 6

1127. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

(இ-ள்) எனது கண்ணுள் நின்று நீங்கார்; இமைப்பேனாயின், இவட்கு உறுத்துமென்று பருவருத்திருப்பதுஞ் செய்யார்; ஆதலான், நுண்ணியவறிவை யுடையார் எம்மாற் காதலிக்கப் பட்டார், (எ-று).

இஃது அறிவிலர் என்று இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் கூறியது. இஃது எதிர்பெய்து பரிதல் என்னும் மெய்ப்பாடு. 7

1128. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

(இ-ள்) என்னாற் காதலிக்கப்பட்டவர் என்நெஞ்சத்தேயிருத்தலானே, வெய்தாகவுண்டலை, அஞ்சாநின்றேன் அவர்க்குச் சுடுமென்பதனையறிந்து, (எ-று).

இது, 'நீ உண்ணாததென்னை' யென்று வினாவிய தோழிக்குத் (தலைமகள்) 'உணவில் காதலில்லை யென்று கூறியது. இது, பசியட நிற்றல் என்னும் மெய்ப்பாடு. 8

1129. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

(இ-ள்) கண்ணிமைக்குமாயின், அவரொளிக்குமது யானறிவேன் அவ்வளவொளித்தற்குமாக அவரை நமக்கு ஏதிலரென்று சொல்லுவரூரார்; அதற்காக இமைக்கின்றிலேன், (எ-று).

இது, கண் துயிலமறுத்தல் என்னும் மெய்ப்பாடு. 9

5. காதற் சிறப்புரைத்தல்

1130. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

(இ-ள்) எங்காதலவர் கண்ணுளர்; ஆதலானே, கண்ணும் (மை)யெழுதேன்; அவர் ஒளிப்பதனையறிந்து. (எ-று).

உம்மை சிறப்பும்மை, 'கோலம் செய்யாதது என்னை?' என்ற தோழிக்கு, அவர் 'ஒளிப்பதனை அறிந்து கண்ணும் எழுதேன்; என்னை உறுப்புக்கோலம் செய்யுமாறு? என்று கூறியது. எப்பொழுதும் நோக்கியிருத்தலால், கோலஞ்செய்தற்குக் காலம் பெற்றிலே னென்றவா றாயிற்று. இஃது இன்பத்தை வெறுத்தல் என்னும் மெய்ப்பாடு, இவையைந்தும் காதல்மிகுதியாற் கூறியவாறு கண்டு கொள்க. 10

6. நாணுத் துறவுரைத்தல்

நாணுத்துறவுரைத்தலாவது தலைமகனது நாண நீங்கினமை தோழிக்குக் கூறுதலும் தலைமகளது நாணம் நீங்கினமை தோழி தலைமகற்குக் கூறுதலுமாம். காதல் மிக்கார்க்கு நாணமில்லையாம் என்பதனான் பின் கூறப்பட்டது.

1131. காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி

(இ-ள்) காமம் காரணமாக முயன்று வருந்தினார்க்கு ஏமமாவது மடல் எடுக்குமதல்லது மற்ற வலி யில்லை, (எ-று).

இது, இறந்து பின்நின்ற தலைமகனைத் தோழி சேட்படுத்த விடத்து மடலேறு வேனென்று தலைமகன் கூறியது. 1

1132. நோனா வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

6. நாணுத் துறவுரைத்தல்

(இ-ள்) பொறுத்த லில்லாத உடம்பும் உயிரும் மடலேறும்; நாணினை நீக்கி நின்று, (எ-று).

இஃது 'நீர் கூறிய மடலேறு நாணமுடையார்க்குக் கூடுமோ' என்ற தோழிக்கு 'நாணினை நீக்கி உடம்போடு உயிரும் மடலேறும்' என்று தலைமகன் கூறியது. 2

1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்.

(இ-ள்) நாணமிக்க நிலைமையும் சிறந்த ஆண்மையும் யான் பண்டுடையேன்; காமமிக்கார் ஏறும் மடலினை இன்று உடையேனா னேன், (எ-று.)

மேற் கூறிய சொற்கேட்டு, நீர் உலகத்துப் பன்மக்களோடு ஒப்பார் ஒருவர் அன்றே; நாணமும், ஆண்மையும் இயல்பாக உடையீர்; ஆதலான் நுமக்கு இது கூடாது' 'என்ற தோழிக்கு, இவை யிரண்டும் இப்பொழுது இல்லேன்' என்று தலைமகன் கூறியது. 3

1134 காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.

(இ-ள்) நாணமும் ஆண்மையும் ஆகிய புணைதனைக் காம மாகிய பெரும் புனல் ஈர்த்தது. (எ-று).

'நினக்கு ஆண்மையும் நாணமும் இப்பொழுது யாண்டுப் போயின' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது. 4

1135. அறிவிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

(இ-ள்) என்னை யொழிந்த எல்லாரும் அறிவில்ரென்றே சொல்லி, என் காமமானது தலைமயங்கி மறுகின்கண்ணே வெளிப் பட்டுச் சுழலாநின்றது. (எ-று).

சுழல்தல்-இவ்வாறு சொல்லிச்சாற்றித் திரிதல். 'நீர் அறி வுடையீர் ஆகலான் மடலேறுதல் கூடாது; இஃது அறிவுடையார் செயலின்மையான்' என்ற தோழிக்கு, 'என்னைப் போல மடலேறக்

6. நாணுத் துறவுரைத்தல்

கருதாதாரே அறிவிலாதார், யான் அறிவுடையேன்' என்று தலைமகன் கூறியது. 5

1136. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

(இ-ள்) பேதை பொருட்டு என் கண்கள் உறங்குதலை இசையா; ஆதலானே, மடலூர்தலை ஒருதலையாக யாமத்தினும் நினைப்பேன், (எ-று.)

இது. 'மடலேறுவது நாளையன்றே; இராவுறக்கத்திலே மறந்துவிடுகின்றீர்" என்ற தோழிக்கு, 'என்கண் உறங்கா; ஆதலான் மறவேன்' என்று தலைமகன் கூறியது. 6

1137. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

(இ-ள்) யாம் கண்ணால் காணும்வகை எதிரே நின்று அறிவில்லாதார் நகாநின்றார், யான்பட்ட துன்பம் படாமையான், (எ-று).

'யாமத்து மறவேன்' என்ற தலைமகனை நோக்கி நகைசெய்த தோழிக்கு, 'எமக்கு உண்டாகிய நோய் தமக்கும் உண்டாயினாரல்லரே" என்று தலைமகன் வெகுண்டு சொல்லியது. 7

1138. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

(இ-ள்) மாலை போலச் செய்யப்பட்ட சிறுவளையினையுடையாள் தான்காண மடலோடேகூட மாலைக்காலத்து வருந்துந்துயரினைத் தந்தாள் (எ-று).

தொடலையென்பதற்குச் சேர்ந்தவளை யெனினும் அமையும், குறுந்தொடி-பிள்ளைப்பணி. இதனானே இளையள் என்பது சொன்னானாம். தலைமகன் ஆற்றாமை கண்டு; 'நின்னால் காதலிக்கப்பட்டாள் இவ்வாயத்துள்யாவள்?' என்ற தோழிக்கு,

6. நாணுந் துறவுரைத்தல்

'இத்தன்மையாள்' என்று தலைமகன் கூறியது. வளையுடையார் பலரும் கூட நிற்றலின், மாலை போலச் செய்த வளையினையுடையாள்' என்று விசேடித்துக் கூறப்பட்டது. இவை எட்டும் தலைமகன் கூற்று. 8

1139. கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்

(இ-ள்) கடலையொத்த காமநோயாலே வருந்தியும், மடலே நினையாத பெண் பிறப்புப் போல மேம்பட்டது இல்லை, (எ-று).

இது, 'நும்மாற் காதலிக்கப்பட்டாள்' தனக்கும் இவ்வருத்த மொக்கும்; பெண்டிர்க்கு இயல்பின்மையான் மடலேறாததே குறை' யென்று தலைமகன் ஆற்றாமை நீங்குதற் பொருட்டுத்தோழி கூறியது. 9

1140. நிறையரியர் மன்னளியா ரென்னாதென் காம
மறையிறந்து மன்று படும்.

(இ-ள்) நிறையிலர்; நனி அளிக்கத்தக்கா ரென்னாது காமம் மறைத்தலைக் கடந்து மன்றின்கண் படா நின்றது, (எ-று).

அம்பலும் அலரும் ஆகா நின்றதென்று தோழி பகற்குறி மறுத்தது. 10

---

7. அலரறிவுறுத்தல்

அலரறிவுறுத்தலாவது இவ்வாறு ஒழுகும் ஒழுக்கத்தினான் வந்த அலரைத் தலைமகன் தோழிக்கு அறிவித்தலும் தோழி தலைமகட்கும் தலைமகற்கும் அறிவித்தலுமாம். நாணுத் துறவுரைத்து இரவுக்குறி யொழுகாநின்ற தலைமகனுக்குத் தோழி அம்பலும் அலரும் ஆகா நின்றனவென் றறிவித்தலான், அதன்பின் கூறப்பட்டது.

1141. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

(இ-ள்) யான் கண்ணுற்றது, ஒரு ஞான்று; அக்காட்சி திங்களைப் பாம்பு கொண்டாற் போல, எல்லாரானும் அறியப்பட்டு அலராகா நின்றது, (எ-று).

காப்புக்கைம்மிகப்பட்ட தலைமகள் வேறுபாடு கண்டு, செவிலி முதலாயினார் உற்று நோக்கிய குறிப்பைத் தலைமகள் கொண்டு, 'ஒரு நாளைக் காட்சியே அலர் ஆகாநின்றது' என்று தோழிக்குக் கூறியது. 1

1142. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

(இ-ள்) ஊரார் எடுத்து அலர் எருவாக, அன்னை சொல்லும் சொல்லைத் தண்ணீராக, இந்நோய் வளராநின்றது, (எ-று).

இஃது, அலரின் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. இவை யிரண்டிற்கும் வரைவு கடாவுதல் பயன். 2

1143. அலர்நாண லொல்வதோ வஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை.

(இ-ள்) அலராகுமென்று நாணுதல் இயலுவதோ? அஞ்சு தலைத் தவிரென்று சொன்னவர் பலரும் நாணுமாறு நம்மை நீங்கின விடத்து (எ-று).

பலரென்றது தோழியும் செவிலியும் முதலாயினாரை: தலைமகனைக் காணும் பொழுதில் காணாப் பொழுது பெரிதாதலால், தான் ஆற்றாளாகிய தலைமகளை நோக்கி, 'நினது ஆற்றாமை அலராகின்றது' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 3

1144. தாம்வேண்டி நல்குவர் காதலர் யாம்வேண்டும்[1]
கௌவை யெடுத்ததிவ் வூர்.

---

1. 'வேண்டிற்' என்பது மணக் பாடம்.

7. அலரறிவுறுத்தல்

(இ-ள்) யாம் விரும்பும் அலரை இவ்வூரார் எடுத்தார்; ஆகலான், இனித் தாங்களே விரும்பிக் கொடுப்பார் நமது காதலர்க்கு (எ-று).

வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்துழி ஆற்றாளாய தலைமகட்கு, 'இப்புணர்ச்சியை அயலார் தூற்றா நின்றார்; ஆதலால் ஊரவர் தாமே விரும்பிக் கொடுப்பர்' என்று தோழி தலைமகளை ஆற்றுவித்தது. யாம் வேண்டும் கவ்வை: இவனுக்கு நாம் பெண்டிர் ஆனது புறத்தார் அறியவேணும் என்று நினைத்திருந்தவாறாம். 4

1145. மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

(இ-ள்) பூவொத்த கண்ணாளது இற்பிறப்பின் அருமையை யறியாதே, இவ்வூரவர் எங்கட்கு அலரைத் தந்தார், (எ-று).

எளியாரைச் சொல்லுமாறு போலச் சொல்லா நின்றாரென்றவாறு ஆயிற்று. தமது புணர்ச்சி அலராயிற்று என்று தோழி கூறியது. 5

1146. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

(இ-ள்) மயங்குந்தோறும் கள்ளுண்டலை விரும்பினாற் போலக் காமமும் அலராகுந்தோறும் இனிதாகும், (எ-று).

இஃது, அலரறிவுறுத்த தோழியை நோக்கி, 'நுமக்குத் துன்பமாயிற்றே இவ்வல'ரென்று வினாவிய தலைமகற்குத் தோழி கூறியது. வெளிப்படுந்தோறும் இனிது என்றது விரைந்து வெளிப்படுதல் குறிப்பு. 6

1147. உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

(இ-ள்) ஊரறிந்த அலர் வருவதொன்றன்றே? அலரைத் தீதாகக் கொள்ளாது, பெறாததொன்றைப் பெற்றாலொத்த நீர்மைதாகக் கொள்ளப்படும், (எ-று).

7. அலரறிவுறுத்தல்

அலரறிவுறுத்த தோழிக்கு அவ்வலரினான் என்றும் தமர்வரை வுடன்படுவரென்று தலைமகன்* கூறியது. இதுவும் ஒரு கூற்று. மேலதனோடியைபின்று.

1148. கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவவென்னுந் தன்மை யிழந்து.

(இ-ள்) அலரினானே அலர்தலை யுடைத்துக் காமம்; அவ்வலரில்லையாயின், தனது தன்மை யிழந்து பொலிவழியும், (எ-று).

செவ்வை யுடையதனைச் செவ்விது என்றார்போலக் கவ்வை யுடையதனைக் கவ்விது என்றார். அலரறிவுறுத்த தோழிக்கு இவள் கூறுகின்றது புனைந்துரையாகும் என்று நினைத்துப் பின்னும் களவொழுக்கம் வேண்டித் தலைமகன் கூறியது. இதுவும் ஒரு கூற்று. மேலதனோடியைபின்று. 8

1149. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்.

(இ-ள்) எரிகின்ற நெருப்பை நெய்யினாலே அவிப்போமென்று நினைத்தாற்போலும்; அலரினானே காமத்தை அவிப்போமென்று நினைத்தல், (எ-று).

இது, தலைமகன் பின்னுங் களவொழுக்கம் வேண்டினமை கண்டு தோழி கூறியது. 9

1150. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

(இ-ள்) தமது புணர்ச்சியான் வந்த அலர் எழுதலினானே அவளது ஆருயிர் நிற்கும்; அவ்வாறு உயிர்நிற்றலை எங்கள் புண்ணியத்தினானே பலரறியா ராயினார்; அறிவராயின், எனக்கு ஏதிலராய் அலர் தூற்றுவார், இவள் இறந்துபட வேண்டுமென்று தூற்றார், (எ-று).

---

* தலைமகள் என்றும் பாடம்,

7. அலரறிவுறுத்தல்

'நொதுமலர் வரையவந்துழி இறந்து படுவாளாயினாள். ஆயிடை இவ்வலர் எழுதலினானே இனிப்பிறர்க்குக் கொடார் என்று அவள் உயிர் நீங்காதாயிற்று' எனநொதுமலர் வரைய வந்தமை தோழிதலைமகற்குக் கூறியது.

இத்துணையும் களவு.

---

2. கற்பியல் (18)

1. பிரிவாற்றாமை

பிரிவாற்றாமையாவது அலரறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்து கொண்டதன் பின்பாயினும் வரைவதன் முன்பாயினும் பிரியுங்காலத்து ஆற்றாமை. மேலதனோடியையுமிது. இஃது, ஈண்டு விசேடித்துக் கூறியது என்னை? காதற் சிறப்புரைத்தலின் தலைமகள் கூறினவும். நாணுத்துறவுரைத்தலின் தலைமகன் கூறினவும், பிரிவாற்றாமையன்றேயெனின், இவையெல்லாம் களவு காலத்து ஓரிடத்து உறைவதோர் புணர்ச்சியிற் பிரிவால் வருந்தும் கூற்றெனின், அஃது அற்றன்று. 'ஓதல் காவல் பகை தணி வினையே, வேந்தற் குற்றுழி பொருட்பிணி' * என்னும் ஐந்தினும் ஒன்று காரணமாக நாடிடை விட்டும் காடிடை விட்டும் தலைமகன் பிரியுங்காலத்து ஆற்றாமையென்று கொள்க. இது முதலாகக் கற்பென்று கொள்ளப்படும்.

1151. இன்கணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கணுடைத்தாற் புணர்வு.

(இ-ள்) நங்காதலரை வரவு பார்த்திருக்குமது, இன்பத்தை யுடைத்து; அவரைப் புணர்ந்திருக்கும் இருப்பு, பிரிவாரோவென்று அஞ்சப்படுந் துன்பத்தை யுடைத்து, (எ-று).

---

* இறையனார் களவியல்-35

1. பிரிவாற்றாமை

வரவு பார்த்தல்-களவு காலத்து வரவு பார்த்தல். தலைமகன் பிரியலுற்ற குறிப்புக்கண்டு வேறுபட்ட தலைமகளை, 'இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று' என்று வினாவிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 1

1152. துறைவன் றுறந்தமை தோற்றாதோ[1] முன்கை
இறையிறவா நின்ற வளை.

(இ-ள்) துறைவன் பிரிகின்றமையை எமக்கு அறிவியாவோ? என் முன்கையின் இறையைக் கடவாநின்ற வளை, (எ-று).

முன்பே அறிதலான், உடம்பு மெலிந்தது என்றவாறாயிற்று. பிரியார் என அறிவுறுக்கும் தோழிக்கு, 'நீ சொல்ல வேண்டா; யானறிந்தேன்' என்று தலைமகள் கூறியது 2

1153. இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு.

(இ-ள்) தமக்கு இனமில்லாதவூரின் கண் இருந்து வாழ்தல் இன்னாது; அதனினும் இன்னாது இனியாரைப் பிரிதல், (எ-று).

பிரிவுணர்த்திய தலைமகற்கு, 'இவ்விரண்டு துன்பமும் எங்கட்குளவாம்' என்று பிரிவுடன்படாது தோழி கூறியது 3

1154. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

(இ-ள்) நம்மைத் தலையளி செய்து 'நின்னிற் பிரியேன், நீ அஞ்சேல்' என்றவர் தாமே நீங்கிப் போவாராயின், அவர் தெளிவித்த சொல்லைத் தெளிந்தவர்களுக்கு வருவதொரு குற்றம் உண்டோ? (எ-று).

தன்மையைப் படர்க்கை போலக் கூறினார். பிரிவுணர்த்திய தோழிக்குப் பிரிவுடன்படாது தலைமகள் வெகுட்சிக் குறிப்பான் கூறியது.

---

1. 'தோன்றாதோ' என்பது மணக். பாடம்.

I. பிரிவாற்றாமை

1155. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

(இ-ள்) காக்கலாமாயின் அமைந்தாருடைய பிரிவைக்காக்க; அவர் பிரிவராயின், பின்பு கூடுதல் அரிது. (எ-று)

மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டு யாது சொல்வேனென்ற தோழிக்கு 'அவர் பிரியாமல் கூறு' என்று தலைமகள் கூறியது. 5

1156. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

(இ-ள்) காதலர் போகாமையுண்டாயின், எனக்குக்கூறு. பிரிந்தார் நீட்டியாது விரைந்து வருவாரென்று சொல்லுகின்ற வரவினைப் பின்புளராய் வாழ்வார்க்கு கூறு. (எ-று).

பிரிவுணர்த்தப்பட்ட தலைமகனது வரவு நீட்டிக்கக் கூடுமென்று ஆற்றாளாயது கண்டு. 'கடிதுவருவர்' என்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை கூறியது. 6

1157. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

(இ-ள்) பொறுத்தற்கரியதனைப் பொறுத்து, அல்லல் செய்யும் நோயை நீக்கிப் பிரிவையும் பொறுத்துக், காதலரை நீங்கிய பின் தமியராயிருந்து வாழ்வார் உலகத்துப் பலர், (எ-று).

அரியது அரிதாயிற்று. அதனைப் பொறுத்தலாவது, பொழுதும் சூழலும் முதலாயின வற்றான் வரும் துன்பத்தைப் பொறுத்தல். அல்லல் நோய்-காமவேதனை. பிரிவாற்றுதல்-புணர்ச்சியின்மையைப் பொறுத்தல். இவ்வாறு உலகியற்கை யாதலால் நீ ஆற்றாயாகின்றது தக்கதன்று என்று தோழி தலைமகளை நெருங்கிக் கூறியது. 7

1158. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை.

1. பிரிவாற்றாமை

(இ-ள்) பிரிவினை யுரைக்கும் வன்கண்மையை யுடைய ராயின், அவர் மறுத்துவந்து நல்குரவரென்னும் ஆசையில்லை, (எ-று).

'பிரிதலும் ஆற்றுதலும் உலகியல்' என்று நெருங்கிக் கூறிய தோழிக்கு தலைமகள் கூறியது. 8

1159. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

(இ-ள்) உலகத்து ஒருவரைத் தேறும் தேற்றம் அரிதே, அறிவுடையார் மாட்டும் ஒரு காலத்தே பிரிவு உண்டாம் ஆதலான், (எ-று)

'தலைமகன் பிரிந்தான்' என்று கேட்ட விடத்து, 'நின்னிற் பிரியேன்' என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது 9

1160. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

(இ-ள்) தீண்டினாற் சுடுமதல்லது, காமநோய்போல நீங்கினாற் சுடவற்றோ தீ, (எ-று).

தலைமகன் பிரிந்துழித் தலைமகளாற்றாமை கண்டு தோழி கூறியது. 10

2. படர்மெலிந்திரங்கல்

படர் மெலிந்திரங்கலாவது தலைமகள் தலைமகன் பிரிந்துழிக் கருமென உற்ற துன்பத்தினால் மெலிந்திரங்குதல். பிரிந்துழியுற்ற துன்பமாவது போனானென்று கேட்டகாலத்து வருவதோர் மன நிகழ்ச்சி. இது பிரியப்பட்டார்க்கு முற்பாடு தோன்றுமாதலான், அதன் பின் கூறப்பட்டது

2. படர்மெலிந்திரங்கல்

**1161. துப்பி லெவன்செய்வார் கொல்லோ துயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.**

(இ-ள்) வன்மை செய்யவேண்டுமிடத்து யாங்ஙனஞ் செய்கின்றாரோ? மென்மை செய்யவேண்டும் நட்டோர்மாட்டே துன்பம் வருதலைச் செய்கின்றவர், (எ-று).

இது, பகைதணி வினையின்கண் பிரிந்த தலைமகனது கொடுமையை உட்கொண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 1

**1162. மறைப்பேன்மன் யானிதோ[1] நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்.**

(இ-ள்) இந் நோயை யான் மறையாநின்றேன்; மறைக்கவும், இஃது இறைப்பார்க்கு ஊற்றுநீர்போல மிகா நின்றது, (எ-று).

தலைமகள் ஆற்றாமை கண்டு, 'இதனை இவ்வாறு புலப்பட விடுத்தல் தகாது' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 2

**1163. கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.**

(இ-ள்) இந்நோயை மறைக்கவும் அறிகின்றிலேன்; இந் நோயை செய்தார்க்குச் சொல்லிவிடவும் நாணமாகாநின்றது, (எ-று)

'இவ்வாற்றாமையைத் தலைமகற்குச் சொல்லிவிடுவோம்' என்று தலைமகள் குறிப்பறிதற் பொருட்டுக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 3

**1164. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.**

(இ-ள்) காமக்கடல் நிலையாக உண்டே, அது நடக்கும் ஏமமாகிய புணை நிலையாக இல்லையே, (எ-று).

---

1. 'யானிஃதோ' என்பது மணக். பாடம்.

2. படர்மெலிந்திரங்கல்

இது, தலைமகள் ஆற்றாமை கண்டு நெருங்கிய தோழியைக் குறித்து, 'நமக்குத் துணையாவார் இல்லை' என்று தலைமகள் கூறியது. 4

1165. இன்பங் கடலற்றுக் காமமற் றஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

(இ-ள்) காமப்புணர்வினால் நமக்குவரும் இன்பம் கடல் போலப் பெரிது; பிரிவினான், அஃது அடர்க்குங்காலத்து வருந் துன்பம் அக்கடலினும் பெரிது, (எ-று).

இஃது, 'இன்பமுற்றார் துன்பமறுதல் உலகியல்' என்று ஆற்றுவித்த தோழிக்கு 'இன்பத்தளவாயின் ஆற்றலாகும்; துன்பம் மிகுதலான் யான் ஆற்றலரிது' என்று தலைமகள் கூறியது. 5

1166 காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளன்[1].

(இ-ள்) காமமாகிய பெருக்காற்றினை நீந்திக் கரைகாண் கின்றிலேன்; அரையிருள் யாமத்தும் உறங்காதேன் யானேயுளேன், மற்று உறங்காதாரில்லை, (எ-று).

இது, 'காதலர் குறித்தநாள் வருந்துணையும் ஆற்றுமாறு என்னை' யென்று தலைமகள் தன்னுள்ளே கூறியது. 6

1167. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை.

(இ-ள்) அளித்த இரா உலகத்து வாழ்கின்ற உயிர்களெல்லா வற்றையும் துயிலப்பண்ணி, என்னையல்லது வேறு துணையாக இருந்தாரில்லை, (எ-று).

இது, 'கண் உறங்குகின்றதில்லை' யென்று பிற்றைஞான்று தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 7

---

1. 'யுளன்' என்பது மணக். பாட'

2. படர்மெலிந்திரங்கல்

1168. கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

(இ-ள்) கொடியவர் செய்த கொடுமைபோலக் கொடியவாகா நின்றன; முன்பு போலன்றி இக்காலத்து நெடியவாய்க் கழிகின்ற இராப்பொழுதுகள், (எ-று).

இது, 'பொழுது விடிகின்றதில்லை யென்று தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 8

1169. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

(இ-ள்) அவருள்ளவிடத்து நெஞ்சினைப் போலக் கண்ணும் செல்ல வல்லவாயின், வெள்ளமாகிய நீரின்கண் புகுந்து நீந்தாவே, (எ-று).

இது, காண்டல் விரும்பினால் தலைகமள் கூறியது. 9

1170. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து.

(இ-ள்) வேட்கையும் நாணமும் என்னுயிரே காத்தண்டாகத் தூங்கா நின்றன; பொறுக்கமாட்டாத உடம்பினுள்ளே நின்று, (எ-று)

தலைமகள் கருத்தின் பொருட்டு 'அவர் உள்வழிச் செல்வேம்' என்ற தோழிக்குப் போக நினைக்கும் ஒருகால்; அது பெண்மையல்ல என்று நினைத்துத்தவிரும் ஒருகால்; இப்பொழுது என் மனநிகழ்ச்சி அது என்று தலைமகள் கூறியது. 10

3. கண்விதுப்பழிதல்

கண்விதுப்பழிதலாவது கண் தனது விரைவினால் அழிந்தமை தலைமகள் தோழிக்குக் கூறியது. பிரிவின்கண் துன்பமுற்றார்க்குக் கண்ணீர் முற்பாடு தோன்றுமாதலின் தனது ஆற்றாமையை ஒன்றன் மேலிட்டுக் கூறுவாள் அதனை முற்பாடு கண்ணின் மேலிட்டுக் கூறுதலால், அதன்பின் கூறப்பட்டது.

1171. ஏணாதுபெட்டா ருணர்மன்னோ மற்றவர்க்
காணா திமையல[1] கண்

(இ-ள்) விரும்பத்தகாததனை விரும்புவாரும் உளரோ? நம்மைக்காண்டல் விருப்பமின்றிப் போன அவரைக் காணாது அமைகின்றில என் கண்கள், (எ-று).

இதனை யொழியப் பிறவுமுளவோ என்றது. சொல்லாது பிரிந்த தலைமகனது பெருமையை உட்கொண்டு வேட்கையாற் கூறியது. விரும்பத்தகாது என்றமையால் சொல்லாது பிரிதலாயிற்று. 1

1172. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

(இ-ள்) அமையாத நோயை யாங்கண்டது அந்நோய் செய்தாரைத் தாங்காட்டுதலானே யன்றே? பின்னைக் கண்கள் தாம் காண்டல் வேட்கையாற் கலுழ்கின்றது யாவர் காட்டுவாராகக் கருதியோ? (எ-று).

இது, தலைமகள் ‘காட்டுவாரில்லை’ யென்று தோழியைக் குறித்துச் சொல்லியது. 2

1173. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைதலுழப்ப தெவன்.

1. ‘தமைவில’ என்பது மணக். பாடம்.

3. கண்விதுப்பழிதல்

(இ-ள்) முன்பு அவர் நல்லரென்று தெரிந்து உணர்ந்து நோக்கிய உண்கண்கள் இப்பொழுது வருத்தமுற்று, நல்லரென்று உணராவாய்த், துன்பமுழப்பது எற்றுக்கு? (எ-று).

இது, கண்ணினறியாமையைத் தோழிக்குக் கூறியது. 3

1174. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

(இ-ள்) இக்கண்கள் அன்று விரைந்து தாமேநோக்கி, இன்று தாமே கலுழாநின்ற இது சிரிக்கத்தக்க துடைத்து, (எ-று).

இஃது, ஆற்றாமையால் நக்க தலைமகளை 'இந்நகுதற்குக் காரணமென்னையென்று வினாவியதோழிக்குக் கூறியது. 4

1175. மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து.

(இ-ள்) எம்மைப்போல அறைபறையாகிய கண்ணையுடையார் மாட்டு உளதாகிய மறையை யறிதல் ஊரார்க்கு எளிது, (எ-று).

வரையாது பிரியப்பட்ட தலைமகள், 'என் கண்ணினாலே இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகா நின்றது; அதற்கு யாங்ஙனம் செய்வேம்' என்று தோழிக்குக் கூறியது. 5

1176. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

(இ-ள்) எமக்கு இந்நோயைச் செய்த கண் தாமும் இந் நோயகத்துப் பட்டது மிகவும் இனிது, (எ-று).

இது, 'நின்கண் கலங்கிற்று; அஃதெனக்கு இன்னாதாயிற்று' என்ற தோழிக்கு, 'அதுமிகவும் இனிது' என்று தலைமகள் கூறியது. 6

1177 உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

(இ-ள்) அழுதலை யுழந்துழந்து உள்ளநீர் அறுவனவாக; தாம் வேண்டினவரை விரும்பி நெகிழ்ந்து கண்டகண்கள், (எ-று).

'இவ்வாறு அழுதல் தகாது' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 7

1178. பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
வுய்வினோ யென்க ணிறுத்து.

(இ-ள்) உயல் ஆற்றாத வென்மாட்டு உய்வில்லாத நோயை நிறுத்தி உண்கண்கள் தாமும் அழமாட்டாவாய் நீருலந்தன, (எ-று).

கண்கள் தாம் நினைத்தது முடித்துத் தொழின்மாறின வென்று கூறியது. 8

1179. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

(இ-ள்) அவர் வாராத காலத்துப் புணர்வு வேட்கையால் துஞ்சா; வந்த காலத்துப் பிரிவாரென்று அஞ்சித்துஞ்சா; அவ் விரண்டிடத்தனும் மிக்க துன்பமுற்றன கண்கள், (எ-று).

இது 'நீ உறங்கவேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் 'இன்றேயல்ல, எஞ்ஞான்றும் உறக்க மில்லை' யென்றது. 9

1180. படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண்.

(இ-ள்) கடலினும் மிக்க காமநோயை என்மாட்டு நிறுத்து தலானே கண்கள் தாமும் உறங்கமாட்டாவாய்த் துன்பமுறா நின்றன, (எ-று).

இது, 'பிறர்க்கு இன்னாமை செய்தார்க்கு இன்னாமை வந்தது' என்று தோழிக்குக் கூறியது.

இவையெல்லாம் ஒன்றின் ஒன்று வந்தனவாகக் கொள்ளப் படா. இவ்வதிகாரத்துக் காமவேதனையாற் கண்ணுக்கு உறுவன வெல்லாம் கூறப்பட்டது. 10

4. பசப்புறுபருவரல்

பசப்புறுபருவரலாவது பசப்புறுதலான் வந்த வருத்தத்தைத் தோழிக்குத் தலைமகள் கூறியது. காதலித்தார்க்குக் காதலிக்கப் பட்ட பொருளெய்தாக்கால் நிறம் வேறுபடுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

1181. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின்.

(இ-ள்) பசந்தாளெனப் பேர்பெறுதல் நன்று; நம்மைக் காதலிப்பித்தவர் அருளாமையை இவ்வூரார் கூறாராயின் (எ-று).

இது 'நின்மேனி பசந்தது' என்ற தோழிக்கு 'இவ்வளவாயின் குற்றமில்லை' யென்று தலைமகள் கூறியது. 1

1182. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

(இ-ள்) விளக்கின் இறுதிபார்க்கும் இருளைப்போலக், கொண்கனது முயக்கத்தின் இறுதி பார்த்து நின்றது பசப்பு, (எ-று).

இஃது. 'அவர் பிரிந்தது இப்பொழுது; ஆகலின் பசப்பு யாங்ஙனம் வந்தது' என்ற தோழிக்கு தலைமகள் கூறியது. 2

1183. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

(இ-ள்) முயங்கிக்கொடு கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவிலே, அள்ளிக்கொள்ளலாம்படி செறிந்தது பசலை, (எ-று).

இது, தலைமகனால் சொல்லாது பிரியப்பட்ட தலைமகளைப் பிற்றைஞான்று அவள் வேறுபாடு கண்டு 'இஃதென்னாயிற்று' என்று குறித்து நோக்கிய தோழிக்குத் தலைமகள் கூறியது 3

4. பசப்புறுபருவரல்

1184. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.

(இ-ள்) உங்கேபாராய் எங்காதலராய்ச் செல்கின்றாரை இங்கே பாராய் என்மேனி மேலே பசப்புப்பரப்பதனை (எ-று).

இஃது, 'அவர் பிரிந்தது இப்பொழுதாயிருக்கப்பசலை பரவா நின்றது; அவர் வருமளவும் யாங்ஙனமாற்றுதும்' என்று தலைமகள் கூறியது. 4

1185. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

(இ-ள்) யான் எக்காலமும் நினைப்பேன்; என்றும் சொல்லுவது அவர் திறமே; இத்தன்மையேனாகவும், பசலை (வஞ்சனையாகப்) பரவா நின்றது; இதற்கு நினைவு யான் அறிகின்றிலேன் (எ-று).

'முன்பு களவு காலத்து வேட்கையால் அவரது செயலைக் கூறவும் நினைக்கவும் ஆற்றாமை நீங்கும்; இப்போது அதுபோலன்றி ஆற்றாமை மிகாநின்றது' என்று கூறியது. 5

1186. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

(இ-ள்) காதலர் வரவிட்டாரென்னும் மிகுதியானே என்னுடம்பின் மேலே பரந்து பசப்பு ஊரும், (எ-று).

'இப்பசலையை நீக்க வேண்டும்' என்ற தோழிக்கு 'என் குறிப்பினான்' வந்ததல்ல; நீக்கவேண்டுவையாயின் அவர்க்குச் சொல்' என்று கூறியது. 6

1187. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

(இ-ள்) இவள் பசந்தாளென்று எனக்குக்குற்றம் நாடுமதல்லது, இவளைத் துறந்தார் அவரென்று அவரது கொடுமையைச் சொல்லுவார் இல்லை, (எ-று).

இஃது, 'இப்பசத்த லாகாது' என்ற தோழிக்குத்தலைமகள் கூறியது. 7

1188. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

(இ-ள்) நம்மால் காதலிக்கப்பட்டவர் அவர் அருளாமையை இசைந்தேனாகப் பசந்தவெனது நிறத்தை மற்றியாவர்க்குச் சொல்லுவேன், (எ-று).

'காதலர் பிரிந்துழி ஆற்றியிருத்தல் பெண்கடன்' என்ற தோழிக்கு, யானும் ஆற்றுவேனாக; 'இப்பசப்பை யாவரால் நீக்குவேன்' என்று வெகுண்டு கூறியது. 8

1189. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து.

(இ-ள்) மென்மையும் நாணமும் அவர் கொண்டுபோனார்; அதற்கு மாறாக நோயையும் பசலையையும் தந்து, (எ-று).

மென்மை-பெண்மை. இது, தலைமகள் வெகுட்சிகண்டு, 'இது பெண்மையும் நாணமும் உடையார் செயலன்று' என்று கடிந்து கூறிய தோழிக்கு ஆற்றாமையால் தலைமகள் கூறியது. 9

1190. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நந்நிலைய ராவ ரெனின்.

(இ-ள்) என்னுடம்பு நிலையாக என்றும் பசப்பதாக; நம்மைக் காதலிப்பித்தவரும் நம்மைப்போலத் துன்பமுறுவராயின், (எ-று).

'நீ இவ்வாறு ஆற்றாய் ஆகின்றதனை நம் காதலர் கேட்பாராயின் செய்வினை முடித்தல் ஆற்றாது வருந்துவர்' என்ற தோழிக்கு, 'அவர் அத்தன்மையர் ஆகப்பெறின், என்றும் பசந்தால் ஆகாதோ' என்று தலைமகனது கொடுமை உட்கொண்டு கூறியது. 10

5. தனிப்படர்மிகுதி

தனிப்படர்மிகுதியாவது தனிமையால் வந்த துன்ப மிகுதி கூறுதல். யாம் பசப்பால் வருந்துகின்றாற்போல அவரும் வருந்துவார் எனின் இப்புணர்ச்சியிடையறாமல் இனிது நடக்குமென்று நினைத்துத் தனது துன்பத்தினைக் கூறுதலான், அதன் பின் இது கூறப்பட்டது.

1191. பருவரலும் பைதலுங் காணான்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான்.

(இ-ள்) நமது தடுமாற்றமும் நாம் உறுகின்ற துன்பமும் காணாதான் ஒருவர் பக்கமாகநின்று ஒழுகித் துன்பஞ் செய்கின்ற காமதேவன் காண்பானாயின், நம்மை வருத்தானே; தெய்வமாகலான், (எ-று).

சேய்மைக்கண் பிரிதலேயன்றி அணுமைக்கண் பிரியும் பிரிவும் உள. அவையாவன: அவைக்களனும் மாசவையும் அத்தாணியும் புகுதவும், நல்லிசை நயந்து வந்தோர் காணவும், பணைநிலைப்புரவி காணவும், வாரியுள்யானை காணவும், நாட்டகத்துப் பிரியும் பிரிவும். அவற்றுள் யாதானும் ஒன்றனால் தலைமகன் பிரிந்துழி ஆற்றாளாகிய தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. சேய்மைக்கண் பிரிந்தானாயின் பருவம் காணின் அல்லது இக் கூற்றினால் பயனில்லை. பரத்தையிற் பிரிவாயின் புலவிதோன்றும். ஆதலான் அணுமைக்கண் பிரிந்தானைப்பற்றிக் கூறப்பட்டது என்று கொள்ளப் படும், இவ்வுரை மேல்வருவன வற்றிற்கும் ஒக்கும். 1

1192. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

(இ-ள்) தாம் காதலித்தாரால் தம்மைக் காதலிக்கப்பெற்றவர் பெற்றாராவர், காமநுகர்ச்சியின் கண் பரலில்லாதோர் பழம் (எ-று).

5. தனிப்படர்மிகுதி

இது. தடையின்றி நுகராலாமென்றவாறாயிற்று. புணர்வு வேட்ட நெஞ்சிற்கு, 'யாம் நல்வினை செய்கிலேம்; செய்தே மாயின் அவரும் காதலிப்பர்; அவர் மாட்டுக்காதலின்றாக வருந்த வேண்டா' என்று தலைமகள் கூறியது. 2

1193. உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழியென்[1] நெஞ்சு.

(இ-ள்) என் நெஞ்சமே என்மாட்டு அன்பு உறாதவர்க்கு நீயுற்ற நோயைச் சொல்ல நினையா நின்றாய்; அதனினும் நன்று நம்மை உறங்காமல் வருத்துகின்ற கடலைத் தூர்ப்பாயாயின், (எ-று).

இவை இரண்டும் முடியா என்றவாறாயிற்று. தூதுவிடக் கருதிய நெஞ்சிற்குத் 'தூதுவிட்டாலும் பயனில்லை' யென்று தலைமகள் கூறியது. 3

1194 நாங்காதல் கொண்டால்[2] நமக்கெவன் செய்யவோ[3]
தாங்காதல் கொள்ளாக் கடை.

(இ-ள்) நாம் காதலித்தால் அக்காதல் நமக்கு யாதைச் செய்யும்; அவர் தாம் காதலியாத விடத்து, (எ-று).

புணர்வு வேட்ட நெஞ்சிற்கு, 'நின்காதலினால் பயனில்லை' என்று தலைமகன் கொடுமையையுட் கொண்டு அவன் பாங்காயினார் கேட்பத் தலைமகள் கூறியது. 4

1195. ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

(இ-ள்) ஒருதலை அன்பினாலுண்டாகிய காமம் இன்னாது; காவினது பாரம்போல, இரண்டு தலையும் ஒத்த அன்பினானுண் டாகிய காமமே இனிதாவது. (எ-று).

---

1. 'வாழிய' என்பது மணக். பாடம்.

2. கொண்டார். 3. செய்யவோ என்பன மணக். பாடம்

5. தனிப்படர்மிகுதி

இது, மேற்கூறிய சொற்கேட்ட பாங்காயினார், 'அன்பு செய்வாரைத் தலைவன் அருள் செய்வன்' என்று நகைக் குறிப்பினாற் கூறிய சொற்கேட்டுக் 'கூடினாலும் பயனில்லை' யென்று தலைமகள் கூறியது. 5

1196. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி.

(இ-ள்) உயிர் வாழ்வார்க்கு மழை பெய்தாற்போலும் காதலித்தார்க்குக் காதலிக்கப்பட்டார் அருளும் அருள்; அஃதில்லார்க்கு வாடுதலே யுள்ளது. (எ-று).

இது, 'நின்மேனி பொலிவழிந்தது' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 6

1197. வீழநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு.

(இ-ள்) தாம் காதலித்தாரால் காதலிக்கப்படுவார்க்கு அமையும், உலகின்கண் இருந்து உயிர்வாழ்வோமென்னுங் களிப்பு (எ-று)

தலைமகள் 'இருந்தாலும் பயனில்லை; அதிற்சாதல் அமையும்' என்று வாழ்க்கையை முனிந்து தோழிக்குக் கூறியது. 7

1198. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

(இ-ள்) நற்குணங்கள் பலவுடையாரென்று உலகத்தாரால் விரும்பப்பட்டாரும் விரும்பமில்லாராவார்; தம் காதலரால் தாம் காதலிக்கப்படாராயின், (எ,று).

இது, வாழ்க்கையை முனிந்து கூறிய தலைமகளை 'இவ்வாறு கூறுவையாயின், நின்னைப் புகழ்கின்ற உலகத்தாரும் இகழ்வர்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. கொண்டான் காயிற் கண்டார் காய்வரென்பது உலகவழக்கம். 8

1199. வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

5. தனிப்படர்மிகுதி

(இ-ள்) தம் காதலரிடத்து நின்று வரும் இனிய சொற்களைக் கேளாது உயிர்வாழ்வாரைப் போல, வன்கண்மையுடையார் இவ்வுலகத்து இல்லை, (எ-று).

தூது விடுதற் குறிப்பினால் தோழிக்குச் சொல்லியது. 9

1200. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

(இ-ள்) எம்மால் காதலிக்கப்பட்டார் எமக்கு அருளாராயினும், அவர் பக்கத்தனவாகிய சொற்கள் எங்களால் இகழப்படாது செவிக்கு இனியவாம், (எ-று).

எங்கள் பக்கத்தனவாகிய சொற்கள் அவர்க்கு இன்னாதாகும் என்பது குறிப்பு. தலைமகன் பாங்காயினார் அவனைப்புகழ்ந்துழித் தனது வேட்கை மிகுதியால் தலைமகள் கூறியது. அன்றியும் தலைமகனுழை நின்றும் வந்த தூதர் வாய்ச் சொல் கேட்ட தலைமகனது முகமலர்ச்சி கண்டு 'இஃது எற்றினான் ஆயிற்று' என்று வினாவிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 10

6. நினைந்தவர்புலம்பல்

நினைந்தவர் புலம்பலாவது சேய்மைக்கணாயினும் அணுமைக்கணாயினும் பிரிந்த தலைமகனை ஒழிவின்றி நினைத்த மகளிர் துன்பமுறுதல். நினைத்தவர் புலம்பலென்று பாடமாயின், அதற்கு அவரை நினைத்துப் புலம்பலென்று பொருளுரைப்பினும் ஒக்கும். தனிப்பட்டார் காதலரை எல்லாக் காலமும் ஒழிவின்றி நினைப்பராதலின் அதன்பின் கூறப்பட்டது.

120 . உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

6. நினைந்தவர்புலம்பல்

(இ-ள்) தம்மாற் காதலிக்கப்பட்டவரை நினைத்தாலும் நீங்காத பெருங்களிப்பைத்தரும் ஆதலால், கள்ளினும் காமம் இனிது, (எ-று).

'நினைவு மகிழ்ச்சியைத்தாரா நின்றமையால் என் மனம் காதலரை ஒழிவின்றி நினையா நின்றது' என்று தோழிக்குக் கூறியது. 1

1202. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.

(இ-ள்) அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல்லோ; எம்முடைய நெஞ்சின்கண் எப்பொழுதும் தாம் உளராகாநின்றார், (எ-று).

ஓஒ என்பது மிகுதிப்பொருளின்கண், வந்ததாதலான், எப்பொழுதும் என்னும் பொருளதாயிற்று. 'அவரும் முன்பு நம்மோடு ஒத்த அன்பினராதலானே எம்மைப் போல அவரும் நினைப்பரோ' என்று தோழியொடு சொல்லியது. 2

1203. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.

(இ-ள்) அவர் நம்மை நினைப்பார் போன்று நினையார் கொல்லோ; தோன்றுவதுபோன்று கெடா நின்றது தும்மல், (எ-று).

தலைமகள் உலகத்துப் பெண்டிராயுள்ளார் கூறுவதொன்றை ஈண்டுக் கூறினாள். 'தும்மல் இவ்வாறு செய்தலான் நினைப்பாரைப் போன்று நினையாராக வேண்டும்' என்று தோழிக்குக் கூறியது. 3

1204. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் காணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

(இ-ள்) தமது நெஞ்சின்கண் (எம்மை) யாம் சொல்லாமல் காவல்கொண்டவர் என்று நெஞ்சின்கண் ஒழியாதே வருதலைக் காணாரோ, (எ-று).

6. நினைத்தவர்புலம்பல்

இது, 'நினையாரோ நினைப்பாரோ' என்று ஐயப்பட்ட தலைமகள் நினையாரென்று தெளிந்து கூறியது. 4

1205. விளியுமென் னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து.

(இ-ள்) நம்முள் நாம் வேறல்லேமென்று சொன்னவரது அருளின்மையை மிகவும் நினைந்து எனதாகிய இன்உயிர் அழியா நின்றது. (எ-று).

இது. தலைமகன் நினையானென்று தேறிய தலைமகள் ஆற்றாமையால் தோழிக்குக் கூறியது. 5

1206. மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ்சுடும்.

(இ-ள்) அவரை மறந்தபொழுது என்னாவன் கொல்லோ; மறப்பறியேனாய் நினைக்கவும் இக்காமம் நெஞ்சத்தைச் சுடாநின்றது, (எ-று).

இது, 'சிறிய உள்ளிப் பெரியன மறக்க வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 6

1207. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

(இ-ள்) யாதொன்றினானும் இனிய தொன்றேகாமம்; தாம் விரும்பப்படுவாரை நினைக்க வருவதொரு துன்பம் இல்லைகாண், (எ-று).

இது. 'நீ இவ்வாறு ஆற்றாயாகின்றது துன்பம் பயக்கும்' என்ற தோழியை மறுத்துத் தலைமகள் கூறியது. 7

1208. மற்றியா னென்னுளேன் மன்னோ வவரோடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

(இ-ள்) யான் அவரோடு புணர்ந்த நாட்களை நினைத்தலானே உயிர் வாழ்கின்றேன்; அல்லது யாதனான் உளேனாய் வாழ்கின்றேன். (எ-று).

6. நினைந்தவர்புலம்பல்

இ-ரை. தலைமகன் தலையளியை நினைத்து ஆற்றாளாயின தலைமகளை (நோக்கி) 'இவ்வாறு நினைத்திரங்கல் உயிர்க்கு இறுதியாகும்' என்ற தோழிக்கு அவள் கூறியது. 8

1209. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு.

(இ-ள்) யாம் அவரை எவ்வண்ணம் நினைப்பினும் வெகுளார்; அவ்வண்ணமன்றோ அன்புற்றார் செய்யும் அருள், (எ-று).

அருள் செய்தலாவது குற்றம் கண்டாலும் வெகுளாமை என்றது. தலைமகள் ஆற்றாமைக்கண்டு, 'அருள் இலன்' என்று இயற்பழித்த தோழிக்கு, 'யாம் கொடியர் என்று நினைக்கவும் அதற்கு முனியாது நெஞ்சத்தே உறையாநின்றார்; ஆதலான் அருளுடையார் என்று கொள்ளப்படும்" என்று இயற்பட மொழிந்தது. 9

1210. விடாஅது[1] சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅது வாழி மதி.

(இ-ள்) என்னெஞ்சை விடாதே போனவரைக் கண்ணினாற் காணுமாறு படுகின்றதில்லை இம்மதி, (எ-று).

பட்டதாயின், என்கண் உறங்கும்; உறங்கினால், அவரைக் காணலாமென்பது கருத்து. இது மதியுடன் புலந்து கூறியது. 10

---

1. 'படாஅது' என்பது மணக். பாடம்.

7. கனவுநிலை யுரைத்தல்

கனவு நிலையுரைத்தலாவது கனவினது நிலைமையைச் சொல்லுதல்; காதலன் நினைவினாலே வருத்தமுற்ற துன்பம் கூறினாள்; அந்நினைவினால் இக்கனவுநிலை யுரைத்தல் கூறுகின்றமையின் இது பிற் கூறப்பட்டது. ஒழிவின்றி நினைப்பார்க்கு உறக்கமில்லையாகும்; அவர் உறங்கினாராயின், அவரது சேதியை மறவாது நினைப்பாராதலான், அதன்பின் கூறப்பட்டது. (தலைமகன் நினைத்தல்) தலைமகள் நினைத்தல் என்னும் இரண்டனுள்ளும் இவட்குக் கனவு நிலையாகிய உறக்கமில்லையென்று கொள்க.

1211. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

(இ-ள்) என்னுடைய கயல்போலும் உண்கண் யான் வேண்டிக் கொள்ள உறங்குமாயின், நம்மோடு கலந்தார்க்கு நாம் உய்தலுண்மையைச் சொல்லுவேம்; உறங்குகின்றதில்லையே, (எ-று).

மன்-ஒழியிசையின்கண் வந்தது. கயலுண்கண்-பிறழ்ச்சியுடைய கண்; ஈண்டு எப்பொழுதும் காதலர் வரவு பார்த்திருக்கின்ற தடுமாற்றத்தை உடைத்தாகிய கண் என்றவாறு. 'உறங்கவேணும்' என்ற தோழிக்குக் 'கண்கள் நீயும் வேண்டிக்கொள்ள உறங்குமாயின் இத்துணைநாள் சாவாதிருந்தோம் என்று நம் காதலர்க்கு உரைக்கலாயிற்று' என்று தலைமகள் கூறியது 1

1212. நனவினானல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.

(இ-ள்) நனவின்கண் நமக்கு அருளதாவரைக் கனவின் கண் காண்டலானே உண்டாகா நின்றது என்னுயிர்; இல்லையாயின், உயிருண்டாதற்குக் காரண முண்டோ? (எ-று).

இஃது, 'உறங்கினால் காணலாகுமோ' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 2

7. கனவுநிலை யுரைத்தல்

1213. கனவினா னுண்டாகுங் காம நனவினா
னல்காரை நாடித் தரற்கு.

(இ-ள்) நனவின்கண் நமக்கு அருளாதவரைக் கனவு தேடித் தருதலால், காமம் அதன் கண்ணே உண்டாம், (எ-று).

இது, 'கண்டாற் பயனென்னை? காம நுகர்ச்சியில்லை' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 3

1214. நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

(இ-ள்) நனவின்கண் கண்ட இன்பமும் அப்பொழுதிற்கு இன்பமாவது போலக் கனவின்கண் கண்ட இன்பமும் அப்பொழுதைக்கு இன்பமாம், (எ-று).

'கனவிற் புணர்ச்சி இன்பம் தருமோ' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 4

1215. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

(இ-ள்) உறங்குங்காலத்துத் தோளின்மேலராகி, விழித்த காலத்து விரைந்து மனத்தின்கண்ணே புகுதுவர் காதலர், (எ-று).

'உறக்கம் நீங்கினால் யாண்டுப் போவர்' என்று நகைக்குறிப்பினாற் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 5

1216. நனவினா னல்காக் கொடியார் கனவினா
னென்னெம்மைப் பீழிப் பது.

(இ-ள்) நனவின்கண் அருளாத கொடுமையையுடையார் கனவின்கண் வந்து எம்மைத் துன்பம் உறுத்துவது எற்றுக்கு? (எ-று).

இது தலைமகனைக் கனவகத்துக் கண்டு முன்பு நல்காமையை நினைத்து ஊடல் உற்றுழி அதனை உணர்த்திக் கூடுவதன் முன்னம்

7. கனவுநிலை யுரைத்தல்

விழித்த தலைமகள் ஆற்றாமையால் தோழிக்குக் கூறியது. பீழை என்றது அவன் கூந்தலும் அல்குலும் பற்றி நலிந்ததனை. 6

1217. நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர்.

(இ-ள்) நனவின்கண் வந்து நல்காத காதலரை நோவா நிற்பர், அவரைக் கனவின் கண் காணாதவர்; காண்பாராயின், நோவார், (எ-று).

இது, தலைமகள் ஆற்றாமை கண்டு தலைமகனை யியற்பழித்த தோழிக்கு அயலார்மேல் வைத்துத் தலைமகள் கூறியது. 7

1218. நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர்.

(இ-ள்) இவ்வூரார் நனவின்கண்ணே நம்மை நீக்கி யகன்றா ரென்று அவரைக் கொடுமை கூறாநிற்பர்; அவரைக் கனவின்கண் காணார்களோ! (எ-று).

'இவ்வேறுபாடு அலராயிற்று' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 8

1219. நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்.

(இ-ள்) நனவு என்று ஒன்று இல்லையாயின், கனவின்கண் வந்த காதலர் பிரிதல் இல்லை, (எ-று).

'யாங்கள் எல்லாம் காணாது ஒழியவும் நீ கண்டாய் ஆயின் அவரைப் பிரியவிட்டது என்னை' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 9

1220. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

(இ-ள்) நங்காதலர் விட்ட தூதரோடே வந்த கனவினுக்கு யான் யாது செய்வேம் விருந்து, (எ-று).

7. கனவுநிலை யுரைத்தல்

இது. தலைமகளாற்றுதற் பொருட்டுக் காதலர் வாராநின்றாரென்று தூதர் வரக் கனாக் கண்டேனென்று தோழி சொல்லியது 10

---

8 பொழுதுகண்டிரங்கல்

பொழுதுகண்டிரங்கலாவது யாலைபபொழுது கண்டு தலைமகள் வருந்துதல். ஏனைப்பொழுது வருத்தலமிலளோவெனின், பிரியப்பட்டார்க்கு எல்லாக் காலமும் வருத்தமுளவாயினும், விடியலும் நண்பகலும் போலாது மாலைப்பொழுது வருத்த மிகுதலான் இது கூறப்பட்டது என்னை வகுத்தம்மிகுமாறு எனின்? புளளும்மாவும் விடியலும் நண்பகலும் தத்தம் சேக்கையினின்று நீங்கி அந்திக் காலம் வந்து சேரும் அவையிற்றைக்கண்டு 'நம் காதலர் நம்மை உள்ளுகின்றிலர்' என்றும், மைந்தரும் மகளிரும் விடியலும் நண்பகலும் அறத்தினும் பொருளினும் முயன்று அந்திக்காலத்தில் தம்மிற்கூடிஇன்பம்நுகர்வது கண்டு 'யாம் இவ்வாறு நுகரப்பெறுகிலேம்' என்று நினைத்தலான் வருத்தம் மிகும் என்க. நடு நாள் யாமத்தும் துன்பமுறும் அன்றே; அதுவும் கூறவேண்டாவோ எனின் அக்காலத்து வரும் துன்பமும் இதனின் மிகுதியின்மையின் வேறு கூறாராயினார். இது நினைந்தவர் புலம்பலின் பிற்கூறற்பாலது, கனவு நிலையும் சேரச் சொல்ல வேண்டுதலின், இரண்டு சொல்லும் அலராகக்கொண்டு முன் கூற வேண்டும் என்பதனால் நினைவொடு கூடிய கனவை முற் கூறி, அதன்பின் கூறினார் என்று கொள்ளப்படும்.

1221. மாலைநீ யல்லை[1] மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

---

1. 'மாலையே வல்லை' என்பது மணக். பாடம்.

8. பொழுதுகண்டிரங்கல்

(இ-ள்) பொழுதே! நீ தட்பமுடையை யன்மையான், மாலை அல்லை; முன்பு கூடிப் பிரியப்பட்டார் உயிரை உண்ப தொருவேலாகுவை, (எ-று).

கெடுவாயாக என்னுதல் குறிப்புமொழி. இது, மாலைப் பொழுது கண்டு தலைமகள் ஆற்றாமையாற் கூறியது. 1

1222. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த[1] திலேன்.

(இ-ள்) மாலைப்பொழுது நோய் செய்தலை, என்னோடு கூடினவர் பிரியாத காலத்தே அறியப் பெற்றிலேன்; அறிந்தேனாயின், அது நோய் செய்யுமென்று கூறியிருப்பேன், (எ-று).

இது, மாலையாலே வருத்தமுற்ற தலைமகள் தலைமகனை நினைந்து கூறியது. 2

1223. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

(இ-ள்) நெருப்பையொத்த இம்மாலைப் பொழுதுக்கு முன்பு தூதுமாகி வந்து இப்பொழுது கொல்லுதற்குப் படையுமாகி வர வல்லது ஆயன் ஊதுங்குழலோ? (எ-று).

அவர் பிரிவதன் முன் இன்பம் நுகர்தற்குக் காலம் பார்த்திருந்துழி. மாலை வருகின்றதென்று தூதாய் வருதலின் தூது என்றார். இப்பொழுது வருத்துதலின், படை என்றாள். அழல்போலும் மாலை என்றது பிரிந்த காலத்துக் கொடுமை செய்தலான் அதற்குக் குணமாகக் கூறினாள். இது மாலையொடு வந்த குழலும் கொடிதென்று கூறியது. 3

1224. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

---

1. 'கால மறிந்த' என்பது மணக். பாடம்.

8. பொழுதுகண்டிரங்கல்

(இ-ள்) அவர் பிரிவதன் முன்னம் பிரிவரென்னும் அச்சத்தைத் தந்த காலைப்பொழுது பிரிந்தபின்பு வருத்தாது ஒழிதற்கு யான் செய்த நன்மையாதோ அவரோடு இன்ப நுகர்தற்கு நட்பாகியிருந்த மாலைப்பொழுது வருத்துதற்கு யான் செய்த பகைமை யாதோ? (எ-று).

இது, மாலையது பண்பின்மையை உட்கொண்டு தலைமகள் கூறியது. 4

1225. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

(இ-ள்) பொருள் தேடுதலைச் செய்தலே தமக்கு இயல்பாக உடையவரை நினைத்து மயங்கின மாலைப்பொழுதிலே, எனது சாவமாட்டாத உயிர் மெலியாநின்றது, (எ-று).

மாலையாலடர்ப்புண்ட தலைமகள், 'தலைமகன் அன்பும் அறனும் இலன்' என்று நினைத்துத் தன்னுள்ளே சொல்லியது. 5

1226. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை.

(இ-ள்) மயங்கின மாலைப்பொழுதே! நீ வாழ்வாயாக; நீ புன்கண்மை யுடையையாயிருந்தாய்; எம்முடைய கேளிரைப்போல வன்கண்மையை யுடைத்தோ நின் துணையும், (எ-று).

இது, தன்னுட்கையாறெய்திடு கிளவி. 6

1127. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

(இ-ள்) இக்காமநோயாகியபூ விடியற்காலத்தே அரும்பிப் பகற்பொழுதெல்லாம் முகிழ்முகிழ்த்து, மாலைக்காலத்தே மலராநின்றது. (எ-று).

மாலையால் வருத்தமுற்ற தலைமகள் வேறுபாடுகண்டு, 'விடியலும் நண்பகலும் ஆற்றி இப்பொழுது வேறுபட்டாய்; இதற்குக் காரணம் என்?' என்ற தோழிக்குத் தலைமகள் காரணம் கூறியது. 7

8. பொழுதுகண்டிரங்கல்

1228. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
ஏதிலர் போல வரும்.

(இ-ள்) காதலரில்லாதவிடத்து இம்மாலைப் பொழுது கொலைக்களத்துப் பகைவரைப்போல வரும், (எ-று).

இது, 'மாலைக்காலத்து நோய் மிகுதலென்னை' யென்ற தோழிக்குத் தலைமகள் காரணங் கூறியது. 8

1229. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து

(இ-ள்) என் மனன் நிலைகலங்கித் துன்பமுறாநிற்கும்; மயக்கத்தை யுடைத்தாகி மாலைக்காலம் வரும் காலம் இப்பதி யெல்லாம் மயங்கித் துன்ப முறாநிற்கும், (எ-று).

மதி என்பதனை முன்னே கூட்டுக. மதி-மனம். 'அறிவில்லாதாரைப் போல மயங்குதல் தக்கதன்று; நமக்கு ஆற்றியிருத்தல் கடன்' என்ற தோழிக்குத், 'தன் குறிப்பின்றியும் இம்மாலையைக் கண்ட பொழுதே என்மனம் மயங்கும், என்று தலைமகள் கூறியது. 9

1230. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

(இ-ள்) நெருநல் எனக்கு நடுக்கத்தை யுண்டாக்கித் தானும் புன்மை கொண்டிருந்த மாலைப்பொழுது, இன்றும் எனக்கு வெறுப்புத்தோற்றி வருத்தம் மிகும்படியாக வாராநின்றது, (எ-று).

இது, முன்னை ஞான்று மாலையாலடர்ப்புண்ட தலைமகள் பிற்றைஞான்று மாலை வருவது கண்டு கூறியது. 10

9. உறுப்புநலனழிதல்

உறுப்புநலனழிதலாவது தலைமகளது உறுப்புக்கள் நலனழிந்தமை கூறியது. காதன்மிக்கு இரங்குவார் அக்காதலை அயலாரறியாமல் அடக்கின காலத்து வெம்மையுற்ற கொடிபோல, அவரதுறுப்பு வாடுதலான், இது பொழுதுகண்டிரங்கலின் பின் கூறப்பட்டது.

1231. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி
நறுமலர் நாணின கண்.

(இ-ள்) நமக்குத் துன்பம் ஒழிய வேண்டி, நெடுநெறிக்கண் சென்றாரை நினைத்து நறுவிய பூக்களைக் கண்டு நாணா நின்றன கண்கள் (எ-று).

பலகால் அழுதலின் நிறங்கெட்டதென்றவா றாயிற்று. 'வரைந்து கோடற்குப் பொருள்தேடி வருகின்றேன்' என்று பிரிந்த தலைமகனை நினைந்து ஆற்றாளாய்த் தலைமகள் தனது கண் பொலிவழிந்தது என்று கூறியது. 1

1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

(இ-ள்) முன்பு நம்மை விரும்பினவர் நமக்கு அருளாமையைப் பிறர்க்குச் சொல்லுவன போலா நின்றன; பசப்புற்று நீர்சொரிகின்ற கண்கள், (எ-று).

இது, தலைமகள் ஆற்றாமை கண்டு இக்கண்ணினீர் அலராகா நின்றதென்று தலைமகள் ஆற்றுதற்பொருட்டுத் தோழி கூறியது. 2

1233. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.

(இ-ள்) அவர் நீங்கினமையை மிகவும் பிறர்க்கு அறிவிப்பன போலா நின்றன, அவர் கூடின நாட்களிற் பூரித்ததோள்கள், (எ-று).

9. உறுப்புநலனழிதல்

கருவியைக் கருத்தாவாக கூறினார். பிரிவிடை யாற்றாளாகிய தலைமகள் தனது தோள் வாட்ட முற்றதுகண்ட தோழிக்குச் சொல்லியது. 3

1234. பணைநீங்கப் பைந்தொடி சோருந் துணைநீங்கத்
தொல்கவின் வாடிய தோள்.

(இ-ள்) துணைவர் நீங்குதலானே பழைய அழகு இழந்த தோள்கள் பெருமை நீங்குதலானே பசுத்த வளைகளைக் கழலவிடா நின்றன, (எ-று).

பசுத்த வளை-மரகதத்தினாற் செய்த வளை. (தோள்) வாடுதலே யன்றி மெலிவதுஞ் செய்யாநின்றதென்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது,

1235. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

(இ-ள்) கொடியாரது கொடுமையைச் சொல்லாநின்றன, வளையோடு கூடப் பழையவாகிய அழகினை யிழந்த தோள்களும் (எ-று).

தலைமகள் கூறிய சொற்கேட்டு, 'யான் முன்பே தோள் கண்டு அறிந்தேன் அவர் கொடிய ராதலை' என்று தலைமகளாற்றுதற் பொருட்டுத் தலைமகனை யியற்பழித்துத் தோழி கூறியது

1236. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற னொந்து.

(இ-ள்) வளையோடே தோள்கள் பண்டுபோல் இறுகாது நெகிழவும், நினக்குச் சொல்லாது யானே நோவேன்; நீ அவரைக் கொடியரென்று சொல்லுகின்றதற்கு நொந்து, (எ-று)

இஃது, ஆற்றாளெனக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதுபடத் தலைமகள் சொல்லியது. 6

1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து

9. உறுப்புநலனழிதல்

(இ-ள்) நெஞ்சே! இக்கொடுமை செய்தவர்க்கு எனது தோள் வாடுதலானே ஊரிலெழுந்த அலரைச் சென்று சொல்லி, நீயும் நினது வாட்டம் நீங்கி அழகு பெறுவாயோ? (எ-று).

இது. 'நீ அவர்பாற் போகல் வேண்டும்' என்று நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது. நெஞ்சின் வலியழிதலும் கூறியவாறா யிற்று.

1238. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

(இ-ள்) யான் பிரிவதாக நினைத்து, முயக்கத்தின் கண்ணே எனது உடம்பை அகற்ற, அவ்விடைச் சிறுகாற்று ஊடறுத்தலானே எனது நீக்கத்தை அறிந்து பேதையுடைய பெருத்த குளிர்ந்த கண்கள் பசப்புற்றன, (எ-று).

இது, முதலாக மூன்று குறள் தலைமகன் கூற்று. இவை யிற்றின் கருத்துப் போக்கிச் சொல்லுதும். 8

1239. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

(இ-ள்) யான் பிரிவதாக நினைத்து, அவள் முயங்கிய கை களை நீக்கினேன்; அதனை யறிந்து, பசுத்த தொடியினையுடைய பேதையது நுதல் பசந்தது, (எ-று). 9

1240. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு

(இ-ள்) கண்ணிலுண்டாகிய பசலை கலங்கிற்று ஒள்ளிய நுதல் பசந்ததுகண்டு, (எ-று).

இவை மூன்றினானும் சொல்லியது: யான் பிரிவதாக நினைத்து முயக்கத்தின்கண்ணே உடம்பை அகற்ற அதனை யறிந்து கண் பசந்தது. அதன்பின் முயங்கிக் கொண்டு கிடந்த கைகளை விடுவிக்கநுதல் பசந்தது. அவ்வளவேயன்றி நுதல்

9. உறுப்புநலனழிதல்

பசந்த பின்பு கண்ணின் பசலைபோய் மற்றொன்றாம்படி ஆயிற்று. ஆதலான் யான் செல்லும் அளவும் ஆற்றுங் கொல்லோ என்று வினை முற்றிமீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

இவை அவர்வயின் விரும்பலின் பின் கூறற்பாலது. உறுப்பு நலன் அழிந்தமை கூறியவாகலான், ஈண்டுச் சேரக் கூறப்பட்டன. பருந்து விழுக்காடு. 10

---

10. நெஞ்சொடுகிளத்தல்

நெஞ்சொடுகிளத்தலாவது நெஞ்சு முன்னிலையாகத் தலைமகள் கூறியது. காதலடக்கமாட்டாதார் பிறர்க்குச் சொல்லுதற்கு நாணித்தம்நெஞ்சிற்குச் சொல்லி யாற்றுதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

1241. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.

(இ-ள்) எனக்கு நல்லநெஞ்சே! ஒன்று காமத்தை விடுதல் வேண்டும்; ஒன்று நாணத்தை விடுதல் வேண்டும்; என்னால் இவ்விரண்டுங்கூடப் பொறுத்தலரிது, (எ-று).

இது, பிரிவிடையாற்றாளாய்த் தலைமகனிருந்துழிச் செல்லக் கருதிய தலைமகள் நாணந்தடுத்தமைகண்டு கூறியது. 1

1242. துன்னார் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

10. நெஞ்சொடுகிளத்தல்

(இ-ள்) மேன்மேல் நம்மோடு செறியாராய்த் துறந்துபோன வரை நெஞ்சகத்தே யுடையேமாயின், முன்னம் இழந்த கவினொழிய இன்னமுமுள்ளகவினை இழப்போம்; ஆதலான் மறத்தலே கருமம், (எ-று).

ஈண்டு நெஞ்சென்றது மனத்தினுடையதானத்தை. இது நினைக்கின்றதனால் பயனில்லையென்று கூறியது. 2

1243. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

(இ-ள்) அவர் நம்மேற் காதலிலராக, என் நெஞ்சே! நீ கூட்டத்தைக்கருதி வருந்துகின்றது பேதைமை, (எ-று).

இஃது, அன்பிலார்மாட்டு வருந்தினாலும் பயனில்லையென்றது. 3

1244. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைய்தனோ செய்தார்க ணில்.

(இ-ள்) நெஞ்சே! நீ இறந்துபடாது இருந்து, அவர்வரவை நினைந்து வருந்துகின்றது யாதினுக்கு? வருத்தமுற்று நினைத்தல் நமக்குச் சிறுமைசெய்யும் நோயைத் தந்தார்மாட்டு இல்லையாயின் (எ-று).

இது, வாளாது வருந்துகின்றாயென்று கூறியது. 4

1245. கலந்துணர்ந்தும் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு.

(இ-ள்) காதலர் கொடுமையை உட்பட்டு அறிந்து வைத்தும், அவரைக்கண்டால் புலந்து கலக்கமாட்டாது முன்பே கலப்பை; இப்பொழுது பொய்யே காயாநின்றாய் நெஞ்சே (எ-று).

இது, கண்டால் புலக்க மாட்டாத நீ காணாவிடத்து வெறுக்கின்றது எற்றுக்கு?, என்று கூறியது. காட்சி-கனவின் கண்கண்ட காட்சி போலும். முன்பு ஒரு காலத்துப் பிரிந்த தலைமகனைக் கண்ட காட்சி எனினும் அமையும், 5

10. நெஞ்சொடுகிளத்தல்

1246. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா லுறாஅ தவர்.

(இ-ள்) நெஞ்சே! யாம் உற்றபின்பு உறாது போனவர் செறுத்தாரென்று அவரைக் கைவிடுதல் இயல்போ? (எ-று)

உறுதல்-விரைந்துறுதல். நாம் உறுவதன் முன்புதாம் உற்று வருந்தினார்; நாம் உற்ற பின்புதாம் உறார் ஆயினார்; யாம் செய்த தனையே அவரும் செய்தார்; ஆயின் அவரை விடுதலாகுமோ? என்று தலைமகள் தலைமகன் கொடுமையை உட்கொண்ட நெஞ்சிற்குச் சொல்லியது. 6

1247. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.

(இ-ள்) என்னெஞ்சே! நீ வருத்தமுற்று அவர் அருளுகின்றிலரென்று ஏங்கி நம்மைவிட்டுப்போனவர் பின்பே போகா நின்றாய், பேதையா யிருந்தாய், (எ-று).

இது, தலைமகனிருந்த தேயத்தை நினைந்து கவன்ற நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது. 7

1248. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று

(இ-ள்) நெஞ்சே! நீ அவர்மாட்டுச் செல்லுவையாயின், இக் கண்களும் அவரைக் காணுமாறு கொண்டு செல்வாயாக; அவரைக் காணலுற்று இவை என்னைத் தின்பனபோல நலியா நின்றன, (எ-று).

கொள என்றது-பார்க்க என்றவாறு. காட்சிப் பொருள் மேல் வருதலின் காட்சியாயிற்று. இது காண்டல் வேட்கையால் கூறியது.

1249. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு

(இ-ள்) நின்னாற் காதலிக்கப்பட்டவர் நினது உள்ளத்திலே யிருக்க, நீ நினைத்து யாவர்மாட்டுச் செல்கின்றாய் நெஞ்சே (எ-று).

10. நெஞ்சொடுகிளத்தல்

இது, வாளாதேபோயினாய்; இங்கே காணலா மென்றது. 9

1250. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து.

(இ-ள்) எனக்கு உற்ற இன்னாத நோயைத் தீர்க்கும் மருந்து யாதொன்றாயினும் இன்றே விசாரித்துச் சொல்லாய் நெஞ்சே, (எ-று).

இஃது, ஆற்றுதலரிதென்று கூறியது. இவையெல்லாம் தனித் தனி சிலகூற்றென்று கொள்ளப்படும். 10

11. நிறையழிதல்

நிறையழிதலாவது வேட்கை மிகுதியால் தன் நிலைமையழிந்து தலைமகள் கூறுதல். நெஞ்சின் மிக்கது புலப்படுமாதலான், அதன் பின் கூறப்பட்டது.

1251. காம மெனவொன்று கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.

(இ-ள்) காமமென்றொன்று கண்ணோட்ட முடைத்தன்று; என்னெஞ்சத்தை நடுநாள் யாமத்தினும் தொழில் கொள்ளா நின்றது (எ-று).

தொழில் கொள்ளலாவது அப்பொதினால் அவர் மாட்டுப் போக விடுத்தல். இது, நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்து ஆற்றாமையால் தலைமகள் தோழிக்குக் கூறியது.

1252. மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றிவிடும்.

11. நிறையழிதல்

(இ-ள்) காமத்தை யான் அடக்கக் கருதுவேன்; அவ்வாறு செய்யவும், அது தும்மல் தோன்றுமாறு போல, என் குறிப்பின்றியும் தோன்றாநின்றது, (எ-று).

இது, தலைமகள் நிறையழிந்து கூறிய சொற்கேட்டு, 'இவ்வாறு செய்யாது இதனை மறைத்தல் வேண்டும்' என்ற தோழிக்கு அவள் கூறியது. 2

1253. நிறையுடையே னென்பேன்மன் யானோ வென்[1] காம
மறையிறந்து மன்று படும்.

(இ-ள்) நிறையுடையே னென்றிருப்பேன் யானே இப்படி யிருக்கவும், என் காமமானது மறைத்தலைக்கடந்து மன்றின்கண்ணே வெளிப்படா நின்றது, (எ-று).

இது, தலைமகள் ஆற்றாமையாற் கூறிய சொற்கேட்டு 'நிறை யுடையார் இவ்வாறு செய்யார் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

1254. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

(இ-ள்) காமமாகிய மழு உடையாநின்றது; நாணமாகிய தாழினாலே அடைக்கப்பட்ட அறிவாகிய கதவினை, (எ-று).

இஃது 'அறிவும் நாணமும் உடையார் இவ்வாறு செய்யார்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 4

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று.

(இ-ள்) தம்மை யிகழ்ந்தார்பின் செல்லாத பெரியதகைமை, காம நோயுற்றாரால் அறிவதொன்று அன்று, (எ-று).

இது, தம்மையிகழ்ந்து போனவர் பின்சென்று இரங்குதல் பெரியார்க்குத் தகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 5

11. நிறையழிதல்

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

(இ-ள்) செறுத்தார் பின்பே யான் சேறலை வேண்டி இத் துயர் உற்றது என்று கொள்ளப்படும்; அளித்து, அதற்கு மற்றுப் பயனென்னை? (எ-று).

இது, 'தனித்திருந்து துயருறுதல் காமத்திற்கு இயற்கை' யெனக் கூறிய தலைமகளை நோக்கி, 'நின்போல்வார்க்கு இது தகாது என்ற தோழிக்கு அவள் கூறியது 6

1257. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

(இ-ள்) பலபொய்களையும் வல்ல கள்வனது தாழ்ந்த மொழியல்லவோ, நமது பெண்மையை அழிக்குங் கருவி, (எ-று).

இஃது, 'அன்பில்லாதானை நினைத்து யான் சொன்ன மாற்றத் திற்கு மாறுபடக் கூறுதல் பெண்மையல்ல' என்ற தோழிக்கு, 'அவன் என்னோடு கலந்த நாளில் சொன்ன சொற்கள் காண் நம் பெண் மையைக் கெடுக்கின்றது; அல்லது கெடாது' என்று (தலைமகள்) கூறியது, 7

1258. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

(இ-ள்) தீயின்கண்ணே நிணத்தையிட்டால் ஒக்க உருகும் நெஞ்சினை யுடையார்க்கு உளதாகுமோ, காதலரை யெதிர்ப்பட்டு வைத்து ஊடி நிற்பேமென்று நினைத்தல், (எ-று).

இது நிறையழிந்து கூறிய தலைமகள் ஆற்றுதற்பொருட்டு, 'நம் காதலர் வந்தால் ஊடுவையோ?' என்று நகைக்குறிப்பினால் கூறிய தோழிக்கு 'விடுதலரிது' என்று தலைமகள் கூறியது. 8

1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

11. நிறையழிதல்

(இ-ள்) புலப்பலெனச் சென்றயான் முயங்கினேன், நெஞ்சு முற்படப் பொருந்துதல் உறுதவனைக் கண்டு, (எ-று).

இஃது, ஊடுதல் தீமையென்ற தோழிக்கு, 'முன்னொருகால் அவன் பிரிந்து கூடியவழி என்மனம் செய்தது இது' என்று தலைமகள் கூறியது. 9

1260. நாணென வொன்றோ வறியலர் காமத்தாற்
பேணியார் பெட்பச் செயின்.

(இ-ள்) நாணென்பதொன்றும் அறியார்கள் மகளிர், காமம் காரணமாக, விரும்பப்பட்டவர் தாம் விரும்புமாறு செய்வாராயின், (எ-று).

அவர் விரும்புமாறு செய்தமையாலே நாண முண்டாகா தென்றவாறு ஆயிற்று. விரும்புமாறு செய்தலாவது, தலைமகன் தனது அன்பு தோன்ற நிற்றலும், தலைமகள் வேட்டது செய்தல் வன்மையும். 'பிரிந்து வந்தவனோடு புலவாது கூடுதல் நாண மாகாதோ?', என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 10

---

12. அவர்வயின் விதும்பல்

அவர்வயின்விதும்பலாவது அவர் வரவின்கண்ணே துக்கமுறுதல் என்றது காதலர் வரவு வேட்டிருத்தலென்றது. இவையெல்லாம் தோழிக்குக் கூறினவாகக் கொள்க. நிறையழிந்தார் எப்பொழுதும் காதலர் வரவிற்கு ஆசையுற்றிருப்பாராதலான், அதன்பின் கூறப்பட்டது.

1261. வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட.

12. அவர்வயின் விதும்பல்

(இ-ள்) கொண்கன் ஒருநாள் வருவானாக வேண்டும்; வந்தானாகில், என்பசலைநோயெல்லாங் கெடப் பருகுவன் (எ-று).

இது, வரவு வேட்கையாற் கூறியது 1

1262. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

(இ-ள்) நம் வேந்தன் போரின்கண்ணே பொருந்தி வெல்வானாக; யாம் மனையிலே பொருந்தி இம்மாலைப் பொழுதிலே நம் காதலர்க்கு விருந்து செய்வோமாக, (எ-று).

வருதற்கு இடையீடு அவன் வினை முடியாமையென்று நினைத்து அவனை வெல்க என்றாள். மனை-அட்டில் வந்தால் விருந்திடுமாறு நினைந்து கூறியது. 2

1263. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

(இ-ள்) என்கண்கள் கொண்கனைக் காண்பனவாக; அவை நிறையக் கண்டபின்பு எனது (மெல்லிய) தோளினுண்டாகிய பசலை நீங்கும், (எ-று).

இது காண்டல் வேட்கையால் கூறியது. 3

1264 புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

(இ-ள்) என் கண்போன்ற காதலர் வருவர் ஆயின் நம்மை நினையாமையை நினைத்துப் புலந்து நிற்பேனோ? நெட்டாறு நீந்தி வருகின்றார் ஆதலின் எதிர் சென்று புல்லிக்கொள்வேனோ? இவை இரண்டும் செய்யாதே வேட்கை தீரக்கலப்பேனோ? இவை மூன்றினும் யாது செய்வேன், (எ-று).

இது, கண்டாற் செய்வன இவை ஆதலின் இவை மூன்றும் செய்ய வேண்டா நின்றது என்று ஆராமை கூறுயது. 4

12. அவர்வயின் விதும்பல்

1265. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

(இ-ள்) கண்களும் அவர் வரவைப் பார்த்து இருத்தலானே ஒளியிழந்து புல்லென்றன; விரல்களும் அவர்போன நாளையெண்ணி முடக்குதலால் தேய்ந்தன, (எ-று).

இது, வரவு காணாமையால் தலைமகள் கூறியது. 5

1266. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

(இ-ள்) நெடுநெறிக்கட் சென்றார் வருநாளைக் குறித்து இருந்து இரங்குமவர்களுக்கு ஒருநாளைப்பொழுதுதானே ஏழு நாளைப் பொழுது போலச் செல்லாகின்றது, (எ-று).

இது, 'தலைமகன் குறித்த நாள் வருவதன் முன்னம் வருந்துகின்ற தென்னை' என்ற தோழிக்கு, 'அது தானும் கடிது வருகின்ற தில்லை' என்று தலைமகள் சொல்லியது. 6

1267. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு.

(இ-ள்) கூடுதற்கு அரிய காமத்தைக் கூடப் பெற்றுப்பிரிந்தவர் வருவாராக நினைத்து என்னெஞ்சம் மரமேறிப் பாரா நின்றது. (எ-று).

உயர்ந்த தன்மேல் ஏறினால் சேய்த்தாய் வருவாரைக் காணலாமென்று நினைத்து அதனை ஏறிற்றாகக் கூறிவேருவர் என்கிற ஆசைப்பாடு இன்னும் உடையேன்' என்றவாறு. 'அவர் வாரார்' என்று கூறியது. 7

1268. பெறினென்னாம் பெற்றக்கா லென்னாமுறினென்னா
முள்ள முடைந்துக்க கால்.[1]

12. அவர்வயின் விதும்பல்

(இ-ள்) பின்பு அவரைப் பெறுவேமென்றதனாற் பயன் என்னுடைத்தாம்? முன்பே பெற்றேமானேம், அதனால் பயன் என்னுடைத்தாம்? இப்பொழுது உற்றேமாயின் அதனால் பயன் என்னுடைத்தாம் என்று உள்ளம் உடைந்து போயினதாயின், (எ-று).

இது, வருவாரென்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 8

1269. இலங்கிழா யின்று மறப்பினென் றோள்மேல்
கலங்கழியுங் காரிகை நீத்து.

(இ-ள்) இலங்கின வளையையுடையவளே! யான் இன்று அவரை மறப்பேனாயின், பண்டேமெல்லிய என்னுடைய தோள்கள் தம்மழகினை நீக்கி வளை முதலான அணிகலமதனையும் கழல விடும், (எ-று).

இலங்கிழை என்றதனால் வருத்தமில்லாதவளே என்று விளித்தாளாகக் கொள்ளப்படும். தன் அணிகலன்கள் விலங்காமை யிருப்பச், 'சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டும்' என்று பின்புறுத்திய தோழிக்கு வன்புறை எதிரழிந்து கூறியது. 9

1270. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்.

* (இ-ள்) இன்பத்தை நச்சாது வலிமையையே நச்சிப்பேசுகின்ற மனமே துணையாகச் சென்றவர் வருவாரென்கின்ற ஆசைப்பாட்டினால் இன்னும் உளேனானேன், (எ-று)

† பிரியப்பட்டார்க்கு இதனின் மேல் இறந்துபாடல்லது துன்பம் நிகழாமையின் குறிப்பறிவுறுத்தல் பின் கூறுவாராயினார்,

இஃது அவர் வாரார் என்று கூறியது. 10

---

* கையெழுத்தல் பிரதியில் உரையில்லை. இது மனக்குடலருரை.

† கையெழுத்துப் பிரதியில் இது மட்டுமுளது.

13. குறிப்பறிவுறுத்தல்

குறிப்பறிவுறுத்தலாவது குறிப்பினை யறிவுறுத்துதல். மேல் தலைமகள் குறிப்புத் தலைமகன் அறிந்தான் என்றதல்லது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கின தலைமகன் குறிப்புத் தோழி யறிதலும், இரந்து பின்னின்ற தலைமகன் தோழி குறிப்பறிதலும், குறைநயப்பித்தவழித் தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும், நொதுமலர் வரையவந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புச் செவிலி யறிதலும், பிரிதலுற்ற தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிதலும், பிரிவு உணர்த்தச் சென்ற தோழி குறிப்புத் தலைமகன் அறிதலும், அவ்வழித் தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும் இவையெல்லாம் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு இத்துணையும் பிரிந்துழி நிகழ்பவை கூறினார் ஆதலானும், இனிப் புணர்ச்சி விதும்பல் கூறுகின்றார் ஆதலானும் ஈண்டுக் கூறப்பட்டது.

1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்கண்
உரைக்க லுறுவதொன் றுண்டு.

(இ-ள்) நீ மறைக்கவும் நின்னைக் கை கடந்து மறைத்தற்கு இசையாவாய் நின்கண்கள் சொல்லுவது ஓர் அருள் உண்டு, (எ-று)

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகளை, 'இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று' என்று வினாவிய தோழிக்குச் 'சுனை ஆடினேன்' என்று தலைமகள் மறைத்த விடத்து அவள் நாணம் நீங்குதற் பொருட்டுப் புணர்ச்சி உண்மை அறிந்தமை குறிப்பினால் தோழி சொல்லியது. இவ்வாறு ஒருபுறம் தோன்றச் சொல்லாக்கால் நாணத்தாலே இறந்துபடும். 1

1272. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

(இ-ள்) மொட்டின் முகிழ்ப்பின் கண் உளதாகிய நாற்றம் போல் அப் பேதையுடைய நகை முகிழ்ப்பின் கண்ணே உள்ளதோர் இன்பம் உண்டு, (எ-று).

13. குறிப்பறிவுறுத்தல்

இஃது இரந்து பின்னின்ற தலைமகனைத் தோழி நகையாடிச் சேட்படுத்த விடத்து இவள் குறிப்பினான் நமக்கு இன்பம் பயக்குமென்று தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. 2

1273. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

(இ-ள்) செறிந்த வளையினையுடையாள் செய்து அகன்ற களவு, நீ உற்ற துன்பம் தீர்ப்பதொரு மருந்தாதலை உடைத்து, (எ-று).

தோழி மெலிதாய்ச் சொல்லிக் குறைநயப்பித்தவழிக் கேளாதாரைப்போலத் தலைமகள் அகன்ற செவ்வியுள் எதிர்ப்பட்ட தலைமகற்கு 'நின்குறை முடியும்; நீ அவ்விடைச் செல்' என்று தோழி கூறியது. 3

1274. மணியுட் டிகழ்தரு[1] நூல்போன் மடந்தை
யணியுட் டிகழ்[2]வதொன் றுண்டு.

(இ-ள்) கோவைப்பட்ட நீலமணியின் கண்ணே தோற்றுகின்ற நூல்போல, இம்மடந்தை உடைய அழகினுள்ளே இவள் மறைக்கவும் தோற்றுகின்றதொரு துன்பம் உண்டு, (எ-று).

அழகு-புணர்ச்சியால் வந்த அழகு போலும், குறிப்பு ஒன்றுண்டென்பது, அதனுள் தோன்றுகின்றதனால் வந்த தொன்மையுற்ற குறிப்பு. நொதுமல் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புக் கண்டு, 'அதற்குக் காரணம் என்னை' என்று தோழியைச் செவிலி வினாயது. 4

1275. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

(இ-ள்) காண்பார் கண்ணிறைந்த அழகினையும் காம்பை பொருத்த தோளினையும் உடைய பேதைக்குப் பெண்மை நிறைந்த நீர்மை பெரிது, (எ-று).

இஃது 'இவள் வேறுபாடு எற்றினானாயிற்று' என்று வினாவிய செவிலிக்கு, 'இவள் வடிவுக்குத்தக்க பெண்மை நிரப்பம் உடையவள்

1. 'மணியுட்டிகழ்தரு'
2. 'அணியுட்டிகழ்' என்பன மணக். பாடம்.

18. குறிப்பறிவுறுத்தல்

ஆயதனானே வந்தது போலும் என்று தலைமகள் குறிப்பைக் கூறியது. பெண்மை நிரப்பம்- கற்பு. பூத்தருபுணர்ச்சியானும் புனல் தரு புணர்ச்சியானும் ஒன்றைச் சொல்லுவதாகக் குறித்துக் கூறினாள். இத்துணையும் களவு. 5

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

(இ-ள்) ஊடினகாலத்து (அதன்) அளவன்றி மிகவுமாற்றிப் புணருங் காலத்து முன்பு போலாது மேன்மேலும் விரும்புமாறு புணர்தல், யான் அரிதாக ஆற்றியிருந்து தம் அன்பின்மையை யெண்ணுவதொரு பிரிவையுடைத்து, (எ-று).

இது, பிரியலுற்ற தலைமகன் குறிப்பறிந்தமை தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 6

1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

(இ-ள்) குளிர்ந்த துறையை யுடையவன் தம்மை நீங்கினமையை நாமறிவதன் முன்னே வளைகள் அறிந்தன, (எ-று) 7

தலைமகன் சொல்லாது பிரிந்துழி அதனையறிந்த தோழி இதனை அறிவித்தால் இவள் ஆற்றுங் கொல்லோ? ஆற்றாள் கொல்லோ? என்றுட் கொண்டு பிரிவு உணர்த்தச் சென்ற குறிப்பு நோக்கி, 'இதனை இப்பொழுது சொல்லுமாறு என்னை என்று பரியல் வேண்டா; யான் முன்பே அறிந்தேன்' என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 8

1278. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்
காமநோய் சொல்லி யிரவு.

(இ-ள்) வாயாற் சொல்லாது கண்ணினாலே காமநோயைச் சொல்லி வேண்டிக் கோடல், தமது இயல்பாகிய பெண்மையோடே பின்னையும் ஒரு பெண்மையுடைத்தென்று சொல்லுவர் அறிவோர், (எ-று).

13. குறிப்பறிவுறுத்தல்

தலைமகன் பிரிவுக்கு இடையீடாகக் கொள்ளாது சொல்லுதல் வேண்டும் என்பது கருத்து பிரிவுணர்த்திய வழித் தலைமகள் குறிப்புக் கண்டு தோழி சொல்லியது. 8

1279. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

(இ-ள்) தொடியையும் நோக்கி, மெல்லிய தோளினையும் நோக்கி, அடியையும் நோக்கி, அவள் அவ்விடத்துச் செய்த குறிப்பு அதுவாயிருந்தது, (எ-று).

யான் பிரிவுணர்த்தியவழி, 'இருப்பேமாயின் தோள் மெலிந்து வளைகழலும், என்று நினைத்துப் போவாரைக் கருதி; நடக்கவல்ல ஆகவேண்டும், என்று அடியைப் பார்த்தாள்; ஆதலால் உடன் போதல் கருத்தினள்-என்று தோழி தலைமகற்குக் கூறியது. 9

'பிரியப்பட்ட தலைமகனை இத்துணைக்காலமும் இன்பந்துய்த்தாட்கு இன்றே இவ்வேறுபாடு வந்தது' என்று தோழி நோக்கிய குறிப்புக்கண்டு

1280. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.

(இ-ள்) எமது காதலர் பிரிந்து நெருநற்றுச் சென்றார்; யாமும் மேனி பசந்து ஏழுநாளுடையமாயினேம், (எ-று).

'அவர் பிரிவதன் முன்னும் பிரிவரென்றேங்கி, இன்புற்றிலேம்' என்று தலைமகள் கூறியது. 10

14. புணர்ச்சிவிதும்பல்

புணர்ச்சிவிதும்பலாவது பிரிந்து கூடிய தலைமகனும் தலைமகளும் புணர்தல் வேண்டி ஒருவரினொருவர் முந்துற விரைதல்.

1281. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

(இ-ள்) எல்லாவற்றினும் மெல்லிதாகிய பூவினும் மெல்லி தாயிருக்கும் காமம்; அதனது செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர், (எ-று).

இது, தலைமகள் புலவிக் குறிப்புக்கண்டு 'இன்பம் ஊடிக் கொள்ளலாம்; இப்பொழுது ஊடுவையாயின், இக்காமஞ் செவ்விதப்பும்" என்று புணர்ச்சி வேட்கையால் தலைமகன் நெஞ்சோடு கூறியது.

1282. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

(இ-ள்) காதலரை நினைத்த அளவிலே களிப்புறுதலும், கண்ட அளவிலே மகிழ்ச்சி பெறுதலும் களித்தலையும் மகிழ்தலையும் தனக்கு இயல்பாகவுடைய கள்ளிற்கு இல்லை; காமத்திற்கு உண்டு, (எ-று).

இது தலைமகனைக் கண்ணுற்றவிடத்துப் புலவியைக் கருதின தலைமகள் புணர்வு வேட்கையால் சென்ற நெஞ்சினைக் கண்டு தன்னுள்ளே வியந்து கூறியது 2

1283. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்.

(இ-ள்) நெஞ்சே! தினையளவும் ஊடாதொழிதல் வேண்டும்; பனையளவினும் மிக்க காமநுகர்ச்சி வருமாயின், (எ-று).

இஃது, ஊடநினைந்த நெஞ்சிற்குத் தலைமகள் கூறியது. இதுவும் ஒரு கூற்று.

14. புணர்ச்சிவிதும்பல்

1284. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.

(இ-ள்) ஈர்ப்பதனை யறிந்து வைத்தும், புனல் பாய்பவரைப் போல, நெஞ்சு பொய்ப்படுவதனை அறிந்துவைத்தும் புலக்கின்றது எற்றுக்கு? (எ-று).

இது, புலவிக்குறிப்பு நீங்குவான் தன்னுள்ளே சொல்லியது 4

1285. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

(இ-ள்) கண்ணாலே புலந்து அதனையும் முடிய நிறுத்தாது கலக்கமுற்றாள், புணர்தலை என்னினும் மிகத் தான் விரைதலானே, (எ-று).

இது தலைமகளுடைற் குறிப்பு நீங்கிப் புணரவிரைவது கண்டு தலைமகன் தன்னுள்ளே சொல்லியது. 5

1286. இனித்தக்க வின்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

(இ-ள்) பிறரால் இகழத்தக்க இன்னாமையை நீ எமக்குச் செய்யாவும், அது கண்டு களித்தார்க்கு அதனாலுள்ள குற்றத்தினைக் கண்டு வைத்தும் அதனையுண்ணால் வேட்கை நிகழுமாறு போலப் புணர்வு வேட்கையைத் தாராநின்றது, வஞ்சக! நின்மார்பு, (எ-று).

நின் தொழிலை மார்பும் உடைத்தாயிற்று. இது, புலவிக் குறிப்பு நீங்கின தலைமகள் தலைமகற்குச் சொல்லியது. 6

1287. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

(இ-ள்) தோழி யான் ஊடலைக் குறித்துச் சென்றேன்; அவனைக்கண்ட பொழுதே அதனை மறந்து கூடலைக்கருதிற்று, என் னெஞ்சு (எ-று).

14. புணர்ச்சிவிதும்பல்

இது. 'நீ அவனோடு புலவாது கூடியதென்னை' யென்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 7

1288. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

(இ-ள்) கண்ணெழுதுங் காலத்துத் தன் இமையகத்துப் புகுந்த கோலைக்காணாத கண்ணைப்போலக், கொண்கனது குற்றத்தினையும் அவனைக்கண்ட விடத்துக் கண்டிலேன், (எ-று).

இது. மேற்கூறிய சொற்கேட்டு, 'நீ அவனைக்கூறிய குற்றமெல்லாம் யாண்டுப் போயின' வென்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. 8

1289. காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல்லவை.

(இ-ள்) அவனைக்கண்டபொழுது அவன் குற்றமாயின யாவும் காணேன்; அவனைக்காணாத காலத்து அவன் குற்றமல்லாதன யாவும் காணேன், (எ-று).

இது மேற்கூறிய சொற்கேட்டுக் 'கண்ட காலத்து மறக்குமாறு போலக்காணாத காலத்தினும் மறப்பது நன்று' என்று நகைக்குறிப்பினால் கூறிய தோழிக்குச் சொல்லியது. 9

1290. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண்.

(இ-ள்) நம்மை விரும்பாது தன்மனம் விரும்புவனவே செய்தானாயினும், கொண்கனைக் காணாது அமையமாட்டா என் கண்கள், (எ-று).

இவையெல்லாம் ஊடற்பகுதியானவையும் முன்னுறு புணர்ச்சியானவையும் கண்டுகொள்க.

14. புணர்ச்சிவிதும்பல்

இது மேற்கூறிய சொற்கேட்டு "ஊடல் வேண்டுவோர் தலைமகற் காணாதொழிதலே உளது" என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 10

பிரிந்து கூடல் முடிந்தது

---

15. நெஞ்சொடுபுலத்தல்.

நெஞ்சொடுபுலத்தலாவது தலைமகன் பரத்தையிற் பிரிந்துழி அவனோடு புலக்கக் கருதிய தலைமகள் முற்பட அவனொடு கூட வேண்டிய நெஞ்சொடு புலந்து கூறுதல். இனி ஊடிக்கூடல் கூறுகின்றாராகலின், அவ்வூடுதலின் முற்பட இது தோற்றுமாதலின், முற் கூறப்பட்டது.

1291. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

(இ-ள்) அவருடைய நெஞ்சு அவர்வழி நின்று நம்மை நினையாமையைக் கண்டு வைத்தும், நெஞ்சே! நீ எம்வழி நில்லாது அவரை நினைத்தல் யாதினைக் கருதியோ? (எ-று).

இது, தலைமகன் வருங்காலத்து வாராத தலைமகனை உள்ளிய நெஞ்சொடு புலந்து கூறியது. 1

1292. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

(இ-ள்) தாமுடைய நெஞ்சும் தமக்குச் சுற்றமல்ல வாகுங் காலத்து, ஏதிலார் சுற்றமல்லராகுதல் எளிது (எ-று).

'தலைமகன் யாண்டுளன்' என்று குற்றேவல் மகளிரை அறிய விட, அவர், 'பரத்தையர் சேரியுளான் என்று கூறியவழி,' அவர் வந்த காலத்தில் நெஞ்சு நம்வழி ஒழுகாது அவர்வழி ஒழுகினால்

15. நெஞ்சொடுபுலத்தல்.

அவர் ஏதிலர் ஆகுவது எளிதன்றோ? என்று நெஞ்சொடு புலந்து கூறியது. ஏதிலார் என்றாள், பிறர் மலையிற் சொல்லுதலான். 2

1293. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத நெஞ்சு[1]

(இ-ள்) அவர் திறத்தைத் தானும் இகழ்ந்தால் அதனானே தனக்கு இளிவரவு உளவாகக் கருதி நினையாநின்றது சாவமாட்டாத நெஞ்சு, (எ-று).

இது, தலைமகள், 'நெஞ்சு அவரைப்போலத் தானும் இகழலாயிருக்க. இகழ்கின்றது மில்லை; அவர் செயலைக்கேளாது சாவவும் வல்லுகின்றதில்லை' யென்று அதனோடு புலந்து கூறியது. 3

1294. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

(இ-ள்) எனக்கு இன்றியமையாதம் நாணினையும் கடைப்பிடிக்கிலேன்; அவரை மறக்கமாட்டாத என் நன்மையில்லாத பேதை நெஞ்சோடு கூட்டுப்பட்டு, (எ-று).

இது, தலைமகள் 'யான் காணாது தூது விட்டதும் என் நெஞ்சு மறவாமையாலே' என்று அதனோடு புலந்து கூறியது. 4

1295. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

(இ-ள்) நெஞ்சே! நீ புலவியை நீளச்செய்து, பின்னை நுகர மாட்டாய்; ஆதலான், இனி அப்பெற்றிப்பட்ட எண்ணத்தை நின்னொடு எண்ணுவார்யார்? இல்லை, (எ-று).

தலைமகனோடு புலக்க நினைத்த நெஞ்சினை, 'முன்பும் ஒரு நாள் புலந்து நீடிய நில்லாவாயினாய்; இன்னும் புலப்பேனாயின் அறைபோகுவை; ஆதலான் தனியே எண்ணிக்கொள்கின்றேன்; நின்னோடு எண்ணிலேன்' என்று அதனோடு புலந்து கூறியது. 5

---

1 'நெஞ்சு" என்பது மணக். பாடம்

15. நெஞ்சொடுபுலத்தல்

1296. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.

(இ-ள்) யான் தனிப்பட்டிருந்து நினைத்தால் இடம்பார்த்து என்னை நலிவதாக இருந்தது என்னெஞ்சு (எ-று).

இது, அவர் செய்கின்ற கொடுமையையுட்கொண்டு உள்ள துயரம் யான்தனிப்பட்டால் நலிவதாக இருந்தது; நீவருதலானே இப்பொழுது தப்பினேனென்று நெஞ்சொடு புலந்து தோழிக்குக் கூறியது. 6

1297. பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மறாஅ விடும்பைத்தென் னெஞ்சு.

(இ-ள்) காதலரைப் பெறாதகாலத்துப் புணர்வு இல்லையோ என்று அஞ்சும்; பெற்றோமாயின், பிரிவாரோ என்று அஞ்சும்; அதனால், இடைவிடாத துன்பத்தை உடைத்து என்னெஞ்சு, (எ-று)

இது, தலைமகள் ஆற்றாமைக்கண்டு, தூதுவிடக்கருதிய தோழிக்கு அவர் வந்தாலும் இதற்குள்ளது துன்பமேயென்று அதனொடு புலந்து கூறியது. 7

1298. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

(இ-ள்) நெஞ்சே! நீ என்வழி நில்லாது வேண்டினவண்ணமே அவர்பின் செல்கின்றது, கெட்டார்க்கு நட்டார் இல்லையென்பதனாலோ? (எ-று).

இது வாயில் மறுத்த தலைமகள் அவனோடு கூட்டம் வேண்டிய நெஞ்சொடு புலந்து கூறியது. 8

1299. துன்பத்திற் கியாரே துணையாவர் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

(இ-ள்) துன்பமுற்றால் துணையாவார் உண்டோ? தம்முடைய நெஞ்சும் தமக்குத் துணையல்லாத காலத்து (எ-று).

15. நெஞ்சொடுபுலத்தல்

துணையாவார் யாரென்றது தோழியைக்குறித்து. தலைமகள் வாயில் மறுத்தவிடத்துத் தோழி நெருங்கிக் கூறியவழி உடன்பட்டநெஞ்சொடு புலந்து வாயில் நேர்வாள் சொல்லியது. 9

1300. உறாஅ தவர்க்கண்ட கண்ணுமவரைச்
செறாஅரெனச் சேறியென் னெஞ்சு.

(இ-ள்) என்னெஞ்சே! அன்புறாதாரைக்கண்ட விடத்திலும் அவர் செற்றம் நீங்குவாரென அவர்மாட்டுச் செல்லா நின்றாய் என்னே, (எ-று).

இஃது உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் புலந்த வழி 'இன்னும் ஒருகால் உணர்த்துவோம்' என்று கருதின நெஞ்சொடு புலந்து கூறியது.

இவை மூன்றும் புலவியின் கண் நிகழ்வதேயாயினும் நெஞ்சொடுபுலத்தல் சொல்கின்றாராதலின் ஈண்டுக் கூறப்பட்டன. 10

16. புலவி

புலவியாவது தலைமகனோடு தலைமகள் புலந்து கூறுதல். இது வெளிப்பட்டு நிகழ்தலின், அதன்பின் கூறப்பட்டது.

1301 புல்லா திராஅப் புலத்தி[1] யவருறு
மல்லல்யாங் காண்கஞ் சிறிது.

(இ-ள்) நம் காதலர் வந்தால் புல்லாதிருந்து புலக்க வேண்டும்; அவ்விடத்து அவருறு கலக்கம் யாம் சிறிது காண்போமாக, (எ-று).

---

1. 'புலத்தை' என்பது மணக். பாடம்,

16. புலவி

இது, வாயில் வேண்டிச் சென்ற தோழி தலைமகள் புலவிக் குறிப்புக் கண்டு முகங்கோடற் பொருட்டு இனிமை கூறியது. 1

1302. நலத்தகை நல்லவர்க் கோஎர்[1] புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து.

(இ-ள்) நலத்தகையினானே நல்லாரான பரத்தையர்க்கு அழகாம்; பூவன்ன கண்ணார் மாட்டுப் புலத்தல், (எ-று).

நமக்கு அவர் மாட்டுப் புலத்தல் தீதன்றவாறு ஆயிற்று. இது, பரத்தையொடு புலந்து கூடிய* தலைமகற்குத்† தோழி கூறியது. 2

1303. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.

(இ-ள்) நுகர்வனவற்றிற்கு உப்பமைந்தாற் போல இனிமையுண்டாக்கும் புலவி; அதனை நீளவிடல் அவ்வுப்புச் சிறிது மிக்காற் போல இன்னாதாம்.

இது, வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் மறுத்த விடத்துப் புலவியை நீளவிடுதல் தக்கதன்று என்று தோழி கூறியது. 3

1304. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

(இ-ள்) ஊடற் செவ்வி இன்பம் உண்டாயினும், அதன் கண்ணும் ஒரு துன்பம் உண்டு; புணருங்கால், அது நீடுங் கொல்லோ? நீடாது கொல்லோ? என்று ஐயுறுதலால், (எ-று).

இது, தலைமகள் ஆற்றாமை வாயிலாகப் புலக்கத் தலைமகள் புலவி கண்டு தலைமகன் சொல்லியது. 4

1305. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

---

1. 'கோரம்' என்பது மணக். பாடம்.

* கூறிய பிரதிபேதசம், † தலைமகட்கு பிரதிபேதம்.

16. புலவி

(இ-ள்) குளிர்ச்சியைத் தனக்கு இயல்பாக வுடையநீரும் நிழலின் கண்ணதேயாயின், இனிதாம்; அதுபோலப், புலவியும் அன்புடையார் மாட்டேயாயின், இனிதாம். (எ-று).

மேல் புலவியின் கண் ஒரு துன்பம் உண்டு என்று தலைமகன் கூறிய சொற்கேட்டு, 'அஃது இன்பமாவது அன்புடையார்க்கு; நுமக்கு அன்பின்மையால் துன்பமுண்டாயிற்று'-என்று தலைமகள் கூறியது.

1306. துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.

(இ-ள்) உணராது நீட்டிக்கின்ற துனியும் உணர்த்தமீளுகின்ற புலவும் இல்லையாயின், காமம் ஆனது பழத்தையும் முற்றாத காயையும் ஒக்கும் (எ-று).

தலைமகள் புலவிநீட்டித்த வழித்துனி யில்லையாயின் பழம் போல இனிமைதரும்: புலவியில்லையாயின் காய் போலத்துவர்க்கும்; ஆதலான் இஃது உணர்தற்கு நல்லளவு என்று கூறியது. 6

1307. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

(இ-ள்) நும்மொடு ஊடினவரை ஊடல் தீராது வருதல், முன்பே வாடின கொடியைத்தூரிலே அரிந்தாற்போலும், (எ-று).

இது தலைமகன் தன்னை ஊடல் தீர்ப்பச் செய்தவற்றைக் கண்டு, 'இவையிற்றால் ஈண்டுப்பயன் இல்லை; நின்னொடு நெருநல் ஊடிய காமக்கிழத்தியை ஊடல் தீராது பெயர்ந்தாய்; அது தக்க தன்று ஆண்டுப்போ' என்று தலைமகள் கூறியது. எமக்கு மககளை வளர்த்து அறம் நோக்குமதல்லது காமத்தால் பயனில்லை என்றவாறு. 7

1038. நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காத லவரில் வழி[1].

(இ-ள்) யான்நோகின்றதனால் பயனென்னை? இவர் நொந்தாரென்று நினைத்து, அதனை யறிந்துதீர்க்கும் அன்பு அவரிலராகியவிடத்து (எ-று).

---

1. "காதலரில்லா வழி" என்பது மணக். பாடம்.

16. புலவி

இஃது, உணர்ப்புவயின்வாராவூடற்கண் தலைமகன் புலந்து கூறியது. 8

1309. அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் காமம்
புலந்தாரைப் புல்லா விடல்.

(இ-ள்) முன்பே கலக்கமுற்று அழிந்தாரை அதன் மேலும் அல்லல் செய்யும் நோயைச் செய்தாற்போலும், காமத்தில் புலந்தாரை முயங்காது விடுதல், (எ-று).

இஃது, உணர்ப்புவயின் வாராவூடற்கண் தலைமகன் புலந்துழி அதனை அறிந்து அகம்புக்கதோழி தலைமகற்குச் சொல்லியது 9

1310. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

(இ-ள்) என் புலவியைச் சாக விட்டவல்லாரோடே என்னெஞ்சு, கூடுவேனென்று நினைக்கின்றது ஆசைப்பாடு, (எ-று).

இஃது உணர்ப்புவயின்வாராவூடற்கண் தலைமகன் புலந்தது கண்டு புலவி நீங்கவேண்டுமென்ற தோழிக்குப் புலவி தீர்வான் சொல்லியது. 10

---

17. புலவிநுணுக்கம்

புலவிநுணுக்கமாவது தலைமகன் மாட்டுத் தவறின்றாயினும், தனது காதல் மிகுதியால் சொல்லெச்சத்தினாலும் பலவாற்றானும் வேறுபடப் பொருள் கொண்டு, தலைமகள் புலந்து கூறுதல். இது.

17. புலவிநுணுக்கம்

செவ்வையிற் றோன்றாமையின் நுணுக்கமாயிற்று. புலவியினும் நுண்ணியபுலவி என்று கூறினமையால் வேறுபடுத்து அதன்பின் கூறப்பட்டது.

1311. யாரினுங் காதல மென்றேமா வூடினாள்
யாரினும் யாரினு மென்று.

(இ-ள்) ஒருவனும் ஒருத்தியுமாகி அன்று அன்பினால் புணர்ந்தார் யாவரினும் யாம் காதலுடையே மென்று சொன்னோமாக, அதனை அவ்வாறு கொள்ளாது நீர் அன்புபட்டார் பலருள்ளும் யாரினும் யாரினும் அன்புடையீராயினீ ரென்று சொல்லி ஊடினாள். (எ-று)

காதலுடையேம் என்று உளப்பாட்டுத் தன்மையாகக் கூறியவதனை உயர்ச்சியாகக் கூறினானாகக் கருதினாள். தலைமகன் வாயில் வேண்டின விடத்து, 'நின்குற்றத்தினாலே ஊடல் மிக்கிருந்தாள்' என்று கூறிய தோழிக்கு, 'அவள் ஊடுதற்கு யான்குற்றம் செய்ய வேண்டா; யான் சொல்லுவனவும் செய்வனவும் எல்லாம் குற்ற மாயிருக்கும்; அவள் குற்றமாகக் கொண்டவற்றைக்கேள்' என்று சொல்லுவான், முற்பட 'அன்புடையேன்' என்று சொல்லியது குற்றம் ஆயிற்றென்று கூறியது. 1

1312. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

(இ-ள்) இப்பிறப்பில் யாம் பிரியே மென்று சொன்னேன்; அதனானே மறுபிறப்பின்கண் பிரிவுண்டென்று கருதிக் கண்ணிறைய நீர் கொண்டாள், (எ-று).

இது பிரியேனெனினும் குற்றமா மென்று கூறியது. 2

1313. உள்ளினே னென்றீர்மற் றெம்மறந் தீரென்றெம்மைப்
புல்லாள் புலத்தக் கனள்.

(இ-ள்) நீர் துறந்தவிடத்து எம்மை நினைந்தேனென்றீர்; மறந்தாரன்றே நினைப்பார்; ஆதலான், எங்களை மறந்தீரென்று எம்மை முயங்காளாய்ப் புலவித் தகுதியளாயினாள், (எ-று).

17. புலவிநுணுக்கம்

இது, நினைத்தேனெனினும் குற்றமாமென்று கூறியது. 3

1314. வழுத்தினா டும்மினே மாக வழித்கழுதான்
யாருள்ளித் தும்மினி ரென்று.

(இ-ள்) யாம் தும்மினேம்; அதற்காக வாழ்த்தினாள்; மீட்டு அழுதாள் நும்மை யார் நினைக்கத் தும்மினீர் என்று சொல்லி, (எ-று)

இது, தும்மினும் குற்றமா மென்று கூறியது. 4

1315. தும்முச் செறுப்ப வழுதா ளுமக்குள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

(இ-ள்) தும்மல் தோற்ற அதனை யடக்கினேன்; அதற்கு அழுதாள் நுமர் உள்ளினமையை எம்மை மறைக்கின்றீரோ வென்று சொல்லி, (எ-று).

இது, தும்மாதொழியினும் குற்றமென்று கூறியது. 5

1316. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினி ரென்று.

(இ-ள்) தனது உறுப்புக்களோடு வேறொன்றை உவமிக்க ஒண்ணாமையை நினைந்து நோக்கி இருப்பினும் வெகுளும், என் னுறுப்பெல்லாம் நீர் காதலித்தவர்களில் யாருறுப்புக்கு ஒக்குமென்று நினைத்து நோக்கினீரென்று சொல்லி, (எ-று).

இது, பார்க்கினும் குற்றமென்று கூறியது. 6

1317. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினி ரென்று.

(இ-ள்) பக்கப்பூச் சூடினும் காயும், ஒருத்திக்குக் காட்டுதற்காகச் சூடினீரென்று சொல்லி (எ-று).

பக்கப்பூ-ஒப்பனைப்பூ வளையப்பூச் சூடினும் என்றுமாம். அன்றியும் கோட்டுப்பூச் சூடினேன் ஆயின், 'இப்பூ இந்நிலத்தில் உள்ள

தொன்றல்ல; பிறர் நிலத்தில் உள்ளது' என்று ஐயுற்றுவெகுளும். 'இதனை நீர் சூடியதும் அந்நிலத்தில் உள்ளாள் ஒருத்தியை எனக்கு அறிவித்தற்பொருட்டு' என்று சொல்லி என்றுமாம். கோட்டுப்பூ மருத நிலம் அல்லாத நிலத்தில் உள்ளபூ. இது கோலஞ் செய்யினும் குற்றமென்று கூறியது.

1318. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
நீர்மீர ராகுதி யென்று.

(இ-ள்) தன்னை ஊடல் தீர்க்கும் பொழுதும் வெகுளும் பிறர்க்கும் இவ்வாறு செய்வீரே யென்றுசொல்லி, (எ-று).

இது, தன்னைப்போற்றினும் குற்றமாமென்று கூறியது. இவை எட்டுந் தலைமகன் கூற்று. இவை நெஞ்சொடு புலத்தலின் பின் கூறற்பாலதாயினும் புலவிநுணுக்கம் சேரச் சொல்ல வேண்டும் ஆதலானும் இறந்தது காட்டல் என்னும் தந்திர உத்தியால் ஈண்டு கூறப்பட்டது. 8

1319. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

(இ-ள்) பரத்தமையை யுடையாய்! நின்மார்பைப் பெண் தன்மையுடையா ரெல்லாரும் தமக்குப் பொதுவாக நினைத்துக் கண்ணினாலே நுகராநிற்பர்; ஆதலான், யான் அதனைத் தீண்டேன், (எ-று).

இது, தலைமகள் புலவிகண்டு என்மாட்டுக் குற்றமியாது என்று கூறிய தலைமகற்குத் தலைமகள் கூறியது. 9

1320. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்ப தறிந்து.

(இ-ள்) தம்மொடு புலந்து உரையாடாது இருந்தேன் அவ்விடத்தும் தும்பினார், யாம் தம்மை நெடிது வாழ்வீரென்று சொல்லுவே மென்பதனை யறிந்து, (எ-று).

இஃது, ஆற்றாமைவாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கியபின் அகம் புக்க தோழிக்கு 'அவன் செய்தகளவு இது' என்று தலைமகள் கூறியது. 10

---

18. ஊடலுவகை

ஊடலுவகையாவது ஊடலையுவந்து கூறியது. அஃதாவது புலவி நீங்கிப் புணர்ந்த தலைமகன் மற்றுள்ள நாள்கள் போலன்றிப் புணர்ச்சி பெரியதோ ரின்பமுடைத்தென்று அதற்குக் காரணமாய ஊடலை உவந்து கூறுதலும் அவ்வண்ணமே தலைமகள் கூறுதலு மாம் இது மேலதனோடியையும்.

1321. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.

(இ-ள்) விளங்கிய இழையினையுடையாள் என்றும் ஊடுவாளாக வேண்டும்; யாம் இவளை இரந்து ஊடல் தீர்க்கும் அளவும் இராப்பொழுது நெடிதாவதாக வேண்டும் (எ-று).

இது மனவூக்கத்தின்கண் வந்தது. என்றும் உளதாக வேண்டும் என்றதனால் கூடலினும் ஊடல் நன்றென்றது. 1

1322. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

(இ-ள்) ஊடலின்கண் எதிராது சாய்ந்தவர் வென்றார்; அவ் வெற்றியை நிலைபெறா நின்ற கூடலின் கண்ணே காணலாகும் (எ-று).

யான் சாய்ந்தேனாயின் இப்பொழுது என்னது வெற்றி என்றவாறாயிற்று. தலைமகன் ஆராமைக் கண்டு கூறியது. 2

18. ஊடலுவகை

1323. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது.

(இ-ள்) உண்டலினும் உண்டது அறுதல் உடம்பிற்கு இன்பம்; அதுபோலக் காமத்திற்குப் புணர்தலினும் ஊடுதல் இன்பமாம் (எ-று)

பசியினால் உண்ணும் உணவு இன்பந் தரும்; அது போல, ஊடலினால் கூடல் இன்பந்தரும் என்றவாறு. 3

1324. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

(இ-ள்) காமத்திற்கு ஊடுதல் இன்பமாம்; அவ்வூடுதற்கு இன்பமாம் அதன்பின் கூடிக் கலக்கப் பெற்றால், (எ-று).

இது, 'யாம் பெற்றேம் பிறர் அதன் செவ்வியறியாமையால் பெறுதலரிது' என்று கூறியது. 4

1325. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

(இ-ள்) ஊடலின்கண் தோன்றுகின்ற சிறியதுனி, மிக்க அருள் பெறாதொழியினும் அழகு உடைத்து, (எ-று).

புணர்தல் இன்பமென்றூர் புணரா தொழியினுமாமென்று கூறப்பட்டது. 5

1326. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

(இ-ள்) இன்னும் ஒருகால் ஊடிப்பெறுவோமோ நுதல் வெயர்ப்பக் கூடிய கூட்டத்தாலே யுண்டாகியஇன்பம், (எ-று).

ஊடுதல் இருவர்க்கும் உண்டாகலால் பொதுப்படக் கூறினார். நுதல்வியர்ப்ப என்றான், புணர்ச்சிக்காலத்து வேகம்மிகுதலை. இது ஊடினார்க்கு அல்லது இன்பம் பெறுதலரிதென்றது. 6

18. ஊடலுவகை

1327. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னாங்கொன் றுடைத்து.

(இ-ள்) தாம் தவறில்லாராயினும், தாம் காதலிக்கப்பட்டாரது மென்றோள் நீங்குதலானே, அஃது ஓரின்பமுடைத்தாம், (எ-று).

இது, குற்றம் உண்டாயினும் இல்லையாயினும், ஊடலால் கூடல் நன்றென்று கூறியது. 7

1328. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

புல்லின இடத்துத் துனியாம்படி இவனைப் பொருந்திவிடாதே நிற்கின்ற புலவிக்கண்ணே வெளிப்படும் எனது உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம் போன்ற துன்பம் (எ-று).

நீடுங்கால் புலவி துன்பம் எனவே புலவி கடிது நீங்கவேண்டும் என்றது. விட்டுப் புலந்த இடத்துத் தோற்றும் எனது உள்ளத்தை அழிக்கும் கருவி என்றவாறு.

அஃதாவது தலைமகள் புலவியால் கூறும் சொற்கள். அது புணர்ந்த பின்பு தோன்றாமையால், அதனைக் கேட்டல் இன்பமுடைத்தென்று கூறியது. இதுவொட்டும் தலைமகன் கூற்று. 8

1329. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

(இ-ள்) அவர்க்குத் தவறில்லையானாலும், அவர் செய்யும் அருள் ஊடுதலைச் செய்யவற்று, (எ-று).

இவ்வருள் பிறர்க்கும் செய்வர் என்னும் கருத்தினானே ஊட வேண்டும் என்றவாறாயிற்று. தலைமகன் புணர்ந்து நீங்கியவழித் தலைமகள் இன்பச் செவ்வி கண்டு, இவ்வாறு 'இன்பம் நுகராது தவறு இல்லார் மாட்டுத் துன்பம் தாகிய புலவியைச் செய்கின்றது எற்றுக்கு என்று வினாவிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 9

18. ஊடலுவகை

1330. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

(இ-ள்) நிலனும் நீரும் பொருந்தினாற்போல ஒன்றுபட்ட நெஞ்சுடையார் மாட்டுப் புலத்தல்போல, இன்பந்தருவதொரு தேவர் உலகம் உண்டோ? (எ-று).

நிலத்தொடு நீரியைதலாவது அவை வெப்பமுந்தட்பமுங் கூடி அனுபவிக்கும் வகை போல, இன்பமுந்துன்பமுங்கூட அனுபவிப் பார்மாட் டென்றவசறு. தலைமகன் புலந்து நீங்கியவழி 'நுமக்குப் புலவி நன்றாயிற்று' என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது. 10

ஊடிக்கூடல் முடிந்தது.

காமத்துப்பால் ஒருவகையான் முடிந்தது.

தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைந்துத் தேமொழியா
ரொள்ளிய காமநூ லோர்ந்துரைத்து—வள்ளுவனார்
பொய்யற்ற முப்பாற் பொருளுரைத்தார் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பெருமான் தேர்ந்து.

முதற்குறிப்பகராதி

	பக்க எண்
அகடாரா	284
அகப்பட்டி	327
அகரமுதல	1
அகலா தணுகாது	212
அகழ்வாரைத்	51
அகனமர்ந்து	29
அகனமர்ந் தீதலின்	31
அஃகாமை	57
அஃகியகன்ற	56
அங்கணத்துள்	219
அசையியற்	337
அச்ச முடையார்க்கு	162
அச்சமே கீழ்கள	327
அஞ்சாமை யல்லாற்	151
அஞ்சாமை யீகை	119
அஞ்சுமறியான்	265
அஞ்சுவ தஞ்சாமை	131
அஞ்சுவ தோரும்	111
அடக்க மமரருள்	44
அடல் வேண்டும்	105
அடற்றகையும்	235
அடுக்கிய கோடி	292
அடுக்கி வரினும்	190
அடுத்தது காட்டும்	214
அணங்குகொல்	331
அணியன்றோ	309
அந்தண ரென்போர்	10
அந்தணர் நூற்கும்	166
அமரகத் தாற்ற	248
அமரகத்து வன்கண்	311
அமிழ்தினும்	22
அமைந்தாங்	145
அரங்கின்றி	124

	பக்க எண்
அரம்பொருத	270
அரம் போலும்	305
அரிதரோ	359
அரிதாற்றி	358
அரியவென்	163
அரிய கற்று	152
அரியவற்றுள்	136
அருங்கேடனென்	65
அருஞ்செவ்வி	173
அருட் செல்வம்	76
அருமறை	259
அருமையுடைத்து	186
அரும்பயனாயு	62
அருவினை	49
அருளல்ல	80
அருளிலார்க்கு	77
அருளென்னும்	231
அருளாடு	230
அருள்கருதி	89
அருள்சேர்ந்த	77
அருள்வெஃகி	57
அலந்தாரை	409
அலரெழ	355
அலர் நாண	353
அல்ல லருளாள்	77
அல்லவை தேய	32
அல்லற்பட்டு	170
அவர் தந்தார்	367
அவர் நெஞ்சம்	403
அவா வில்லார்	111
அவாவென்ப	111
அவா வினை	112
அவிசொரிந்து	81

அவையறிந்து	217
அவையறியார்	219
அவ்வித்தழுக்காறு	54
அவ்விய நெஞ்சத்தான்	53
அழக்கொண்ட	200
அழச் சொல்லி	243
அழல் போலு	380
அழிவதூஉம்	142
அழிவந்த செய்யினும்	246
அழிவினவை நீக்கி	240
அழிவின்றறை	233
அழக்கற்ற	54
அழுக்காறவா	13
அழுக்காறுடை	55
அழுக்காறென்	55
அழுக்காறுடையான்	45
அழுக்காற்றின	53
அளவல்ல	89
அளவளா	160
அளவறிந்தார்	90
அளவறிந்து	146
அளவின் கண்	89
அளித்தஞ்சல்	357
அறங்கூறானல்ல	59
அறஞ்சாரா	318
அறஞ்சொல்லு	59
அறத்தாறிது வென	12
அறத்தாற்றின்	16
அறத்தான் வருவதே	12
அறத்திற்கே யன்பு	27
அறத்தினூஉங்	13
அறம் பொருள்	155
அறவாழியந்தணன்	3
அறவினை யாதெனின்	99
அறவினையு மான்ற	276
அறனழீஇ	59
அறனறிந்	192
அறனறிந்து மூத்த	136
அறனறிந்து வெஃகா	57
அறினியலான்	47
அறனிழுக்காது	119
அறனெனப்பட்டதே	17
அறனாக்கம்	54
அறனீனும்	230
அறன்கடை	47
அறனோக்கி	60
அறன் வரையன்	49
அறிவிலார்	350
அறிகொன்	194
அறிதோறறி	340
அறிந்தாற்றிச்	156
அறிவற்றங்	132
அறிவிலார்	259
அறிவிலான்	258
அறிவினான்	97
அறிவினுளெல்லா	66
அறிவின்மை	259
அறிவுடையார்	131
அறிவுடையாரெல்லா	130
அறிவுருவாராய்ந்த	208
அறுவாய் நிறைந்த	343
அறைபறை யன்னர்	328
அற்கா	102
அற்ற தறிந்து	288
அற்ற மறைக்கும்	298
அற்ற மறைத்தலோ	258
அற்றவ ரென்பார்	111
அற்றாரைத் தேறுத	153
அற்றா ரழிபசி	71
அற்றார்க் கொன்று	306
அற்றாலளவறிந்து	287
அற்றேமென்	190
அனிச்சப்பூக்	345
அனிச்சமும்	345
அன்பகத் தில்லா	25
அன்பறிவாராய்ந்த	208
அன்பறிவு தேற்ற	157
அன்பீல னான்ற	264
அன்பிலா ரெல்லாந்	26
அன்பிற்கு முண்டோ	27
அன்பின் வழியது	26
அன்பின் விழையார்	278
அன்பீனுமார்வ	27
அன்புடைமை	302
அன்புடைமை யான்ற	207
அன்புநா ணொப்புரவு	300
அன்பு மறனும்	16
அன்புற் றமர்ந்த	26
அன்பொரீஇ	305
அன்போ டியைந்த	26

அன்றறிவாம்	11
ஆகா றளவிட்டி	146
ஆகூழாற்	114
ஆக்கமுங் கேடும்	196
ஆக்கமதர்வினாய்	181
ஆக்க மிழந்தே	182
ஆக்கங் கருதி	143
ஆங்கமை வெய்தி	226
ஆபயன் குன்றும்	168
ஆயுமறிவினர	280
ஆய்ந்தாய்ந்து	245
ஆரா வியற்கை	118
ஆவிற்கு நீரென்	324
ஆள்வினையு மான்ற	311
ஆற்றாரு மாற்றி	151
ஆற்றினளவறிந்	146
ஆற்றினளவறிந்து கற்க	222
ஆற்றினொழுக்கி	17
ஆற்றினிலை தளர்ந்	217
ஆற்றின் வருந்தா	143
ஆற்றுபவர்க்கு	226
ஆற்றுவாராற்றலிகழாமை	274
ஆற்றுவா ராற்றல் பசி	72
ஆற்றுவா ராற்றல் பணி	300
இகலானாம்	261
இகலிற்கெதிர்	260
இகலின் மிகலின்	261
இகலெதிர்சாய்ந்	260
இகலென்ப வெல்லா	260
இகலென்னும்	261
இகல் காணான்	260
இகழ்ச்சியிற்	162
இகழ்ந்தெள்ளா	321
இடமெல்லாங்	325
இடனில் பருவத்து	67
இடிக்குந் துணையார்	137
இடிபுரிந்தெள்ளும்	184
இடிப்பாரை யில்லாத	138
இடுக்கண் வரினும்	199
இடுக்கண் கால்	313
இடுக்கண் வருங்கால்	189
இடும்பைக் கிடும்பை	189
இடும்பைக்கே கொள் கலம்	312
இடை தெரிந்து	218
இணரூழ்த்தும்	196
இணரெரி தோய்	94
இதனையிதனால்	157
இமைப்பிற கரப்பாக்	348
இமையாரின் வாழி	275
இம்மை பிறப்பு	410
இயல்பாகு நோன்	105
இயல்பினானில் வாழ்	17
இயல்புளிக் கோல்	166
இயற்றலு மீட்டலும்	120
இரக்க விரத்தக்கார்க்	320
இரத்தலி னின்னாது	71
இரத்தலு மீதலே	321
இரந்துமுயிர் வாழ்	325
இரப் பனிரப்பாரை	323
இரப்பாரை யில்லா	320
இரப்பான் வெகுளாமை	322
இரவாரிரப்பார்க்	316
இரவுள்ள வுள்ள	324
இரவென்னு மேமாப்பி	324
இருநோக் கிவளுண்	335
இருந்துள்ளி	387
இருந்தோம்பி	28
வருபுனலும்(இருபுனலும்)	223
இருமனப் பெண்டிருங்	280
இருமை வகை	9
இருவேறுலகத்	116
இருள் சேரிரு	3
இருணீங்கி யின்பம்	109
இலக்க முடம்பிடும்	190
இலங்கிழா யின்று	395
இலமென் றசை	317
இலமென்று வெஃகுதல்	56
இலபலராகிய	84
இலனென்னும்	70
இலமென்று தீயவை	64
இல்லதெனில்லவண்	19
இல்லாரை யெல்லா	232
இல்லாளை யஞ்சுவா	275
இல்லாள் கட்டாழ்ந்த	276

இல்லை தவறவர்க் 415
இல்வாழ்வானென்ன் 15
இவறலு மாண்பிறந்த 133
இழத்தொறூஉங் 286
இழிவறிந் துண்பான் 288
இழுக்கலுடையுழி 128
இழுக்காமை யார்மாட்டு 164
இழைத்த திகவாமைச் 238
இளித்தக்க வின்னா 401
இளிவரின் வாழாத 296
இளைதாக முண் 268
இளையரின் 213
இறந்த ஷ்மந்த 273
இறந்த வெகுளியிற் 164
இறந்தா ரிறந்தா 95
இறப்போரிருந்த 297
இறலீனு மெண்ணாது 57
இறுதிபயப்பினும் 209
இறை கடியனென் 171
இறைகாக்கும் 167
இற்பிறந்தார் கண் 291
இற்பிறந்தார் கண்ணேயு 319
இனத்தாற்றி 172
இனம் போன்று 251
இனியன்ன 404
இனிய வுளவாக 34
இணைத்துணைத் 30
இணையரிவர் 241
இன்கணுடைத்த 356
இன்சொலாலீத் 121
இன்சொலானீர 33
இன்சொலானிதீ 33
இன்பத்துளின்பம் பயக்கும் 262
இன்பத்துளின்பம் விழையா 191
இன்ப மிடையறா 112
இன்ப மொருவர்க் 321
இன்பங் கடலற்றுக் 361
இன்பம் விழையா 189
இன்பம் விழையான் வினை 186
இன்மை யெனவொரு 318
இன்மையொருவற் 299
இன்மை யிடும்பை 324
இன்மையினின்னாக 317
இன்மையினின்னாதுடை 168
இன்மையுளின்மை 51
இன்றியமையாச் 294
இன்னாவெனத்தான் 96
இன்றும் வருவது 319
இன்னா செய்தாரை 98
இன்னா செய்தார்க்கு 301
இன்னா திரக்கப் 70
இன்னா தின 357
இன்னாமையின்ப 191
ஈட்டமிவறி 306
ஈதலிசைபட 73
ஈத்துவக்கு 71
ஈரங்கை விகிரார் 328
ஈவார்கணென் 321
ஈன்றபொழுதிற் 24
ஈன்றாள் பசிகாண் 199
ஈன்றாண முகத்தே 281
உகந்துறைவர் 347
உடம்பா டிலாக 270
உடம்பொடுயிரி 346
உடுக்கை யிழந்த 240
உடுப்பதூஉ 327
உடைசெல்வமூ 284
உடைத்தும் வலி 144
உடைமையுளின் 30
உடையரெனப் 181
உடையார்முன் 124
உட்கப்படாஅ 282
உட்பகையஞ்சி 269
உணர்வதுடை 218
உணலினு 414
உண்டார்கணல்ல 334
உண்ணற்க கள்ளை 281
உண்ணாது நோற் 52
உண்ணாமையுள் 81
உண்ணாமை வேண் 79
உதவிவரைத்தன் 36
உப்பமைந்தற்றாற் 407

உயர்வகலந்	227
உயிருடம்பி	100
உயிர்ப்ப வுளரல்லர்	266
உய்த்தல	401
உரமொருவற்	182
உரனென்னுந்	8
உரனசைஇ	395
உருவுகண்டெள்ளா	203
உருளாய மோவாது	285
உரைப்பாருரைப்பவை	73
உலகத்தாருண்	257
உலகத் தோடொட்ட	44
உலகந் தழீஇய	130
உலைவிடத்தூற	234
உவக்காணெங்கா	367
உவப்பத் தலைக்கூடி	123
உழந்துழந்து	364
உழவினார் கைம்	316
உழுதுண்டு வாழ்	316
உழுவாருலகத்திற்	317
உழைப்பிரிந்து	161
உளபோன் முகத்	176
உளரெனினுமில்	222
உளரென்னுமாத்	126
உளவரை தூக்காத	146
உள்ளக்களித்த	400
உள்ளத்தார்	388
உள்ளத்தாலுள்ள	88
உள்ளத்தாற் பொய்யா	91
உள்ளமிலாதவ	183
உள்ள முடைமை	181
உள்ளம் போன்	362
உள்ளற்க வுள்ளஞ்	244
உள்ளியது எய்தல்	163
உள்ளியவெல்லா	95
உள்ளினுந்தீராப்	372
உள்ளினேனென்	410
உள்ளுவதெல்லா	182
உள்ளுவன் மன்யான்	367
உள்ளுவன் மன்யான்மறப்	347
உள்ளொற்றியுள்ளூர்	383
உறங்கு வது	104
உறன்முறையா	271
உறாதவர்க்	406
உறாதவர்	337
உறாஅதோ	354
உறாஅர்க்	370
உறினுயிரஞ்	236
உறினட்டறி	250
உறுதோறுயிர்	340
உறுபசியுமோ	224
உறுபொருளு முல்	231
உறுப்பன மந்	233
உறுப்பொத்தன்	305
உறுவது சீர்தூக்கு	250
உறைசிறியாருள்	205
உற்றநோய் நீக்கி	156
உற்றநோய் நோன்ற	82
உற்றவன் தீர்ப்பான்	289
உற்றானளவும்	289
ஊக்க முடையா	147
ஊடலிற் றோற்றவர்	413
ஊடலிற் றோன்றுஞ்	414
ஊடலினுண்	407
ஊடலுணங்க	409
ஊடலுணர்தல்	341
ஊடற்கட்	401
ஊடிப் பெறுகுவங்	414
ஊடிய வரை	408
ஊடியிருந்தே மாத்	412
ஊடுகமன்னோ	413
ஊடுதல்	414
ஊணுடை யெச்ச	308
ஊணைக் குறித்த	308
ஊதியமென்ப	244
ஊரவர் கௌவை	353
ஊருணி நீர் நிறைந்	68
ஊழிபெயரினுந்	301
ஊழிற் பெருவலி	115
ஊழையுமுப்பக்கங்	188
ஊறொரா குற்றபி	201
எச்சமென் றென்	306
எட்பக வன்ன	269
எண் சேர்ந்த நெஞ்சத்	277
எண்ணித் துணிக	142
எண்ணிய வெண்ணி	200

எண்ணியாரெண்ண 152
எண்ணென்ப வேனை 123
எண்பதத்தா லெய்த 303
எண்பதத்தானாடி 167
எண்பொருன வாகச் 131
எதிரதாக் காக்கு 132
எந்நன்றி கொன்றார் 37
எப்பொருளு மேரரா 212
எப் பொருளெத்த 108
எப்பொருள்யார் 130
எய்தற் கரிய 148
எல்லாப் பொருளு 228
எல்லார்க்கு மெல்லா 178
எல்லார்க்கு நன்றாம் 43
எல்லா விளக்கும் 93
எல்லைக்க ணின்றார் 247
எவ்வ துறைவ 130
எழுதுங்காற் கோல் 402
எழுபிறப்புந் தீய 22
எழுமை யெழுபிறப்பு 36
எளிதென வில்லிற 48
எள்ளாத வெண்ணி 143
எள்ளாமை வேண்டு 88
எள்ளி னிளிவாமென் 404
எற்றிற்குரியர் 328
எற்றென் றிரங்கு 199
எனைத்தானும் மெஞ் 97
எனைத்தானு நல் 128
எனைத்திட்ப மெய் 201
எனைத்துணையராயினும் 48
எனைத்து நினைப்பு 375
எனைத் தொன் 375
எனைத்துங் குறுகுத 249
எனைப்பகை யுற்றாரு 63
எனை மாட்சித் 229
எனைவகையாற் றேறி 158
என்பி லதனை வெயில் 25
என்று மொருவுதல் 198
என்னை முன்னில் 237
ஏதம் பெருஞ்செல்வந் 307
ஏதிலா ரார தல் 256
ஏதிலார் குற்றம் போற் 60
ஏந்திய கொள்கை 274
ஏமுற் றவரினு 267
ஏரினு நன்றா 315
ஏரினுழா அர் 6
ஏவவுஞ் செய்கலா 258
ஐந்தவித்தா 9
ஐயத்தி னீங்கித் 109
ஐயப்படா அ 216
ஒட்டார்பின் சென் 295
ஒண்ணுதற் கோ ஒ 333
ஒண்பொருள் காழ் 231
ஒத்த தறிவானு 69
ஒப்புரவினான் 67
ஒருதலையா 370
ஒருநா ளெழுநாள் 391
ஒரு பொழுதும் 103
ஒருமைக் கட் 123
ஒருமைச் செயலா 255
ஒருமையு ளாமை 42
ஒலித்தக்கா 235
ஒல்லுங் கரும 249
ஒல்லும் வகையா 11
ஒல்லும் வா யெல்லாந் 205
ஒல்வ தறிவ 145
ஒழுக்கத்தி னெய் 45
ஒழுக்கத்தி னொல் 45
ஒழுக்கத்து நீத்தார் 8
ஒழுக்கம் முடையவர்க் 46
ஒழுக்கமும் வாய் 291
ஒழுக்க முடைமை 45
ஒழுக்கம் விழுப்பம் 46
ஒழுக்காறாக் கொள்க 53
ஒளியார்முன் னொள்ளி 219
ஒறுத்தாரை யொன்றா 53
ஒறுத்தார்க் கொரு 52
ஒறுத்காற்றும் 174
ஒற்றினா னொற்றி 180
ஒற்றுமுரைச சான் 177
ஒற்றொற்றித் தந்த 179
ஒற்றொற் றுணரா 179
ஒன்றா வுலகத் 73
ஒன்றாக நல்லது 99
ஒன்றாமை யொன்றியார் 271

ன்றானுந் தீச் சொற் 43
ன்றெய்தி நூறி 286
ன்னார்த் தெறலு 84
ஓதல் வேண்டு 198
ஓதி யுணர்ந்தும் 255
ஓம்பினமைந்தார் 258
ஓர்த்துள்ள முள்ள 109
ஓர்ந்து கண் ணோடா 165
ஓஒ வினிதே யெ 364
கடலன்ன காம 352
கடலோடா கால்வ 151
கடனறிந்து கால 210
கடனென்ப நல்ல 301
கடாஅ வுருவொடு 178
கடாஅக் களிற்றி 334
கடி தோச்சி மெல்ல 171
கடிந்த கடிந் 199
கடுஞ் சொல்லன் 172
கடு மொழியுங் கையி 173
கடைக் கொட்கச் 202
கணை கொடிது 87
கண்டது மண்ணும் 353
கண்டா ருயிர் 332
கண்டு கேட்டுண் 339
கண்ணிற் கணிகலங் 176
கண்ணீற் றுனி 401
கண்ணின் பசப் 385
கண்ணுடைய ரென் 122
கண்ணுங் கொள 388
கண்ணுள்ளார் காத 349
கண்ணுள்ளிற் போகா 348
கண்ணொடு கண்ணிணை 338
கண்ணோட்டத் 175
கண்ணோட்ட மென் 174
கண்ணோட்டமில் 175
கண்டாங் கலுழ்வ 363
கண்ணிறைந்த 397
கண்ணின்று கண் 58
கதங் காத்துக் கற் 43
கதுமெனத் தா 364
கயலுண்கண் 376
கரத்தலு மாற் 360
கரப்பவர்க் 325
கரப்பிடும்பை 322
கரப்பிலா நெஞ் 322
கரப்பிலார் வை 322
கரப்பினுங் 396
கரவா துவந் 323
கருமஞ் சிதையா 175
கருமணியுட் பாவாய் 346
கருமத்தா னாணு 310
கருமஞ் செய 312
கருவியுங் காலமுஞ் 193
கலங்காது கண்ட 202
கலந்துணர்ந்துங் 387
கல்லா வொருவன் 125
கல்லாத மேற் 257
கல்லா தவறிற் 221
கல்லா தவரு 125
கல்லாத னொட்பங் 125
கல்லாதான் சொற் 125
கல்லார்ப் பிணிக்குங் 171
கல்லான் வெகுளுந் 263
கவறுங் கழகமுங் 286
கவ்வையாற் கவ்வி 355
கழா அக் கால்பள் 256
களவினாலாகிய 89
களவின் கட் கன்றிய 89
களவென்னுங் காரறி 90
களித்தறியே னென் 283
களித்தானைக் காரணங் 282
களித்தொறுங்
கள்ளுண்டல் 354
கள்ளுண்ணாப் போழ் 282
கறுத்தின்னா செய் 96
கற்க கசடறக் கற் 122
கற்றதனா லாய 2
கற்றறிந்தார் 218
கற்றாருட் கற்றா 220
கற்றார்முற் கற்ற 220
கற்றில னாயினுங் கேட்க 127
கற்றீண்டு மெய்ப் 110
கற்றுக்கண் ணஞ்சான் 209
கனவினா லுண்டாகுங் 377
கனவினு மின்னாது 249
காக்க பொருளா 41

காக்கை கரவா 160
காட்சிக் கெளியன் 120
காணாச் சினத்தான் 263
காணாதாற் காட்டுவான் 258
காணிற் குவளை 344
காணுங்காற் காணேன் 402
காண்கமற் கொண்கனைக் 393
காதல காத லறியாமை 134
காதலரில் வழி மாலை 382
காதலர் தூதொடு 373
காதலவரில ராக 387
காதன்மை கந்தா 153
காமக் கடன் மன்னு 360
காமக் கடும்புன 350
காமக் கடும்புனனீந்திக் 361
காமக் கணிச்சி 390
காமமு நாணு 362
காம மெனவொன்று கண் 389
காம முழந்து 349
காமம் விடுவொன்றோ 386
காமம் வெகுளி மயக்க 110
காலத்தினாற் செய்த நன்றி 36
காலங் கருதி 147
காலாழ் களரி 150
காலையரும் பிப் 381
காலைக்குச் செய்த 380
கான முயலெய்த 236
குடம்பை தனித் 104
குடிசெய்வ லென் 313
குடி செய்வார்க் 312
குடிதழீஇக் 166
குடிபுறங் காத் 165
குடிப்பிறந்தார் கண் 293
குடிப்பிறந்து 154
குடிப்பிறந்து தன்கட் 243
குடிமடிந்து குற்றம் 184
குடியாண்மையுள் வந்த 185
குடியென்னுங் குன்றா 184
குணநலஞ் சான்றோர் 300
குணமென்னுங் குன்றேறி 10
குணநாடிக் குற்றமு 154
குணனிலனாய்க் குற்றம் 264
குணனுங் குடிமையுங் 242
குலஞ்சுடுங் கொள்கை 309
குழலினி தியாழினி 23
குறிக்கொண்டு நோக்காமை 336
குறித்தது கூறாமைக் 215
குறிப்பறிந்து காலங் 211
குறிப்பிற் குறிப்புணர் வாரை 216
குறிப்பிற் குறிப்புணரா 215
குற்றமே காக்க 132
குற்ற மிலனாய்க் 313
குன்றன்னார் குன்ற 274
குன்றினனை யாருங் 295
குன்றேறி யானைப்போர் 231
கூடிய காமம் 394
கூத்தாட்டவைக் 102
கூழுங்குடியு மொருங் 169
கூறாமை நோக்கிக் 215
கூற்றந்தைக் கையால் 272
கூற்றமோ கண்ணோ 333
கூற்றுடன்று 234
கெடல் வேண்டிற் 272
கெடாஅர் வழிவந்த 247
கெடுங்காலைக் 244
கெடுப்பதூஉங் கெட்டார்க் 6
கெடுவல்யா னென்ப 39
கெடுவாக வையா 39
கெட்டார்க்கு நட்டாரில் 405
கேடறியாக் கெட்ட 225
கேடில் விழுச் செல் 123
கேடும் பெறாக்கழு 39
கேட்டினு முண்டோ 244
கேட்பினு கேளாத 129
கேளிழுக்கங் கேளாக் 246
கைம்மாறு வேண்டா 67
கையறியாமை யுடை 283
கைவேல் களிற்றோடு 237
கொக்கொக்க 148
கொடியார் கொடுமை 384
கொடியார் கொடுமையிற் 362
கொடுத்தலும் 159

கொடுத்துங்கொளல் வேண்டு 264
கொடுப்பதழுக் 54
கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ 307
கொடும்புருவங் கோடா 332
கொடையளி செங்கோல் 120
கொலைமேற் கொண்டா 169
கொலையிற் கொடியாரை 165
கொல்லாமை மேற் 100
கொல்லான் புலாலை 81
கொளப்பட்டே மென் 213
கொளற் கரிதாய்க் 228
கொன்றன்ன 37
கோட்டுப்பூச்சூடி 411
கோளில் பொறியிற் 4
சமன் செய்து 111
சலத்தாற் பொருள் 200
சலம் பற்றிச் சால்பில 292
சாதலி னின்னாத 70
சார்புணர்ந்து சார்பு 110
சால்பிற்குக் கட்டளை 301
சான்றவர் சான்றாண்மை 301
சிறப்பறிற வொற் 180
சிறப்பீனுஞ் செல்வ 11
சிறப்பீனுஞ் செல்வம் 97
சிறப்பொடுபூசனை 5
சிறியா ருணர்ச்சி 299
சிறு படையான் செல் 150
சிறுமை நமக்கொழி 383
சிறியா ருணர்ச்சியுள் 299
சிறுபடையான் செல்லி 150
சிறுமை நம 388
சிறுமை பல செய்து 286
சிறுமையுஞ் செல்லாத் 234
சிறுமையுணீங்கிய 32
சிறைகாக்குங் காப் 19
சிறைநலனுஞ் சீரு 150
சிற்றின மஞ்சும் 139
சிற்றின்பம் வெஃகி 56
சினத்தை பொருள் 95
சினமென்னுஞ் 94
சீர்விடங் காணி 253
சீறிலுஞ் சீரல்ல 294
சீருடைச் செல்வர் 307
சீர்மை சிறப்பொடு 62
சுடச் சுடரும் 93
சுவையொளி 9
சுழலு மிசை 238
சுழன்று மேர்ப்பின் 315
சுற்றத்தாற் சுற்றப் 159
சூழாமற் றானே 313
சூழ்ச்சி முடிவு 207
சூழ்வார்கண் ணாக 136
செப்ப முடையவன் 40
செப்பின் புணர்ச்சி 270
செயற்கரிய செய்வார் 10
செயற்கரிய யாவுள 239
செயற்கை யறிந்தக் 193
செயற்பால தோரும் 13
செயரிற் றலைப்பிரிந்த 80
செய்க பொருளைச் 230
செய்தக்க வல்ல 143
செய்தேமஞ் சாராச் 248
செய்யாமற் செய் 35
செய்யாமற் செற்றாருக்கு 96
செய்வானை நாடி 156
செருக்குஞ் சினமுஞ் 135
செருவந்த போழ்தில் 173
செல்லாமையுண்டேல் 358
செல்லான் கிழவன் 315
செல்லிடத்துக்காப்பான் 93
செல்வத்துட் செல்வஞ் 129
செல்விருந்தோம்பி 29
செவிகைப்பச் சொற் 121
செவிக்குண வில்லாத 127
செவிச் சொல்லுஞ் 211
செவியுற் சுவைதி 129
செவியுணவிற் கேள்வி 129
செறாஅச் சிறுசொல்லுஞ் 337
செறிதொடி செய் 397
செறிவறிந்து சீர் 41
செறுநரைக் காணிற் 148
செறுவார்க்குச் சேணி 263
செற்றவர் பின் 391
சென்ற விடத்தாற் 131
செற்றா ரெனக்கை 388

செற்றார் பின் 390
சொலல் வல்லன் 196
சொல்லப் பயன் 328
சொல்லுக சொல்லிற் 61
சொல்லுக சொல்லைப் 195
சொல்லுதல் யார்க்கு
மெளிய 202
சொல்வணக்கமொன்னார் 252
சொற்கோட்ட மில்லது 38
ஞாலங் கருதினுங் 148
தகுதியென ஒன்று 38
தக்காங்கு நாடித் 171
தக்கார் இனத் 137
தக்கார் தகவு இலர் 40
தஞ்சம் தமர் அல்லர் 403
தணந்தமை 383
தண்ணந்துறை 398
தந்தை மகற்கு 23
தம் நலம் பாரிப் 279
தம் நெஞ்சத்து 373
தமர் ஆகித் தன் 161
தம்பொருள் என்ப 22
தம் இல் இருந்து 339
தம்மிற் பெரியார் 138
தம்மின் தம் மக்கள் 23
தலைப்பட்டார் தீர 107
தலையின் இழிந்த 294
தவம் செய்வார் 82
தவம் மறைந்து 85
தவமும் தவம் உடை 82
தவறில ராயினும் 415
தள்ளா விளையுளும் 224
தன் காத்துக் தன் 20
தனக்கு உவமை இல்லா 2
தனியே இருந்து 405
தன் குற்றம் நீக்கிப் 135
தன் துணையின்னால் 267
தன் உயிர்க்கு 97
தன் உயிர் தான் 83
தன் உயிர் நீப்பி 99
தன் ஊன் பெருக்க 79
தன் நெஞ்சு அறிவது 90
தன்னை உணர்த் 412
தன்னைத் தான்காக் 94
தன்னைத் தான்
காதலன் 63
தாம் இன்புறுவது 124
தாம்வீழ்வார் தம் 269
தாம் வீழ்வார் மென் 339
தாம் வேண்டின் நல் 353
தார் தாங்கிச் செல் 234
தாளாண்மையில் 137
தாளாண்மை என் 138
தாள் ஆற்றித் தந்த 66
தானம் தவம் இரண் 5
திறனல்ல தற்பிறர் 152
திறன் அறிந்து சொல் 197
தினற்பொருட்டால் 180
தினைத் துணை நன்றி 36
தினைத் துணையாம் குற் 135
தினைத் துணையும் 400
தீப்பாலதான் பிற 65
தீயவை தீய 65
தீ அளவு அன்றித் 290
தீயினால் சுட்டப் புண் 43
தீவினையார் அஞ்சா 65
துஞ்சினார் செத்தா 282
துஞ்சும் கால் 377
துணை நலம் ஆக்கம் 198
துப்பார்க்குத் துப்பு 7
துப்பின் எவன் ஆவர் 360
துப்புரவு இல்லார் 319
தும்முச் செறுப்ப 411
துளி இன்மை ஞாலத் 169
துறந்தாரின் தூய் 52
துறந்தார்க்குப் 82
துறந்தார்க்கும் துவ் 15
துறந்தார் படிவத் 178
துறந்தார் பெருமை 8
துறப்பசர் மன் 116
துறைவன் துறந் 357
துனியும் புலவியும் 408
துன்பத்திற்கு யாரோ 405
துன்பம் உறவரினும் 202
துன்புறாஉம் துவ் 33
துன்னாத் துறந் 386

துன்னியார் குற்ற 60
தூங்காமை கல்வி 119
தூங்குக தூங்கி 204
தூய்மை துணைமை 207
தூய்மை என்பது 112
தெண்ணீரடு 325
தெய்வத்தா 188
தெய்வந் 20
தெரிதலுந் 193
தெரிந்தவி 141
தெரிந்துண 363
தெருளாதா 78
தெளிவிலத 142
தென்புலத் 15
தேரான் பிற 153
தேரான் றெ 153
தேவரனைய 326
தேறற்க 155
தேறினுந் 267
தொகச் சொ 209
தொடங்கற் 150
தொடலைக் 351
தொடி நோக் 399
தொடிப்புழுதி 315
தொடியொடு 384
தொடிற்சுடின் 359
தொட்டனைத் 123
தொல்வர 318
தொழுதகை 252
தோன்றிற் 73
நகல்வல்ல 304
நகுதற்பொரு 240
நகையீகை 291
நகையுழுவ 95
நகையுள்ளு 303
நகைவகை 250
நசைஇயார் 372
நச்சப்படா 307
நடுவன்றி 57
நட்டார்க்கு 205
நட்டார்போல் 253
நட்பிற் குவீ 240
நட்பிற்குறு 245
நாடார் குறை 276
நண்பாற்றா 304
நத்தம் போற் 75
நயந்தவர்க் 368
நயந்தவர் நல் 383
நயனிலசொல் 63
நயனிலன் 61
நயனீன்று 33
நயனுடை 67
நயனொடு 303
நயன் சாரா 61
நலக்குரியார் 49
நலத்தகை 407
நலத்தின்க 293
நலம் வேண் 292
நல்குரவெ 319
நல்லவை 115
நல்லாண் 311
நல்லார்கட் 126
நல்லாறெனை [illegible]
நல்லாறென 69
நல்லாற்றா 76
நல்வினத்தி 139
நவிறொறு 241
நற்பொரு 318
நனவினாற் 377
நனவினானந் 378
நனவினானல் காத 376
நனவினானல் காக் 377
நனவினானல் காரை 378
நனவென 378
நன்மையுந் 156
நன்றறிவா 327
நன்றாகுமாக் 101
நன்றாங்கா 116
நன்றாற்ற 143
நன்றிக்கு 46
நன்றி மறப் 35
நன்றென்ற 217
நன்றேதரி 39
நன்னீரைவா 344
நாங்காதல் 370
நாச்செற்று 103

நாடாது	242
நாடென்ப	224
நாடொறு நாடி	168
நாடோறு நாடு	168
நாணகத்தி	310
நாணாமை	255
நாணாலு	309
நாணுமற	404
நாணென	392
நாணென்	281
நாணொடு	350
நாண்வேலி	309
நாநல	197
நாளென	103
நிணந்தீயி	391
நிலத்தியல்	189
நிலத்திற்	201
நிலவரைநீ	74
நிலைமக்கள்	235
நிலையஞ்சி	100
நிலையிற்றி	42
நில்லாதவ	102
நிழனீருமின்	270
நிறைநீர	242
நிறைமொழி	9
நிறைநெஞ்	280
நிறையரி	352
நிறையுடைமை	50
நிறையுடையே	390
நினைத்திருந்	411
நினைத்தொன்	389
நினைப்பவர்	373
நீங்கான் வெகு	365
நீங்கிற்றெ	340
நீரின்றமை	5
நீருநிழல	407
நுணங்கிய	128
நுண்ணிய நூ	114
நுண்ணியம்	214
நுண்மாணு	126
நுனிக்கொம்	145
நூலாருணூல்	208
நெஞ்சத்தார்	348
நெஞ்சிற்றுற	86
நெடுங்கட	6
நெடுநீர்மற	185
நெடும் புனல்	151
நெய்யால்	355
நெருப்பினுள்	319
நெருநலுள	103
நெருநற்றுச்	399
நோக்கினா-கி	335
நோக்கினா-கெ	332
நோதலெவன்	408
நோயெல்லா	98
நோய்நாடி	289
நோவற்க	262
நோனாடவும்	349
பகச்சொல்	59
பகல்கருதி	262
பகல்வெல்	147
பகுத்துண்	100
பகைநட்பாக்	267
பகைநட்பாங்	253
பகைபாவ	48
பகைமையு	215
பகையகத்துச்	220
பகையகத்துப்	221
பகையென்	266
பசக்கமற்	368
பசந்தாளி	367
பசப்பென	366
படலாற்றா	365
படியுடை	185
படுபயன்	56
படைகுடி	118
படைகொண்	79
பணியுமாம்	299
பணிவுடையன்	32
பணைநீங்கிப்	384
பண்டறியேம்	332
பண்ணென்	176
பண்பிலான்	304
பண்புடை	303
பதிமருண்டு	382
பயனிலபல்	61

பயனில் சொற்	63
பயன் மரமுள்	68
பயன்றூக்கார்	35
பயன் றூக்கி	278
பரிந்தவர் நல்	388
பரிந்தோம் பிக்	44
பரிந்தோம் பிப்	30
பரியது கூர்	183
பரியினுமா	115
பருகுவார்	249
பருவத்தோ	149
பருவரலும்	369
பலகுடை நீ	316
பல சொல்ல	196
பல நல்லகற்	252
பல் குழுவு	225
பல்லவைக	221
பல்லார் பகை	138
பல்லார் முனி	62
பழகிய செல்	285
பழகிய நட்	247
பழிமலைந்	200
பழியஞ்சி	16
பழுதெண்	194
பழைமையெ	245
பழைய மெ	213
பற்றற்ற கண்	524
பற்றற்ற கண்ணே	106
பற்றற்றே	87
பற்றிவிடா	106
பற்றுக பற்	107
பற்றுள்ள	134
பனியரும்பி	382
பன் மாயக்கள்	391
பாடு பெறு	384
பாத்தூண்	71
பாலொடு	347
பிணிக்கு மருந்	338
பிணி யின்மை	223
பிணையேர்	333
பிரித்தலும்	193
பிரிவுரைக்	358
பிழைத்துணர்	128
பிறப் பென்னு	108
பிறப் பொக்	297
பிறர்க்கின்	98
பிறர் நாணத்	309
பிறர் பழியு	310
பிறவிப் பெ	4
பிறன் பழி	260
பிறன் பொருள்	47
பிறன் மனை	49
பீலிபெய்	145
புகழின் நார்	295
புகழ்ந்தவை	163
புகழ்பட	74
புகழ் புரிந்	19
புக்கிலமை	104
புணர்ச்சி பழ	241
புத் தேளுல	69
புரந்தார்க் கண்	238
புலத் தலிற்	416
புலப்பலென	391
புலப்பேன்	393
புல்லவை யுட்	219
புல்லாதிரா	406
புல்லிக்கிடந்	366
புல்லிவிடா	415
புறங்குன்றி	85
புறங்கூறிப்	58
புறத்துறுப்	25
புறந்தூய்	91
புண் கண்ணை	381
பெண்ணியலால்	412
பெண்ணிற்	19
பெண்ணினாற்	398
பெண்ணேவேல்	276
பெயக் கண்டு	175
பெயலாற்றா	365
பெரிதாற்றிப்	398
பெரிதினிது	256
பெரியாரை	272
பெருக்கத்து	294
பெருங்கொ	159
பெருமைக்கு	154
பெருமை பெ	297

பெருமையு	298
பெரும் பொரு	225
பெரு அமையஞ்	405
பெறினென்	394
பெறுமவற்றுள்	22
பெற்றாற்	20
பேணாது பெட்டா	363
பேணாது பெண்	402
பேதை பெறுங்	277
பேதை பெரு	248
பேதைமையு	114
பேதைமை யெ	254
பேதைமை யோ	254
பேராண்மை	246
பொச்சாப்பசர்	162
பொச்சாப்புக்	163
பொது நலத்	278
பொது நோக்	160
பொய்படுமொ	256
பொய்மையு	91
பொய்யாமை பொ	92
பொய்யாமை யன்ன	92
பொருடீர்ந்	63
பொருட் பெண்டிர்	278
பொருட் பொறா	279
பொருணீங்	78
பொருண்மா	381
பொருளல்ல வரை	232
பொருளல்லவற்	108
பொருளற்றார்	78
பொருளாட்சி	79
பொருளானா	307
பொருளென்	232
பொருள் கரு	204
பொருள்கெடுத்	285
பொள்ளென	147
பொறியின்	188
பொறிவாயி	4
பொறுத்தலிற	50
பொறையொ	225
போற்றினரி	212
மகன்றந்தை	24
மக்கண் மெய்	23
மக்களே போல்	326
மங்கல மென்ப	21
மடலூர் தல்	351
மடிமடிக்	183
மடிமை குடி	184
மடியிலா	186
மடியுளா	187
மடியை மடியா	183
மடுத்தவா	189
மணிநீருமண்	227
மணியிட்டிக	397
மண்ணோடியை	177
மதி நுட்ப	192
மதியு மடந்தை	343
மயிர்நீப்பின்	296
மருந்தாகித்	68
மருந்தென்	287
மருந்தோமற்	295
மருவுக மாசற்	243
மலரன்ன-ண்மு	344
மலரன்ன-ளரு	354
மலரினு மெல்	400
மலர் காணின்	344
மலர் மிசை	2
மழித்தலு நீ	87
மறத்தல் வெ	93
மறந்தும்பி	64
மறப்பினு	45
மறப்பினெவ	374
மறமானமா	233
மறவற்கமா	34
மறைந்தவை	178
மறை பெற	364
மறைப்பேன் மற்	389
மறைப்பேன் மன்	360
மற்றியானெ	374
மற்றுந்தொடர்	105
மனத்ததுமா	85
மனத்தானா	139
மனத்தினமை	251
மனத்துக் கண்	13
மனத்துளது	140
மனத்தொடு	92
மனநலத்தி	140
மனநல நன்கு	141

மனநலமன்	141	மோப்பக்கு
மனந்தூயார்	149	யாகாவாரா
மனந்தூய்	140	யாங்கண்ணி
மனமாணாவு	271	யாண்டுச் செ
மனைத்தக்க	18	யாதனின் யா
மனைமாட்சி	18	யாதானுநா
மனையாளை	275	யாமுமுளே
மனைவிழைவா	277	யாமெய்யா
மன்னர்க்கு	168	யாரினுங்கா
மன்னர் விழை	212	யானெனதெ
மன்னுயிரெல்	361	யானோக்கு
மன்னுயிரோ	77	வகுத்தான்
மாதர்முகம்	343	வகைமாண்
மாலைநோய்	380	வகையறச்
மாலை நீயல்லை	379	வகையறிந்துத
மாறுபாடில்	288	வகையறிந்துவ
மிகச் செய்	253	வசையிலாவ
மிகன் மேவு	261	வசையென்ப
மிகினுங்குறை	288	வசையொழிய
மிகுதியான்	51	வஞ்ச மனத்தா
முகத்தான்	31	வறா மற் கொ
முகத்தினினி	251	வறாமுன்னர்
முகத்தின்மு	214	வறா விருந்து
முகநக நட்ப	239	வரைவிலாமா
முகநோக்கி	216	வலியார்க்கு
முகைமொக்	396	வலியார் முற்
முடிவுமிடை	206	வலியினிலை
முதலிலார்க்	137	வழங்குவ
முயக்கிடை	385	வழிநோக்
முயங்கிய	385	வழத்தினாள்
முயற்சிதிரு	187	வறியார்க்
முரண்சேர்ந்	151	வன் கண்கு
முறிமேனி	345	வாணிகஞ் செய்
முறைகோடி	169	வாய்மையெ
முறைசெய்	121	வாராக் காற்
முறைப்பட	194	வாரிபெறாக்
முற்றாற்றி	229	வாழ்த்தலுயிர்
முற்றியுமுற்	228	வாழ்வார்க்
முனைமுகத்	227	வாளற்றுப்
முன்னுறங்கா	164	வாளொடென்
மேலிருந்து	297	வாள்போல்
மேற்பிறந்தா	126	வானின்றுல
மையலொரு	255	வானுயர் தோ

வானோக்கி	166
விசும்பிற்று	6
விடாஅது	375
விடுமாற்ற	209
விண்ணின்று	5
வித்துமடல்	29
வியவற்க	134
விருந்து புற	28
விருப்பறாச்	160
விரைந்து	195
விலங்கொடு	127
வில்லேருழ	266
விழித்த கண்	237
விழுப்புண் ப	237
விழுப்பேற்	53
விழை தகை	246
விழையார்	247
விளக்கற்ற	366
விளிந்தாரின்	48
விளியுமெனி	374
வினை கலந்து	393
வினைக்கண் வினைகெ	187
வினைக்கண் வினையு	158
வினைக்குரி	157
வினை செய்	179
வினை பகை	204
வினைத்திட்	201
வினையால்	206
வினைவலியு	144
வீழப்படுவா	371
வீழுநர்வீழ	371
வீழுமிருவா	341
வீழ்நாள் ப	12
வீழ்வாரினி	371
வீறெய்தி	203
வெண்மை	257
வெருவந்த	172
வெள்ளத்தனையம	181
வெள்ளத்தனையவி	190
வேட்ட	339
வேட்பத்தா	195
வேட்பன	211
வேண்டற்	55
வேண்டற்-ன்	284
வேண்டா	112
வேண்டிய	84
வேண்டினு	106
வேண்டுங்	113
வேண்டுதல்	3
வேலன்று	167
வேலொடு	170
வைத்தான்	306
வையத்துள்	17

AUP

விலை:

உள்நாடு:

Rs.

வெளிநாடு:

U. S. $